
இலக்கியம்




... கங்கை ...

# அப்பா.. அப்பா.. கதை சொல்லு

வாண்டுமாமா



# கதை சொல்லுமுன்...




கதை சொல்லுவது ஒரு கலை.

அதேபோலே, கதை கேட்பதும் ஒரு புதுமையான அனுபவம்.

இந்தக் காலத்தில் - இந்த நவீன யுகத்தில் - கதை கூறுபவர்களும் கிடையாது. கதையைக் கேட்பவர்களும் கிடையாது. பரபரப்பும் அவசரமும் அதிகமாகி விட்ட இந்தக் காலத்தில்; வாழ்க்கை நடத்த ஆண் - பெண் இருவருமே (அப்பா - அம்மா) அலுவலகங்களில் பணியாற்றப் போக வேண்டி இருக்கிறது. வீட்டிலுள்ள முதியவர்களோ 'டிவீ'யைப் போட்டுவிட்டு அதன் முன் உட்கார்ந்து விடுகிறார்கள்! குழந்தைகளும் கூட 'கார்ட்டூன் சேனல்களை' உசுப்பி விட்டு முடங்கிப் போய் விடுகிறார்கள். 'டிவீ' தவிர இப்போதெல்லாம் பல இல்லங்களில் 'கம்ப்யூட்டர்கள்' கண்சிமிட்டிக் கதை சொல்லுகின்றன. இந்த நிலையில் கதை கூறுவதற்கும் - கதை கேட்பதற்கும் வாய்ப்பின்றி - ஆள் இல்லாமல் போனதில் ஆச்சரியமில்லை.

அந்தக் காலத்தில் நிலா காயும் இரவு நேரங்களில் - மொட்டை மாடியில் தாத்தா பாட்டிகளின் தொடையில் தலைவைத்துப் படுத்தபடியே - அவர்கள் கூறும் கதைகளைக் கேட்டபடி - கொட்டுக் கொட்டென்று விழித்தபடி - ரசித்து மகிழ்ந்தவன் நான்.

வேப்ப மரத்தடியில்,.மண்மேட்டில் ஊர்ப் பெரியவரின் அருகே அமர்ந்து குளுகுளு என்று மென்காற்று வீச, சூழ்நிலை மறந்து அவர் கூறும் கதைகளிலேயே லயித்துப்

www.tamilnesan1981.blogspot.in

போயிருக்கும் சிறுவர்களில் ஒருவனாக இருந்து வளர்ந்தவன் நான்.

கோயில் பிராகாரத்தில் பாட்டியுடன் அமர்ந்தபடி அவள் கூறும் சுவாமி கதைகளை பயபக்தியுடன் கேட்டு - ஆலயமணியின் சுநாதத்தினால் உடல் சிலிர்த்த தருணங்கள் பல உண்டு என் வாழ்விலே.

அப்பாவும் அம்மாவும் தங்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்களை அனுபவங்களைக் கதை போலச் சொல்லுவார்கள் - ஓய்ந்த, ஒழிந்த வேளைகளில். அவர் கள் கூறிய கதைகள் குழந்தைகளுக்கு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வழிகாட்டிகளாக இருந்தன. கசப்பு மருந்தை வெல்லத்துக்குள் வைத்துக் கொடுக்கும் வைத்தியனைப் போல, பெரியவர்கள் - நீதிகளை, நற்பண்பு களை, பழக்கங்களைக் கதைகளாகக் கூறினார்கள்.

மருந்தை எப்போதுமா சாப்பிடுகிறோம், இல்லை யே! அது போல நம் பெரியோர்கள் நீதிகளைப் போதிக்க மட்டுமே கதை கூறவில்லை. வேடிக்கையாகவும் - விளையாட்டாக வாழவும் கதைகள் கூறினார்கள், வீரம் வளர்க்கவும் கதை கூறினார்கள்.

இப்படியெல்லாம் கதை கேட்ட அனுபவத்திலே, பின்னாளில் கதை சொல்லுவது - எழுதுவது - எனக்கு கை வந்த கலையாயிற்று. தாத்தாவும் - பாட்டியும் - அப்பாவும் - அம்மாவுமாக அவதாரமெடுத்து உங்க ளுக்குப் பல்வேறு வகையான கதைகளைக் கூறுகிறேன். இதில் ராஜா ராணிக்கதைகளும் உண்டு, மந்திரவாதிக் கதைகளும் உண்டு, மர்மக் கதைகளும், சிரிக்க வைக்கும் கதைகளும் - சீரியஸான கதைகளும் உண்டு. சிவராத்திரி யிலும் கோகுலாஷ்டமியிலும் கிறிஸ்துமஸின் போதும் - இரவில் கண் விழித்திருக்க - நெடுங்கதைகளும் இணைந் திருப்பது ஒரு ஸ்பெஷாலிட்டி! கண்மணிகளே கதை கேட்க ஆரம்பியுங்கள்.

— வாண்டுமாமா

www.tamilnesan1981.blogspot.in



# கதையா — கணிதமா?

அந்த ஊரிலே பெரிய தனக்காரக் குடும்பம் அவரு டையது. அவர் உயர் படிப்புப் படித்து பெரிய உத்தியோகத்தி லிருந்தார். ஊரில் அவருக்கு மதிப்பும் மரியாதையும் அதிகம். அரண்மனை போன்ற வீடு. அவருடைய மகன்தான் பாலு. அந்தப் பெரிய தெருவிலுள்ள அத்தனை வீட்டுக் குழந்தை களும் பாலுவின் சிநேகிதர்கள். தன் அப்பாவைப் பற்றி— அவர் கதை சொல்லும் திறமையைப் பற்றி— பாலு, தன் நண்பர்களிடமெல்லாம பெருமையடித்துக் கொள்ளுவான்.

பாலுவின் நண்பர்களும், நண்பர்களின் சகோதர— சகோதரிகளும்— ஒரு பட்டாளமே— பாலுவின் வீட்டில்— அவன் அப்பாவிடம் கதை கேட்க— இரவு எட்டு மணிக் கெல்லாம் வந்து கூடிவிடுவார்கள். இரவு—பத்து, பத்தரைமணி வரை பாலுவின் அப்பாவிடம் கதை கேட்டுவிட்டு பிறகுதான் தூங்கப் போவார்கள் குழந்தைகள்.

வழக்கம்போல பாலுவின் அப்பா முண்டா பனியனும், தும்பைப்பூவாய் கதர்வேஷ்டியும், தோளில் கதர் துண்டுமாய், தங்க பிரேம் மூக்குக் கண்ணாடி டால் அடிக்க, ஹாலிலுள்ள சோபாவில் அமர்ந்திருந்தார். கீழே விரித்துள்ள காஷ்மீர் விரிப்பில் குழந்தைகள், அவர் முகத்தையே பார்த்தபடி உட் கார்ந்திருந்தனர்.

கதை கூறுவதற்கு முன் இன்று, கொஞ்சம் கணக்குப் போடலாமா? என்றார் பாலுவின் அப்பா. அவர்கள் பதில் கூறுமுன் ஒரு காகிதத்தில் ஒரு எண்ணை எழுதி, தன் அரு கில் அமர்ந்திருந்த வேணியிடம் கொடுத்தார். "இதை யாரிட மும் காட்டாதே, மடித்து வைத்துக்கொள்" என்று கூறியவர்,

www.tamilnesan1981.blogspot.in

இன்னொரு காகிதத்தில் *1066* என்ற எண்ணை எழுதி கோபு விடம் கொடுத்தார். கோபுவிடம் 'இதேபோல நான்கு இலக்க முள்ள ஒரு எண்ணை இதன் கீழே எழுது' என்றார்.

கோபு – *1066* என்ற எண்ணின் கீழ் *3478* என்று எழுதினான். அடுத்து அப்பா அதன் கீழ், *6521* என்று எழுதினார். பிறகு மாலதியிடம் அந்தக் காகிதத்தைக் கொடுத்து, "நான் எழுதிய எண்ணுக்குக் கீழே; நீ ஒரு நான்கு இலக்கமுள்ள எண்ணை எழுது" என்றார். மாலதியும் அப்பா கூறியபடி *7150* என்ற எண்ணை எழுதினாள். அதன் கீழ் அபப்ா *2849* என்று எழுதினார். எண்கள் எழுதியுள்ள காகிதத்தை மணியிடம் கொடுத்து, 'இக்காகிதத்திலுள்ள நான்கு இலக்கமுடைய – ஐந்து எண்ணையும் கூட்டிச் சொல்" என்றார்.

கணக்கில் கில்லாடியான மணியும் *1066 + 3478 + 6521 + 7150 + 2849 = 21,064* என்று அதைக் கூட்டி, அதன் கூட்டுத்



www.tamilnesan1981.blogspot.in

தொகையைக் கூறினான். இப்போது பாலுவின் அப்பா, வேணியிடம் கொடுத்திருந்த துண்டுக் (காகிதத்தை) வாங்கிப் பார்த்து அதில் எழுதி இருக்கும் எண்ணைக் குழந்தைகளிடம் காட்டினார். அதில் எழுதி இருந்த எண் *21,064* ! குழந்தைகள் வியந்து போய் "அங்கிள், அங்கிள் இது எப்படி? இந்த விடை முன்னாலேயே உங்களுக்கு எப்படித் தெரிந்தது? மேஜிக்கா?" என்று கேட்டார்கள்.

அப்பா சிரித்தார்– மோகனமாக "மேஜிக் இல்லே, கணிதம்– முக்கியமா "எண் 9ன் மகத்துவம்" என்றார் அப்பா.

"கொஞ்சம் விளக்குங்களேன், ப்ளீஸ், ப்ளீஸ்!" என்றார்கள் குழந்தைகள் கெஞ்சலாக.



"நான்கு ஒன்பதுகள் *9999*– அதாவது பத்தாயிரத்துக்கு ஒன்று குறைவு– இல்லியா? இதன் இரண்டு மடங்கு எவ்வளவு? *19998* சரியா? கோபுவிடம். நான் கொடுத்த காகிதத்தில் எழுதிய நான்கு எண் இலக்கம் என்ன?" என்று கேட்டார் அப்பா.

"ஆயிரத்தி அறுபத்தாறு *1066*" என்றான் கிட்டு.

"இதை, *19998*லிருந்து மானசிகமாகக் கூட்டி வந்த எண்ணையே நான் வேணியிடம் எழுதிக் கொடுத்தேன்."

கணிதக் கில்லாடி மணி உடனே மனக் கணக்கில் சரிபார்த்து – *19998+1066 = 21064*! "ஆமாம் கரெக்ட்!" என்றான் உற்சாகமாக.

www.tamilnesan1981.blogspot.in

"அதன்பின் கோபுவோ— மாலதியோ— நானோ எந்த நான்கு இலக்கு எண் எழுதினாலும் சரி (ஐந்து எண்கள்) அதன் கூட்டுத் தொகை 21064 ஆகத்தான் இருக்கும்! இது கணிதத்தில் 9ன் பெருமை" என்றார் கண் சிமிட்டியபடி.

"அதனால்தான் 9 எண்ணைப் பலரும் ராசி என்று கூறுகிறார்களோ?" என்றான் கிட்டு.

"இதோபோல இன்னொரு கணக்கு அங்கிள்!" என்றான் ரவி, ஆவலுடன்.

"கணக்கு வேண்டாம் அங்கிள்— கதைதான் வேணும்!" என்றாள் மீனா.

"கணக்கா— கதையா?" கேட்டார் அப்பா.

"இன்னும் ஒரே ஒரு மேஜிக் கணக்கு— அப்புறம் மெகா கதைகள்!"என்றாள் லீலா.

"ஓ.கே!" என்ற அப்பா, "ஒரு காகிதத்தில் 12345679 என்று எழுதுங்கள் — 8ஐ தவிர்த்து" என்றார்.

கந்தன் ஒரு காகிதத்தில் ஸ்கெச் பேனாவினால் குண்டு குண்டாக 12345679 — என்று எழுதினான்.

"சரி, இதில் உனக்குப் பிடித்த எண் எது?" என்று கேட்டார் அப்பா.

"ஐந்து!" என்றான் கந்தன்.

"அப்படியானால் அந்த எட்டு இலக்கு எண்ணை (12345679) 45னால் பெருக்கு"என்றார். கந்தன் அவசர அவசர மாகப் பெருக்கினான். வந்த விடையைக் கண்டு எல்லாக் குழந்தைகளும் 'ஓ' என்று ஆர்ப்பரித்தனர்.

விடை: 555555555!

"அன்வர் பாய்! உனக்கு விருப்பமான எண் எது என்று கேட்டார் அப்பா.

"நான்கு!" என்றான் அன்வர்.

'அப்படியானால் நீ 36லினால் எட்டு இலக்க எண்ணைப் பெருக்கு" என்றார்.

வந்த விடை: 444444444

மீரா தன் ஃபேவரிட் 3 என்றாள்.

www.tamilnesan1981.blogspot.in

*கார்த்தி தன் அபிமான எண் 6 என்றான்.*

*மீராவை 27லினால் பெருக்கச் சொன்னார்.*

*விடை : 333333333!*

*கார்த்தியை 54லினால் பெருக்கச் சொன்னார். கிடைத்த விடை 666666666!*

*"வேடிக்கையாக இல்லை?— உங்கள் அபிமான எண் களோடு சங்கிலி விடையாக வருவது?" என்று கேட்டு நகைத்தார் அப்பா.*

*"அந்த வேடிக்கையை நீங்கள் விளக்கினால்தான் எங்களுக்குப் புரியும் அப்பா!" என்றாள் உஷா.*

*"இதுவும் ஒன்பதின் ரகசியம் தான். தன் பெருக்கியது 9×5=45 அன்வர் பெருககியது 9×4=36 மீராவின் எண்: 9×3=27, கார்த்தி பெருக்கிய எண் : 9×6=54 ஒன்பதின் கூட்டாளிகளை இந்த எண்களின் கூட்டுத் தொகையை — ஒன்பது — தன் கூட்டாளியின் சங்கிலி எண்களாகவே தரும். இதுதான் ரகசியம் ஒன்பதின் மகத்துவம்! இப்படி ஒன்பதைப் பற்றி நிறைய விஷயமிருக்கு!" என்றார் அப்பா.*

*இதற்குள் கதைப் பிரியர்கள்: "க்ணிதம் போதும் அங்கிள், கதை சொல்லுங்கள்" என்றார்கள் கெஞ்சலுடன்.*

*"கவலைப் படாதீர்கள். இனி முழுக்க முழுக்க கதை தான். உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? குழந்தைகள் கதை எழுதுவதில் புகழ்பெற்றவர் சார்லஸ் டாட்சன் என்பர். அலிஸின் அற்புத உலகம் (Alice in Wonderland) கதையை உங்களில் எவ்வளவு பேர் படித்திருக்கிறீர்கள்?*

*"எல்லாருமே படித்திருக்கோம் அங்கிள். ஆனா அதை எழுதியது லூயிகரோல் என்பவர்னா?"*

*"நிஜம்தான்- லூயிகரோல் என்பது சார்லஸ் டாட்சனோட புனை பெயர். இவர் ஒரு கணிதமேதை. ஆனால் இவருக்குப் பெயரும் புகழும் பெற்றுத் தந்தது - இவர் குழந்தைகளுக் காக எழுதிய கதைகளினால்தான். இங்கிலாந்து அரசி விக்டோரியா மகாராணி இவருடைய அலிஸின் அற்புத உலகக் கதையைப் படித்துவிட்டு, அவரை அரண்மனைக்கு (விண்ட்ஸர் காஸில்) அழைத்து, பாராட்டோ பாராட்டுன்னு பாராட்டினார்! அவருடைய அடுத்த குழந்தைக் கதை*

www.tamilnesan1981.blogspot.in

புத்தகத்தை முதலில் தனக்கு அனுப்பும்படி சார்லஸ் டாட்சனிடம் (லூயி கரோலிடம்) கேட்டுக் கொண்டார். ஆனால் டாட்சனின் அடுத்த மகத்தான படைப்பு கணிதம் பற்றி இருந்தது– விக்டோரியா மகராணிக்கு ஏமாற்றமோ ஏமாற்றம்!" என்றார் அபப்ா.

"விக்டோரியா ராணி ஏமாந்தது போல நீங்க எங்களை ஏமாற்றத்தில் ஆழ்த்தாதீர்கள் அங்கிள். கணிதத்தை விட்டுக் கதைக்கு வாருங்கள்" என்று கதைப் பிரியர்கள் வற்புறுத்தினார்கள்.

அப்பாவும் குழந்தைகளுக்குக் கதைகள் கூறத் தொடங்கினார்.

www.tamilnesan1981.blogspot.in



''என்ன கோபு— கண்ணை மூடிக்கொண்டு என்ன தியானமா, யோசனையா?'' என்று கேட்டார் துண்டை உதறி ஊஞ்சலில் போட்டு, உட்கார்ந்து கொண்டார் அப்பா. அவரிடம் கதை கேட்க, வழக்கப்படி தெருக்குழந்தைகள் வந்து கூடி இருந்தனர். அவர்களில் ஒருவன் கோபு.

''தியானமில்லே - கனவுதான் சார். இந்த வயசிலே எனக்கு தியானமெல்லாம் வராது. கனவுதான் காணலாம்.''

''தியானத்துக்கு வயது முக்கியமில்ல கோபு. மனப்பக்குவம் இருந்தா... சரி, சரி! அது இருக்கட்டும், கனவு காண்பதும் நல்லதுதான். காணும் கனவை நினைவாக்கும் ஆற்றல்—முயற்சி தேவை இளைஞர்களுக்கு. போகட்டும், உன்னைப் போலத்தான் ரஹீமும் கனவு கண்டான்...''

''அது யார் மாமா, ரஹீம்?'' கல்பனா கேட்டாள்.

''இன்றைய கதையே அவனைப்பற்றித்தான் கேள்—'' என்று கதை சொல்லத் தொடங்கினார் அப்பா!

# 1. கனவு பலித்தது!

புகழ்பெற்ற பாக்தாத் நகரின் குறுகிய கோணல்மாணலான தெரு ஒன்றில் காசிம் என்ற கிழவன் வசித்து வந்தான். அவனுக்கு ரஹீம் என்று ஒரு மகன் இருந்தான். காசிம் அந்தத் தெருவில் ஜோடுகள் தயாரிக்கும் கடை ஒன்று வைத்திருந்தான். காசிம் தயாரிக்கும் காலணிகள் அப்படி ஒன்றும் பிரமாதமானவை அல்ல. பழைய ஜோடுகளைப் பழுது பார்ப்பதிலும் அவனைத் திறமைசாலி என்று சொல்லி விட முடியாது. காசிமுக்கு வயதாகிவிட்டபடியால் கண்களும் விரல்களும் ஒத்துழைக்க மறுத்துவிட்டன. மகன் ரஹீமோ காலுக்குக் கீழே போட்டு மிதிக்கும் செருப்புத்தானே என்ற அலட்சியத்துடன் அந்தத் தொழிலிலே சிரத்தை காட்டுவதில்லை. காசிமின் கடை எப்போதும் சந்தடி இன்றி நிசப்த

www.tamilnesan1981.blogspot.in

மாகவே இருக்கும். அதாவது ஒருமூலையில் தூங்கிக் கொண்டிருப்பான் காசிம். ஜன்னலருகே உட்கார்ந்து கொண்டு பகல் கனவு காணுவான் ரஹீம்.

இப்படி ஒருநாள் ரஹீம் கனவுலகிலே மூழ்கி இருக்கும் போது, அவன் கற்பனை மேகத்தை ஒரு கரிய நிழல் மறைப்பது போலிருந்தது. இரண்டு தடவை கண்களை மூடித் திறந்து கனவின் பிடியிலிருந்து விடுபட்டு, விழித்துப் பார்த்த போது தன் முன்னால் பருத்த மனிதன் ஒருவன் நிற்பதைக்



www.tamilnesan1981.blogspot.in

கண்டான். பளபளக்கும் வெல்வெட் அங்கியும் ஜரிகைத் தலைப்பாகையும் அணிந்திருந்தது அந்த உருவம்.

"காலை வணக்கம். ஐயா! உங்களுக்கு என்னால் ஆக வேண்டியது ஏதாவது இருக்கிறதா?" என்று பணிவுடன் கேட்டான் ரஹீம்.

அடர்ந்த தாடியுடைய அந்த மனிதன், தன் சிவந்த கண்களை உருட்டி விழித்தபடி, காலை போய்விட்டது என்பதை நினைவுபடுத்தப் பகல் வந்தனத்தைப் பதிலுக்குச் சொல்லிவிட்டு, "முதலிலே நீ உன் தூக்கத்திலிருந்து விழித்துக்கொள்" என்று கர்ஜித்தான்.

"நீங்க ரொம்ப நேரமா காத்துக்கிட்டிருந்தீங்களோ?" என்றான் ரஹீம். 'ம்' என்று உறுமினான் அவன். பிறகு, "நேரம் என்பது அர்த்தமும் அளவுமில்லாத ஒருசொல். நான் பத்து நிமிஷமாகக் காத்துக்கொண்டிருக்கிறேன். பத்துநிமிஷ மென்பது என் போன்றவர்களுக்குப் பெரிய விஷயம். சீக்கிரம் இந்த ஜோடுகளைப் பழுதுபார்" என்று சொல்லி ஒரு ஜதை புராதனமான மிதியடிகளை ரஹீமின் மடியிலே வீசி எறிந்தான், அந்தச் செல்வந்தன்.

ரஹீம் அந்தக் கிழிந்த ஜோடுகளைப் பார்த்தான். பிறகு அதன் சொந்தக்காரனைப் பார்த்து, "இந்த ஓட்டைச் செருப்புக்கும் ஒட்டுப் போட்டுத் தைப்பவர்கள் இந்த பாக்தாத் நகரிலே இருப்பார்கள். பிறரை அடிமைபோல மதித்துப் பேசும் உன்னைப் போன்ற கொழுத்த பணக்கார ராட்சதர்களுக்கு வேலைசெய்ய எனக்கு சௌகரியப்படாது. போய் வாருங்கள்!"



www.tamilnesan1981.blogspot.in

என்றான் ரஹீம். வந்த மனிதனின் முகம் அவமானத்தால் சிவந்துவிட்டது. ஆனால், ரஹீம் அவனை லட்சியம் செய்யாமல் கண்களை மூடிக்கொண்டு மறுபடியும் கனவு காண ஆரம்பித்துவிட்டான்.

"இதோ கத்தி! தலை தரையில் உருளும்!" என்று காதில் விழுந்த சில வார்த்தைகள் — ஆத்திரத்துடன் அந்த மனிதன் கூச்சலிட்டபடியே போகும்போது சொன்னவையாகத்தான் இருக்கவேண்டும் என்று ஊகித்துக் கொண்டான் ரஹீம்.

நடந்ததை மறந்து மறுபடி கற்பனைத்தேரின் மீது ஏறிக்கொண்டு உல்லாசமான எண்ணங்களிலே மிதக்க ஆரம்பித்தான். தன்னை ஒரு இளவரசனாகவும், ஓர் அழகிய இளவரசி தன்னை மணந்து கொள்ளுவதுபோலவும், தான் ஐம்பது அழகிய அரண்மனைகளுக்கு அதிபதியாக ஆடம்பரமுடன் வாழ்ந்து கொண்டிருப்பதுபோலவும் ரஹீம் கண்டு கொண்டிருந்த கனவிலே மறுபடி நிழல் படிய ஆரம்பித்தது. கண்ணை விழித்துப் பார்த்தபோது எதிரே ஒரு கிழவன் நின்று கொண்டிருந்தான். கந்தலாடையுடனிருந்த அவன் கண்களில் அன்பு ஒளி வீசுவதைக் கண்டான் ரஹீம். அந்தக் கிழவனின் கையில் நைந்துபோன படு பழசான மிதியடிகள் ஒரு ஜோடி தொங்கிக் கொண்டிருந்தன.

"வணக்கம் தாத்தா... உங்களுக்கு நான் ஏதாவது செய்ய வேண்டியது உண்டா?" என்று கேட்டான் ரஹீம்.

"உன்னுடைய கனவைக் கலைத்ததற்காக வருந்துகிறேன்" என்றார் கிழவர்.

"ரொம்ப நேரமாகக் காத்துக் கொண்டிருக்கிறீர்களோ?"

"நான் காத்துக் கொண்டிருந்ததற்காக வருத்தப்படவில்லை. என்னைப்போல வயதானவர்களின் சௌகரியத்தைவிட உன்னைப் போன்ற வாலிபர்களின் கனவுதானப்பா முக்கியம்... ம்— அது சரி. இந்த மிதியடிகளைப் பழுது பார்க்கலாமென்று வந்தேன். ஆனால் அப்படி அவசரம் ஒன்றும் இல்லை. பல வருஷங்களாகவே இது— இந்த மாதிரி பழுது பார்க்கப்பட வேண்டிய நிலையிலேயேதான் இருக்கிறது. ஆகவே இது இன்னும்கூடக் கொஞ்சநாள் இப்படியே இருக்கலாம்" என்றார் கிழவர்.

www.tamilnesan1981.blogspot.in

ரஹீம் கிழவரின் அடக்கமான பேச்சைக் கண்டு புன்முறுவல் பூத்தான். “தாத்தா, நீங்களோ அல்லது அந்த மிதியடிகளோ இங்கே காத்திருக்க வேண்டியதில்லை. உங்கள் பேச்சும் பழகும்முறையும் எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. அந்த மிதியடிகளை இப்படிக் கொடுங்கள். உடனே சரி செய்து தருகிறேன்” என்றான்.

“ஆயிரம் வந்தனங்கள், அப்பா. இதை நீ சரி செய்து கொடுத்தால் நீ எது கேட்டாலும் நான் தருகிறேன்... ஏன் மேலேயும் கூடக் கொடுப்பேன்” என்றார் கிழவர். ரஹீம் வணக்கத்துடன் அந்த ஜோடுகளை வாங்கிக்கொண்டு,



www.tamilnesan1981.blogspot.in

“தாத்தா, இதைப் பழுது பார்த்துத் தைக்க அரை மணியாகும். அதுவரை இப்படி உள்ளே வந்து உட்கார்ந்திருங்கள்” என்றான்.

“இல்லையப்பா, எனக்கு நகைக் கடையிலே கொஞ்சம் வேலை இருக்கிறது. அதைப் பார்த்துக்கொண்டு அரைமணியிலே திரும்பி வருகிறேன்” என்று சொல்லி நடந்தவர் மறுபடி திரும்பி வந்து புன்முறுவலுடன். “ஒரு விஷயம்; இந்த ஜோடுகளைப் பார்த்தவர்கள் எல்லோருமே அதைத் தங்கள் காலில் போட்டுக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுவது உண்டு. இந்தக் கிழிந்த செருப்புமீது அந்த ஆசை ஏன் ஏற்படுகிறதென்று எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை உனக்கும் அந்த மாதிரி ஆசை வந்தால், நான் உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்; நீ அந்த ஆவலை அடக்கிக் கொள்.”

ரஹீம் ‘கடகட’வென்று சிரித்தான். “தாத்தா, எனக்குச் சொந்தமா ஜோடு இருக்கு. இதுக்கு நான் அதை மாத்திக்க மாட்டேன். கவலை இல்லாமல் போய் வாங்க” என்றான். கிழவர் குனிந்து வணங்கிவிட்டுக் கடைவீதியை நோக்கி நடந்தார்.

ரஹீம் சீட்டி அடித்துக்கொண்டே வேலை செய்ய உட்கார்ந்தான். அந்தக் கிழிந்த ஜோடுகளைப் பார்த்ததும், கிழவர் சொன்னது நினைவுக்கு வந்து மறுபடி சிரிப்பை உண்டாக்கிற்று.

‘நல்ல விந்தை மனிதர்! ஒருவேளை இவர் மந்திரவாதியோ, இந்த மிதியடிகள் மந்திரசக்தி வாய்ந்தவைகளோ?’ தனக்குத் தானே பேசிக் கொண்டான் ரஹீம். அந்த மிதியடிகளுக்கு மந்திரசக்தி இருந்ததோ இல்லையோ அது பதில் சொல்ல வில்லை. ரஹீம் மிதியடியைத் திருப்பித் திருப்பிப் பார்த்தான். ‘ஆமாம்; அப்படித்தான் இருக்க வேணும், இது சாதாரண ஜோடுகளல்ல. இல்லாவிட்டால் அவர் ‘இதை அணிந்து கொள்ள ஆசைப்படாதே’ என்று என்னை ஏன் எச்சரிக்கவேண்டும்... ம்... இதை நான் அணிந்து கொண்டால் என்ன நடக்கும்? அதையும்தான் பார்த்துவிடுவோமே... ஒரு தப்படிக்கு ஏழு மைல் போகுமா?’

எண்ணம் வளர வளர – ரஹீமின் ஆவலும் அதிகமாயிற்று. ‘இதனால் உலகைச் சுற்றி வரலாம் என்றால் நான் ஏன்

www.tamilnesan1981.blogspot.in

இதைப் போட்டுக்கொள்ளக் கூடாது?' மற்றொரு மிதியடியை யும் கையில் எடுத்துக் கொண்டான். 'இதன் சக்தி இன்னும் சில விநாடிகளில் தெரிந்து போகிறது!' என்று அந்த மிதியடி களைத் தன் கால்களில் மாட்டிக் கொண்டான்.

எந்தவிதமான அதிசயமும் நடந்துவிடவில்லை. பட படக்கும் நெஞ்சுடன் மெதுவாக ரஹீம் ஒரு காலைத் தூக்கி வைத்தான்— குபீரென்று தான் பறந்து விடுவோமோ என்ற பயத்தில். ஆனால் எடுத்து வைத்த அடி பதிந்த இடத்தி லேயே தான் அவன் நின்று கொண்டிருந்தான்.

"ப்பூ... வெறும் பழைய கந்தல் செருப்பு!" என்று நிராசை யுடன் முணுமுணுத்தான். "நான் பழைய செருப்பை பழுது பார்க்கும் அதே ரஹீமாகத்தான் இருக்கிறேன்... ம்..." என்ற ஒரு நீண்ட பெருமூச்சுக்குப் பின், "நான் மட்டும் ஒரு இளவரச னாக மாறி இருந்தால்... ஓர் அழகிய இளவரசியை மணந்து கொண்டு ஐம்பது அழகிய அரண்மனைகளுக்கு அதிபனாகி... ராஜாவாக..."

"எழுந்திருங்கள்" என்றது ஒரு இனிமையான கொஞ்சும் குரல். "இப்படித்தான் நந்தவனத்தில் மயங்கிக் கிடப்பார்களா? பிரதம மந்திரியையும் அவர் மனைவிகளையும் விருந்துக்கு அழைத்திருந்தீர்களே, மறந்து விட்டீர்களா?" என்று அந்தக் குரல் தொடர்ந்தது.

ரஹீம் கண்களை விழித்தான். அவன் அருகே அழகே வடிவான பெண் ஒருத்தி, விலை உயர்ந்த ஆடை ஆபரணங் கள் அணிந்து உட்கார்ந்திருந்தாள்.

"நீ... நீங்கள்... யார்?" என்று வாய் குழற உளறினான். அந்த அழகி கலகலவென்று முத்துப்பல் ஒளிவீசச் சிரித்தாள்.

"இன்னும் தூக்கக் கலக்கமா? உங்கள் சொந்த மனை வியைக் கூடவா உங்களுக்குத் தெரியவில்லை?" என்றாள் அவள்.

"என்ன... என் மனைவியா? அப்படியானால் நான் யார்?" என்று மயங்கினான் ரஹீம்.

அந்தப் பெண் வியப்பினால் கண்கள் விரிய, "பாக்தாத் நகரத்துக் காலிஃப் அவர்களே! பணியும்படியான பராக் கிரமம் வாய்ந்த 'பதேபூர் காஸீயின் ராஜகுமாரருக்கே—தான்

www.tamilnesan1981.blogspot.in

யார் என்பது தெரியவில்லையானால், அதை அவருக்குத் தெரியப்படுத்த இங்கே யாருக்குத் துணிவு?"

இதற்குப் பிறகுமா ரஹீம் அசடுபோல விழித்துக் கொண்டிருப்பான்? அவன் கனவு காணுவது நினைவுக்கு வரவே, "உண்மைதான்; பதேபூர் காஸியின் ராஜகுமாரன் நான்தான். நீயும் என் அருமை மனைவிதான்... ம்... அதுசரி; நமக்கு எத்தனை அரண்மனைகள் இருக்கின்றன. சொல் கண்ணே!" என்றான் இளவரசன் ரஹீம், ராஜாங்க பாஷையில்.

ராஜகுமாரி பேகம் ஸாஹிபா சொன்னாள்: "இன்றைக்கு 15 அரண்மனைகள் நமக்கு இருக்கின்றன. சேனாதிபதி கத்லூகான் யுத்தத்திலிருந்து திரும்பியதும் இன்னும் பல அரண்மனைகள் சேரும். அதுசரி; எழுந்து வாருங்கள் உள்ளே. விருந்தாளிகளை வரவேற்கத் தயாராக இருக்க வேண்டாமா?" என்று இளவரசரின் கையைப் பிடித்து இழுத்தவள்— அவர் காலில் இருந்த செருப்பைப் பார்த்ததும் அருவருப்புடன், "இந்த மிதியடிகள்தானா கிடைத்தது உங்களுக்கு? இதை எந்தக் குப்பை மேட்டிலிருந்து பொறுக்கினீர்கள்?" என்று கடிந்து கொண்டாள்.

**வ**ருஷங்கள் உருண்டன. பதேபூர் காஸியின் ராஜகுமாரருக்கும் வயதாகிக் கொண்டு வந்தது. செல்வம் பெருகிற்று. மக்கள் கண்டு நடுங்கும் குரூரமும் கொடுமையும் நிறைந்த பலம் பொருந்திய சுல்தானாகி விட்டார். அரசகுமாரி பேகம் ஸாஹிபாவுக்கும் வயதாகிவிட்டது. தங்கச் சலங்கை ஒலி போலிருந்த அவள் குரல் வெள்ளிச்சலங்கை ஒலியாகி, வெள்ளி பித்தளை, பித்தளை தகர டப்பாவின் ஒலிக்கு வந்துவிட்டது! அப்படி இருந்தும் சுல்தானுடன் நேருக்கு நேர் நின்று பேசக் கூடியவள் அவள் ஒருத்திதான்!

ஒருநாள் சுல்தான், காலிஃப்பின் மாளிகைக்கு யுத்த சம்பந்தமாக ஆலோசனை நடத்தக் கிளம்பிக் கொண்டிருந்தார். அப்போது அவர் முன்னால் வந்து நின்று கொண்டாள் அரசி. "உங்களுக்கு எத்தனை தடவை சொல்வது? இந்தச் சனியன் பிடித்த கிழிந்த ஜோடுகளைத் தூர எறியுங்கள்" என்றாள். அவள் கையில் கந்தலாகிப் புழுதி படிந்து விகாரமாக ஒரு ஜோடி பாதரட்சைகள் தொங்கிக் கொண்டிருந்தன. "எந்த அடைசலை ஒழித்தாலும் இந்தச் சனியன்

www.tamilnesan1981.blogspot.in

.ங்கே இருக்கு. இதைக் கண்டாலே எனக்கு ஆத்திரமாக இருக்கு. நம் அரண்மனைச் சேவகர்கள் உங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள்?"

பாவம், சுல்தான் என்ன செய்வார்! அடுத்த நிமிஷம் கிந்தல் செருப்புடன் அவர் கடை வீதியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்.

செருப்புக் கடையிலிருந்த இளைஞனும் கனவுலகி லிருந்து கண்ணை விழித்தான்.

"சீக்கிரம் இந்த ஜோடுகளைப் பழுதுபார்" என்று சொல்லி, அந்தக் கிழிந்த மிதியடிகளை அந்த இளைஞனின் மடியிலே விட்டெறிந்தார் சுல்தான்.

இளைஞன் அந்தக் கிழிந்த ஜோடுகளைப் பார்த்தான். பிறகு அதற்குடையவரைப் பார்த்தான். "இந்தக் கிழிந்த செருப்புக்கு ஒட்டுப்போட்டுத் தைப்பவர்கள் இந்த பாக்தாத் நகரிலே இருப்பார்கள். பிறரை அடிமைபோல மதித்துப் பேசும் உன்னைப் போன்ற கொழுத்த பணக்கார ராட்சதர்களுக்கு வேலை செய்ய எனக்குச் சௌகரியப்படாது. போய் வாருங்கள்..." என்றான் இளைஞன்.



www.tamilnesan1981.blogspot.in

சுல்தானின் முகம் கறுத்தது. குதிரைமீது ஏறிக் கொண்ட சுல்தானுக்குத் தான் அவமானப்படுத்தப்பட்டது ஆத்திரமாக இருந்தது.

'இத்தனையும் இந்தப் பழஞ் செருப்பால்தானே' என்று ஆத்திரத்துடன் வேகமாக அதை வீசி எறிந்தார், இளவரசர்.

"என் அருமை மிதியடியே, வா. நமது பிரயாணத்தைத் தொடங்கலாம் வா" என்று சொல்லிக் கொண்டே அந்தப் பழைய கிழிந்த மிதியடிகளுடன் நடந்தான் கிழவன்—எங்கே?

கனவுலகிலே சஞ்சரிக்கும் அந்த இளைஞனிடம் தான்!



www.tamilnesan1981.blogspot.in



*கதை கேட்கக் கூடி இருக்கும் குழுவில் சுட்டிப்பயல், அரவிந்த்,ஒரு நாய்க்குட்டியுடன் உட்கார்ந்திருப்பதைக் கண்ட அப்பா, ''பயலே! உன் புதுத் தோழனா?'' என்று விசாரித்தார்.*

*"ஆமாம் அங்கிள். காலையிலிருந்து இது என் கூடவே வருது. நான் இதை வளர்க்கப் போறேன்'' என்றான் அரவிந்த்.*

*''என் சின்ன வயசிலே இதுபோலதான் ஒரு நாய்க் குட்டியை வளர்த்தேன். அந்தக் கதையை இன்னிக்குச் சொல்லட்டுமா'' என்றார் அப்பா.*

*''சொல்லுங்கள்'' என்று குழந்தைகள் ஆரவாரமிட்டனர்.*

## 2. திருடன் பிடிபட்டான்

மூன்று நாளாக விடாமல் மழை. சூரியனைப் பார்ப் போமா என்று தவித்துப்போய் விட்டார்கள் ஜனங்கள். மழை யோடு ஊதல்காற்று வேறு. எங்கோ இருநூறு மைல்களுக் கப்பால் புயல் அடிப்பதாக அப்பா பேப்பரில் படித்துச் சொன்னார். உடனே அம்மா என்னைக் கம்பளி மூட்டை யாக்கி விட்டாள். அம்மாவை நான் குறை சொல்லவில்லை. அத்தனை குளிருக்கும் அம்மா எனக்கு அணிவித்திருந்த கம்பளி உடைகள் இதமாகத்தான் இருந்தன.

அன்று சற்று மழை குறைவு. அதாவது பொடித் தூறலா யப் போட்டுக் கொண்டிருந்தது. நான் வாசல் பக்கம் வந்தேன், கைகளை மார்போடு சேர்த்துக் கட்டிக் கொண்டு. எங்கள் வீட்டு வாசல் படியருகே ஏதோ முனகும் சப்தம் கேட்டது. ஆவலுடன் எட்டிப்பார்த்தேன். ஒரு சின்ன நாய்க்குட்டி குளிரில் நடுங்கியபடி, வாசல்படி ஓரத்தில் ஒண்டிக் கொண்டி

www.tamilnesan1981.blogspot.in

ருந்தது. அது அப்படி ஒன்றும் அழகான நாய்க்குட்டி இல்லை. அழகாயிருந்தாலும். இல்லாவிட்டாலும் குளிர் என்பது எல்லா நாய்களுக்கும் ஒன்றுதானே? . எனக்குப் பரிதாபமாக இருந்தது. உள்ளே அம்மாவிடம் ஓடினேன். நாய் படும் அவஸ்தையைச் சொன்னேன். முதலில் அம்மா, "அதெல்லாம் முடியாது, நாயை வளர்க்கக் கூடாது" என்று அவள் சொன்னாலும் குரலில் கண்டிப்பு இல்லை. எனக்குத் தெரியும் அம்மாவின் குணம்; நான் விடாமல் வற்புறுத்தினேன். அது மழையில் எப்பிடி ஒண்டிக் கொண்டு தவிக்கிறது என்பதை வர்ணித்தேன். அவளும் "சரி" என்றாள். எனக்கு வேண்டியது அவ்வளவுதானே! உடனே வேலைக்காரனை விட்டு அதை தூக்கிவரச் சொல்லி, வெந்நீர் வைத்துக் குளிப்பாட்டித் துடைத்து, சுடச்சுடப் பால் வாங்கி ஊற்றினேன். நாய்க் குட்டியும் என்னை நன்றியோடு சுற்றி சுற்றி வந்தது.

ஜிம்மி என்று அதற்குப் பெயர் வைத்தேன். ஜிம்மிக்கு சப்பை முகம், மொட்டை வால், குட்டைக் கால், முதுகும் முகமும் கறுப்பு. அழகாயில்லாவிட்டாலும் சூட்டிகையாக இருந்தது. எப்படியோ அதன்மீது எனக்கு ஒரு அன்பு விழுந்து விட்டது.

சாயந்திரம் அப்பா வந்ததும் என் ஜிம்மியைப் பற்றிச் சொன்னேன். முதலில் அவரும் முகங் கடுத்தார்.

"என் அறைக்குள் வந்து அட்டகாசம் செய்யும். நம் வீட்டிற்கெல்லாம் நாய் சரிப்பட்டு வராதப்பா" என்றார். கடைசியில் என் பிடிவாதம்தான் வெற்றி பெற்றது.

ஜிம்மியை விட்டு நான் பிரிவதே இல்லை. அதுவும் சதா குதித்து விளையாடிக் கொண்டிருந்தது. அதன் குரல் எனக்கு இனிமையாக இருந்தது. ஆனால், என் அப்பாவுக்கும், அம்மா வுக்கும் வேதனையாக இருந்தது. அவர்கள் எனக்காகப் பேசாதிருந்தார்கள். ஆனால், அண்டை அயல்வீட்டுக்காரர்கள் அப்படி இல்லை. ஜிம்மியினால் தங்களுக்கு அமைதியே போய் விட்டதென்றும், இரவில் தூக்கம் கெடுவதாகவும் குற்றம் சாட்டி– அப்பாவிடம் புகார் செய்தார்கள். நானும் ஜிம்மியிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அந்த 'நாய்' கேட்பதாக இல்லை. நல்ல சாப்பாடும் சுகமான இடமும் அதற்கு ஒரே உற்சாகம். அந்த உற்சாகத்தைப் பாவம், அது எப்படி வெளிக்காட்டும்?


www.tamilnesan1981.blogspot.in

அப்பா என்னிடம் அடிக்கடி, "டேய், இந்த ஜிம்மியை விரட்டித் தொலைடா!" என்று கடிந்து கொண்டார்.

அம்மாவும், "அந்தச் சனியன் சமையல் அறைக்குள்ளேயும் வருகிறது, கொல்லைப்புறமும் ஓடுகிறது. உடனே பூஜை அறைக்கும் போய்த் தொலைக்கிறது" என்று தலையில் அடித்துக் கொண்டாள். இத்தனை பேருடைய எதிர்ப்புக்குமிடையே நான் ஒருவன்தான் ஜிம்மியிடம் அன்பு காட்டி வந்தேன். அது தன் தலையைச் சாய்த்துக் கொண்டு என்னைப் பார்த்தபோது என் உள்ளம் அப்படியே உருகிவிடுகிறதே, நான் எப்படி அதை விரட்டுவது?

அன்று அடுத்த வீட்டுக்காரர்— ஆத்திரத்துடன் என் அப்பாவிடம் ஓடி வந்தபோது என் உள்ளமே நின்றுவிட்டது. அவர் சொன்ன செய்தி அப்படிப்பட்டது. அவர் ஒரு மலர்ப் பிரியர். விதவிதமான மேல்நாட்டு மலர்களைப் பாத்திகளில் பயிரிட்டு அழகு பார்ப்பவர். இன்று காயில் அவர் தனது முக்கியமான மலர்ப் பாத்திகளில் ஒன்று நாசமாகி இருப்பதைக் கண்டு ஓடோடி வந்தார் என் அப்பாவிடம். ஜிம்மி தன் புதையலை அந்தப் பாத்தியில் புதைத்து வைக்கக் குழி பறித்துவிட்டது. நாய்க்குட்டியின் புதையல் என்ன என்றுதான் உங்களுக்குத் தெரியுமே. ஆமாம், எலும்புத் துண்டுதான்!

என் அப்பா அவரைச் சமாதானப்படுத்தப் பட்டபாடு,



www.tamilnesan1981.blogspot.in

அப்பப்பா! அவர் போனதும் என் அப்பாவின் கோபம் என் மீதுதான் திரும்பியது.

"எங்கேடா உன் ஜிம்மி? கொண்டா அதை" என்று கர்ஜித்தார். என்னைப் போலவே ஜிம்மியும் அவர் குரலைக் கேட்டுப் பயந்து எங்கோ ஓடிவிட்டது.

"தேடி இழுத்து வாடா அந்தச் சனியனை. இந்த வீட்டை விட்டு அதை விரட்டினால்தான் நிம்மதி. ஊரார்கிட்ட எல்லாம் வசவு வாங்க வேண்டியிருக்கு" என்று இரைந்துவிட்டு, வேலைக் கார முனியனிடம் ஜிம்மியை இழுத்து வரும்படி உத்தர விட்டார்.

சிறிது நேரத்தில் முனியனும்— ஜிம்மி கத்தக் கத்த அதை இழுத்து வந்தான். என்னைக் கண்டதும் ஜிம்மி முனி யனிடமிருந்து திமிறி ஓடி வந்து, என்னிடம் ஒண்டிக் கொண் டது. நான் அதைக் காப்பாற்றுவேன் என்ற ஆசையில்.

ஆனால், அப்பாவின் கோபம் அன்று எல்லைமீறி விட்ட தால் என்னால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. ஜிம்மியை, ஆதரவற்ற அனாதை ஜீவன்களை அடைத்து வைத்துப் பாதுகாக்கும் – ஜீவகாருண்ய சங்கத்திற்கு கடிதம் கொடுத்து, முனியன் மூலம் அனுப்பிவிட்டார்.

அன்று முழுவதும் எனக்கு எதிலுமே மனது செல்ல வில்லை. சாப்பிடக் கூடப் பிடிக்கவில்லை. இரவு படுத்தபோது கூட, ஜிம்மியின் பரிதாபமான அழுகையும், பார்வையும்தான் என் கண்முன்னால் வந்து நின்று வேதனை செய்தன. அதன் பரிதாபமான பார்வை என் நெஞ்சைப் பிளந்தெடுத்தது. தூக்கம் வரவே இல்லை. நிசப்தமான அந்த இரவிலே— கடிகாரம் பன்னிரண்டு, ஒன்று, இரண்டு என்று மணி அடிப் பதைக் கேட்டுக்கொண்டே, ஜிம்மியை நினைத்தபடி படுக்கையில் புரண்டு கொண்டிருந்தேன்.

திடீரென்று ஹாலில் ஏதோ சப்தம் கேட்டது போலிருந் தது. இரண்டு தடவை அதை அலட்சியம் செய்தாலும், மூன்றாவது தடவை நாற்காலி உருளும் சப்தமும்— ஒரு மனிதனின் குரலும் கேட்கவே— நான் எழுந்திருந்து கதவைத் திறந்து கொண்டு ஹால் பக்கம் போய் மின்சார விசையை அழுத்தினேன். அதே சமயம் அப்போதுதான் விழித்துக்

www.tamilnesan1981.blogspot.in

கொண்ட அப்பாவும் அங்கு வந்தார். அங்கு நாங்கள் கண்ட காட்சி என்ன தெரியுமா?

ஒரு முரட்டு ஆள், பக்காத் திருடன், பிடி மீசை அவனுக்கு. அவன் கையில் அம்மாவின் பட்டுப் புடவைகளும், வெள்ளிப் பாத்திரங்களும் இருந்தன. கீழே ஒரு மூட்டை வேறு இருந்தது. அவனை நகரவிடாமல் ஜிம்மி – அவன் கால் சதையைப் பிடித்துக் கௌவிக் கொண்டிருந்தது. அதன் தலையிலிருந்து ரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது.

அப்பா தடபுடல் படுத்தினார். போலீசுக்குப் போன் செய்தார். போலீஸ் வந்தது. வெகுநாளாகத் தேடிவந்த மாயாண்டி என்ற பெரிய 'கேடி' அவன், என்று இன்ஸ்பெக்டர் சொன்னார்.

"இவனை எப்படி சார் பிடித்தீர்கள்?" என்று வியந்தார்.

அப்பா அதற்கு பதில் சொல்லவில்லை. திருடனே பதில் சொன்னான்: "இத்தினி வருச அனுபவத்திலே நான் இப்படி மாட்டிக்கிட்டதில்லீங்க. இந்த வீட்டிலே நாய் கிடையாதுன்னு தான் நான் உள்ளே நுழைஞ்சேன். அந்தச் சனியம்புடிச்ச நாய்க்குட்டி– நான் உள்ளே புகுந்த ஜன்னல் வழியாகவே புகுந்து, என்னை என்னமாப் புடிச்சிக்கிட்டு இழுத்தது! எத்தினி அடிச்சும் பிடியை விடல்லியே!" என்று நாயைச் சபித்தான்.

திருடனின் மூட்டையிலிருந்து பல பொருள்கள்– அன்று அந்தத் தெருவிலேயே நாலைந்து வீடுகளில் புகுந்து திருடியவை– கைப்பற்றப்பட்டன. தெருவே கூடிவிட்டது. திருடனுடன் போலீஸ் போனதும் தான் – அப்பாவின் கவனம் ஜிம்மியிடம் சென்றது. நான் ஜிம்மியைத் தூக்கி வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். என் ஜிம்மி பிழைக்குமோ என்னமோ என்ற கவலையில், எனக்கு அழுகை தாங்கவில்லை. என் அணைப்பில் அது வலியையும் மறந்து கண்ணை மூடியபடி மெதுவாக முனகிக் கொண்டிருந்தது. அது எதையோ தன் பாஷையில் என்னிடம் சொல்லிற்று. ஆனால் எனக்குத்தான் அது புரியவில்லை.

என் அப்பா இப்போது ஜிம்மியைப் பிரமாதமாகப் புகழ்ந்தார். அப்பா மட்டுமா? இரண்டு நாள் முன்பு ஜிம்மியை நிந்தித்து 'உதாசீனம்' செய்த தெருவே புகழ்ந்தது. ஜிம்மியை உடனே டாக்டர் வீட்டுக்கு அனுப்பினார்.

www.tamilnesan1981.blogspot.in

அனாதை மிருகங்கள் சங்கத்துக்குப் போன ஜிம்மி எப்படித் திரும்பி வந்தது என்று உங்களுக்கு வியப்பாக இருக் கிறதல்லவா? அதன் கழுத்தில் நைந்துபோன கயிறு ஒன்று தொங்கிக் கொண்டிருக்கிறது என்றால் உங்களுக்குப் புரிந்து விடும் இல்லையா?

மறுநாள் காலை, ஜீவகாருண்ய சங்கத்திலிருநது ஒரு மனிதன் வந்தான். முதல்நாள் அனுப்பிய நாய் தன்னைக் கட்டியிருந்த கயிற்றைக் கடித்து அறுத்துக் கொண்டு தப்பி ஓடி வந்துவிட்டதாகவும், ஆகவே, அதைத் திரும்ப அழைத் துப் போக சங்கிலியுடன் வந்திருப்பதாகவும் தெரிவித்தான். அப்பா அவன் சங்கிலிக்கு வேலை தரவில்லை.

தெருவே ஜிம்மியை, அதன் தீரத்தைப் புகழும்போது: அடுத்த வீட்டுக்காரரே, "என் மலர்ப்பாத்தி போனால் போகட் டும் சார், ஜிம்மியை இனி விரட்டாதீர்கள்" என்று சொல்லும் போது அப்பாவுக்கு ஜிம்மியின் அருமை தெரியாதா என்ன?



www.tamilnesan1981.blogspot.in



*"அங்கிள்! இன்று 'டி.வி'யிலே ஒரு பழைய தமிழ்ப் படம் பார்த்தேன். கம்பரோட மகன் அம்பிகாபதியோட கதை. பிரமாதமா இருந்தது" என்றாள் கமலா.*

*"பாடல் எண்ணுவதில் தவறு செய்து காதலனையே இழந்த ராஜகுமாரியின் கதைதானே? அது ரொம்பப் புகழ் பெற்ற கதை. அதேபோல டெல்லியை ஆண்ட சுல்தானின் மகள் வாழ்விலும் ஒரு நிகழ்ச்சி நடந்ததாகக் கதை உண்டு. சொல்லட்டுமா?" என்றார் அப்பா.*

*வேண்டாம் என்றா சொல்லுவார்கள் குழந்தைகள்!*

# 3. ராஜகுமாரி சலீமா

ரொம்ப ரொம்ப வருஷங்களுக்கு முன்னலே டில்லி நகரத்தை ஒரு சுல்தான் ஆண்டு வந்தார். அவருக்கு ஒரு பெண். ரொம்ப அழகானவள். சலீமா என்பது அவள் பெயர். சலீமா அழகோடு மட்டுமல்ல, ரொம்ப ரொம்ப நல்லவளும் கூட. எந்தப் பிராணிகளுக்கும் அவள் துன்பம் செய்யமாட்டாள். அவள் ஒரு சின்ன அழகிய வெள்ளைக் குதிரையை அன்புடன் வளர்த்து வந்தாள். அதற்கு 'பிரதாப்' என்று பெயர். சலீமா அடிக்கடி தன் அழகிய குதிரைமீது ஏறிக் கொண்டு வெகுதூரம் போய்விடுவாள். சில நாளைக்கு வானம் இருண்டு மழையும் இடியுமாக இருக்கும். சலிமா அரண்மனைக்குத் திரும்ப மாட்டாள். சுல்தான் பயந்து சலீமாவைத் தேட வீரர்களை அனுப்புவார். ஆனால் அவர்களுக்கு முன்னால் சலீமாவை, 'பிரதாப்' மிகுந்த ஜாக்கிரதையுடன் அரண்மனைக்குக் கொண்டு வந்து சேர்த்துவிடும்.

"பிரதாப் இருக்கும்போது நீ என்னைப் பற்றிக் கவலைப் படாதே அப்பா!" என்று சலீமா பெருமையுடன் அதைத் தட்டிக் தடவிக் கொடுப்பதுண்டு.

www.tamilnesan1981.blogspot.in

ஒருநாள் சலீமா 'பிரதாப்' மீது ஏறிக்கொண்டு நகரத்துக்கு அப்பால் வெகுதூரம் வந்துவிட்டாள். அது ஒரு மலைப் பிரதேசம். மலையுச்சியில் நின்றுகொண்டு தன் நாட்டைப் பார்த்து ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தாள் சலீமா. அப்போது 'அம்மே' என்று ஆட்டுக்குட்டியின் சப்தம் கேட்கவே திடுக் கிட்டு சுற்றுமுற்றும் பார்த்தாள். இந்தக் காட்டில், அதுவும் மலையில், ஆட்டுக்குட்டி ஏது என்று யோசனை செய்யும்போது, கீழே ஒரு மலை இடுக்கில் ஒரு கறுப்பு ஆட்டுக்குட்டி நடுங்கிக் கொண்டு தனியாக நிற்பதைக் கண்டாள். பக்கத்துப் பாறை இடுக்கில் ஒரு ஓநாய் அதன் மீது பாய குறி பார்த்துக் கொண்டிருந்தது. மேலே பெரிய பருந்துகள் இரண்டு ஆட்டுக் குட்டியைத் தூக்கிச் செல்லக் காத்திருந்தன.

"ஐயோ பாவம்! ஆட்டு மந்தையிலிருந்து எப்படியோ இந்தப் பொல்லாத குட்டி–தனியாக வந்து இங்கு சிக்கிக் கொண்டிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே குதிரையி லிருந்து கீழே குதித்து, கையில் கத்தியுடன் மெதுவாக ஆட்டிக்குட்டி நின்று கொண்டிருந்த பாறைக்கு இறங்கினாள் சலீமா. கொஞ்சம் கால் தவறினால் அதளபாதாளத்திற்குத் தான் போகவேண்டும். அவ்வளவு பயங்கரமான பாதை. சலீமா ஆட்டுக்குட்டியைக் காப்பாற்றிவிட்டாள். நடுங்கும் அதைத் தன் மார்புடன் அணைத்துக்கொண்டு, மறுபடி மேலே ஏறுவது அவளுக்கு மிகவும் கஷ்டமாகத்தான் இருந்தது. மேலே ஏறியதும் சலீமா திடுக்கிட்டாள். ஏன் தெரியுமா? அவள் குதிரையான 'பிரதாப்பை'க் காணவில்லை. அவளைத் தனியாக விட்டுவிட்டு இதுவரை அது இப்படிப் போனதே இல்லை. பலமாக 'பிரதாப்' என்று கூப்பிட்டாள். வெகுநேரம் காத்திருந்தாள். கால் கடுக்கத் தேடினாள். பிரதாப் வரவே இல்லை. அதை யாரோ பலவந்தமாகப் பிடித்துக்கொண்டு போயிருக்க வேண்டும். சலீமா ஆட்டுக் குட்டியையும் சுமந்துகொண்டு நடந்து நடந்து அரண் மனையை அடைந்தாள். நடந்தே பழக்கமில்லாததால் அவள் கால்களில் ரத்தம் கசிய ஆரம்பித்தது. சலீமாவைக் காணாமல் தவித்துக் கொண்டிருந்த சுல்தான் நடந்த சங்கதிகளைக் கேட்டதும் "குழந்தாய், கவலைப்படாதே. உன் குதிரையைத் தேடிக் கொண்டுவர கட்டளையிடுகிறேன்" என்று சமாதானப்படுத்தினார்.

www.tamilnesan1981.blogspot.in

சலீமா ஆட்டுக்குட்டிக்குப் பால் ஊற்றி அதைப் பட்டு மெத்தையில் படுக்க வைத்துவிட்டு—தன் அழகிய குதிரையை நினைத்துக் கண்ணீர்விட்டாள். ஒரு வாரமாயிற்று. குதிரையைத் தேடி சென்றவர்கள் எல்லோரும் வெறும் கையுடன் திரும்பி வந்தனர்.

சலீமாவிற்கு அழுகை அழுகையாக வந்தது. அப்போது 'அப்துல்' அவளிடம் வந்து, "சலீமா, அழாதே. நான் உன் குதிரையைக் கொண்டு வருகிறேன். யாராவது கொள்ளைக் கூட்டத்தார்தான் குதிரையை இழுத்துக்கொண்டு போயிருப் பார்கள்" என்று அவளைச் சமாதானம் செய்து குதிரையைத் தேடக் கிளம்பினான். அப்துல் சலீமாவுடன் சிறுவயது முதல் பழகியவன். சேனாதிபதியின் மகன். சலீமா அப்துல்லை தன் உயிருக்கு மேலாக மதித்து வந்தாள். வயது வந்ததும் அவனையே கலியாணம் செய்துகொள்வதாகவும் நினைத்திருந்தாள்.

"அப்துல், நீ தனியாகவா போகிறாய். எனக்குப் பயமாக இருக்கிறது" என்றாள் சலீமா.

"பயப்படாதே சலீமா! நான் ஆண் மகனல்லவா" என்று சொல்லிக் கிளம்பினான். அப்துல் குதிரையைத் தேடக் கிளம்புவதைக் கேட்ட சுல்தான் அவனைப் பரீட்சிக்க,



www.tamilnesan1981.blogspot.in

"அப்துல், இன்னும் 40 தினங்களுக்குள் நீ குதிரையுடன் வரா விடில் பிறகு இந்த நாட்டிற்குள்ளேயே வரக்கூடாது. இதோ இந்தக் கிண்ணத்தில் 40 மிட்டாய்கள் இருக்கின்றன. இதை நான் தினமும் ஒன்றாகச் சாப்பிடுவேன் 40வது நாள்— நீ குதிரையுடன் வராவிடில் உன்னை தேசப்பிரஷ்டம் செய்து விடுவேன்" என்று கட்டளையிட்டார்.

பாவம், சலீமாவுக்குக் குதிரை போனதைவிட இந்த உத்திரவு துன்பத்தைக் கொடுத்தது. அப்துலும் தன் குதிரையை விரட்டிக் கொண்டு கிளம்பினான்.

ஒன்று, இரண்டு, மூன்று என்று நாட்களும் போய்க் கொண்டிருந்தன. கிண்ணத்து மிட்டாய்களும் குறைந்து கொண்டே வந்தன. சலீமா தினம் மாடியில் உட்கார்ந்து கொண்டு அப்துலின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டே இருந்தாள். கிண்ணத்தில் மிட்டாய்கள் மூன்றாகக் குறைந்து விட்டன.

அன்று சலீமா மிகுந்த வருத்தத்துடன் இருந்தாள். இப்போது அவளுக்கு ஆறுதலளித்தது ஆட்டுக்குட்டிதான். ஆகையால் தன் தோழி, 'லைலா'வைக் கூப்பிட்டு "என் ஆட்டுக்குட்டியை வெகுநேரமாய்க் காணோமே. போய் பார்த்துக் கொண்டுவா" என்று அனுப்பினாள். லைலாவும் ஆட்டுக்குட்டியை எங்கெங்கோ தேடிவிட்டுக் கடைசியில் சுல்தானின் அறைக்குள் போய்ப் பார்த்து, அது அவருடைய பட்டு மெத்தையில் சுகமாகப் படுத்துக் கொண்டிருப்பதைக் கண்டு, அதைத் தூக்கிக்கொண்டு திரும்பிய அவள்— அங்கு கிண்ணத்திலிருந்த மிட்டாய்களைப் பார்த்தாள். மூன்று பெரிய மிட்டாய்கள்! அவள் நாக்கில் ஜலம் ஊறிற்று. "யாருக்குத் தெரியப் போகிறது" என்று ஒரு மிட்டாயை 'டபக்' என்று வாயில் போட்டுக் கொண்டுவிட்டாள். இல்லை ஒரு நாளையே சாப்பிட்டுவிட்டாள்.

இது நடந்த மறுநாள் சுல்தான், "சலீமா, இன்னும் ஒரே ஒரு மிட்டாய்தான் பாக்கி. நாளைக்கு அப்துல் வந்தால்தான்" என்றார். சலீமா, "நேற்று மூன்று மிட்டாய்கள் இருந்ததே அப்பா" என்று கத்தினாள். ஆனால் சுல்தான். "நீ தவறாக எண்ணியிருப்பாய்" என்று சொல்லிவிட்டார்.

சலீமா அன்று முழுவதும் அழுதுகொண்டே இருந்தாள். மறுநாளும் அப்துல் வரவில்லை. இனி அப்துல் வந்தாலும்

www.tamilnesan1981.blogspot.in

வராவிட்டாலும் ஒன்றுதான். இதை நினைத்து சலீமாவிற்கு எப்படி இருந்திருக்கும்.

சலீமா அழுதுகொண்டே தோட்டத்தில் உட்கார்ந் திருக்கும்போது, வெளியே குதிரையின் குளம்படி ஒலி சப்தம் கேட்டது. ஓடோடிச் சென்று பார்த்தாள். அப்துல் பிரதாப்புடன் நின்று கொண்டிருந்தான். உடனே அப்பாவிடம் ஓடிச்சென்று "அப்பா! அப்பா! உன் கணக்குப்படி ஒரு நாள்தானே தாமதமாக வந்தான். அவனை மன்னிக்கக் கூடாதா?" என்று கெஞ்சினாள். அப்துல் தன்னிடமுள்ள ஒரு கயிற்றைக் காட்டி "நான் ஒருநாள் முடிந்ததும் இதில் ஒரு முடிச்சுப் போட்டு வந்தேன். இதோ எண்ணிப் பாருங்கள். இதில் 39 முடிச்சுகள் தான் இருக்கின்றன. நாளை பொழுதுவிடிந்த பிறகுதான் 40வது முடிச்சு போடவேண்டும்" என்று விளக்கினான்.

ஆனால் சுல்தான் மனம் இரங்கவில்லை.

அரண்மனையே அமளி துமளிப்பட்டது. அப்போது தான், திருட்டுத்தனமாக ஒரு மிட்டாயைச் சாப்பிட்டதினால் ஏற்பட்ட பலனை அறிந்தாள் லைலா. சுல்தானிடம் ஓடினாள். "பாதுஷா, என்னை மன்னிக்க வேண்டும்" என்று கூறி உண்மையை ஒப்புக்கொண்டாள்.

"என் தோழி சலீமா அழுவதை என்னால் காணமுடிய வில்லை" என்று அவளும் அழுதுவிட்டாள்.

உண்மையை அறிந்த சுல்தான், அப்துலின் சாமர்த்தி யத்தைப் பாராட்டினார். அடுத்த வருஷம் சலீமா அப்துலைக் கலியாணம் செய்து கொண்டாள் என்று சொல்லவா வேண்டும்!



www.tamilnesan1981.blogspot.in



*''இன்றைய உலகத்திலே யோக்கியமானவனாக இருந்தால் மட்டும் போதாது. புத்திசாலியாகவும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஏமாற்றுக்காரர்கள் விழுங்கி ஏப்பம் விட்டு விடுவார்கள்...'' என்று அன்றையக் கதையின் முன்னுரையைக் கூறிவிட்டு நிறுத்தினார் அப்பா.*

*''ஏமாற்றியது யார்- ஏமாந்தது யார் அப்பா?'' என்று கேட்டாள் சாவித்திரி.*

*''இன்றைய கதையே அதுதானே. சொல்கிறேன் கேள்'' என்று கதையை ஆரம்பித்தார் அப்பா.*

# 4. மந்திர சைக்கிள்


கிட்டு ஒரு ஏழைப் பையன். சிறுவயதிலேயே குடும்பத்தைக் காப்பாற்றும் கடமை அவனுக்கு ஏற்பட்டு விட்டது. அதனால் வேலை செய்யக் கிளம்பிவிட்டான். கிட்டு பக்கத்து ஊரிலிருந்த ஒரு கிழவரின் வீட்டில் வேலை செய்து வந்தான். மாதாமாதம் அவர் கொடுக்கும் சம்பளத்தை ஊருக்கு அனுப்பிவிடுவான். இப்படியே ஒரு வருஷமாயிற்று. ஒருநாள் கிட்டுவிற்கு தன் அம்மாவை பார்க்க வேண்டும்போல ஆசையாக இருந்தது. தன் விருப்பத்தைத் கிழவரிடம் சொன்னபோது, அவர் கிட்டுவிடம் வாத்து ஒன்றைக் கொடுத்து "இதைக் கொண்டுபோ, இதன் காதில் நான் சொல்லும் மந்திரத்தைச் சொன்னால் இது உடனே ஒரு தங்க முட்டையிடும்" என்று ஒரு மந்திரத்தையும் சொல்லி வாத்தைக் கொடுத்துவிட்டு, "ஆனால் நடுவழியில் எங்கேயும் தங்காதே. தங்கினாயோ வாத்தை யாராவது தட்டிக்கொண்டு போய்விடுவார்கள்" என்று எச்சரித்து அனுப்பினார்.

கிட்டுவும் கிளம்பினான். நடுவழியில் அவனுக்கு பசியும் தாகமும் தாங்க முடியாமல் ஏற்பட்டது. அப்போது தூரத்தில்

www.tamilnesan1981.blogspot.in

ஒரு சிறுவீடு தென்பட்டது. அதை நோக்கிப் போனான். அந்த வீட்டுக்காரன் அப்போதுதான் தோசை வார்த்துக் கொண்டிருந்தான். அதன் வாசனை கிட்டுவை அங்கு விட்டு நகர விடாமல் செய்தது. அதிகம் சொல்வானேன்? கிட்டு அங்கேயே இளைப்பாற தங்கிவிட்டான். தோசை தின்று களைப்பாறிய பிறகு கிட்டு, தாத்தாவின் வார்த்தையைப் பரீட்சிக்க வாத்தை எடுத்து வைத்துக்கொண்டு அதன் காதில் மந்திரவார்த்தையை சொன்னான். என்ன ஆச்சரியம்? அது 'டக்'கென்று ஒரு பொன்முட்டைய இட்டது. அதை கதவிடுக்கின் வழியாக கவனித்துக் கொண்டிருந்தான் அந்த வீட்டுக்காரன். கிட்டு தூங்கியதும் தன்னிடமிருந்த ஒரு சாதாரண வாத்தை அவன் பக்கத்தில் வைத்துவிட்டு, பொன் முட்டையிடும் வாத்தை எடுத்து ஒளித்து வைத்துக் கொண்டான்.

கிட்டு வீட்டுக்குப் போனதும், அம்மாவிடம் தன் அதிசய வாத்தைப் பற்றிச் சொல்லி, பொன் முட்டையிடும் மந்திரத்தை வாத்திடம் கூறினான். ஆனால் வாத்து முட்டையிடவில்லை. அது மந்திர வாத்தாக இருந்தாலல்லவா? தான் தாத்தாவின் வார்த்தையை மறந்து, வழியில் தங்கியதை நினைத்து வருத்தமடைந்து, கிட்டு மறுபடி தாத்தாவின் வீட்டிற்குப் போனான். ஒரு வருஷம் வேலை செய்தான். வருஷக் கடைசியில் ஊருக்குக் கிளம்பும்போது தாத்தா ஒரு சின்ன சைக்கிள்



www.tamilnesan1981.blogspot.in

வண்டியைக் கொடுத்து "இது மந்திர சைக்கிள்— நீ ஏறி உட்கார்ந்து, 'குட்டி குட்டி சைக்கிளே! நீ என்னைச் சுமந்து ஓடு, ஓடு சைக்கிளே!' என்று சொன்னால் சைக்கிள் தானாக ஓடும். நிற்க வேண்டுமானால் 'குட்டி குட்டி சைக்கிளே! நீ ஓட்டமாக ஓடியது போதும், நில்லு!' என்று சொல். ஆனால் போன தடவைபோல வழியில் நிற்காதே" என்று சொல்லி அனுப்பினார். கிட்டுவும் மந்திரத்தைச் சொல்லிவிட்டுச் சைக்கிளில் ஏறி உட்கார்ந்தான். சைக்கிள் வெகு வேகமாகப் பறந்து சென்றது.


ஆனால் கிட்டுவுக்கு பாதி வழி வந்ததும் பசி காதை அடைத்தது, அதே வீட்டிற்குப்போனான். அந்த மனிதனும் கிட்டுவை அடையாளம் கண்டுகொண்டு, அவனை ரொம்ப உபசாரத்தோடு வரவேற்று உணவளித்தான். கிட்டு இந்த தடவை தூங்காமல் உடனே சைக்கிளில் ஏறிக்கொண்டான். கிட்டு மந்திர வார்த்தையைச் சொன்னதும் சைக்கிள் தானாக ஓடுவதை ஒளிந்திருந்து கேட்ட அந்த மனிதன் உடனே வெளியே ஓடி வந்து "அம்பி! அம்பி! நேற்றுதான் லாடு செய்தேன். ரொம்ப ருசியாக இருக்கும். வாங்கிக் கொண்டு போ. வழியில் பசித்தால் உதவியா இருக்கும்" என்றழைத்தான். கிட்டுவும் சைக்கிளை விட்டு இறங்கி உள்ளே போனான். மறு நிமிஷம் கிட்டுவின் மந்திர சைக்கிள் மாயமாக மறைந்தது. அந்த இடத்தில் அதேபோல ஒரு சைக்கிளை வைத்து விட்டான் அந்த ஆள். கிட்டு மறுபடி வந்து ஏறிக்கொண்டு மந்திரத்தை சொன்னபோது சைக்கிள் ஓடவில்லை. பாவம் கிட்டுதன் வீட்டுக்கு கால் வலிக்க அதை உருட்டிக் கொண்டே போய்ச் சேர்ந்தான். அவனுக்கு அழுகையாக வந்தது. மறுபடி தாத்தாவை பார்க்க வெட்கமாக இருந்தது.

மந்திர சைக்கிளைத் திருடிய மனிதன் கிட்டு போனதும் அதன்மேல் ஏறிக்கொண்டு, கிட்டு கூறியபடியே அதனிடம் ஓடும்படி கூறினான். சைக்கிள் பறக்க ஆரம்பித்தது. வேகமாக ஓடிற்று. நாடு, நகரம், காடு, மலை எல்லாம் சுற்றிசுற்றி வந்தான், ரொம்ப களைத்துவிட்டான். ஆனால் சைக்கிள் நிற்கவே இல்லை; என்னென்னவோ செய்து பார்த்தான்: ஊஹூம், அது நிற்கவே இல்லை. நிற்க வைக்கும் மந்திரம் அவனுக்கு தெரிந்தால்தானே. ரொம்பக் களைப்படைந்த அந்த மனிதன் கிட்டுவின் வீட்டுக்குச் சைக்கிளை கொண்டு போனான். கிட்டு

www.tamilnesan1981.blogspot.in

வாசலில் நின்று கொண்டிருந்தான். அவனை நெருங்கியதும். "அம்பி! அம்பி! இந்த சைக்கிளை நிறுத்தச் சொல்லேன். நாள் கணக்கா ஓடிக்கொண்டே இருக்கே!" என்று சொல்வதற்குள் அவனையும் அவன் வீட்டையும் தாண்டி வெகுதூரம் ஓடிவிட்டது. வெகுநேரம் கழித்து மறுபடி கிட்டுவின் வீட்டண்டை வந்து, அதேபோல பரிதாபமாக வேண்டினான். இந்தத் தடவை கிட்டு "நீதானே என் வாத்தையும் திருடிக் கொண்டவன்? வாத்து இருக்குமிடத்தைச் சொல். சைக்கிளை நிறுத்துகிறேன்" என்றான் கிட்டு – சைக்கிளுடன் ஓடிக் கொண்டே.

"வாத்து என் கொல்லைப்புறத்தில் ஒரு பெட்டிக்குள் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டே சைக்கிளுடன் வெகு வேகமாகச் சென்று மறைந்தான் அந்தத் திருடன்.



கிட்டு அவன் வீட்டிற்குச் சென்று வாத்தையும் அது இவ்வளவு நாட்களாக போட்டிருந்த பொன்முட்டைகளையும் எடுத்துக்கொண்டு தன் வீட்டுக்கு வந்தபோது – சைக்கிள் மறுபடி இவன் வீட்டுப் பக்கம் வெகுவேகமாக அந்த மனிதனுடன் வந்தது.

கிட்டு உடனே "குட்டி குட்டி சைக்கிளே! நீ வேகமாக ஓடியது போதும், நில்லு!" என்றான். சைக்கிளும் நின்றது. அந்த மனிதன் பொத்தென்று தரையில் விழுந்து மூர்ச்சையானான். அவனை தன் வீட்டிற்குத் தூக்கிக்கொண்டு போய் அவன் களைப்பைப் போக்கி அனுப்பினான் கிட்டு. அந்த மனிதன் இனி பிறர் பொருளை தொடுவதே இல்லை என்று சபதம் செய்து கொண்டான்.

இப்போது கிட்டு பெரிய பணக்காரன் என்று சொல்ல வேண்டுமா!

www.tamilnesan1981.blogspot.in



''இன்னிக்கு எனக்கு அதிர்ஷ்ட தினமாம் - கால பலனில் போட்டிருக்கு'' என்று கூறியபடி வந்து உட்கார்ந்தான் பாலு - கதை கேட்க.

''அப்படியா?'' என்று கேட்ட அப்பா, தான் படித்துக் கொண்டிருந்த ஆங்கில நாவலை மூடி வைத்துவிட்டுக் கூறினார். ''பாலு அதிர்ஷ்டம் வெறுமே வந்து கதவைத் தட்டாது. நாம் செய்யும் நல்ல காரியங்கள்தான் அதிர்ஷ்டமாக அவதாரம் எடுத்து வரும் - இன்று என் கதாநாயகன் ராமுவுக்கு வந்தது போல!'' என்றார்.

அதிர்ஷ்டகார ராமுவின் கதையைக் கேட்க ஆயத்த மானார்கள் குழந்தைகள்.

# 5. அதிர்ஷ்டப் பந்து

ராமு வழக்கம் போலவே அந்தக் கடைவாசலில் நின்று, கண்ணாடிக் கதவிற்குள்ளிருக்கும் அந்த அழகான பந்தை ஆசையோடு பார்த்துக்கொண்டு நின்றான்.

ராமு ரொம்ப ஏழை. அவனுக்குப் அந்த பந்தை வாங்கக் காசு ஏது? ஒருநாள் கடைக்காரனைக் கேட்டதற்கு அவன், அதன் விலை ஒரு ரூபாய் என்றான். ராமுவின் முகம் ஏமாற்றத்தால் வாடிவிட்டது.

ஒரு பெருமூச்சுடன் பந்தை மறுபடியும் பார்த்துவிட்டு ராமு மேலே நடந்தான். பந்தை ஆகாயத்தில் தூக்கிப் போட்டு பிடிப்பது போலவும், பந்து துள்ளிக் குதித்து ஓட, ராமு அதைத் தாவி பிடிப்பது போலவும் கனவு கண்டு கொண்டே நடந்தான்.

அவன் கனவைக் கலைத்தது ஒரு பரபரப்பான குரல், "அம்பி, என் கைக்கடிகாரம் எங்கேயோ நழுவி விழுந்துவிட்ட

www.tamilnesan1981.blogspot.in

தப்பா. கொஞ்சம் தேடிப்பாரேன். எனக்கு வயசாயிடுத்து. கண்ணே சரியாத் தெரியலே. தேடித் தந்தா உனக்கு ஒரு ரூபாய் தரேன்" என்று பரிதாபமாக ஒரு கிழவர் ராமுவை வேண்டினார். அதற்குள் பல பையன்கள் கூடிவிட்டனர். ஒவ்வொரு பையனும் 'நான் தேடித்தரேன் தாத்தா' என்று குதிபோட்டுக் கொண்டு ஓடினார்கள்.

"யார் தேடித் தந்தாலும் சரி, ஒரு ரூபாய் பரிசாகத் தரு வேன். இந்த வழியாகத்தான் வந்தேன். இங்கே தான் விழுந் திருக்கும்" என்றார் கிழவர்.

ஒரு ரூபாய்!

ராமுவிற்கு நெஞ்சு வேகமாக அடித்துக்கொண்டது. உடனே அந்தக் கண்ணாடி பீரோவில் பளபளக்கும் பந்து தான் அவன்முன் காட்சியளித்தது.

"சாமி கடவுளே! கடிகாரம் என் கையில் கிடைக்கும் படி செய். எனக்கு ஒரு ரூபாய் தருவார் தாத்தா. உடனே அந்தப் பந்தை வாங்கிவிடுவேன்" என்று நினைத்தபடி வந்தவழியே திரும்பித் தேட ஆரம்பித்தான்.

சாலை வழியே தேடிக்கொண்டு வரும்போது ராமுவின் கண்களில் ஒரு வினோதப் பொருள் தென்பட்டது. பரபரப்



www.tamilnesan1981.blogspot.in

புடன் அதை நெருங்கிப் பார்த்தான் ராமு. 'ஐயோ பாவம்!' என்று வார்த்தைகள் அவன் வாயிலிருந்து வெளிப்பட்டன.

அது ஒரு சின்னக் குஞ்சுப் பறவை. புல் தரையில் விழுந்து கிடந்தது. இன்னும் இறக்கை முளைக்கவில்லை. தன் சின்னச் சிறகை ஆட்டிஆட்டி எழுந்திருக்கப் பார்த்தது. ஆனால் முடியவில்லை. மரத்தின் மேலிருந்த கூண்டிலிருந்து தவறி விழுந்திருக்கிறது. தாய்ப் பறவை கீச்சு மூச்சென்று கத்தியபடி மேலும் கீழும் பறந்தபடி தன் குஞ்சைக் கவனித்துக் கொண்டிருந்தது.

ராமுவிற்கு விஷயம் புரிந்துவிட்டது. பாவம், அதனால் தன் குஞ்சை மேலே கொண்டு போக முடியவில்லை. தன்னைக் கண்டதும் உதவி வந்துவிட்டது என்றுதான் இப்படிக் கத்தி ஆரவாரம் செய்கிறது என்று நினைத்தான் ராமு. பறவையைக் கூட்டில் சேர்த்துவிடுவதுதான் தனது கடமை என்று தீர்மானித்தான்.

"இதை எடுத்துக்கொண்டு மரத்திலேறிக் கூட்டில்விட்டுக் கொண்டிருந்தால் என் கையில் கடிகாரமும் அகப்படாது. பந்தும் வாங்கமுடியாது" தனக்கு முன்னால் பையன் களெல்லாம் தேடிக் கொண்டிருப்பதைக் கண்டான். பிறகு வந்து பறவையை கவனிக்கலாம் என்று எண்ணி, அவர் களுக்கு முன் கடிகாரத்தைக் கண்டுபிடிப்பதற்காக ஒரு அடி முன்னால் நடந்தான்.

திடீரென்று குஞ்சு கிரீச்சிட்டது. திரும்பிப் பார்த்த ராமு, குஞ்சு எழுந்திருக்க முயன்று மல்லாந்து விழுந்துவிட்டதைக் கண்டான். குஞ்சு தவிப்பதைக் கண்ட தாய்ப்பறவை துடித்தது. கத்தியபடி சுற்றிச் சுற்றிப் பறந்தது.

அந்தப் பரிதாபமான காட்சி ராமுவை உருக்கிவிட்டது. இப்படியே இதை விட்டுவிட்டுப் போனால், பூனைக்கோ, கழுகுக்கோ இது 'டிபன்' ஆகிவிடும் என்பதும் அப்போது தான் ஞாபகம் வந்தது. பந்தை மறந்தான்.

கீழே குனிந்து குஞ்சை மெதுவாகத் தூக்கினான். அதன் பட்டுப்போன்ற மிருதுவான் மெல்லிய உடலின் ஸ்பரிசம் ராமுவின் உடலைச் சிலிர்க்கச் செய்தது. பஞ்சு போன்ற அதை ஜாக்கிரதையுடன் கையில் ஏந்தியபடி மரத்தில் ஏறினான்.

www.tamilnesan1981.blogspot.in

தாய்ப்பறவையின் ஆனந்தத்தைக் கேட்கவா வேண்டும்? அது ராமுவைச் சுற்றி சுற்றி சந்தோஷ ஆரவாரம் செய்தது. ஒரு உயிரைக் காப்பாற்றினோம் என்ற பெருமை ராமுவுக்குத் தாங்கவில்லை. பச்சிளங்குஞ்சை அதன் கூட்டில் சேர்த்து விட்டு மரத்திலிருந்து கீழே குதித்த ராமு 'அப்பா' என்று அலறினான். அவன் காலிலிருந்து ரத்தம் கசிந்தது.

கீழே குனிந்த ராமுவுக்கு அழுகைக்குப் பதில் ஆனந்தம் தான் உண்டாயிற்று. கால் வலியையும் மறந்தான். புல்லினிடையே பளிச்சிட்ட எதையோ எடுத்துக்கொண்டு ஓட்ட ஓட்டமாக ஓடினான்.

ராமுவின் காலில் குத்தியது என்ன தெரியுமா? கடிகாரத்தைக் கட்டிக்கொள்ள அதனுடன் ஒரு தோல் பட்டை இணைந்திருக்குமல்லவா? அதன் ஒரு முனையில்– மறு முனையை மாட்டி இழுத்துச் செறுக– ஒரு ஊசி இருக்குமல்லவா? அதுதான் அவன் காலில் குத்தியது. நல்ல வேளையாக ராமு கடிகாரத்தின் மேல் குதிக்காமல் சிறிது தள்ளி ஊசியின் மேல் குதித்தானே! அதுவும் அவன் அதிர்ஷ்டம் தான்.

இப்போது புரிந்ததா? ராமுவின் கையில்தான் அந்தக் கிழவரின் காணாமல் போன கடிகாரம் கிடைத்ததென்றால் அந்தக் கடையில் கண்ணாடி பீரோவிலிருந்த பளபளப்பான புதுப் பந்தை வாங்கினவனும் அவனேதான் என்று நான் உங்களுக்குச் சொல்ல வேண்டுமா?



www.tamilnesan1981.blogspot.in



*''நாம் செய்யும் நற்செயல்களே நமக்கு அதிர்ஷ்டத்தைத் தரும் என்பதற்கு அடையாளமாக நேற்று ஒரு கதை சொன்னேன் இல்லையா? இன்றும், அதேபோல ஒரு கதை - பொறுமையும், சகிப்புத் தன்மையும் கூட அதிர்ஷ்டத்தை அழைத்து வரக் கூடியவை என்பதை விளக்க, மணியின் கதையைச் சொல்லப் போறேன்'' என்றார் அப்பா.*

## 6. அதிர்ஷ்டசாலி

ஆறாம் வகுப்பில் கெட்டிக்காரப்பிள்ளை, யார் என்றால் அது மணிதான். அவன் கையெழுத்து மிக அழகாக இருக்கும். அவன் கணக்கில் எந்தப் பரீட்சையிலும் நூற்றுக்கு நூறுதான். மற்ற பாடங்களிலும் 80க்கு மேல் வாங்குவான். அவனைப்போல நீங்களும் அவ்வளவு மார்க்கு வாங்குவீர்களா?


ஆனால், பாவம் மணி ஒரு ஏழைப் பையன். அவன் தகப்பனார், அவனுடைய இரண்டாம் வயதில் எங்கேயோ ஓடிப்போய் விட்டாராம். மணி தன் தகப்பனாரைப் பார்த்ததே இல்லை. ஏழைப் பையனுக்குத் தாயார் எப்படி புதுப்புதுச் சொக்காய்கள் தைக்க முடியும்? அதனால் மணி தினமும் கிழிந்த சட்டைகளையே போட்டுக் கொண்டு போவான். "கந்தையானாலும் கசக்கிக் கட்டு" என்ற பழமொழியை மணி மறக்கவில்லை. ஆகையால் அவனுடைய சட்டைகள் அழுக்கில்லாமல் சுத்தமாக இருக்கும். மணியின்மேல் மற்ற பையன்களுக்கு எப்பொழுது பார்த்தாலும் பொறாமை. வகுப்பில் மணிதான் முதல் பையன். அவன் எந்த கஷ்டமான கேள்விக்கும் டக்டக் என்று பதில் சொல்வான். ஒரு ஏழைப் பையன் வகுப்பில் முதலாவதாக வருவது மற்றப் பையன்களுக்குப் பொறாமையாக இருக்காதா? பொறாமையால் மற்றப் பையன்கள் மணியைக் 'கிழிந்த சட்டை'யெனக் கேலி செய்தார்கள்.

www.tamilnesan1981.blogspot.in

பள்ளிக்கூட வருஷாந்திரக் கொண்டாட்டத்திற்கு யாரா ருடைய தகப்பனார் வரப் போகிறார்கள் என ஆசிரியர் கேட்டார். மணியைத் தவிர மற்ற பையன்கள் தங்கள் தகப்ப னார்கள் வரப்போவதாகக் கூறினார்கள். ஆசிரியர் மணியைப் பார்த்து 'உன் தகப்பனார் வரமாட்டாரா?' என்று கேட்டார். "எனக்கு அப்பா இல்லை சார்" என்று மணி கூறினான்.. உடனே அவன் கண்களில் நீர் தளும்பியது. அப்பொழுது எல்லாச் சிறுவர்களும் சிரித்தனர். அவர்களை ஆசிரியர் அடக்கி னார். ஆசிரியர் சொல்லியும் திரும்பவும் சிரிக்க ஆரம்பித் தனர் மாணவர்கள். ஆசிரியருக்குக் கோபம் அதிகமாயிற்று. பிரம்பை எடுத்து எல்லோருக்கும் அடி கொடுத்தார். இதற்குள் மத்தியானம் ஆகிவிட்டது. எல்லோரும் வீட்டிற்குச் சென்ற னர். மணியிடம் பொறாமை கொண்ட சில பையன்கள் மாத்திரம் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். மாலை ஐந்து மணிக்கு பள்ளி முடிவுக்கான அறிவிப்பு ஒலித்தது. மணி வீட்டிற்கு வந்து கொண்டிருந்தான்.

'டேய், கிழிந்த சட்டை" என்ற குரல் கேட்டு மணி திரும்பி பார்த்தான். "ஏய் தரித்திரம், உன்னால் தானேடா வாத்தியார் எங்களை அடித்தார்."

"நான் என்ன செய்தேன்? நீங்கள்தானே சிரித்தீர்கள்" என்று சொன்னான் மணி.



www.tamilnesan1981.blogspot.in

"ஏய்! அப்பா இல்லாதவனுக்கு இவ்வளவு திமிரா? இரு கவனித்துக் கொள்கிறோம்" என்றனர் அவர்கள்.

"கிழிந்த சட்டை என்னடா சொல்கிறது" என்று ஒரு முரட்டுச் சிறுவன் அவனை வழி மறித்து "என்னடா, நீ அழுததினால் தானே எங்களுக்கு அடி விழுந்தது. எங்களுடைய அந்த அடிகளையெல்லாம் இப்போ நீ வாங்கிக்கொள்" எனச் சொல்லி அடிக்கக் கையை ஓங்கினான்.

இதை எல்லாம் ஒரு கனவான் கவனித்துக் கொண்டிருந்தார். அவருக்கு வயது முப்பத்தைந்து இருக்கும். அவர் நேர்த்தியான ஆடைகளை உடுத்திக் கொண்டிருந்தார். மணிக்கு அடி விழும் சமயத்தில் அந்தப் பையனின் கையைப் பிடித்துக் கொண்டார். அப்பொழுது மணி பயத்தினால் அழுது கொண்டிருந்தான். அவ்விடத்தில் அவரைக் கண்டதும் எல்லா பையன்களும் சிட்டாய் பறந்தனர். மணி மாத்திரம் இருந்தான்.

"ஏன் குழந்தே அழுகிறாய்?" என்று கனவான் கேட்டார். "எனக்குத் தகப்பனார் இல்லை. அவர் எங்கேயோ ஓடி விட்டார். ஆகையால் இவர்கள் எல்லாரும் என்னைக் கேலி செய்கிறார்கள்" என்றான்.

கனவான் மணியை அழைத்துச் சென்று அவனுக்கு தின்பண்டங்களையும், சொக்காய்களையும் வாங்கிக் கொடுத்தார். மணிக்கு ஒன்றுமே புரியவில்லை. தனக்கு உதவி செய்தவரை தாயாருக்குக் காண்பிக்க வேண்டுமென எண்ணினான். அவரை வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

மணி அதிக நேரமாகியும் வராததைக் கண்டு, அவன் தாயார் மணி வரும் திசையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். மணியுடன் வந்த கனவான், அவன் தாயாரைக் கண்டதும் பிரமித்து நின்றார். பிறகு மெதுவாக "ராஜம்" என்றார். மணியின் தாயார் "ஆ, தாங்களா!" எனக் கூறினாள். கண்ணில் நீர் தளும்ப அவரை உள்ளே அழைத்துச் சென்றாள்.

ஆம். அவர்தான் மணியின் தகப்பனார். தரித்திரத்தின் கொடுமையாலும், விதிவசத்தாலும் அவர் வீட்டைவிட்டு வெளியேறினார். ஒரு வருஷம் கழித்து பம்பாயில் குருகுலத்தில் ஆசிரியரானார். அதுவரை அவரிடமிருந்து ஊருக்குக்

www.tamilnesan1981.blogspot.in

கடிதமே இல்லை. பிறகு காங்கிரஸ் தேசிய இயக்கத்தில் சேர்ந்தார். ஐந்து வருஷம் சிறையிலிருந்தார்.

ஊருக்கு அநேக கடிதங்கள் போட்டார். பதிலே இல்லை. ஏன்? அவர் சென்ற ஒரு வருஷத்திற்குப் பிறகு திரும்பி வருவார் என்ற நம்பிக்கை மணியின் தாய்க்கு இல்லவே இல்லை. ஜீவனத்திற்காக திருச்சி வந்து சேர்ந்தாள் மணியின் தாய். ஆகையால் அவர் போட்ட கடிதங்கள் கிடைக்கவில்லை. விடுதலையான பிறகு மணியின் தகப்பனார் சொந்த ஊருக்கு வந்து மனைவி மக்கள் எங்கே என்று விசாரித்தார். எங்கேயோ சென்றுவிட்டார்கள் என்று ஊரில் இருப்பவர்கள் சொன்னார்கள். பிறகு திருச்சியில் தலைமை ஆசிரியர் வேலை காலியிருப்பதாகக் கேள்விப்பட்டு, அவருடைய நண்பர்களின் உதவியால் அவ்வேலையைப் பெற்றார். ஓய்வு பெறப்போகும் பழைய தலைமை ஆசிரியரைப் பார்த்து விட்டுத் திரும்பும்போதுதான் முன்னால் சொல்லப்பட்ட சம்பவம் நடந்தது. மறுநாள் தலைமை ஆசிரியரின் வண்டி யில் மணி வந்து இறங்கியதைப் பார்த்துப் பையன்கள் திகைத்தனர்; ஆசிரியர்கள் ஆச்சரியப்பட்டனர்.



www.tamilnesan1981.blogspot.in



''தீபாவளிப் பண்டிகை எல்லாம் எந்த மட்டில் இருக்கு? கதை கேட்பதில் ஆர்வமிருக்குமா? இல்லே, கனவிலே...'' என்று, இழுத்தார் அப்பா.

''அங்கிள்... அங்கிள்...! எங்களுக்கு உங்க கதைதான் முக்கியம். வாணம் வெடி எல்லாம் நாளைக்கு" என்றார்கள் குழந்தைகள்.

''வளர்ப்புப் பிராணிகளெல்லாம் சேர்ந்து விளையாடினா எப்படி இருக்கும்?''

"படு ஜாலியா இருக்கும். இப்போ, நீங்கள் மிருகங்களைப் பேச வைக்கப் போறீங்க- அப்படித்தானே?"

'ஆமாம்'' என்பது போலக் கண்சிமிட்டினார் அப்பா.

# 7. பந்தய விளையாட்டு

ஜமீன்தார் சபாபதி முதலியாருக்கு மிருகங்கள் பட்சிகள் என்றால் உயிர். அவைகளுக்கு என்று ஒரு தனி இடம் வாங்கி அவைகளை அதில் ரொம்ப ஜாக்கிரதையுடனும் அன்புடனும் வளர்த்து வந்தார். அவைகளும் ஒன்றுக்கொன்று உள்ள இயற்கையான விரோதத்தை மறந்து, ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தன.

இரண்டு மாதமாகவே அவைகளெல்லாம் தீபாவளியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தன. விடிந்தால் தீபாவளி. மூன்று நாளாகவோ மழை. அவைகளுக்கெல்லாம் ரொம்ப வருத்தமாக இருந்தது. 'பட்டாசு சுட முடியாதே. தெருவில் ஓடி மற்றவர்கள் விடும் வாணத்தை அணைத்துவிட்டு— தூக்கிவர முடியாதே என்று இப்படியெல்லாம் கவலைபட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தன.

www.tamilnesan1981.blogspot.in

குடுகுடுவென்று நாய்க்குட்டி ஓடிவந்தது. அங்கு ஆட்டுக் குட்டி, குதிரைக்குட்டி, கோழிக்குஞ்சு எல்லாம் உட்கார்ந் திருந்தன.

"ஏய் நல்ல வேளையா மழை நின்னுபோச்சுடா... வாபேன் ... வந்து பாரேன்..." என்று குதித்தது நாய்க்குட்டி. எல்லாம் ஒரே சமயத்தில் வெளியே ஓடிவந்து பார்த்தன. வாஸ்தவ மாகவே மழை நின்றிருந்தது.

"விளையாடி மூணு நாளாச்சு... விளையாடலாம் வாங்கடா" என்றது ஆட்டுக்குட்டி.

"ஐயோ நான் மாட்டேன். எங்கம்மா ஈரத்திலே போகக் கூடாதுன்னு வைவா" என்றது குதிரைக்குட்டி. அப்போது அங்கு வான்கோழியும் சேவலும் வந்து சேர்ந்தன. அவை வந்தாலே தமாஷ்தான். ஆட்டுக்குட்டியும் நாய்குட்டியும் மெதுவாகத் தங்கள் எண்ணத்தைச் சேவலிடம் தெரிவித்தன. பிறகு கேட்க வேண்டுமா? அவை இரண்டும் விளையாட்டுக் குத் திட்டம் போட ஆரம்பித்துவிட்டன.

"நாமெல்லாம் சேர்ந்து விளையாடி ரொம்ப நாளாச்சு இல்லையா? இன்று நல்ல விளையாட்டாக விளையாட வேண்டும். அதோ அந்தப் புளியமரத்தடிக்குப் போகலாம். இஷ்டப்பட்டவர்களெல்லாம் வரலாம். விளையாட்டிலே எல் லோருக்கும் இடமுண்டு" என்று கூரை மேல் ஏறிநின்று பிரகடனப்படுத்தியது சேவல்.

விளையாட்டு—அதுவும் சேவலும், வான்கோழியும் இருக்கும் போது—கேட்கவா வேண்டும். எல்லாம் தங்கள் அம்மாவுக்குத் தெரியாமல் ஓடிவந்து மரத்தடியில் கூடி விட்டன.

"என்ன விளையாட்டு விளையாடுவது?"

"ஓட்டப் பந்தயம்...!"—என்றது குதிரைக்குட்டியும் முயலும்.

"அது வேண்டாம். பாண்டி..." என்றது ஆட்டுக்குட்டி. இந்தப் பழைய விளையாட்டுகள் ஒன்றும் சேவலுக்குப் பிடிக்கவில்லை. ஏதாவது புதிதாக விளையாட வேண்டு மென்று எண்ணிற்று.

அப்போது "என்னை விளையாட்டிலே சேத்துண்டேள்னா நான் நல்ல நல்ல விளையாட்டாச் சொல்லுவேன்" என்றது ஒரு பூனைக்குட்டி— ஒரு குட்டிச்சுவரின் மீதிருந்து. எல்லாம் ஆச்சரியத்துடன் அதைப் பார்த்தன.

www.tamilnesan1981.blogspot.in

"யாரும் விளையாட்டுக்கு வரலாம். யாரும் விஷமம் பண்ணாதிருக்க ஒப்புக்கொள்ள முடியுமானால் சேர்த்துக் கொள்கிறேன்" என்றது சேவல்.

அதற்குட்பட்டு பூனை கீழே குதித்து விளையாட்டில் கலந்துகொண்டது.

"என்ன புதுவிளையாட்டு சொல் பார்க்கலாம்?" என்றன ஆவலுடன் எல்லா மிருகங்களும்.

"நான் அன்னிக்கு பள்ளிக்கூடத்து சுவத்து மேலே உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்போ பையங்களை எல்லாம் வைத்துக் கொண்டு வாத்தியார் விளையாட்டு நடத்திக் கொண்டிருந்தார். என்னென்ன விளையாட்டு எல்லாம் விளையாடினா தெரியுமா?"

"ஆ!... அது வருஷாந்திர விளையாட்டுப் பந்தயம்னா!... அதிலே என்னென்ன விளையாடினா சொல்லு. அதை நாமும் இங்கே அப்படியே விளையாடலாம்..." என்றது வான்கோழி.

பூனை தான் பார்த்ததை அப்படியே சொல்ல, சேவலும் வான்கோழியும் விளையாட்டுக்குத் திட்டம் தயாரித்துவிட்டன.

திட்டத்தைக் கழுதைக்குட்டி தன் குரலை உயர்த்தி உரக்கப் படித்தது.

## வேடிக்கைப் பொழுது போக்கு பந்தய விளையாட்டு

### நிகழ்ச்சிக் குறிப்பு

| | |
|---|---|
| தலைமை | : சேவல் |
| ஆரம்பித்து வைப்பவர் | : வான்கோழி |
| தீர்ப்பளிப்பவர் | : கழுதை |

### நிகழ்ச்சி

1. நடைப் போட்டி
2. டக்—அப்—வார் (பலப்பரீட்சை)
3. தடை ஓட்டப் போட்டி
4. சங்கீதப் போட்டி

www.tamilnesan1981.blogspot.in

"விளையாட்டில் சேர விரும்புவோர் எல்லோரும் வர வேற்கப்படுவார்கள். ஆட்டமும் இப்போதே ஆரம்பிக்கப்படும்" என்று படித்து முடித்தது.

ஆட்டுக்குட்டியும் கன்றுக்குட்டியும் தங்கள் கழுத்தி லுள்ள மணியை ஆட்ட, ஆட்டம் ஆரம்பமாயிற்று.

எல்லா மிருகங்களும் வரிசையாக நின்றன. "நடை அழகுப் போட்டியில் யாருடைய நடை அழகு" என்று தீர்ப்ப ளிக்க உன்னிப்பாகக் கவனிக்க ஆரம்பித்தது. வான்கோழியும் "ரெடி—நடக்கலாம்" என்று உத்தரவு கொடுத்தது.

முதலில் வாத்து ஒய்யாரமாக நடந்து வந்தது. படகு போல சிறகை விரித்து, காலை நிறுத்தி நிறுத்தித் தூக்கி வைத்து மார்பை முன்னால் நிமிர்த்திக்கொண்டு ரொம்ப அழகாக நடந்தது. கழுத்து மணி 'டிங்—டாங்' என்று சப்திக்க வாலைக் குழைத்துக் கொண்டு தலை நிமிர்ந்து நடந்தது கன்றுக்குட்டி. அதன் பின்னால் குதிரைக்குட்டி ராஜநடை போட்டு வந்தது.

கோழிக் குஞ்செல்லாம் ரொம்ப ஜோராக நடந்து வந்தன. மயில், தன் தோகையை விரித்து ஆடிக்கொண்டே வந்தது. இரண்டு எலிக்குஞ்சுகள் ஒன்றின் வாலை ஒன்று கௌவிக் கொண்டு குடுகுடுவென்று நடந்து வந்தன. கடைசியில் கழுதைக் குட்டி ரொம்ப நிதானமாக, சாந்தமாக, தலை குனிந்து நடந்து வந்தது. எல்லாம் ரொம்ப நன்றாக நடந்து வந்ததால் கழுதையாருக்குத் தீர்ப்பளிப்பது கஷ்டமாகப் போய்விட்டது.

"குதிரைக்குட்டிதான் ஜெயிக்கும்" என்றது கோழிக்குஞ்சு.

"இல்லை, இல்லை...கன்றுக்குட்டிதான் நன்னா நடந்தது" என்றது வாத்து.

"மயில் நடைதான் அபாரம்" என்றது முயல்.

"கழுதை நடைக்கு என்ன குறைச்சலாம்" என்று கேட்டது எலிக்குட்டி.

இப்படி எல்லாம் கும்மாளம் போட்டுக் கொண்டிருக்கும் போது "ரொம்ப அழகான விளையாட்டு" என்று புதுக்குரல் ஒன்று கேட்டது.

www.tamilnesan1981.blogspot.in

எல்லா மிருகங்களும் பேச்சை நிறுத்திவிட்டுத் திரும்பிப் பார்த்தன. மரத்தின்மேல் ஒரு குரங்கு உட்கார்ந்திருந்தது. அவை இதுவரை குரங்கைப் பற்றிக் கேட்டிருக்கிறதே ஒழிய பார்த்ததேயில்லை. குரங்கு கீழே இறங்கி வந்தது. சேவலிடம் சென்று "தலைவரே நான் வந்ததால் ஆட்டத்துக்குத் தடை ஏற்பட்டுவிட்டது. மன்னிக்கவேண்டும்" என்று வணக்கம் செலுத்திற்று.

"இல்லவே இல்லை... நீ குறும்புத்தனம் செய்யாம லிருந்தாயானால் நாங்கள் உன்னையும் வரவேற்கத் தயாராக இருக்கிறோம். சரி, நீ எங்கிருந்து வருகிறாய்?... உன்னை இங்கு நாங்கள் பார்த்ததே இல்லையே" என்றது சேவல்.

எல்லா மிருகங்களும் குரங்கைச் சுற்றிக் கூடிவிட்டன. அவைகளுக்கு பயமே தோன்றவில்லை.

"நான் சற்று நேரத்திற்கு முன்தான் வந்தேன். என் எஜ மானன் – குரங்காட்டியை விட்டு வழிதவறிப் பிரிந்துவிட்டேன். அவர் என்னை ஊர் ஊராகக் கொண்டு போய் ஜனங்களுக்கு விளையாட்டுக் காட்டுவார். அவர் பாடுவார், நான் ஆடுவேன். இன்னிக்கு காலையில் அவர் தூங்கிண்டிருக்கும்போது, நான் ஊரைச் சுற்றிப்பார்க்கலாம் என்று தனியாக வந்தேன். திரும்பிப்போக வழி தெரியவில்லை. எப்படியும் என் எஜமானன் என்னைத் தேடிக் கொண்டு வந்து விடுவார்" என்றது குரங்கு.

"ஐயோ பாவம்..." என்றன எல்லா மிருகங்களும்.

"உனக்கு இஷ்டமானால் நீயும் எங்களோடு விளையாட் டிலே கலந்துக்கலாம்" என்றழைத்தது வான்கோழி.

"சரி விளையாட்டை முதலிலிருந்து நடத்தலாம். எங்கே, எல்லாரும் ஒழுங்காக நில்லுங்கள்" என்று கட்டளையிட்டது சேவல்.

மறுபடியும் நடைப்போட்டி நடந்தது. இந்தத் தடவையும் எல்லாம் ரொம்ப ரொம்ப நன்றாக நடந்து வந்தன. ஆனால், குரங்கைப்போல் எதுவும் நடக்கவில்லை. பின்னால் கையைக் கட்டிக் கொண்டு, இரண்டு காலால் மனிதர்களைப்போல மிடுக்காக நடந்தது.

கழுதை "இதைப்போன்ற அழகான நடையை இதுவரை இது வரை கண்டதே இல்லை" என்று குரங்கை – முதலாவதாகத் தேர்ந்தெடுத்தது.

www.tamilnesan1981.blogspot.in

"இதை ஒத்துக்கொள்ள முடியாது" என்று கூச்சலிட்டது குதிரைக்குட்டி. அது, தான்தான் ஜெயிப்போமென்று எண்ணி இருந்தது. தோற்றுப்போகவே பிரமாத கோபம் வந்துவிட்டது அதற்கு. "அது பழகின குரங்கு. அது அழகாக நடந்தது ஒன்றும் பிரமாதமில்லை" என்று கூச்சலிட்டது. அதன் கட்சியில் சில மிருகங்கள் சேர்ந்து கொண்டன.

ஆனால் கழுதை இதை எல்லாம் கவனிக்கவே இல்லை. அதுக்கு குதிரைக்குட்டியைக் கண்டாலே பிடிக்காது. "எல்லோரும் வரவேற்கப்படுவார்கள் என்று சட்டமிருக்கா இல்லையா. அதன்படி குரங்கு தன் அதிர்ஷ்டத்தை சோதித்தது. வெற்றி பெற்றது. இதில் தப்பொன்றுமில்லை" என்று கண்டிப்பான தீர்ப்பளித்தது கழுதை.

இந்தத் தகராரைக் கண்டு குரங்கு "சரி பரவாயில்லை.. டக்-அப்-வார் பந்தயத்தில் நீங்களெல்லோரும் ஒரு பக்கமிருங்கள். நான் மட்டும் ஒரு பக்கத்திலிருக்கிறேன். சம்மதந்தானே!" என்றது.

உடனே எல்லா மிருகங்களும் குதித்துக்கொண்டே "சரி" என்று ஒப்புக்கொண்டன. குரங்கு கட்டாயம் அதில் தோற்று விடுமென்பது அவைகள் நம்பிக்கை.

ஆனால் ஒரு நிமிடத்தில் குதிரைக்குட்டியும் கன்றுக்குட்டியும் எவ்வளவு பலமாக இழுத்தும்கூட, குரங்கு கயிற்றை



www.tamilnesan1981.blogspot.in

தன் பக்கம் இழுத்துத் தள்ளிவிட்டது. நாய்க்குட்டி பாவம் குரங்கு இழுத்த வேகத்தில் உருண்டுபோய் விழுந்தது.

எல்லா மிருகங்களுக்கும் குரங்கின்மேல் பிரமாத கோபம்.

அடுத்தது தடை ஓட்டப் பந்தயம். ஓடும்வழி எல்லாம் ஓட முடியாதபடி தடை இருக்கும். அதை எல்லாம் சாமர்த்திய மாகக் கடந்து பந்தய இடத்தை அடைய வேண்டும்.

வழியில் இருந்த தடைகள் என்ன தெரியுமா? கீழே விழுந்திருந்த இரண்டு பெரிய மரத்தைத் தாண்ட வேண்டும். பிறகு முள்வேலி. வழியில் ஒரு கயிற்றில் ஒரு பழம் கட்டித் தொங்கவிட்டிருக்கும். அதைக் கையால் பிடிக்காமல் வாயால் கௌவிச் சாப்பிட வேண்டும்.

இதிலும் குரங்குதான் ஜெயித்தது என்று சொல்ல வேண்டுமா?

குதிரைக்குட்டியும் நாய்க்குட்டியும் "நான் ஒண்ணும் இந்த அழுகுணி ஆட்டத்துக்கு வரல்லே போ" என்று சொல்லி விலகி, மரத்தடியில் போய் உர் என்று குரங்கைத் திட்டிக் கொண்டே உட்கார்ந்துவிட்டன. குதிரைக்குட்டிக்குத் தான் தோற்றுப்போனது அழுகையாக வந்தது.

சங்கீதப் போட்டியில் கட்டாயம் குரங்கு தோற்றுவிடு மென்று எல்லாம் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தன. ஏனென்றால் குரங்கு பாடுமென்று அவைகள் கேட்டதுகூட இல்லை.

"குயிலுக்கு தொண்டை கட்டிக் கொண்டிருக்கிறதாம் வரவில்லை" என்று ஞாபகப்படுத்திற்று மயில்.

சங்கீதப் போட்டி ஆரம்பமாயிற்று. எல்லா மிருகங்களும் குரங்கைத் தோற்கடிக்க வேண்டுமென்று உயிரைக் கொடுத் துப் பாடின. கன்றுகுட்டிக்கு முகத்தில் ரத்தம் ஏறிவிட்டது. கழுதை பாடினதுதான் அபாரம். அதன் பாட்டுக்குக் காக்கை வேறு உதவி செய்தது. ஆட்டுக்குட்டி பாடினது அந்தச் சத்தத்தில் காதிலே விழவில்லை. எல்லாம் சேர்ந்து ஏகச் சத்தம் போட்டன. குரங்கு இதையெல்லாம் பார்த்துக் கொண்டு மௌனமாக நின்று கொண்டிருந்தது.

இந்தக் கூச்சலைக் கேட்டுக் காவல்கார முருகன்கூட

www.tamilnesan1981.blogspot.in

வந்துவிட்டான். அதோடு வானமும் மறுபடி மழை பெய்ய இருட்டிக் கொண்டு வந்தது. இடி இடித்தது. உடனே மழையும் பெய்ய ஆரம்பித்தது.

வான்கோழி எல்லா மிருகங்களையும் சேர்த்து அழைத்துக் கொண்டு கொட்டகைக்கு ஓடிற்று. எல்லா மிருகங்களுக்கும் குரங்கின்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ள சரியான சந்தர்ப்பம் வாய்த்தது.

“அதை அங்கேயே மழையில் விட்டுவிட்டுப் போய் விடுவோம். அதனோடு யாரும் சேரவேண்டாம். ஒரு குரங்கும் நம்ம கொட்டகைக்குள்ளே வரவும் வேண்டாம்” என்று குதிரைக்குட்டி சொல்ல.. எல்லா மிருகங்களும் குரங்கைக் கேலி செய்தபடி கொட்டகைக்குள் ஓடிப் பதுங்கிக் கொண்டன. குரங்கு அவற்றின் நடத்தையைக் கண்டு கோபப்படவே இல்லை. வருத்தப்பட்டது. பிறகு சிரித்துக்கொண்டே “எல்லோருக்கும் நன்றி! என்னை உங்களோடு விளையாடச் சேர்த்துக் கொண்டதற்கு ரொம்ப நன்றி!” என்றது.

“போ போ, உன் நன்றி இங்கே யாருக்கும் வேணாம். இப்பவே இங்கே இருந்து ஓடிப் போயிடு. இனிமே இந்தப் பக்கமே வராதே!” என்று முறைத்தது கன்றுக்குட்டி.

குரங்கினால் அதை தண்டிக்க முடியும். ஆனால் அது அப்படிச் செய்யவில்லை. கடைசியில் கொட்டகைக்குள் போன— தலைவர் சேவல் மாத்திரம் அனுதாபமாகத் தன்னைப் பார்த்ததைக் குரங்கு மறக்கவே இல்லை.

மௌனமாக வேலியைத் தாண்டிய குரங்கு. அங்கு ஒரு பாறை இடுக்கில் நரி ஒன்று ஒளிந்து கொண்டிருப்பதைப் பார்த்தது.

அந்த நரி நண்பகலிலிருந்தே அங்கே ஒளிந்து கொண்டிருந்தது. எப்படியாவது ஒரு கொழுத்த வாத்துக் குஞ்சையோ கோழிக்குஞ்சையோ தூக்கிக் கொண்டு போய்விடக் காத்திருந்தது. ஆனால் இந்தக் குரங்கு வந்தது, அதற்கு இடைஞ்சலாகப் போய்விட்டது. குரங்கென்றால் நரிக்குப் பயம். ஆனால் இப்போது எல்லா மிருகங்களும் குரங்கைக் கேலி செய்து விரட்டியதைப் பார்த்துக்கொண்டே இருந்ததால்— குரங்கு அவைகள் மேல் கோபமடைந்திருக்கும் என்று நினைத்தது. அதனால் அது பயப்படவில்லை.

www.tamilnesan1981.blogspot.in

"ஓ... நீயா... நீ இங்கே என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாய்" என்று கேட்டது குரங்கு, நரியைப் பார்த்து வியப்புடன். நரி தைரியமாக "உண்மையை சொல்லப்போனா... நான்... இன்றைய மாலை ஆகாரத்துக்குக் காத்துக்கொண்டிருக் கேன். ரொம்ப நாழியா ரெண்டு கொழுத்த வாத்துக்குஞ்சு மேலே கண் வைத்திருந்தேன். ஆனால் அது தப்பிவிட்டது. பிறகு கடைசியிலே போச்சே ஒரு கொழுத்த சேவல், அதை அபேஸ் பண்ணலாம்னு பார்க்கிறேன்" என்று சொல்லிக் கண்ணைச் சிமிட்டிற்று நரி. குரங்கு அவைகள் மேல் இருக்கும் கோபத்திலே தன் யோசனைக்குச் சந்தோஷப்படும் என்று நினைத்தது.

"என்னது" என்று கேட்டுக்கொண்டே குரங்கு நரியின் அருகில் உட்கார்ந்துகொண்டு ஒரு கையால் அதன் கழுத் தைக் கட்டிக்கொண்டு, "ஆட்டத்தின் தலைவராக இருந்ததே அந்த சேவலையா சொல்றே" என்று கேட்டது மிகுந்த நேச பாவத்துடன் கேட்பது போல.

நரியும் குரங்கு தன் தோள்மேல் கைபோட்டு அணைத் துக் கொண்டதனால், "சரி, இது நம் வழிக்குவந்துவிட்டது" என்று "ஆமாம்..." என்றது.

"ஓஹோ... சரிதான்... திருட்டு நரியே! அந்தச் சேவல் என்னுடைய உயிர்த்தோழன்!" என்று சொல்லி அதன் கழுத்தை இரண்டு கைகளாலும் தன் பலங்கொண்ட மட்டும் பிடித்து அழுத்தி குற்றுயிரும் குலையுயிருமாகப் பக்கத்தி லிருந்த ஒரு சப்பாத்திப் புதரில் போட்டுவிட்டு — இராப் பொழுதைக் கழிக்க ஒரு பெரிய மரத்தில் ஏறிப்படுத்துக் கொண்டது.

குஞ்சு—குட்டிகளை எல்லாம் கொட்டகையிலே கொண்டு விட்ட பிறகு சேவல், "பாவம் குரங்கு! என்ன பண்ணுகிறதோ பார்க்கலாம்" என்று வேலி ஓரத்துக்கு வந்தது. அப்போது நரிக்கும் குரங்குக்கும் நடந்த பேச்சு முழுதையும் கேட்டது. நரி தன்னைக் கொல்ல நினைத்திருந்ததை எண்ணியபோது அதன் உடல் நடுங்கிற்று. தனக்காகக் குரங்கு செய்த காரியத்தை பார்த்தபோது, சேவலுக்கு மற்ற மிருகங்கள் அதனிடம் நடந்து கொண்டதை நினைத்து, வெட்கமாக இருந்தது. "பாவம் குரங்கு மழையில் நனைந்து கொண்டல்

www.tamilnesan1981.blogspot.in

லவா மரக்கிளையில் படுத்திருக்கும். இனியாவது அதை அழைத்துப்போய் மற்ற மிருகங்களுக்கு நல்ல புத்தி கற்பிக்க வேண்டும்" என்று எண்ணி கண்ணுக்கெட்டிய தூரம் வரை குரங்கைத் தேடிற்று. ஆனால் அதைக் காணவே இல்லை.

வீட்டுக்குப் போனவுடன் சேவல் எல்லா மிருகத்தினிடமும் தான் பார்த்ததைச் சொல்லி, அவற்றின் நடத்தைக்கு ரொம்ப ரொம்ப கோபித்துக் கொண்டது. உண்மையை அறிந்த எல்லா மிருகங்களும் மிகவும் வருத்தப்பட்டன.

"எனக்கு அது எவ்வளவு நல்ல குரங்குன்னு தெரியாது" என்று முணுமுணுத்தது குதிரைக்குட்டி.

"பாவம், வாயில் விரலை வைத்தால் கடிக்கத் தெரியுமோ உனக்கு– ஒன்றும் தெரியாதாம்! பொறாமையில் அதை என்ன திட்டுத்திட்டினாய் நீ?" என்று ஏசிற்று கழுதை.

குதிரையும், அதனோடு சேர்ந்து கொண்டு குரங்கைக் கேலி செய்த மற்ற மிருகங்களும் தலை குனிந்தன.

காலையில் எல்லாம் கங்கா ஸ்நானம் செய்துவிட்டுப் புது உடை அணிந்து–பட்டாசு வாணம் விட்டுக் கொண்டிருக்கும் போது,நாய்க்குட்டி கையில் ஒரு கம்பி மத்தாப்புடன் சேவலிடம் ஓடிவந்து "நேத்திக்கு நம்மோடு விளையாடின குரங்கை ஒருத்தன்– நம்ம எஜமானர் குழந்தைகள் முன் ஆட்டி விளையாட்டுக் காண்பித்துக்கொண்டிருக்கிறான். நான் இப்பப் பார்த்தேன். அதுகூட புது சொக்காய் நிஜார் எல்லாம் போட்டிண்டிருக்கு" என்று மூச்சுவிடாமல் பேசிற்று.

"நல்ல வேளையா அது பத்திரமா தன் எஜமானனை அடைந்ததல்லவா... இப்பத்தான் என் மனசு சந்தோஷமா இருக்கு". என்று சொல்லி கூரை மேலேறி சந்தோஷ ஆரவாரம் செய்தது சேவல்.

அன்று இரவு முழுதும் அழுது கொண்டிருந்த குதிரைக் குட்டி– அதன் பிறகுதான் எண்ணெய் தேய்த்துக் கொண்டது.

மற்ற மிருகங்களும் இனி யார் வந்தாலும் அந்த மாதிரி நடத்துவதில்லை என்று சபதம் செய்து கொண்டன.

www.tamilnesan1981.blogspot.in



*"தீபாவளி அன்னைக்கு, மிருகங்களுக்கு மனித குணங்களைக் கொடுத்துக் கூறிய கதை 'ஏ ஒன்!'னாக இருந்தது அங்கிள். அதேபோல இன்னொரு கதை இன்னிக்குச் சொல்லணும்..." வேண்டுகோள் விடுத்தான் வெங்கடேசன்.*

*"சொன்னா போச்சு. இன்றைய கதையில் கரடிக் குட்டியே கதாநாயகன்" என்றதும் குழந்தைகள் கை தட்டி ஆர்ப்பரித்தனர்.*

# 8. கோபம் கொள்ளாதிரு மனமே!

"**உ**ன்னைத் தனியா விட்டுவிட்டுப் போகனுமேன்னு தான் எனக்கு கவலையா இருக்கு... ம்..." என்றார் ஜம்புவின் தகப்பனார்.

"நீங்க கவலைப்படாமல் போங்கப்பா, ரெண்டு நாள் தானே? நான் சமர்த்தாக இருக்கேன். வீட்டை கவனித்துக் கொள்கிறேன்" என்றான் ஜம்பு.

"எங்க சினேகிதர்கள் இருக்கும்போது தனிமை என்ன?"

"அதெல்லாம் சரிதான். உங்கிட்ட இருக்கிற ஒரே ஒரு கெட்ட குணத்திற்காகத்தான் பயப்படுகிறேன். சின்ன காரியத் திற்குகூட உனக்கு மூக்குக்கு மேல் கோபம் வந்துவிடுமே. நீ கோபத்தை அடக்கப் பழகிக்கொள்ள வேண்டும். பெரியவனாப் போனா— இது உனக்கு ரொம்பக் கெடுதலாக இருக்கும்."

ஜம்புவிற்கு அது உண்மையென்று தெரியும். தலை குனிந்தபடி... "ஆனா என்னாலே முடிய வில்லையே அப்பா!" என்றான்.

www.tamilnesan1981.blogspot.in

"நான் சொல்கிறபடி கேளு, இன்று முதல் ஒரு தீர்மானம் செய்துகொள். எது நடந்தாலும் பொறுமையாக இருக்க வேண்டும். இது முதலில் கஷ்டமாக இருக்கும். பிறகு சரியாகிவிடும்."

"சரி அப்பா, நீ சொல்லுகிறபடியே இன்று முதல் எது வந்தாலும் கோபப்படவே போவதில்லை" என்று உறுதியாக அப்பாவிடம் சொன்னதும்தான், அவர் ஆபீஸ் விஷயமாக போகவேண்டியிருந்த பிரயாணத்திற்குச் சித்தமானார்.

ஜம்புவைப்பற்றி உங்களுக்குச் சொல்லவில்லையே! ஜம்பு ஒரு கரடிக்குட்டி. அழகானது. அதன் அப்பா பெரிய பணக்காரர். நாகரிகமான பங்களா. ரேடியோ, டெலிபோன்கள் எல்லாம் உண்டு. ஜம்புவிற்கு பள்ளிக்கூடம் கோடை விடு முறைக்கு மூடி இருந்தது. ஜம்புவின் அம்மா, அவன் தாத்தா வீட்டிற்கு போயிருந்தாள். அதனால் ஜம்புவும் அவன் அப்பா வும் மட்டும் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டு இருந் தார்கள்.

ஜம்பு மிகவும் நல்ல பையன். ஆனால் ஒரே ஒரு கெட்ட பழக்கம் மட்டும் உண்டு. சட்டென்று கோபம் வந்துவிடும். அதனால்தான் அவன் அப்பா அவனைத் தனியாக விட்டுப் போக பயப்பட்டார்.

ஜம்பு என்னவோ எது வந்தாலும் பொறுமையோடு இருப்பதாக அப்பாவிடம் உறுதி கூறிவிட்டான். ஆனால் அதை அவனால் காப்பாற்ற முடிந்ததா, முடியுமா என்பதைப் பார்ப்போம்.

ஜம்புவிற்கு நீலம், மணி என்று இரண்டு முயல் குட்டி களும், பட்டு என்ற எலிக்குஞ்சும் நண்பர்கள். விச்சு கிச்சு என்ற பொம்மை பையன்களும் நண்பர்கள்தான். ஆனால் இந்த விச்சு, கிச்சு பலே விஷமக்காரர்கள். ஒரு காலத்தில் மனிதர்களோடு வாழ்ந்து வந்தவர்கள். அதனால் இவர் களுக்கு மனிதர்களின் கெட்ட குணங்கள் எல்லாம் உண்டு. ஆகவே ஜம்புவிற்கு இவர்களைக் கண்டால் பிடிப்பதில்லை. ஆனால் விரோதமுமில்லை. அப்பா போனதும் ஜம்பு தன் நண்பர்களை உடனே வீட்டிற்கு அழைத்துவிட்டான். பொழுது போக வேண்டாமா? அவன் மட்டும் தனியாக இத்தனை பெரிய பங்களாவில் எப்படி இருப்பது? ஜம்புவின் நண்பர் களுக்கு அவன் குணம் தெரியும். அவர்களும் பலே விஷமக்

www.tamilnesan1981.blogspot.in

காரர்கள். எப்போதும் ஜம்புவை கோபமூட்டி வேடிக்கை பார்ப்பது என்றால் அவர்களுக்கு பிடிக்கும்.

"இன்னும் இரண்டு நாளைக்கு நாம் வைத்ததுதான் சட்டம். அப்பபடி இப்படி குஷியாக் கொட்டமடிக்கணும்னு நான் ரொம்ப நாளாக விரும்பினதுண்டு. என்ன இருந்தாலும் உங்க அப்பா இருந்தா கொஞ்சம் பயமாகத்தான் இருக்கும்" என்று ரேடியோவை பலமாக் திருப்பிவிட்டு, மணி சோபாவில் நீட்டிப் படுத்துக் கொண்டான்.

"டேய்! சோபாவை யெல்லாம் அழுக்குப் பண்ணாதே." என்று உடனே கடுகடுத்தான் ஜம்பு. பிறகு "சரி. நாம டிபன் தயாரித்து சாப்பிடலாமா. பட்டு, நீ சமையலறையைக் கவனி... டேய் நீலம், அறைகளை எல்லாம் ஒழுங்குபடுத்து... ஏ... மணி... நீ வந்து" என்று திரும்பினான். ஆனால் மணி அங்கு இருந்தால் தானே! சமயலறையில் சர்க்கரை டப்பாவி லிருந்து சக்கரை எடுத்து, நெய்யை விட்டுக் குழைத்து, முந்திரிப் பருப்புடன் சுகமாக அசை போட்டுக் கொண்டி ருந்தான்.

ஜம்புவிற்கு பிரமாத கோபம் வந்துவிட்டது. "டேய் சமய லறையைவிட்டு இங்கே வரயா, இல்லாட்டா... ம்... இல் லாட்டா" என்று ஆத்திரத்தினால் பேசமுடியாமல் கத்தினான்.

பட்டு உடனே ஜம்புவைப் பார்த்து "ஏண்டா. ஜம்பு இப்படிக் கத்துகிறாய்... இப்ப என்ன நஷ்டமாப் போச்சு! இதெல்லாம் தின்பதற்கு இல்லாம பின்னே எதுக்கு இருக்கு" என்று மணிக்கு பரிந்து பேசினாள். அவளுக்கும் அவன் பங்கு கொடுத்திருந்தான்.

"என்ன நஷ்டமாய் போச்சா? போடி, உன்னைக் கேக் கல்லே" என்று சொல்லி, அவள் பின்னிக் கொண்டிருந்த பின்னல் துண்டை பிடுங்கி, ஆத்திரத்துடன் கண்டபடி பிய்த்து வீசி எறிந்தான்.

பட்டுவிற்கு குபுகுபுவென்று கண்களில் நீர் நிறைந்து விட்டது. முகத்தை மூடிக்கொண்டு அழுவதற்கு அடுத்த அறைக்குப் போய்விட்டாள். அவளைத் தொடர்ந்து நீலமும், விரலை சப்பிக்கொண்டே மணியும் போனார்கள். எல்லோரும் போன பிறகு ஜம்புவிற்கு என்னவோ போல இருந்தது. "சேச்சே, என்ன முட்டாள் தனம். எனக்கு ஏன் சட்சட்டுன்னு

www.tamilnesan1981.blogspot.in

கோபம் வருது– இதனால் ஒரு பயனும் இலங்லே. கஷ்டம தான். சரி, அப்பாவிற்காக கொடுத்த வாக்கை காப்பாத்த ணும். எது வந்தாலும், என்ன ஆனாலும் இனிமே கோபப் படுவதில்லை" என்று தனக்குள்ளேயே தீர்மானித்துக் கொண்டான்.

"சரி... பட்டுவின் அழுகை ஓய்ந்தது. அவள் டிபன் பண்ணும்வரை நம் வயிறு காத்திருக்காது. ஹோட்டலுக்குப் போய் ஏதாவது வாங்கிக்கொண்டு வரலாம் வாங்க" என்று ஜம்பு டவுனுக்குக் கிளம்பினான்.

போகும் வழியில் தூரத்தில் விச்சுவும் கிச்சுவும் பள்ளிக் கூட சுவரில் கரிக்கட்டியால் ஏதோ படம் போட்டு அதைப் பற்றி சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். மறைந்திருந்து உற்று கவனித்தான் ஜம்பு. அவனுக்கு தூக்கிவாரிப் போட்டது. அது அவன் படமேதான்! ஆனால் கடுகடுத்த முகத்துடன் 'உர்' என்று இருப்பது போல! கிச்சு சொன்னான்: "டேய், ஜம்பு மாதிரியே இல்லே? அவனுக்கு கோபம் வந்தால் இப்படித்தான் இருப்பான். "டேய், ஜம்பு பார்த்தால் நம் முதுகுத்தோலை உரிச்சுடுவான்" என்றான் விச்சு.

அவன் சொன்னதுபோல செய்ய வேண்டுமென்று ஜம்பு விற்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. ஆனால் தன் தீர்மானம் நினைவுக்கு வரவே, கோபத்தை அடக்கிக் கொண்டு ஒன்றும் தெரியாததுபோல மேலே நடந்தான். ஜம்பு வைக் கண்டதும் விச்சுவும் கிச்சுவும் ஒளிந்து கொண் டார்கள். ஜம்பு சுவரின் அருகே வந்து அப்போதுதான் படத்தைப் பார்ப்பது போல், "அடடே! என்னை அப்படியே போட்டிருக்காங்களே! ரொம்ப ஜோரா இருக்கே! யாருன்னு தெரிஞ்சா அவாளைப் பாராட்டுவேன்" என்று சாந்தமாகச் சொல்லிவிட்டு மேலே நடந்தான். விச்சுவாலும் கிச்சுவாலும் இதை நம்பவே முடியவில்லை. 'சிள்ளென்று எரிந்துவிழும் ஜம்புவா இவன்?' என்று திகைத்தார்கள்.

ஜம்பு ஹோட்டலிலிருந்து வந்ததும் முதல் வேலையாக, தன்னுடைய தீர்மானத்தை அட்டையில் எழுதி, அதை ஜன்ன லில் மாட்டிக்கொண்டிருந்தான் அப்போது "டனார்" என்று கல், கண்ணாடி ஜன்னலை உடைத்துக் கொண்டு– உள்ளே வந்து விழுந்தது. அவன் எழுதிய அட்டையும் பறந்து கீழே விழுந்தது.

www.tamilnesan1981.blogspot.in

ஜம்புவின் முகம் சிவந்தது. வெளியே பார்த்தான். விச்சுவும் கிச்சுவும் செடிமறைவில் ஒளிந்து கொண்டிருந்தார்கள். அதே கல்லை எடுத்து அவர்கள் மீது வீசக் கீழே குனிந்தான். அப்போது அவன் தீர்மானம் எழுதிய அட்டை கண்ணில் பட்டது. உடனே கோபமும் மறைந்துவிட்டது. நிதானமாக ஒளிந்து கொண்டிருக்கும் விஷமக்கார பயல்களை பார்த்து "டேய் நீங்க விளையாடறது சரிதான். விளையாடுங்கோ. ஆனால் இனிமேல் கண்ணாடிகள் உடையும்படியாக மட்டும் விளையாட வேண்டாம்" என்றான்.

விச்சுவும் கிச்சுவும் அப்படியே மூர்ச்சை போட்டு விழுந்து விடுபவர்கள்போல ஆச்சரியத்தால் திகைத்து நின்று விட்டார்கள்— "டேய், கனவு `காண்கிறோமா?" என்று ஒருவரைஒருவர் கேட்டுக் கொண்டார்கள்.

"ஜம்பு ஜம்பு! உன் மாடி அறையில் போய் நாங்கள் விளை யாடறோமே. இங்கே எல்லாம் விளையாடினா உங்க அப்பா வந்தா கோபித்துக்கொள்ள போறா..." என்று ஓடி வந்தாள் பட்டு தன் வாலில் ஒரு ரிப்பனை முடிந்து கொண்டே.

"என்ன, என் அறையிலா" என்று கோபத்தோடு ஏதோ சொல்ல வந்த ஜம்பு உடனே— தன் தீர்மானம் நினைவுக்கு வரவே... "ஓ... தாராளமா விளையாடுங்கோ. வேணும்னா வெளியில் கிச்சுவும் விச்சுவும் நிக்கிறாங்க, அவாளையும் சேர்த்துக்கொண்டு விளையாடுங்க" என்றான்.

பட்டு, நீலம், மணி இவர்களால் தங்கள் காதுகளையே நம்ப முடியவில்லை. ஏனென்றால் ஜம்பு தன் அறைக்குள் யாரையுமே விடமாட்டான்.

சிறிது நேரம் கழித்து ஜம்பு தன் நண்பர்களைக் காப்பி சாப்பிட அழைக்க வந்தபோது, — தன் அறையிலுள்ள புத்தகங்கள், விளையாட்டு சாமான்கள் எல்லாம் ஒரே அலங் கோலமாகச் சிதறிக் கிடப்பதையும், மூலைக்கு ஒருவராக ஜோரா சாய்ந்து கொண்டு தான் ரகஸியமாக வைத்திருந்த நாவல்களைப் படிப்பதையும் கண்ட ஜம்புவிற்கு எப்படி இருக்கும், நீங்களே சொல்லுங்கள்?

"ஐயையோ!" என்று ஆத்திரத்துடன் கத்திவிட்டான். உடனே நிதானித்துக் கொண்டு "ஒன்றுமில்லை உங்கள் இஷ்டப்படி படியுங்கள். பிறகு கீழே வந்து ராத்திரி சமயலுக்கு

www.tamilnesan1981.blogspot.in

ஏற்பாடு செய்தால் நன்றாக இருககும்!" என்று சொல்லிவிட்டு அவர்கள் பதிலைகூட எதிர்பார்க்காமல் கீழே இறங்கிப் போய் விட்டான்.

விச்சு, கிச்சு, பட்டு, நீலம், மணி எல்லோருக்கும் இது வியப்பிலும் வியப்பாக இருந்தது. ஜம்பு இவ்வளவு சாந்த மாகப் பேசி அவர்கள் கேட்டதே இல்லை.

"ஒருவேளை 'நட்டு' கொஞ்சம் லூஸாகப் போயிருக்கு மோ?" என்றாள் பட்டு கிண்டலாக.

"கீழே போவோம் வாருங்கள்" என்று விச்சு உத்திரவிட எல்லோரும் கீழே சென்றார்கள். அப்போதுதான் ஜம்புவின் தீர்மானம் எழுதிய அட்டையை அவர்கள் பார்த்தார்கள்.

"எந்தக் காரணத்தைக் கொண்டும் நான் எதற்கும் கோப. மடைவதில்லை" — ஜம்பு

"அப்படி சொல்லுடா ஜம்பு குட்டின்னானாம்! அதானே பாத்தேன். சபதம் எழுதிக்கிட்டிருக்காரு என்று குதித்தான்" நீலம்.

"இனிமே நாம்ப எது வேண்டுமானாலும் செய்யலாம். பயமே வேண்டாம். சபாஷ்டா ஜம்பு குட்டி! கோபம் கொள்ளாதிரு மனமே" என்று குதித்தனர் விச்சுவும் கிச்சுவும். பிறகு எல்லோரும் சமையலறையில் புகுந்தார்கள்.



www.tamilnesan1981.blogspot.in

ஜம்பு மௌனமாக ஆத்திரத்தை எல்லாம் அடக்கிக் கொண்டு சோபாவில் உட்கார்ந்திருந்தான்.

சமையலறை நிர்த்தூளிப்பட்டது. "டேய், ராத்திரி சாப்பாடு வேண்டாம். டிபன் பண்ணலாம். கேசரியும், போண்டாவும் செய் பட்டு," என்று தன் அபிப்ராயத்தை வெளியிட்டான் விச்சு. பாத்திரங்கள் உருண்டன. ஒரே சப்தம். ஜம்புவால் சகிக்க முடியவில்லை. என்ன செய்வது– தீர்மானம் அவன் கண் முன்னால் வந்து நின்று கோபத்தைத் தடுத்தது.

ஜம்பு தபால் தலைகள் சேகரிப்பதில் கெட்டிக்காரன். ஏராளமான ஸ்டாம்புகளை சேர்த்திருந்தான். வகைவகையான பல தேசத்து ஸ்டாம்புகள். இவர்கள் கூச்சலை காதில் வாங்காமல் ஸ்டாம்புகளையாவது எடுத்து ஒழுங்கு படுத்த லாம் என்று எல்லா ஸ்டாம்புகளையும் மேஜைமீது பரப்பி வரிசைப் படுத்த ஆரம்பித்தான். உள்ளேயிருந்து கூச்சல் அதிகமாயிற்று.

"டேய்! மரியாதையாக போண்டாவை கீழேவை!" "போடா!... நான் தின்னா உனக்கென்னடா?" இது விச்சு கிச்சு வின் குரல்.

'இதோ பாருங்க, பெண்கள்தான் முதலில் சாப்பிடணும்!'

"வாம்மா, பட்டம்மா! அந்த சட்டத்தை உங்களோடு வச்சுக்குங்க."

"டேய், முட்டாள் சுடப்போறதுடா!"

"சுட்டால் எனக்கு ஆற வைத்துக் கொள்ளத் தெரியும்."

மறுநிமிஷம் உஸ் ...ஸ் ...ஸ் என்று மின்சார விசிறியி லிருந்து சுழற்காற்று கிளம்பிற்று.

அதே சமயத்தில் ஜம்புவின் தபால்தலைகளும் அறை முழுவதும் பறந்தோடின.

"இப்படி விசிறியை முடுக்கி விட்டதால் நெருப்புகூட குளிர்ந்துவிடுமே" என்று விச்சுவும் கிச்சுவும் போண்டாவை விழுங்க ஆரம்பித்தன.

எப்படியிருக்கும் ஜம்புவுக்கு? உங்களால் இந்த நிலை யில் சும்மா இருக்க முடியுமா? ஆனால் ஜம்பு எப்படியோ பல்லைக் கடித்துக்கொண்டு சாந்தமாக-அத்தனை ஸ்டாம்பு

www.tamilnesan1981.blogspot.in

களையும் பொறுக்கி மறுபடி மேஜைமீது ஒழுங்காக அடுக்கினான்.

"பட்டு குடிக்கத் தண்ணீர் கொண்டு வா" என்று கத்தினான் நீலம்.

ஒரு தட்டில் ஜம்புவிற்கு போண்டாவும் ஒரு கையில் நீலத்திற்கு தண்ணீரும் கொண்டு வந்தாள் பட்டு. அவள் கையிலிருந்த தட்டிலிருந்த இரண்டு போண்டாவை மணி எடுக்க வந்தான். பட்டு அவனிடமிருந்து ஒதுங்கி ஓடினாள். அப்போது கிச்சுவின் கால் இடறி "தொபீர்" என்று கீழே விழுந்தாள். அவள் கையிலிருந்து தண்ணீர் கொட்டி ஜம்பு மேஜையில் பரப்பி இருந்த அத்தனை ஸ்டாம்பையும் நனைத்துவிட்டது.

இத்தனை நேரம் அடக்கி வைத்திருந்த ஜம்புவின் ஆத்திரம் சீறிக்கொண்டு கிளம்பிற்று.

"கோபங்கொள்ளாதிரு மனமே" என்று பாடிய நீலத்தைக் கொன்றுவிடுவதுபோல பார்த்துக்கொண்டே– மாடிக்கு அப்பாவின் அறைக்கு ஓடினான். டெலிபோனில் அவரைக் கூப்பிட்டான். நடந்தது முழுதும் சொன்னான் அப்பா என்னால் பொறுக்கவே முடியவில்லை. என்ன செய்வது?"

"உன் இஷ்டப்படி செய்டா ஜம்பு. ஆளுக்கு ரெண்டு ரெண்டு அடி கொடு. ஜம்பு, உன் உரிமையைக் காட்டு. ஆனால் பதறாதே. நிதானமாக நடந்துகொள். நான் நாளைக்குக் காலையிலேயே வந்து விடுகிறேன்."

"அதாவது சிரித்துக்கொண்டே ஆத்திரப்படாமல் தண்டிக்கச் சொல்கிறாயா அப்பா?"

"அதே தான்" அம்மா அவனை அடிக்க உபயோகிக்கும் பிரம்பை வளைத்துக்கொண்டே ஹாலுக்குள் வந்தான் ஜம்பு, முகத்தில் சிரிப்புடன்.

"எல்லோரும் வாங்க இப்படி..." என்றான் ஜம்பு. ஆனால் யாராவது அங்கிருந்தால்தானே? ஜம்பு அப்பாவோடு டெலிபோனில் பேசியதை நீலமும் மணியும் ஒட்டுக் கேட்டுவிட்டார்கள். உடனே ஒரு தந்திரம் செய்தார்கள்.

பக்கத்து அறையில் பேச்சுக் குரல் கேட்கவே ஜம்பு அங்கு போனான். அங்கு ஐந்து பேரும் கூடி ஏதோ செய்துகொண்டிருந்தார்கள்.

www.tamilnesan1981.blogspot.in

"இங்கேயா இருக்கீங்க. சரி எல்லோரும் கையை நீட்டுங்கள். இத்தனை நாழி அடித்த கொட்டத்துக்கு பரிசு" என்று பிரம்பை 'விர்' என்று காற்றில் வீசினான்.

"ஜம்பு... எங்களை நீ தண்டிக்கக் கூடாது. முடியாது... ஆமாம்!" என்றாள் துணிச்சல்காரி பட்டு.

"ஏனோ?" என்றான் ஜம்பு முகத்தில் சிரிப்பு மாறாமல், உள்ளே ஆத்திரம் பொங்க.

"ஏனென்றால் நாங்கள் ஒரு சபதம் எடுத்துக் கொண்டிருக்கிறோம்" என்று நீலம் ஒரு அட்டையை ஜம்பு முன்னால் நீட்டினாள். அதில்,

"எங்கள் தீர்மானம்."

இனி நாங்கள் கொட்டமடிக்காமல் கலாட்டா செய்யாமல் நல்லவர்களாக மாறிவிட்டோம். இந்த நிமிஷம் முதல் இது அனுஷ்டிக்கப்படும் – ஒப்பம். விச்சு, கிச்சு, பட்டு, நீலம், மணி.

"பார்த்தாயா, நீ எங்களை நல்லவர்களாக மாற்றுவதற்கு முன்பு நாங்களாகவே நல்லவர்களாகிவிட்டோம். ஆகையாலே பிரம்புக்கு வேலை கிடையாது" என்று சொல்லிவிட்டு எல்லாரும் தோட்டத்தை பார்க்க ஓட ஆரம்பித்தார்கள்.

"ஓ... ஜம்பு! 'கோபம் கொள்ளாதிரு மனமே...' உன் தீர்மானத்தை நீ மறந்துவிடாதே!" என்று விச்சுவும் கிச்சுவும் ராகம் போட்டு பாடிக் குதித்தார்கள். ஆத்திரமும் அசடும் வழிய அவர்கள் போவதை பார்த்தபடி நின்று கொண்டிருந்தான் ஜம்பு.

www.tamilnesan1981.blogspot.in



*‘‘திகில்- அட்வெஞ்சர் (சாகசம்) கதை என்றால் உங்களுக்கெல்லாம் ரொம்பப் பிடிக்குமே - இல்லியா?’’*

*‘‘ஆமாம் அங்கிள். இன்று கதை அந்த மாதிரிதானா?’’ என்றான் வேணு.*

*‘‘கதையைக் கேளுங்கள் புரியும்’’ என்றார் அப்பா.*

# 9. நடுக்காட்டில்...!

“கறுப்பானாலும் எத்தனை பளபளப்பு பார்த்தியா? இதற்கு கறுப்பன் என்று பெயர் வைக்கலாமா?”

“போடா, கறுப்பன் என்ற பெயர் நன்றாக இல்லே. ‘பிளாக்கி’ என்று கூப்பிடலாம்.”

“இரண்டும் ஒன்றுதான். ஏ பிளாக்கி ஓடியா?”

குட்டி நாய் அவர்களுக்கு முன்னே ஓடிற்று.

* * *

“அதெல்லாம் கூடாது, வீட்டிலே நாய் வளர்த்தா ரொம்ப கஷ்டம். சமையலறை உள்ளெல்லம் புகுந்து உன் அம்மாவிற்குக் கஷ்டத்தைக் கொடுக்கும்” என்றார் அப்பா.

ஆனால் கிச்சுவும் பிச்சுவும் அவரை விடவில்லை. “இல்லேப்பா இதை உள்ளே விடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்கிறோம். தோட்டத்து மூலையிலே கட்டிப் போட்டு விடுகிறோம். இதைவிட மனசில்லை அப்பா! ரொம்ப அழகா இருக்கப்பா...” என்று கெஞ்சினார்கள்.

“இதுவா அழகு? கன்னங்கரேல் என்று பார்க்கவே பயமா இருக்கே?” என்றார் அப்பா.

எப்படியோ— அப்பாவை சமாதானப்படுத்திவிட்டார்கள் இருவரும். அம்மாவும் “உங்களுக்கு தரும் உணவில்தான்

www.tamilnesan1981.blogspot.in

உங்கள் நாய்களை வளர்க்கவேண்டும். நாய்குட்டிக்கு என்று நான் ஒன்றுமே தரமாட்டேன்" என்று சொல்லிவிட்டார்.

பிளாக்கியை கிச்சுவும் பிச்சுவும் அரை நிமிஷமும் பிரிவதே இல்லை. பிளாக்கி கொழுகொழுவென்று வளர்ந்திருந்தது. என்னதான் கட்டிப்போட்டாலும் அது கட்டை அறுத்துக்கொண்டு அப்பா அறைக்குள் புகுந்து, இங்கிப் புட்டிகளை கவிழ்ப்பதும் காகிதங்களைக் கசக்கிக் கிழிப்பது மாக ரகளை செய்தது.

பிளாக்கியின் அட்டகாசத்தினால் கிச்சுவுக்கும் பிச்சுவுக்கும் தினம் அப்பா– அம்மாவிடமிருந்து வசவு கிடைத்துக் கொண்டே இருக்கும். "அந்தச் சனியனை விரட்டி விட்டு வந்தால்தான் இன்றைக்குச் சாப்பாடு" என்றுகூட அம்மா மிரட்டிவிட்டாள். ஆனால் பிளாக்கியை அவர்கள் விரட்டினாலும் அது இவர்களை விடுவதாக இல்லை.

ஒருநாள் கிச்சுவும் பிச்சுவும் பிளாக்கியோடு விளையாடிக் கொண்டிருந்தார்கள். பிளாக்கி ஒரு அணிலைத் துரத்திக் கொண்டு ஓடிற்று.

"பிளாக்கி உன்னால் அதைப் பிடிக்க முடியாது. ஓடியா நேரமாச்சு" என்று கூப்பிட்டனர், கிச்சுவும் பிச்சுவும். ஆனால் பிளாக்கி காட்டிற்குள் ஓடிற்று. அதைப் பிடிக்க இருவரும் காட்டிற்குள் ஓடினார்கள்.

"பிளாக்கி... பிளாக்கி!"

வெகுதூரம் காட்டிற்குள் போய்விட்டார்கள். பிளாக்கியைக் காணவில்லை.

"கிச்சு! எங்கேடா போச்சு இது?"

"ளொள்... ளொள்... ளொள்..."

"அதோ! நம்ம பிளாக்கிதான் குரைக்கிறது." இருவரும் ஓடினார்கள்.

அடேயப்பா! எவ்வளவு பெரிய மரம். பிரம்மாண்டமான மரம். அவ்வளவு பெரிய மரத்தை அவர்கள் இதுவரை பார்த்ததில்லை. நாலு மனிதர்கள் சேர்ந்துதான் அதைக் கட்டிப் பிடிக்கவேண்டும். அவ்வளவு பருமனான மரம். அந்த மரத்தின் வேரின் அடியில் ஒரு சிறிய பொந்தைச் சுற்றிச் சுற்றி வந்தது பிளாக்கி. அது துரத்தி வந்த அணில் அதற்குள்தான் புகுந்து விட்டது.

www.tamilnesan1981.blogspot.in

"பிச்சு! இத்தனை பெரிய மரத்தை நீ பார்த்திருக் கிறாயோ. அடேடே பிச்சு. அந்த மரத்தின் மேல் ஒரு பொந்து இருக்கிறதுடா! வாடா போய் பார்க்கலாம்" இருவரும் ஓடினர்.

அந்தப் பெரிய பிரும்மாண்டமான மரத்தின் மேல் ஒரு பெரிய குகை போன்ற பொந்து இருந்தது. அவ்வளவு பெரிய பொந்து இருந்தும் மரம் பட்டுப் போகாமல் இருந்தது. இரண்டு ஆள் தாராளமாக் இறங்கலாம் அதில். "பிச்சு இதற் குள் இறங்கிப் பார்க்கலாமா? நம் பாட்டி சொல்லும் கதை களில் வருவதுபோல இதுவழியாக படிகள் இருந்து— நம்மை பாதாள லோகத்துக்கு கொண்டு போய் விட்டு— அங்கிருந்து ஏராளமான பணத்துடன் திரும்பி வரலாமல்லவா?" பாட்டி சொன்ன கதை உண்மையில் நடந்தது என்று நம்பி இருந்தான் கிச்சு.

"ஆனால் நாம் உள்ளே குதித்த பிறகு படியே இல்லாமல் போனால் பிறகு நம்மால் அதிலிருந்து ஏறமுடியாது. அதிலேயே நாம் கிடந்து சாகவேண்டியதுதான். கூச்சல் போட்டால்கூட உதவிக்கு இந்தக் காட்டில் யார் வரப்போகிறார்கள்" என்று அதிலுள்ள ஆபத்தை எடுத்துச் சொன்னான் பிச்சு.

"அதுவும் சரிதான். அப்படியானால் நாம் ஓடிப் போய் வீட்டிலிருந்து ஒரு கயிறு கொண்டு வந்து இந்தக் கிளையில் கட்டிவிட்டு உள்ளே இறங்கலாம்! எனக்கென்னவோ ஏதாவது வீரச்செயல் செய்யவேண்டும் போலிருக்கிறது. இவ்வளவு பெரிய பொந்தில் ஏதாவது அதிசயம். இல்லாமல் இருக்காது" என்று கிச்சுவோடு பிச்சுவும் வீட்டிற்கு ஓடி, ஒரு உறுதியான கயிற்றுடன்— மறுபடி அந்தக் காட்டிற்குள் இருந்த பிரும் மாண்டமான மரத்திற்கு வந்தனர். பிளாக்கியும் அவர்களோடு ஓடி வந்தது. அதற்கு ரொம்ப குஷி. தன்னால்தான் அந்தப் பெரிய மரத்தை அவர்கள் கண்டுபிடித்தார்கள் என்ற சந்தோஷம் அதற்குத் தாங்கவில்லை.

பிச்சு கயிற்றை மரத்தின் ஒரு உறுதியான கிளையில் கட்டி அந்தப் பொந்திற்குள் தொங்கவிட்டான். கிச்சு அதைப் பிடித்துக்கொண்டு பொந்திற்குள் இறங்கினான். பொந்து ரொம்ப ஆழத்திற்குப் போயிற்று.

"டேய் கிச்சு... எத்தனை தூரம்டா இருக்கு... நானும் இறங்கட்டுமா?"

www.tamilnesan1981.blogspot.in

"ரொம்ப ஆழமா இருக்குடா... இதோ தரை. நீயும் வா. அடேடேய், இங்கே என்னவோ மெத்துன்னு... சாக்கு மூட்டைகள் இருக்குடா இங்கே. விச்சு... நாம் ஒண்ணு மறந்துவிட்டோம். வரும்போது அப்பாவுடைய பாட்டரி விளக்கைக் கொண்டு வந்திருந்தால் எத்தனை நல்லா இருக்கும்? இங்கே ஒரே கும்மிருட்டா இருக்கு. ஒண்ணுமே தெரியவில்லை."

"நீதான் மறந்துவிட்டாய் நான் மறக்கவில்லை. இதேபார்" என்று பிச்சு– பளீர் என்று பாட்டரி விளக்கை அழுத்தி பொந்திற்குள் வெளிச்சம் உண்டாக்கினான். வெளிச்சம் பட்டதும் உள்ளே கண்ட காட்சி, பிச்சுவையும் கிச்சுவையும் ஆச்சரியத்தால் கத்த வைத்துவிட்டது.

"டேய், டேய்! அதெல்லாம் என்ன சாக்கு மூட்டைகளா?" பிச்சுவும் கயிற்றைப் பிடித்துக் கொண்டு பொந்திற்குள் குதித்தான். அந்த மரப்பொந்து ஒரு பெரிய அறைபோல் விசாலமாக இருந்தது. அதற்குள் நாலைந்து சாக்குகள் இறைந்து கிடந்தன. ஒரு மூட்டை வேறு இருந்தது. ஒரு அட்டைப் பெட்டி, சில ஆயுதங்கள். "பிச்சு, இந்த மரத்தை யாரோ எதற்காகவோ உபயோகப்படுத்தி இருக்கிறார்கள். இந்த மர்மத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்."

"கிச்சு நான் நினைக்கிறேன். இது திருடர்கள் மறைவிடமாக இருக்குமோ என்று. அலிபாபா கதையில்கூட இப்படித் தானே!"

அதற்குள் பிச்சு ஒரு சாக்கு மூட்டையை அவிழ்த்தான். அதற்குள் வெள்ளிப் பாத்திரங்கள் பளபளத்தன.

"சந்தேகமே இல்லை. இது திருடர்களின் ஒளிவிடம் தான்."

அதேசமயம் பிளாக்கி வெளியே பலமாகக் குரைப்பது இருவருக்கும் நன்றாக கேட்டது.

"டேய் யாரோ வருகிறார்கள், அதனால்தான் பிளாக்கி குறைக்கிறது... திருடர்களாக இல்லாதிருக்க வேண்டுமே!"

"ளொள்... ளொள்... கர்... கர்...ர்...ளொள்."

"அண்ணே அந்த நாயைப் பார்த்தியா?... இத்தனை நாளா இங்கே ஒரு குருவிகூட வந்ததில்லையே. யாராவது

www.tamilnesan1981.blogspot.in

நம்ப ரகசியத்தைக் கண்டுகிட்டாங்களோ?" என்றது ஒரு கட்டைக் குரல்.

"இந்த காட்டுக்குள்ளே யாருப்பா வரப்போறாங்க, இப்படி உட்காரு. மூட்டையை வை கீழே. அப்படி யாராவது இருந்தா நாயைத் தேடிக்கிட்டு இந்தப் பக்கம் தானே வந்தாகணும், பார்த்துக்கலாம்" என்றது இன்னொரு குரல்.


கிச்சுவும் பிச்சுவும் ஒருவரை ஒருவர் பயத்துடன் கட்டிக் கொண்டனர். திருடர்கள் பொந்திற்குள் இவர்களைப் பார்த்து விட்டால் என்ன ஆவது?

'அந்த நாய் எங்கேயோ தட்டுக்கெட்டு போய் வந்திருக்கு. ஒரு கல்லை எடுத்து வீசி, விரட்டு சொல்றேன்."

அடுத்த நிமிஷம் பிளாக்கி பரிதாபமாக கத்திக் கொண்டு ஓடுவது இருவருக்கும் கேட்டது.

"வாண்ணே, நம்ப காரியத்தைப் பார்க்கலாம்." கிச்சுவும் பிச்சுவும் நடுங்கிக் கொண்டிருந்தனர். அந்த இரண்டு திருடர் களும் மரத்தில் ஏறுவது நன்றாகத் தெரிந்தது.

"அண்ணே வந்தது மோசம்! யாரோ நம்ம ரகசியத்தைக் கண்டுகிட்டாங்க. இதோ பாரு கயிறு. உள்ளே யாரோ இறங்கிப் பாத்திருக்காங்க."



www.tamilnesan1981.blogspot.in

"நாம உள்ளே ஏதாவது வைத்திருந்தோமா?"

"இருங்கண்ணே. நேத்தி செட்டியாரு வீட்டிலிருந்து கொணாந்த வெள்ளிப் பாத்திரம் பூரா இதுக்குள்ளேதானே இருக்குது."

"சரி, சீக்கிரம் அந்த மூட்டையை எடுத்துகிட்டு வேற இடத்துக்குப் போயிடலாம் வா."

முதலில் பேசிய மனிதன் கிச்சுவின் மேலேயே குதித்தான். கிச்சு பயத்தினால் அலறி விட்டான். திருடனுக்கு தூக்கிவாரிப் போட்டது. அதற்குள் விச்சு டார்ச் லைட்டை அழுத்தி வெளிச்சமுண்டாக்கினான்.

மேலே இருந்த திருடன் "உள்ளே என்னடா சத்தம்?

"அண்ணே. இரண்டு பசங்க உள்ளே இருக்காங்க, என்ன பண்ணலாம். இந்த பைசன்களை?"

"அவுங்க யாரு, எப்படி, ஏன் வந்தாங்கன்னு விசாரி டோய்."

கிச்சு நடுங்கியபடியே நாங்க விளையாட்டுக்கு இந்தப் பொந்துக்குள்ளே இறங்கினோம். நாங்க வந்ததுகூட யாருக்கும் தெரியாது. எங்களை விட்டுடுங்க. நாங்க யாரிடமும் சொல்ல மாட்டோம்." கெஞ்சினார்கள் இருவரும்.

திருடனுக்கு தங்கள் ரகசிய இடம் கண்டுபிடிக்கப்பட்டது பற்றி ரொம்பக் கோபம். பேசாமல் மேலே ஏறிப் போய் பொந்தின் வெளியே இரண்டு திருடர்களும் வெகு நேரம் என்னவோ பேசிக் கொண்டார்கள். பிறகு மேலே இருந்த படியே "டேய் பயல்களா ஓரமாக ஒதுங்கிக் கொள்ளுங்கள். ஒரு மூட்டையைப் போடப் போறேன்."

கிச்சு பிச்சு பொந்தின் ஒரு மூலையில் போய் ஒண்டிக் கொண்டனர். சப்தத்தோடு ஒரு மூட்டை பொந்திற்குள் விழுந்தது.

"நாங்கள் பாதி ராத்திரிக்குத்தான் வருவோம். அதுவரை இதற்குள்ளேயேதான் இருக்கணும். தப்பிக்க முடியாது. நீங்க ஒழுங்காக இருந்தால் உங்களை விட்டு விடுவோம். ஆமாம்!" என்று உத்திரவிட்டார்கள் திருடர்கள்.

"எங்களை இங்கேயே விட்டுப் போகாதீர்கள். இருட்டி

www.tamilnesan1981.blogspot.in

விட்டது. எங்களுக்கு பயமாக இருக்கிறது. நாங்கள் யாரிடமும் சொல்லவில்லை." கத்தினார்கள் கிச்சுவும் பிச்சுவும்.

ஆனால் திருடர்கள் அவர்கள் வார்த்தையை லட்சியம் செய்யவில்லை. கயிற்றை அவிழ்த்துக்கொண்டு போய் விட்டார்கள். கயிறு இல்லாமல் அவர்களால் மேலே ஏறி வர முடியாது. திருடர்கள் மரத்திலிருந்து குதித்துப் போவது நன்றாகக் கேட்டது.

'இப்போது என்னடா செய்யறது? ராத்திரிப் பூரா இங்கே யேவா இருப்பது?" என்றான் பிச்சு.

"வீணா அழுது என்னடா பயன். பேசாம சாக்குமேலே படுத்துக்கொள். நடு ராத்திரியில் நம்மை அவர்கள் விட்டு விடுவார்கள்."

அடிக்கடி பாட்டரி விளக்கை ஏற்றி ஏற்றி சுற்று முற்றும் பார்த்துக் கொண்டார்கள்.

"கிச்சு அவர்கள் நிச்சயமாக வருவார்களாடா?" ஒரு வேளை வராவிட்டால் நம்ம கதி?" என்று நடுங்கினான் பிச்சு.

"போடா அசடே! இப்படிப் பயப்படுகிறாயே!" என்ற கிச்சுவின் குரலுக்கு மேல் பிளாக்கியின் குரல் கேட்டது.

"பிளாக்கி பிளாக்கி! நம்ம அருமை பிளாக்கி நம்மைத் தேடிக் கொண்டு வந்துவிட்டது" என்று குதித்தனர் இருவரும்.

பிளாக்கி பொந்திற்குள் எட்டிப் பார்த்தது. கிச்சு டார்ச் அடித்துப் பார்த்தான். அதன் தலையிலிருந்து ரத்தம் வழிந்து காய்ந்திருப்பது தெரிந்தது.

"பாவம் நம்ம பிளாக்கியை அந்தத் திருட்டுப் பயல்கள் அடித்துக் காயப்படுத்திவிட்டார்கள். பிளாக்கியால் நம்மை எப்படிக் காப்பாற்ற முடியும்?"

கிச்சு ஆனந்தத்தால் குதித்தான். "முடியும். வழி இருக் கிறது. உன் சட்டைப் பையில் உள்ள அந்தப் பேப்பரை எடு" என்றான். "பிளாக்கி, கம். ஆன்" ஓடியா என கூப்பிட்டான் பிளாக்கியை. பிளாக்கி குபீரென்று பொந்திற்குள் குதித்தது. கிச்சு பிச்சு கொடுத்த காகிதத்தில் "அப்பாவுக்கு, அப்பா நாங்கள் ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறோம். ஒரு பெரிய மரப்பொந்தில் விழுந்து விட்டோம். அது திருடர்கள் பதுங்குமி

www.tamilnesan1981.blogspot.in

டம். எங்களால் ஏறமுடியவில்லை. உடனே பிளாக்கி காட்டும் இடத்துக்கு ஓடி வரவும். வரும்போது போலீஸோடு வரவும்—கிச்சு பிச்சு" என்று எழுதினான் கிச்சு. அதை பிளாக்கியின் கழுத்துத் தோல் பட்டையில் தெரியும்படி கட்டி, "பிளாக்கி! நேராக வீட்டிற்கு ஓடி அப்பாவை கூட்டிக் கொண்டு வருகிறாயா" என்றான். அதுவும் புரிந்தது போல குரைத்தது. உடனே கிச்சு, பிச்சுவின் முதுகின்மீது ஏறி பிளாக்கியை தூக்கிப் பிடித்தான். அது ஒரே தாவலாகத் தாவி வெளியே குதித்து ஓடிற்று.

கிச்சுவும் பிச்சுவும் நெஞ்சு திக்திக் என்று அடித்துக் கொள்ளக் காத்திருந்தனர். பிளாக்கி கட்டாயம் அப்பாவை அழைத்து வந்துவிடுமென்று நம்பிக்கையிருந்தது. ஆந்தை ஒன்று அலறிற்று. வெளியே ஏதோ மிருகங்கள் காய்ந்த சருகுகளில் போவது கூடக் கேட்டது. தவளைகளின் சத்தம், 'நொய்' என்ற சிள் பூச்சிகளின் ஓசை.

"மணி பதினொன்று இருக்கும் போலிருக்கே. ஒருவேளை பிளாக்கியின் கழுத்திலுள்ள கடிதத்தை அப்பா பார்க்க வில்லையோ?"

"அப்பா பார்க்காவிட்டாலும் நம்ம பிளாக்கிவிடாது. இரு இரு. அதோ, ஏதோ சத்தம்!"

"திருடர்களோ?"

"போடா அசடு! அதோ நம்ம பிளாக்கியின் குரல் கூடவாத் தெரியவில்லை?"

வள்...வள்...வள்...!

"இதோ. அடேயப்பா எவ்வளவு பெரிய மரம்!"

"கிச்சு—பிச்சு இருக்கிறீர்களா?"

'அப்பா—அப்பா: ஆமப்பா' அவர்கள் குரலில் ஆசையும் ஆனந்தமும் கலந்திருந்தது. "எங்கே நீ வராமல் இருந்து விடு வாயோ என்று பயப்பட்டேன் அம்மா, வந்திருக்காங்களா?"

"இதோ இருக்கேண்டா கண்ணே!" அம்மாவின் அன்புக் குரல் கேட்ட அவர்களுக்கு— பயம், களைப்பு, பசி எல்லாம் பறந்துவிட்டன.

"கிச்சு, போலீஸ்காரர் வந்திருக்கா? எதுக்கு வரச் சொன்னே?" என்று கேட்டார் அப்பா.

www.tamilnesan1981.blogspot.in

கிச்சு கதை முழுதும் சொன்னான். உடனே போலீஸ் இன்ஸ்பெக்டர் மரத்தைச் சுற்றி காவல் போட்டார். கிச்சுவும் பிச்சுவும் வெளியேற்றப்பட்டனர்.

"அவர்கள் வரும் நேரமாயிற்று. கவனமாக இருங்கள்" என்றார் இன்ஸ்பெக்டர்.

எல்லோரும் புதர்களில் மறைந்திருந்து திருடர்களின் வரவிற்குக் காத்திருந்தனர். பிளாக்கி கூட சத்தம் போடாமல் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தது.

திருடர்கள் வந்தார்கள். அவர்களுக்குத்தான் அங்கு இருக்கும் ஆபத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாதே! மரத்தில் ஏறி "டேய்! பயல்களா! தூங்கிவிட்டீர்களா?" என்று அலட்சிய மாக சத்தம் போட்டுக் கூப்பிட்டார்கள். பதிலில்லை. ஆனால் அடுத்த நிமிஷம் பளீரென்று வெளிச்சம் அவர்கள் மீது விழுந்தது.

திகைத்துப் போய் நின்ற அவர்கள் கைகளில் விலங்கு, களை மாட்டினார்கள் போலீஸ்காரர்கள்.

கிச்சுவும் பிச்சுவும் வழி முழுவதும் அப்பாவிடம் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தை பற்றிக் கதை கதையாக சொல்லிக் கொண்டே வந்தார்கள்.

மறுநாள் இன்ஸ்பெக்டர் கிச்சுவின் வீட்டிற்கு வந்திருந் தார். "குழந்தைகளா! அந்த இரண்டு பேரும் ரொம்ப நாளை யத் திருடர்கள். வெகு நாளாக நாங்கள் தேடிக் கொண்டிருந் தோம். உங்களால் அகப்பட்டார்கள். அதற்காக உங்களுக்கு ஆளுக்கு ஒரு ரிஸ்ட் வாட்ச் பரிசு...! உங்கள் நாய்தான் ரொம்ப வேலை செய்திருக்கிறது. அதற்கு இந்த அழகான சங்கிலியோடு கூடிய தோல்பட்டை" என்று சொல்லி பிளாக்கியைத் தூக்கிக் கொஞ்ச ஆரம்பித்தார். அன்று முதல் பிளாக்கிக்கு அந்த ஊரிலேயே தனிச் சலுகை.

www.tamilnesan1981.blogspot.in



*“ராஜா-ராணிக் கதை கேட்டு ரொம்ப நாளாச்சு அங்கிள்!...” என்றாள் உஷா - அப்பா கதை சொல்ல வந்ததும்.*

*“இன்று ராஜாக் கதையே கூறிட்டாப் போச்சு” என்றவர் பழங்காலத்து கதை ஒன்றைக் கூறத் தொடங்கினார்.*

# 10. குதிரை வீரன்

**வீ**ரசிம்மன் மகதநாட்டு இளவரசன். அவர்கள் நாட்டின் மேல் முகலாயர் படையெடுத்து அட்டுழியம் செய்தனர். பகைவர்களை எதிர்பாராத மகதநாடு தோற்றுவிட்டது. மகத நாட்டு மன்னன் மகிபாலன் தன் சிறு சேனையோடு தப்பி ஓடி ஒளிந்து— முகலாயர்களைத் துன்புறுத்தி வந்தான். ஆனால் வீரசிம்மனுடன் யாரும் கிடையாது. பன்னிரண்டு வயது. வீரசிம்மன் அலைந்து அலைந்து அலுத்துப் போய்விட்டான். பசியும் தூக்கமும் அவனை வதைத்தன. பிச்சைக்கார நாடோடிபோல இருந்த அவன்— ஒரு வீட்டின் கதவைத் தட்டினான். உள்ளிருந்து பத்து வயது பெண் ஒருத்தி வந்தாள்.

“தூக்கம் கண்ணைச் சுற்றுகிறது; மறைவாகப் படுத்துக் கொள்ள ஒரு இடம் தருகிறாயா! என்னைத் தேடிக்கொண்டு மொகல் வீரர்கள் அலைகிறார்கள்” என்றான்.

“நீ ராஜபுத்திரனா, அப்படியானால் நீ ஒளிந்து கொள்ள நான் இடம் தரக்கூடாதே... நானும் அல்லவா அகப்பட்டுக் கொள்ளுவேன்... இருந்தாலும் உன்னைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கு. இதோ இந்த மாம்பழக் குவியலுக்குள் படுத்துக்கொண்டு தூங்கு” என்று சொல்லிவிட்டுப் போனாள். வீரசிம்மன் அவள் காட்டிய மாம்பழக் குவியலுக்குள் படுத்துக் கொண்டு தன்னை மாவிலைகளால் மூடிக் கொண்டான்.

www.tamilnesan1981.blogspot.in

வெகுநேரம் கழித்துக் கண் விழித்தபோது, வீரர்கள் குதிரைகளில் போவது கேட்டது. விரசிம்மனுக்குப் பயமாக இருந்தது. அதற்கேற்றாற்போல் ஒரு வீரன். "அடேடே! இதோ பாருடா மாம்பழங்கள் குவிந்து கிடக்கின்றன! வாங்கடா ஒரு கை பார்க்கலாம்" என்றான். உடனே பல வீரர்கள் ஓடோடி வந்தார்கள். ஆளுக்குக் கொஞ்சம் மாம்பழத்தை அள்ளவே வீரசிம்மன் வெளிப்பட்டான்.

அவனைக் கண்டதும் முகலாய வீரர்கள், "அகப்பட்டுக் கொண்டாயா பயலே!" என்று பிடித்துக் கொண்டனர்.

வீரசிம்மன் மாட்டிக் கொண்டான். ஆனால் அவன் தான் அகப்பட்டுக்கொண்டதற்காகக் கவலைப்படவில்லை. தனக்கு ஆகாரம் கொண்டு வருகிறேன் என்று சொன்ன அந்தப் பெண் வந்தால் அவளும் அநியாயமாக மாட்டிக் கொள்ளு வாளே என்றுதான் வருந்தினான். சட்டென்று ஒரு தந்திரம் செய்தான். அவர்கள் இவனைப் பிடித்ததும் அவர்கள் பிடியி லிருந்து திமிறி, "ஐயோ... ராஜபுத்திரர்கள்" என்று ஓடினான்.

உடனே அவனைப் பிடித்து நிறுத்தி, "என்னடா உளறு கிறாய்? எங்களை நன்றாகப் பாருடா! என்ன ஏமாற்று கிறாயா?" என்று அதட்டினர். வீரசிம்மன்தான் நாடோடிப் பரதேசிபோல வேஷமணிந் திருந்தானே!



www.tamilnesan1981.blogspot.in

"இல்லீங்க. நேத்தி அந்த ஊரிலே இந்து சிப்பாயிங்க கிட்ட மாட்டிக்கிட்டுப் படாதபாடு பட்டேனுங்க. அதான்" என்று நடுங்குவதுபோல பாசாங்கு செய்தான். அதை உண்மை என்று நம்பிய முகலாயப் போர் வீரர்கள், அவனைப் பயப்பட வேண்டாமென்று சொல்லிவிட்டு மாம்பழங்களைச் சுவைக்க ஆரம்பித்தனர்.

வீரசிம்மனைத் தண்ணீர்கொண்டு வரும்படி கட்டளை யிட்டனர். வீரசிம்மனும் அவர்கள் இஷ்டப்படி நடந்து கொண்டு அடிமைபோல நின்று கொண்டிருந்தான்.

அப்போது அவன் பயந்தபடியே அந்தப் பெண்ணை இழுத்துக்கொண்டு வந்தான் ஒரு வீரன்.

"இந்தப் பெண் யாரோ ஒரு ராஜபுத்திரனுக்கு சாப்பாடு கொண்டு செல்கிறாள்" என்று தலைவன் முன் நிறுத்தினான்.

வீரசிம்மன் சிரித்த முகத்துடன் அவர்களுக்கு மாம்பழங் களை நறுக்கிக் கொடுத்துக் கொண்டிருப்பதைக் கண்ட அந்தப் பெண்ணின் முகத்தில் கோபம் பொங்கிற்று.

"யாருக்கு சாப்பாடு... ஆள் எங்கே ஒளிந்து கொண்டிருக் கிறான்?" என்று கேட்ட தலைவனுக்குப் பதில் சொல்லும் போது, 'தன்னைக் காட்டிக் கொடுக்காதே' என்று சைகை செய்தான். அவளும் பல்லைக் கடித்துக் கொண்டு பதில் பேசாதிருந்தாள். தலைவன் அதட்டினான்; மிரட்டினான். அவள் பேசவே இல்லை. வீரசிம்மனும் அவனோடு சேர்ந்து கொண்டு அதட்டினான். கடைசியில் அவளை ஒரு மரத்தில் கட்டிப் போட்டனர்.

வீரர்கள் உற்சாகமுடன் பழங்களை அழித்துக் கொண் டிருக்கும்போது, வீரசிம்மன் மனம் எப்படி தப்பிப் போவது என்று சிந்தனை செய்து கொண்டிருந்தது. சட்டென்று ஒரு யோசனை தோன்றியது. "குதிரைகள் ரொம்ப தாகமாக இருக் கின்றன. தண்ணீர் காட்டி வரட்டுமா!" என்றான் வீரசிம்மன் தலைவனிடம். தலைவனும் அலட்சியமாக, "ஜாக்கிரதை யாகப் போய் வா, அதோ அந்தக் கறுப்புக் குதிரை அடங்கவே மாட்டேன் என்கிறது" என்று எச்சரிக்கை செய்தான்.

வீரசிம்மன் குதிரைகளை அவிழ்ப்பதுபோல அந்தப்

www.tamilnesan1981.blogspot.in

பெண்ணிடம் சென்று, "தயாரா இரு. நான் வந்ததும் நான் சொல்வதுபோல செய்" என்று ரகசியமாகச் சொல்லிவிட்டு கறுப்புக் குதிரையைத் தவிர— மற்றக் குதிரைகளைத் தண்ணீருக்குக் கொண்டு போவதுபோலக் கொண்டுபோய், ஒரு மறைவான இடத்தில் கட்டிவிட்டுப் பிறகு கறுப்புக் குதிரையிடம் வந்தான். அது இவனிடம் பழக்கப்பட்டதுபோல இவனை ஒன்றுமே செய்யவில்லை. அதை அவிழ்ப்பதுபோல அந்தப் பெண்ணின் கட்டுக்களை அவிழ்த்து விட்டு, குபீரென்று குதிரைமீது தாவி ஏறினான். அவளையும் ஏற்றிக் கொண்டு மின்னல் வேகத்தில் பறந்தான். வீரர்கள் கூச்சலிட்டனர். ஆனால் அவர்கள் தங்கள் குதிரையைத் தேடி ஏறி வருவதற்குள் வீரசிம்மன் வெகுதூரம் போய்விட்டான்.

"சரியான தந்திரம் செய்தாய். எங்கே போவதாக உத்தேசம்?" என்றாள் அவள்.

"எங்கே என்று எனக்கே தெரியாது! ஆனால் மாணிக்கத்துக்குத் தெரியும்."

"மாணிக்கமா! அது யார்?"

"இந்தக் குதிரையின் பெயர்தான்! எங்கள் சேனாதிபதியின் குதிரை இது. இதற்கு வழி தெரியும். இது எங்கு கொண்டு விடுகிறதோ அங்கே" என்று சொல்லும்போதே மாணிக்கம் 'டக்'கென்று நின்று வீரகர்ஜனை செய்தது. மறு நிமிஷம் பின்னால் எதிரிக் குதிரைகளின் காலடி சப்தமும் கேட்டது.

"ஐயோ! அவர்கள் துரத்துகிறார்கள். சீக்கிரம், சீக்கிரம்" என்று துடித்தாள் அந்தப் பெண்.

ஆனால் வீரசிம்மன் புன்முறுவல் செய்தான். "இனி ஓட வேண்டாம்" என்றான். அவளுக்குக் கோபம் தாங்கவில்லை. "நீ ராஜபுத்திரன் இல்லை, துரோகி" என்று சொல்லிக் கீழே குதித்தாள். அதற்குள் அவர்களை முகலாயர் நெருங்கி விட்டார்கள்.

"டே பயலே, எங்களை ஏமாற்றிவிட்டா ஓடப் பார்த்தாய்?" என்றான் தலைவன். "இல்லையே, உங்களைச் சூழ்ந்து ராஜபுத்திரர்கள் வளைத்துக் கொண்டிருந்தார்கள். அதையறிந்து உங்களைக் கிளப்பத்தான் இப்படிச் செய்தேன்.

www.tamilnesan1981.blogspot.in

நான் இப்படி ஓடி வராவிட்டால் நீங்கள் இவ்வளவு சீக்கிர மாகக் கிளம்பி வந்து எங்கள் வலையில் விழுந்திருக்க மாட்டீர்களே! அதோ பாருங்கள்" என்றான்.

முகலாய வீரர்கள் திரும்பிப் பார்த்தனர். அவர்களைச் சுற்றி ராஜபுத்திரரின் பெரும் படை வளைத்துக் கொண் டிருந்தது. முகலாயர் நடுநடுங்கிவிட்டனர். தாங்கள் ஏமாற்றப் பட்டு விட்டதை அறிந்தபோது ஆத்திரம்தான் வந்தது அவர் களுக்கு. வீரசிம்மன் முகலாயன் முகத்தைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தான்.

அப்போது ராஜபுத்திரப் படை நடுவிலிருந்து, "சபாஷ், வீர சிம்மா ரொம்ப சுலபமாக முகலாயர்களை எங்கள் வலைக் குள்ளேயே கொண்டு வந்துமாட்ட வைத்துவிட்டாயே! சண்டைகூட போடாமல் இவ்வளவு பேரையும் கைதியாக்கி விட்டோம்" என்று ஆனந்தத்துடன் வீரசிம்மனை நோக்கி வந்தார் மதகநாட்டு மன்னன் மகிபாலன்.

"மகராஜ், அதுமட்டுமல்ல. நேற்று இவர்கள் பிடித்துச் சென்ற என் குதிரையைக்கூட அல்லவா கொண்டு வந்து விட்டான் வீரசிம்மன்" என்று மகிழ்ச்சியடைந்தார் சேனாதிபதி சித்ராங்கதர். வீரசிம்மனைப் பழித்துக் குதித்த பெண், தன்னைக் காப்பாற்றியவன் ஒரு ராஜகுமாரன் என்பதை அறிந்தபோது அவளுக்கு வியப்பும் ஆனந்தமும் தாங்க வில்லை.

"உங்களை எல்லாம் புதர் மறைவில் பார்த்ததினால்தான் மாணிக்கமும் இங்கேயே நின்றிருக்கிறது அப்பா" என்று குதிரையிலிருந்து கீழே குதித்த வீரசிம்மன், அதை அன்பு டன் தட்டிக் கொடுத்தான். அருகில் வியப்பினால் ஸ்தம்பித் துப் போய் நின்றுகொண்டிருந்த அந்தப் பெண்ணை கண்டதும் "அப்பா! என் உயிரைக் காப்பாற்றியது இவள் தானப்பா!" என்றான்.

www.tamilnesan1981.blogspot.in



''இன்றைக்கு உங்களுக்கு ஒரு சோகமான கதை சொல்லப் போகிறேன். இளகிய மனமுள்ளவர்கள் தூங்கப் போகலாம்'' என்றார் அப்பா.

இரண்டொரு குழந்தைகள் அரைமணிநேரத்தோடு வெளியேறினார்கள். மற்றவர்கள் ஆவலோடு சோகக் கதையைக் கேட்க சுறுசுறுப்பாக நிமிர்ந்து உட்கார்ந்தார்கள்.

# 11. எதிரொலியின் கதை

ஒரே ஒரு ஊரிலே ரொம்ப ரொம்ப ரொ...ம்... ப காலத்துக்கு முன்னாலே ஒரு ராஜகுமாரி வசித்து வந்தாள். அவள் பெயர் மோகனா. மோகனா பெயருக்கேற்ப ரொம்ப அழகி. தங்க மேனி; பட்டு போன்ற உடல். சதா சிரித்துக் கொண்டே இருப்பாள். ராஜா அவளை செல்லமாக வளர்த்து வந்தார். மோகனாவிடம் ஒரே ஒரு கெட்ட குணம் மட்டும் இருந்தது. என்ன தெரியுமா? சதா பேசிக் கொண்டே இருப்பாள். பிறருக்கு வேதனையாக சளசளவென்று பேசுவாள். நிறுத்தவே மாட்டாள். அவள் அப்பா இதற்காக அவளை எவ்வளவோ தடவை கண்டித்திருக்கிறார். ஆனால் மோகனாவின் பழக்கம் மாறவில்லை.

ஒரு சமயம் அரண்மனைக்கு ஒரு முனிவர் வந்திருந்தார். அவர் மகா பெரியவர். அரசர் அவரை வரவேற்று உபசரித்ததோடு, சிலநாள் அரண்மனையிலேயே தங்கி இருக்கும்படி கேட்டுக் கொண்டார். அவருக்கு நந்தவனத்தில் தனியாக ஒரு இடம் அமைத்துக் கொடுத்து, மோகனாவையும் அவருக்குத் தொண்டு செய்ய நியமித்தார். மோகனாவும் முனிவர் மனம் கோணாமல் அவருக்குத் தேவையானதைச் செய்து வந்தாள். ஆனால் அவளால் பேசாதிருக்க முடியவில்லை. இது முனிவருக்குக் கஷ்டமாக இருந்தது. மோகனா அவரிடம் எதைப் பற்றி

www.tamilnesan1981.blogspot.in

யாவது பேசிக்கொண்டே இருந்தாள். ஒருநாள் முனிவருக்கு ரொம்ப கோபம் வந்துவிட்டது. அன்று மோகனா அவர் நிஷ்டை கலையும்படி பேசிவிட்டாள்.

"நீ பிறருக்குத் துன்பம் தருகிறபடியால்— இனி நீ நாட்டில் இருக்கக்கூடாது... பக்கத்திலுள்ள மலைக்காட்டிற்கு ஓடிப்போ. அது மட்டுமல்ல, இனி நீ நினைத்ததைப் பேச முடியாமல் போகக் கடவது. பிறர் பேச்சின் கடைசி வார்த்தையை மட்டும் திருப்பிச் சொல்லிக் கொண்டு அலைந்து கொண்டிரு. உன்னை யாராவது ஒருவன் அன்புடன் மணந்து கொண்டால்தான் சாபம் தீரும்" என்று சபித்துவிட்டார்.

மோகனாவின் வாய் சட்டென்று அடைத்துவிட்டது. முனிவரின் கடைசி வார்த்தையான, "தீரும், தீரும்" என்பதை இரண்டுதரம் சொன்னாள். மேலே பேச நினைத்ததைப் பேச வரவில்லை.

பாவம்! மோகனா கண்களில் நீர் வடிய முனிவர் பாதங்களில் விழுந்தாள். அவர், "சாபம் கொடுத்தால் கொடுத்தது தான்; மாற்ற முடியாது" என்றார் கண்டிப்பாக.

மோகனாவும், "முடியாது... முடியாது" என்று சொல்லிக் கொண்டே காட்டை நோக்கி ஓடினாள். அங்கிருந்து மலைச் சாரலில் சுற்றிக் கொண்டே இருந்தாள் அழகி மோகனா.

ஒருநாள் மோகனா மலையுச்சியில் நின்றபடி கீழே உள்ள காட்டைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போது கீழே ஒற்றையடிப் பாதை வழியாக ஒரு இளவரசன் நடந்து வருவதைக் கண்டாள். உடனே மோகனாவிற்கு எப்படியாவது அவன் தன்னை மணக்கும்படி செய்யவேண்டும் என்று ஆசை உண்டாயிற்று.

உடனே கீழே இறங்கிச் சென்று— அவன் கண்களில் படாமல்— அவனுக்குப் பின்னாலேயே மறைந்து மறைந்து அவனைப் பின் தொடர்ந்தாள். இளவரசனும் தன்னை யாரோ பின் தொடருவதாக சந்தேகமடைந்தான். ஆனால் யாரும் புலப்படவில்லை. அதனால் பலமாக, "யாரது?" என்றான். மோகனாவும், "யாரது, யாரது" என்றாள். அவள் பேசக்கூடாது என்றுதான் எண்ணினாள். ஆனால் சாபப்படி அந்த வார்த்தைகள் அவளையறியாமல் வெளிப்பட்டுவிட்டன.

"ஏன் ஒளிந்து கொண்டிருக்கிறாய் இப்படி?" என்றான் இளவரசன்.

www.tamilnesan1981.blogspot.in

"இப்படி இப்படி இப்படி" என்று ஓலமிட்டாள் மோகனா.

வியப்படைந்தான் இளவரசன், "இப்படி வா என் முன்னால்" என்றான் கோபமாக.

இனி மறைந்திருக்கக் கூடாதென்றுணர்ந்த மோகனா, "முன்னால் முன்னால்" என்று சொல்லிக் கொண்டே அவன் முன் வந்து நின்றாள்.

அவளைக் கண்ட இளவரசனுக்குக் கோபம்தான் வந்தது. தன்னை அவள் கேலி செய்வதாக எண்ணினான். அதனால் மோகனாவை வெறுப்புடன் பார்த்தான். மோகனா அவன் கால்களில் விழுந்து கெஞ்சினாள். அவளால் பேச முடியவில்லையாதலால்– உண்மைக் காரணத்தைச் சொல்ல முடியவில்லை.

இளவரசன் அவளை உதறித் தள்ளிவிட்டு நடந்தான்.

வெகு தூரம் நடந்து சென்ற இளவரசன் ஒரு தெளிந்த நீரோடையின் கரையில் இளைப்பார உட்கார்ந்தான். ஓடையைச் சுற்றி மரங்கள் வளர்ந்திருந்தன. அந்த இடம் ரொம்ப ஆனந்தமாக இருந்தது. அவனோடு வந்த மோகனாவும் சிறிது தூரத்தில் அவனது அன்புக்கு ஏங்கியபடி உட்கார்ந்திருந்தாள். அவன் அவளைக் கவனிக்கவே இல்லை.



www.tamilnesan1981.blogspot.in

ஓடையில் தண்ணீர் குடிக்கக் குனிந்த இளவரசன் ஓடைக்குள் ஒரு அழகிய முகம் தெரிவதைக் கண்டு வியப் படைந்தான். சுருண்ட கருங்குழல்; அழகிய மூக்கு; வண்டு போன்ற கண்கள். அவ்வளவு அழகிய உருவத்தை அவன் கண்டதே இல்லை. அது அவனுடைய உருவத்தின் நிழல் தான் என்பது அவனுக்குத் தெரியாது. அந்தக் காலத்தில் இப்போது உள்ளது போல கண்ணாடி கிடையாது. ஆனால் தன் நிழலைக் கண்ட இளவரசன் அது யாரோ ஜலதேவதை என்று எண்ணி அதன்மேல் காதல் கொண்டுவிட்டான். "மேலே வா" என்று அழைத்தான். அந்த உருவத்தின் உதடு கள் அசைந்தன. ஆனால் அருகில் இருந்த மோகனாதான், "வா... வா... " என்று கத்தினாள். இளவரசன் மோகனாவை மறந்தேவிட்டான். அதனால் கை நீட்டி நிழலுருவத்தை அழைத்தான். இவன் கை பட்டதும் தெளிந்த நீர் கலங்கவே உருவம் அழிந்துவிட்டது. அவள் தன்னோடு விளையாடு கிறாள்; ஓடிவிட்டாள் என்று எண்ணினான் இளவரசன்.

அன்று முழுவதும் ஓடைக்கரையிலே உட்கார்ந்திருந் தான். ஓடைநீர் தெளிந்ததும் உருவம் வரும்; இளவரசன் 'வா, வெளியே' என்று கெஞ்சுவான். ஆனால் பலன் இருக்காது. இரவு வந்தது; நிலா காய்ந்தது; நிலா வெளிச்சத்திலும் உருவம் நிழலாடும். இளவரசன் தன் நிழலையே வருந்தி வருந்தி அழைப்பான். அது வராது. இப்படியே பல நாள் ஓடைக்கரையில் காத்துக்கிடந்த இளவரசன் அன்ன ஆகாரம் இல்லாமல் நாளுக்கு நாள் இளைத்து பலமிழந்து கொண் டிருந்தான். மோகனாவும் அவனை விட்டு நகரவில்லை. அவன் இப்படி இளைத்து இறக்கும்நிலை அடைவதைக் கண்ட அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது. ஆனால் அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஒருநாள் இளவரசன் ஓடைக்கரையிலேயே இறந்துவிட்டான். இறக்கும் போதுகூட தண்ணீரில் தன் நிழலைப் பார்த்துக்கொண்டே தான் இறந்தான். அவன் இறந்ததும் மோகனாவிற்குத் துக்கம் தாங்கவில்லை. அவனை அன்புடன் அணைத்துக்கொண்டு கதறினாள். பிறகு அவனை ஓடைக்குள் தள்ளிவிட்டு மிகுந்த வருத்தத்துடன், "யாராவது என் அருகில் வந்து பேசினால்— அவர்கள் பேச்சின் கடைசி வார்த்தையை ஒலமிடும் நான் இனி யார் கண்ணிலுமே படுவதில்லை" என்று மலைச் சரிவை நோக்கி ஓடினாள். பலநாள் மலைகளில் ஒளிந்து

www.tamilnesan1981.blogspot.in

சுற்றித் திரிந்தாள். இளவரசன் இறந்ததி லிருந்து அவள் உணவைக்கூட மறந்துவிட்டாள். அதனால் மோகனாவும் சில நாளில் இறந்தும் போனாள்.

அவள் இறந்தாலும் அவள் ஆவி இன்றைக்கும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. மலைப்பாங்கான இடத்தில் போய் நீங்கள் யாராவது கத்தினால், தூரத்தில் யாரோ உங்கள் வார்த்தைகளைத் திருப்பிச் சொல்வதைக் கேட்பீர்களே, அந்த எதிரொலிதான் மோகனா!

www.tamilnesan1981.blogspot.in



‘‘கிறிஸ்துமஸ் பண்டிகை வரப்போறது போலிருக்கே? எங்கே தாமஸைக் காணல்லே’’ என்று கேட்டார் அப்பா.

‘‘அவன் பண்டிகைக்குப் பரிசுப் பொருள்கள் வாங்க அவன் ‘டாடி’யோட கடைவீதிக்குப் போயிருக்கான். கொஞ்சம் தாமதமானாலும் கதை கேட்க வந்துவிடுவதாக-’’

அதோ வந்தே விட்டான்...’’ என்றார் அப்பா. பிறகு “தாமஸைப் போலவே மைக்கேலும் கிறிஸ்துமஸ் பண்டிகையை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தான்’’ என்றார்.

‘‘அது யார் மைக்கேல்?’’ என்று கேட்டான் தாமஸ்.

‘‘இன்றையக் கதையின் நாயகன்!’’ என்று கூறிவிட்டுக் கதை சொல்ல ஆரம்பித்தார்.

## 12. ஈகையே இன்பம்

மார்கழி மாதத்திலே மழை பெய்யுமோ? பெருமழை. இரண்டு நாளாக விடவே இல்லை. ஊதல் காற்று உடலைக் குறுக வைத்தது. மைக்கேலுக்கு அது பண்டிகை மாதம். கிறிஸ்துமஸுக்கு இன்னும் ஒரு வாரங்கூட இல்லையே. வானத்தை அண்ணாந்து பார்த்துப் பெருமூச்சுவிட்டான். இந்தப் பண்டிகையை அவன் எத்தனை நாள்களாக ஆசையோடு எதிர் பார்த்திருந்தான்? இப்படிக் கொட்டுகிறதே மழை.

‘கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தைப் பாழாக்கிவிடுமோ இந்த மழை? இந்த அடைமழை ஆகஸ்ட் மாதத்தில் பெய்தால் என்னவாம்? டிசம்பரில் பனிதான் பெய்யும் என்பார்கள். இந்த வருஷம் ஏனோ இப்படி வானம் பொத்துக் கொண்டது போலக் கொட்டுகிறது. கடலில் ஏதோ காற்றாம். அமுத்த

www.tamilnesan1981.blogspot.in

மாம். இதெல்லாம் யாருக்குப் புரிகிறது?'—இப்படி எண்ண மிட்ட படியே ரொட்டிப் பொட்டலத்தைச் சட்டைக்குள்ளாக நுழைத்துக்கொண்டு மழையைக் கிழித்துக்கொண்டு வீட்டை நோக்கி ஓடினான் மைக்கேல்.

மதம் மாறிய கிறிஸ்துவர்கள் அவர்கள். அந்த மலைப் பகுதி ஊரில் இருந்த ஒரு பாக்டரியில் அவன் அப்பா ஒரு தொழிலாளி. மைக்கேலின் அம்மா இறந்ததும் அவனுக்கும் அப்பாவுக்கும் உதவியாக அவன் பாட்டி அவர்களுடன் வசித்து வந்தாள். பாட்டிக்குக் கண்பார்வை போய்விட்டது, முதுமையினால். ஆனால், எல்லாக் காரியத்தையும் கை நிதானத்திலேயே செய்துவிடுவாள்.

கதவின் ஓசை கேட்டே பாட்டி குரல் கொடுத்தாள். "யாரது? மைக்கேலா? 'பிரட்' வாங்கி வந்தியா? சரி. பொழுதை வீணாக்காமப் படி. வெறுமனே பாடிக்கிட்டி ருக்காதே. சீட்டி அடிக்காதே!"

மைக்கேலுக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் சிரிக்க வில்லை. அவனுக்குப் பாட்டென்றால் சாக்லேட் மாதிரி. ஏதாவது டியூனை ஹம்மிங் செய்து கொண்டோ— விசில் அடித்துக் கொண்டேதான் பாடங்களைப் படிப்பான். அப்படி யொரு சங்கீதப் பைத்தியம். அப்படிப்பட்டவனைப் பாடாதே என்கிறாளே இந்தப் பாட்டி. மைக்கேலுக்கு வெகு நாளாக ஓர் ஆசை. இந்தப் பண்டிகையின்போது அப்பாவிடம் நச்சரித்து எப்படியாவது ஒரு 'மௌத் ஆர்கான்' வாங்கிவிட வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தான். ஞாயிற்றுக்கிழமை தோறும் சர்ச் மைதானத்துக்கு வரும் டேவிட்டின் தள்ளு வண்டியில் பளபளப்பான ஒரு மௌத் ஆர்கானைப் பார்த்து வைத்திருந்தான் மைக்கேல். ஆறு ரூபாயோ ஐந்து ரூபாயோ தான் அது. அதை நினைக்கும்போதே அவன் நெஞ்சு ஜில் லென்று ஆகியது. உதடுகளும் விரல்களும் பரபரத்தன. அதை வாங்கிவிட்ட மாதிரியும்— உதடுகளுக்கிடையே பொருத்திக் காற்றை இழுத்து இனிமையாக மீட்டி, நீட்டி ஒலி எழுப்புவது போலவும் பாவனை செய்து மகிழ்ந்து போனான்.

அப்போது பாட்டியின் குரல் கேட்டது. "மைக், பண்டி கையைப் பற்றி அப்பா உன்னிடம் பேச வேண்டுமென்றார். இந்த வருஷம் பாக்டரியில் போனஸ் கிடையாதாம்.

www.tamilnesan1981.blogspot.in

பண்டிகை கேக், புரூட்ஸ் இதெல்லாம் வாங்குவதே சிரமம் தான். ஆனால் உன் அப்பா எப்படியும் உனக்கு அதெல்லாம் இல்லாமல் வைக்கமாட்டார். ஆனால் பரிசு என்று எதுவும் அவரைக் கேட்டு நீ தொந்தரவு செய்யாதே, தெரிந்ததா?" என்றாள். மைக்கேலுக்குத் தொண்டையை அடைப்பது போலிருந்தது. "பாட்டி! மௌத் ஆர்கான் வாங்கித்தரச் சொல்லணும்னு எத்தனை ஆசையாயிருந்தேன் நான்? டேவிட்டோட தள்ளு வண்டிக்கடையிலே பார்த்துப் பார்த்து விலை கேட்டு வைச்சிருந்தேன்." ஏக்கப் பொருமலுடன் கூவினான் மைக்கேல்.

அவனுக்கு அழுகையாக வந்தது. "ஏன் பாட்டி, உனக்கு நீ... எதுவுமே வேணும்னு நினைக்க மாட்டியா? உனக்குன்னு ஆசைகளே கிடையாதா?" என்று ஏதோ தாபத்துடன் கேட்டான்.

"ஆசை இல்லாத மனுசங்க யாருப்பா? எனக்குக்கூட ஆசைதான். என்னுடைய தோத்திரப் புத்தகத்தை(பைபிள்) கைகளிலே அணைத்து அழுத்திப் பிடிச்சு வைச்சுக் கணும்னு."

"பின் ஏன் அதை அந்த மேரி மாமிக்குத் தானமாகக் கொடுத்தியாம்?"

"பாவம், அவளும் அவள் புருசனும் தங்களோட ஒரே அருமைக் குழந்தையை இழந்த துக்கத்திலே இடிஞ்சு போயி ருந்தாங்க. அவளுக்கு அது தேவையாக இருந்தது, கொடுத்தேன்."

"கொடுக்காட்டியும்கூட உன்னாலேதான் படிக்க முடியாதே."

"படிக்க முடியாவிட்டால் என்ன? பைபிள் என் கைகளிலே இருந்தாலே போதுமே!" மைக்கேலுக்கு இந்த வாதம் புரிய வில்லை. "சரிசரி... அப்பாவிடம் நான் ஒண்ணும் பரிசு கொடுக்கச் சொல்லிக் கேக்கலை, போதுமா?" என்று கூறிய படி சீட்டியடித்துக் கொண்டே நகர்ந்தான். இருந்தாலும் அவன் உள்ளத்தில் உற்சாகம் இல்லை.

பண்டிகைக்குப் புதிய ஆடைகள் வாங்குவதற்காக அப்பாவுடன் கடைவீதிக்குப் போயிருந்தான் மைக்கேல். இன்னமும் மழை ஓயவில்லை. கிறிஸ்துமஸுக்கான இடை வெளி குறைந்துகொண்டே வந்தது. கடையிலிருந்து திரும்பிக்

www.tamilnesan1981.blogspot.in

கொண்டிருந்தபோது அவன அப்பா கூறினார்: "மைக்கேல், உன்னோடு ஒரு விஷயம் பேச வேண்டும்."

"எனக்குத் தெரியும். பாட்டி சொன்னாள். இந்த வருஷம் கிறிஸ்துமஸுக்குப் பரிசு ஏதும் கிடையாது. அதுதானே? தேவையில்லை."

தன் தகப்பனாரின் பிடி தன் தோளில் இறுகுவதை உணர்ந்தான் மைக்கேல். ஆனால், கொஞ்சநேரம் வரை அவர் பேசவில்லை. அவன் மனம் தடதடத்தது.

"உன் பாட்டி சொன்னாள். நீ ஒரு மௌத் ஆர்கானை டேவிட்டின் வண்டியில் பார்த்து வைத்திருப்பதாக..."

"அது சின்னக் குழந்தையோட விளையாட்டுச் சாமான். எனக்கொன்றும் வேண்டாம்" சாதாரணமாய் இருப்பது போல் பாவனை செய்தான் மைக்.

சிறிது நேர மௌனத்துக்குப் பிறகு அவன் அப்பா கூறினார்: "மைக்கேல்! நீ தண்ணீர் ஊற்றி வளர்த்தது த்ானே நம் தோட்டத்து முருங்கை மரம்? அதன் காய்களை, கறிகாய்க்கடைக் கேசவனுக்குப் போன வாரம் கொடுத்தேன். அதற்கு அவன் ஆறு ரூபாய்கள் கொடுத்தான். அவை உன் பணம். ஆகவே, உன் கிறிஸ்துமஸ் பரிசை உன் பணத்தில் நீயே வாங்கிக் கொள்ளலாம்; கவலைப்படாதே." மைக் கேலுக்கு நெஞ்சு பொங்கியது. மகிழ்ச்சியால் மலர்ந்த விழி களால் — மௌனமாக அப்பாவைப் பார்த்தான்.

மழை விடவேயில்லை. ஆற்றிலே இரு கரையையும் தொட்டுக் கொண்டு ஓடியது வெள்ளம். இந்த மழையில் வண்டியைத் தள்ளிக்கொண்டு டேவிட் வரவே போவதில்லை. இதை எண்ணும்போது மைக்கேலுக்கு மழையின்மீது ஆத்திரமாக வந்தது. கிறிஸ்துமஸுக்கு இன்னும் இரண்டே நாள்கள்தாம் இருந்தன. அன்று அவன் அப்பா தொழிற் சாலையிலிருந்து சீக்கிரமே திரும்பிவிட்டார். மழைக் கோட்டைக் கழற்றித் தண்ணீரை உதறிக்கொண்டே, "மைக், தன் வண்டியோடு டேவிட் சந்தைப் பேட்டை மைதானத்தில் இருக்கானாம். நீ சுற்று வழியில் போறதானா— ரெட்டியார் பாலத்து வழியாய்ப் போய் இருட்டறதுக்குள்ளே திரும்பலாம்" என்றார். அந்தக் கிராமத்துக்கு டேவிட்டின் வண்டிதான் டிபார்ட்மெண்டல் ஸ்டோர். அவன் வண்டியில் குழந்தை

www.tamilnesan1981.blogspot.in

களுக்கான எவ்வளவோ அபூர்வமான சாமான்களெல்லாம் இருக்கும். குடும்பம் நடத்த வேண்டிய சாமான்களுக்கு அந்தக் கிராமத்தில் கடைகள் உண்டு. ஆனால், குழந்தை களுக்கான பொருள்களுக்கு டேவிட்டின் வண்டியைத்தவிர கடை ஏதும் கிடையாது. அதன் வருகையை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள் குழந்தைகள்.

துள்ளி எழுந்தான் மைக்கேல். அவன் பார்த்துப் பார்த்து வைத்த மௌத் ஆர்கான் அவனுக்கே சொந்தமாகப் போகிறது.

"ஜாக்கிரதை!" எச்சரித்தார் அவன் அப்பா. "ஆற்றை நீந்திக் கடந்து போகக்கூடாது. தெரிந்ததா? ஏசு மீது ஆணை யாக, என்ன?"

"சரிப்பா. கடவுள் சாட்சியாக" என்று கூவியபடியே வீட்டை விட்டு வெளியேறி மழையினுள் புகுந்து மறைந்தான் மைக்கேல்.

அது சுற்றுப்பாதைதான். அப்பாவுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றினான் அவன். சந்தைப்பேட்டை மைதானத்தை அடையும்போது அந்த மழையிலும் அவனுக்கு மூச்சு இறைத்தது. அதைக் கண்ட டேவிட் சிரித்தான். "மைக்கேலு! ஏன் இப்படி அவசரம்? நான் இன்னும் ரெண்டுநாள் இங்கேயேதான் காம்ப். மழை ஓயவில்லையே!"

"என் மௌத் ஆர்கான்..." மூச்சு வாங்க, முகத்து நீரைத் துடைத்தபடி கேட்டான் மைக்கேல் "அதை யாருக்கானும் வித்துட்டியா?"

"உன்னோடதாச்சே, விப்பேனா...? இதோ!" ஈரக்கை களால் அதை வாங்கிக் கொள்ளவே மனமில்லை மைக் கேலுக்கு. மழைத்துளி பட்டுவிடாமல் சட்டென்று அதைத் தன் டிராயர் பைக்குள் திணித்துக் கொண்டு. தயாராக வைத்திருந்த பணத்தை எண்ணி டேவிட்டிடம் கொடுத்தான். "உங்கிட்ட பைபிள் புத்தகம் இருக்கோ?" என்று கேட்டான். டேவிட் தன் வண்டியின் அடியிலிருந்த ஒரு பெட்டியைக் காட்டி, "இருக்கு. கைக்கு அடக்கமான உயர்ந்த பதிப்பு. தோல் அட்டை போட்டது. அதுவும் ஆறு ரூபாதான். வேணுமா?"

"இல்லே, கேட்டேன்" என்று கூறியபடியே மறுபடி மழையை ஒதுக்கிக் கொண்டு ஓடலானான் மைக்கேல்.

www.tamilnesan1981.blogspot.in

எவர்சில்வர் தகட்டினால் மூடி இருந்த பளபளக்கும் அந்த மௌத் ஆர்கானின் அழகை, அமைப்பைப் பாராட்டினார் அவன் அப்பா. பாட்டி விரல்களால் அதன் வழுவழுப்பைத் தடவிப் பார்த்தாள். பிறகு அவனிடமே கொடுத்தாள். மைக்கேல் உடனே அதைத் தன் உதடுகளுக்கிடையே பொருத்தி இசை எழுப்புவான் என்றே அவர்கள் எண்ணினார்கள். ஆனால், அவன் அப்படிச் செய்யவில்லை. "நாளைக்குத்தானே பண்டிகை? பண்டிகைக்கு முன் மாலை (கிறிஸ்துமஸ் ஈவ்) அன்று பாடிக் காட்டுகிறேன்" என்று அதைக் கொண்டு போய்ப் பத்திரப்படுத்தி வைத்துவிட்டான்.



மறுநாள் பொழுது விடிந்தது. இன்னும் மழை பெய்து கொண்டுதானிருந்தது. உற்சாகமில்லாத சூழ்நிலை. மைக்கேலின் அப்பா காலையிலேயே எழுந்து எங்கோ போயிருந்தார். காலை ஆகாரத்தின்போது பாட்டி சொன்னாள்:

"இன்று நள்ளிரவில் மைக்கின் மௌத் ஆர்கான் இசைதான் பண்டிகைக்கு எங்களையெல்லாம் எழுப்பப் போகிறது, இல்லையா மைக்? நீ விரும்பியபடியே உனக்கு உன் பரிசு கிடைத்ததில் எனக்கு ரொம்ப மகிழ்ச்சி" என்றாள் பாட்டி.

சட்டென்று மைக்கேலின் உள்ளத்தில் ஏதோ ஒன்று புரண்டு கொடுத்தது. "பட்டி. நான் கொஞ்சம் வெளியே போய் விட்டு வரேன். அப்பா கேட்டால் சொல்லு."

"எங்கேப்பா இந்த மழையிலே போகப் போறே?" பாட்டிக்குப் பதிலாகக் கதவு படீரென்று மூடும் ஒலிதான் கேட்டது. மைக்கேல் மழையில் ஓடிக்கொண்டிருந்தான்.

அந்த ஆறு அப்படி ஒன்றும் பெரிய ஆறு அல்ல. ஆனால் ஆழமானது. அந்த அடைமழையில் அது ஆத்திரம்

www.tamilnesan1981.blogspot.in

கொண்ட ராட்சசனைப் போல வெறிகொண்டு ஓடிக் கொண்டிருந்தது. இந்த வெள்ளத்தில் ரெட்டியார் பாலங்கூட மூழ்கியிருக்குமே! மைக்கேலின் கண்கள் சட்டென்று ஒளி விட்டன. சற்றுத் தூரத்தில் ஒரு பெரிய ஆலமரம் வேரோடு பெயர்ந்து ஆற்றின் குறுக்கே விழுந்திருந்தது. அதன் கிளைகள் மறுகரையைத் தொட்டுக் கொண்டு இருந்தன. மைக்கேல் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டான். அந்த மரத்தின் வழியாக ஆற்றைக் கடப்பது அவன் திட்டம். 'நான் அப்படி ஒன்றும் கனமில்லையே!' மரமும், பாதி மூழ்கியும் பாதி நீரின் மேலாக மிதந்தபடியும் ஆடிக் கொண்டிருந்தது. மெள்ள மெள்ளக் கிள்ளகளைப் பற்றிக் கொண்டு அடி அடியாக முன்னேறி அக்கரையை அடைந்துவிட்டான் மைக்கேல்.

போன காரியத்தை முடித்துக் கொண்டு திரும்பிக் கொண்டிருந்தான் வேக வேகமாக. தூரத்திலேயே அந்த மரத்தைப் பார்த்துக் கொண்டான். 'நல்ல வேளை. அது அப்படியே அங்கேயே இருக்கிறது. வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படவில்லை. மகிழ்ச்சியோடு அந்தப் படுகைப் பாதை யில் ஓடி வந்தான் மைக்கேல். அதே சமயம் சொல்லி வைத்தாற்போல்— அவனுக்காகவே காத்திருந்ததுபோல— எதிர்க் கரையில் தடதடவென்று ஓசை கேட்டது. அந்தப் பெரிய ஆலமரத்தின் வேர்ப் பிடிப்பு, வெள்ள நீரினால் அரிக்கப் பட்டு—மண்— சரிந்து ஆற்றின் குறுக்காகக் கிடந்த அத்தனை பெரிய மரம், சடசடவென்று நீரினுள் மூழ்கி, ஆற்றுப் போக்கோடு மிதந்து சென்றது. மைக்கேல் அப்படியே பிரமை பிடித்தவன்போல் அக்கரையில் நின்றான். 'இன்னும் கொஞ்ச நேரம் அந்த மரம் அங்கிருக்கக் கூடாதா? 'ஹோ' என்ற இரைச்சலுடன் ஆற்று வெள்ளம் அவனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே ஓடிற்று.

வீட்டுக்குள் நுழைந்தபோது மைக்கேலின் அப்பா அவனை எதிர்பார்த்து அவனுக்காகவே காத்திருந்தார்.

"எங்கே போயிருந்தாய்?" அவர் குரல் மிகமிக அமைதி யாக ஒலித்தது. அந்த அமைதியே பயங்கரமாகவும் இருந்தது.

"சந்தைப்பேட்டை மைதானத்துக்கு..." அப்பாவின் கால் களைப் பார்த்தபடி பதில் கூறினான் மைக்கேல்.

www.tamilnesan1981.blogspot.in

"ஆற்று வெள்ளத்தை— அதன் குறுக்கே விழுந்துகிடந்த மரத்தின் மூலமாகத்தானே கடந்து போனாய்?"

"ஆமாம்..."

"எனக்குக் கொடுத்த வாக்கை நீ காப்பாற்றவில்லை. கர்த்தர்மீது ஆணையிட்டுக் கூறினாய்; இல்லையா?"

மைக்கேல் மௌனமாக பிளாஸ்டிக் உறையிட்ட ஒரு பாக்கெட்டைத் தன் டிராயர் பையிலிருந்து எடுத்து அப்பா விடம் நீட்டிக்கொண்டே "டேவிட் வண்டியைக் கிளப்பிக் கிட்டுப் போயிட்டா என்ன செய்யறதுன்னு..." என்றான்.

அவன் நீட்டிய பொருளை வாங்கி அதையே சில விநாடிகள் பார்த்துக் கொண்டிருந்தார் அவன் அப்பா. தன் மௌத் ஆர்கானைக் கொடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக இதை வாங்கிவரப் போயிருக்கிறான் தன் மகன் என்பதைப் புரிந்து கொள்ள அவருக்கு அதிக நேரமாகவில்லை. அவர் கண்களில் நீர் திரளலாயிற்று. ஆனாலும் கரகரத்த குரலில் "இனிமேல் இம் மாதிரி, சொன்னசொல் தவறி நடந்தா யானால் உன்னைக் கடுமையாகத் தண்டிப்பேன்" என்றார், அந்தப் பாக்கெட்டை அவனிடம் திருப்பிக் கொடுத்துக் கொண்டே.

அன்று மாலையில் அலங்கரிக்கப்பட்ட கிறிஸ்துமஸ் மரத்துக்கு அருகே மைக்கேலின் பாட்டி நாற்காலியில் அமர்ந் திருந்தாள், அப்பாவுந்தான். மைக்கேல், பாட்டியின் மடியில் அந்தப் பாக்கெட்டை வைத்தான். பாட்டி அதைச் சுற்றி யிருந்த பிளாஸ்டிக் உறையை அகற்றினாள். அவள் நடுங்கும் விரல்கள் அதனுள்ளிருந்த பொருளைத் தடவி உணர்ந்து கொண்டன. பார்வையற்ற அவள் கண்களிலிருந்து கண்ணீர் உருண்டு விழுந்து சிதறியது.

"மைக்கேல் கண்ணு... ரொம்ப நன்றி! உன்னோட மௌத் ஆர்கானிலிருந்து இசை எழுப்பவேயில்லையே என்று யோசித்துக் கொண்டிருந்தேன். அதன் காரணம் இப்போது புரிகிறது!"

"இது என்ன என்று உன்னால் சொல்ல முடியுமா, பாட்டி?" மைக்கேல் கேட்டான்.

"கர்த்தரின் உபதேசங்கள் உள்ள புத்தகம் இது... பைபிள்!" அவள் விரல்கள் ஒரு பக்கத்தைப் புரட்டின.

www.tamilnesan1981.blogspot.in

அதிலிருந்து படிப்பதுபோல் அவள் வாய் முனகிற்று.

"நான் குழந்தையாக இருந்தபோது..." மைக்கேல் தன் பாட்டியின் தோள் வழியாகப் பார்த்தான், பைபிளின் அந்தப் பக்கங்களில் உள்ள வரிகளை. அவன் பாட்டி கூறிக் கொண்டிருந்தாள். ஆனால், அவள் அதைப் பார்த்துப் படிக்கவில்லை. படிக்க முடியாது. பழக்கந்தான். அதில் உள்ள வரிகள் எல்லாம் அவளுக்கு அத்துபடி.

பாட்டி சொல்லிக்கொண்டே போனாள்: "... ஆகவே விசுவாசம், நம்பிக்கை, அன்பு இவை மூன்றிலும் உறுதியாக நில்லுங்கள். இவை மூன்றிலும் மிகமிக உயர்ந்தது அன்பு தான். பிறருக்குக் கொடுக்க வேண்டும் என்ற அன்புள்ளந் தான்."

மைக்கேலின் காதுகளில் எங்கிருந்தோ ஒலிக்கும் மௌத் ஆர்கானின் இசை, வெள்ளமாகப் பாய்வது போலிருந்தது. பிறருக்குக் கொடுத்து அவர்களின் மகிழ்ச்சியைக் கண்டு மகிழ் வதிலுள்ள ஆனந்தத்தை, ஈகையே இன்பம் என்பதை– தன் மகன் உணர்ந்து கொண்டுவிட்டான் என்ற பூரிப்பிலே மைக்கேலின் அப்பாவின் இதயம் நிறைந்தது.

www.tamilnesan1981.blogspot.in



*“மந்திர-மாந்தீரிகக் கதைகள் என்றால் உங்களுக்குப் பிடிக்குமே-இல்லையா? அதுவும் அரபு நாட்டுக் கதை என்றால் அமர்க்களமாக இருக்கும். இன்று உங்களுக்கு அப்படிப்பட்ட கதை ஒன்று சொல்லப்போகிறேன்” என்று கதை சொல்ல வந்தமர்ந்தார் அப்பா.*

*“நாங்களும் அதைக் கேட்கக் காத்திருக்கிறோம் அங்கிள்!” என்றார்கள் குழந்தைகள்.*

# 13. மந்திரப் பறவை

நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னே பாரசீக நாட்டிலே ஓர் ஏழை விறகுவெட்டி இருந்தான். அவனுக்கு இளமையும் அழகும் மிக்க ஒரு மனைவியும் அகம்மது, முகம்மது என்ற இரு பையன்களும் இருந்தார்கள். ஒரு நாள் விறகுவெட்டி மலைமீது சுள்ளிகளைப் பொறுக்கிக் கட்டி வைத்திருந்தான். அப்போது எங்கிருந்தோ பறந்துவந்த ஒரு விநோதமான பறவை அதன்மீது ஒரு முட்டை இட்டுவிட்டுப் போயிற்று. பொன் நிறமாக இருந்தது அது. அதைக் கொண்டுபோய் தன் மனைவியிடம் கொடுத்தான் விறகுவெட்டி. அது விலை மதிப்புள்ள முட்டை என்பதை உணர்ந்த அவன் மனைவி, அதை நகரில் உள்ள மாலிக் என்ற பெரிய வியாபாரியிடம் இருநூறு பொற்காசுகளுக்கு விற்று வந்தாள்.

தங்க முட்டைக்குக் கிடைத்த தனத்தைக் கண்டு மகிழ்ந்த விறகுவெட்டி. “இதைப்பற்றி யாரிடமும் எதுவும் சொல்லாதே. இது நம் ஏழ்மையைப் போக்க ஆண்டவன் நமக்கு மட்டுமே அளித்த உதவி” என்று கூறினான். மறு நாளும் அவனது விறகுக் கட்டின்மீது அதே பறவை வந்து, இன்னொரு முட்டையிட்டு விட்டுச் சென்றது. அதையும் அவன் மனைவி அதே வியாபாரியிடம் விற்றுப் பணமாக்கி வந்தாள்.

www.tamilnesan1981.blogspot.in

மாலிக்குக்குப் பேராசை ஏற்பட்டது. விறகு வெட்டியின் மனைவி, அந்த முட்டை கிடைத்தவிதம் பற்றிக் கேட்ட போது அவள் சொல்ல மறுத்துவிட்டாள். ஆகவே, மாலிக் என்ற அந்தச் செல்வந்தன் ஒரு சூனியக்காரியின் உதவியை நாடினான். அந்தக் கிழவி தன் மந்திரசக்தியினால் தங்க முட்டை கிடைக்கும் மார்க்கத்தை அறிந்து வியாபாரியிடம் கூறினாள். "அந்தப் பறவையினால் இதையும் விடப் பெரிய அதிர்ஷ்டமெல்லாம் பெறலாம். ஆனால் அத்தகைய பாக்கியத்தைப் பெற முதலில் அதைப் பிடிக்கவேண்டும். பின்பு அதைக் கொன்று சாப்பிட்டுவிட வேண்டும். அப்படி அதை உணவாகக் கொள்ளும்போது-அதன் தலை யாரிடம் இருக்கிறதோ, அவர்கள் பரந்த நாட்டின் அரசனாகலாம். அதன் கால்களை வைத்திருப்பவர்களுக்கு ஒவ்வொரு நாளும் காலையில் தூங்கி எழுந்திருக்கும்போது அவர்களுடைய தலை மாட்டில் நூறு பொற்காசுகள் இருக்கும்" என்று கூறினாள் மந்திரக்கிழவி.

செல்வந்தனான மாலிக், தனக்கு அந்தப் பாக்கியம் கிடைக்க அவள் உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டான். கிழவியும் அதற்கு இணங்கினாள். விறகு வெட்டியின் அழகிய மனைவியின் மனத்தைத் தன் மந்திர சக்தியினால் விஷமாக்கினாள் கிழவி. வியாபாரி மாலிக்கின் மீது தணியாத மையல் ஏற்படச் செய்தாள் சூனியக்காரி. மாலிக் எது கேட்டாலும் அதைச் செய்யும் நிலைக்கு விறகு வெட்டி மனைவியின் மனம் கெட்டுவிட்டது. தனவந்தன் மாலிக்குக்கு வேண்டியதெல்லாம் அந்த மந்திரப்பறவை தானே? ஆகவே அவன் போதனைப்படி அவள் தன் விறகு வெட்டிக் கணவனிடம் அந்த அதிசயப் பறவையைப் பிடித்துக்கொண்டு வரும்படி வற்புறுத்தினாள். மனைவியின் தொல்லை தாங்காத அவனும்— அந்தப் பறவையை ஒருநாள் பிடித்துக்கொண்டு வந்து அவளிடம் கொடுத்துவிட்டான்.

பறவை கைக்கு வந்ததும், விறகுவெட்டியின் மனைவி கிழவியிடம் அடுத்துத் தான் செய்ய வேண்டியது என்ன என்று கேட்டாள் கிழவி சொன்னாள்: "மாலிக்கின் காதலைப் பெற்று, அவன் கணவனாக வேண்டுமானால் நான் சொல்கிறபடி செய். சூப் தயார் செய். அதில் அந்தப் பறவையைக் கொன்று போடு. அதன் தலையும் அதன் கால்களும் அதில்

www.tamilnesan1981.blogspot.in

அவசியம் இருக்கவேண்டும். இப்படித் தயாரித்த சூப்பை உன் காதலன் சாப்பிட்டானானால்— இப்போது உள்ளதைவிடப் பத்து மடங்கு அதிகமான அன்பு உன்மீது அவனுக்கு ஏற்படும். உன்னை என்றென்றும் பிரியமாட்டான்.”

பைத்தியக்காரியான விறகுவெட்டியின் இளம் மனைவி, கிழவி சொன்னபடியே சூப் தயாரித்துவிட்டு— மாலிக்கின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். விதி செய்த சதியினால் அந்த வியாபாரி வரத் தாமதமாயிற்று. ஆகவே, அவள் சூப்பை அடுப்பில் மூடி வைத்துவிட்டுக் காதலனைத் தேடிக் கொண்டு கிளம்பினாள். அந்தச் சமயத்தில் விறகு வெட்டியின் பிள்ளைகளான அகம்மதுவும் முகம்மதுவும் பள்ளிக் கூடத்திலிருந்து வீட்டுக்கு வந்தார்கள். வந்தவர்களின் மூக்கை அம்மா தயாரித்து வைத்திருந்த சூப்பின் வாசனை துளைத்தது. நல்ல பசி வேறு அவர்களுக்கு. அம்மாவைக் காணாததால் தாங்களே ஆளுக்குக் கொஞ்சம் அந்தச் சுவையான சூப்பை எடுத்து ருசித்துச் சாப்பிட்டு அப்படியே வைத்து மூடினார்கள். அப்படிச் சாப்பிடும்போது அகம்மதுவுக்குப் பறவையின் தலையும் முகம்மதுவுக்கு அதன் கால்களும் கிடைத்தன. அவற்றைப் பற்றிய மகிமை அவர்களுக்குத் தெரியாவிட்டாலும் அவை அழகாக இருப்பதைக் கண்டு அவற்றைத் தாயத்துப் போலக் கயிற்றில் கட்டி தங்கள் தங்கள் கழுத்தில் அணிந்து கொண்டுவிட்டார்கள்.

இதற்குள் விறகுவெட்டியின் மனைவி, தனவானை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தாள். அவன் முன்னால் சூப் உள்ள பாத்திரத்தை வைத்தாள். மாலிக்கோ அவசரமாகச் சூப்பினுள் கரண்டியை விட்டுத் துழாவினான். மந்திரப் பறவையின் தலையோ காலோ அதில் இருந்தால் அல்லவா கரண்டிக்கு அகப்படும்? அதனால் ஆத்திரம் கொண்ட மாலிக் வெறி கொண்டவனாகக் கத்தினான். அவளை ஏசினான்.

“தவறு என்னுடையதல்ல. நீங்கள் சொன்ன நேரத்தில் வரவில்லை. உங்களைத் தேடி நான் வந்தேன். அப்போது பசியோடு பள்ளியிலிருந்து திரும்பிய என் குழந்தைகள், அடுப்பிலுள்ள இந்தச் சூப்பைக் கண்டு தாங்களே பரிமாறிக் கொண்டு சாப்பிட்டிருப்பார்கள் போலும். கொஞ்சம் பொறுங்கள். இதோ, நொடியில் வேறொரு பறவையைக் கொண்டு இதை விட ருசியான சூப் தயாரித்துத் தருகிறேன்” என்றாள்

www.tamilnesan1981.blogspot.in

அசட்டுப் பெண். பறவையின் சூப்புக்கா, ஆசைப்பட்டான் மாலிக்?

"எனக்கு வேறு பறவையின் தலையும் காலும் வேண்டாம் அந்தப் பறவையினுடையது தான் வேண்டும். உன் பிள்ளை களிடம்தான் அவை இருக்கவேண்டும். என்மீது உனக்கு உண்மையாகவே காதல் இருக்குமானால், உன் இரு பிள்ளை களையும் அழைத்துக் கொண்டு என்னுடன் வா! நாம் அவ்விருவருக்கும் மயக்கமருந்து கொடுத்து நினைவிழக்கச் செய்து அவர்களிடமிருந்து அந்தத் தாயத்துகளைப் பறித்துக் கொள்ளலாம்" என்று கூறினான்.

ஆனால் அகமதுவும் முகம்மதுவும் கதவுக்குப் பின்னா லிருந்து அவர்கள் சம்பாஷணை முழுவதையும் கேட்டுக் கொண்டுதான் இருந்தார்கள். ஆகவே, இனி அங்கிருந்தால் தங்கள் உயிருக்கு அபாயம் என்று எண்ணி, ஓசைப்படாமல் பின்பக்கமாக வெளியேறி ஊரைவிட்டே ஓடிவிட்டார்கள். வெகுநேரம் காத்திருந்து ஏமாந்த மாலிக், தனக்கு வர இருந்த அதிர்ஷ்டம் கைமாறிப் போய்விட்டதை அறிந்து, ஆத்திரம் அடைந்து விறகுவெட்டியின் மனைவியை ஏசி இகழ்ந்து விட்டுப் போனான்.

இப்படி, தான் வஞ்சிக்கப்பட்டதை அறிந்த அவள், அழுது அழுது கண் இரண்டும் குருடாகிவிட்டன. விறகு வெட்டி தன் இரு புதல்வர்களை இழந்ததையும் தன் மனைவி யின் இழிசெயலையும் எண்ணி எண்ணிக் கண்ணீர் விட்டத னால் அவன் கண்பார்வையும் மங்கிக் குருடனானான்.

**அ**கமதுவும் முகம்மதுவும் நீண்ட நாள் பிரயாணம் செய்தார்கள். ஒவ்வொரு நாளும் முகம்மது காலையில் எழுந்திருக்கும்போது அவன் தலைமாட்டில் நூறு பொற் காசுகள் தோன்றின. வழிச்செலவுக்கான தேவைகளையெல் லாம் அப் பொற்காசுகளைக் கொண்டு நிறைவேற்றிக் கொண்டார்கள் சகோதரர்கள். இப்படியாக அவர்கள் நடந்து வந்த பாதை. ஓரிடத்தில் இரண்டாகப் பிரிந்தது. அப்படிப் பிரியும் இடத்தில் ஓர் அறிவிப்புப் பலகையும் இருந்தது. 'ஒன்றாகப் பிரயாணப் பட்டு வரும் இருவர், சேர்ந்து ஒரே பாதை வழி சென்றால் அவ்விருவரும் மரணம் அடைவார் கள். இந்த இடத்தில் அவ்விருவரும் பிரிந்து தனித்தனியே வெவ்வேறு பாதைகளில் செல்லவேண்டும்." இப்படியோர்

www.tamilnesan1981.blogspot.in

எச்சரிக்கையைப் பார்த்த பிறகு இருவரும் சேர்ந்து செல்லு வார்களா? கண்களில் நீர் மல்கச் சகோதரர் இருவரும் ஆரத் தழுவிக் கொண்டு– விடை பெற்று வெவ்வேறு பாதைகளில் தங்கள் பிரயாணத்தைத் தொடர்ந்தனர்.

பலநாள் பிரயாணத்துக்குப் பிறகு முகம்மது ஓர் அழகான கோட்டை வாசலுக்கு வந்தான். அங்கே பல வாலிபர்கள் துக்கத்துடன் அழுதுகொண்டு அமர்ந்திருந்தனர். அவர்களுடைய வேதனையின் காரணம் கேட்டான் முகம்மது. “நாங்கள் ஒரு பெரிய செல்வச் சீமானின் புதல்வர்கள். இந்தக் கோட்டையில் உள்ள அழகியின் அன்பைப் பெறுவதற்கான முயற்சியில் எங்கள் பொருளை யெல்லாம் இழந்துவிட்டோம். ஆனால், அவள் அன்பை எங்களால் அடைய முடியவில்லை. ஓர் இரவு அவளுடன் தங்குவதற்கு நூறு பொற்காசுகள் தர வேண்டும். எங்களிடமி ருந்த செல்வத்தையெல்லாம் கொள்ளை கொண்டுவிட்டாள் அந்த வஞ்சகி. இப்போது வெறும் கையுடன் நாங்கள் எப்படித் திரும்பிப்போக முடியும்?” என்றார்கள் அவர்கள். அதைக் கேட்ட முகம்மது–

“இது எனக்கு ஏற்ற இடந்தான்” என்று கூறிக் கோட்டைக் கதவைத் தட்டினான். “என்னிடம் நூறு பொற்காசுகள் உள்ளன. நான் இன்றிரவை இங்கு கழிக்க அனுமதி உண்டா?” என்று கேட்டான்.

“தாராளமாக!” என்று வரவேற்புக் கிடைத்தது. கோட்டைக்கு உரியவளான அழகி தன்னுடைய பணிப் பெண் ஒருத்தியை முகம்மதுவிடம் அனுப்பி வைத்தாள், அவனுக்குப் பணிவிடை புரிய, வழிப்போக்கர்களிடம் இப்படி ஆள்மாறாட்டம் செய்வதுதான் அவள் வழக்கம். மறுநாள் காலை விடிந்தவுடன் பணிப்பெண், “நீங்கள் வெளியே போகலாம்” என்றாள் முகம்மதுவிடம். ஆனால் முகம்மது ஒருவாறு உண்மையை ஊகித்துக் கொண்டு “நான் இன்னோர் இரவும் இங்கு தங்குவதாக உத்தேசம். இதோ இன்றைய இரவுக்கான கட்டணம்!” என்று கூறித் தலை யணைக்கடியிலிருந்து பொற்காசுகளை அள்ளி அவளிடம் கொடுத்தான்.

அந்த அதிசயத்தைக் கேள்விப்பட்ட எஜமானியாகிய அழகிக்கு உடனே உண்மை தெரிந்துவிட்டது. ‘மந்திரப்

www.tamilnesan1981.blogspot.in

பறவையின் கால்கள் இவனிடம் இருக்கவேண்டும். அதை எப்படியும் இவனிடமிருந்து அபகரித்துக்கொண்டுவிட வேண் டும்' என்ற முடிவுடன், அன்றிரவு பணிப்பெண்ணை அனுப்பா மல், தானே அவன் படுக்கையறைக்கு வந்தாள். முகம்மது வுக்கு அளித்த மதுவிலே மருந்தைக் கலந்து கொடுத்து அவனை மயங்கச் செய்தாள். அவன் நன்கு தூங்கும்போது அவன் கழுத்திலிருந்த தாயத்தைக் கழற்றித் தன் கழுத்தில் அணிந்துகொண்டு பணியாளர்களைக் கொண்டு அவனைக் கோட்டைக்கு வெளியே கொண்டு போய்ப் போட்டு வரும்படி செய்தாள்.

காலையில் நினைவுபெற்றுக் கண்விழித்த முகம்மது தான் மலைப்பாதையில் கிடப்பதைக் கண்டு வேதனையுடன் அன்று பகல் முழுவதும் சுற்றினான். இரவு களைத்துப் போய்த் தூங்கியவன் மறுநாள் கண் விழித்தான். தலைக்கு அடியில் பொற்காசுகள் தோன்றவில்லை. அப்போதுதான் தான் அணிந்திருந்த தாயத்து கைமாறிப் போய்விட்டதை அறிந்தான் முகம்மது. மனம் உடைந்து போய்ப் பல நாள்கள் பல இடங்களிலும் சுற்றி அலைந்தான். ஒருநாள் பாலை வனத்து வழியே போக நேர்ந்தபோது, ஓரிடத்தில் மூன்று இளைஞர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருப்ப தைக் கண்டான். சச்சரவின் காரணத்தைக் கேட்ட முகம்மது விடம் அவர்கள் கூறினார்கள்: "நாங்கள் தலாபாத் நகரில் உள்ள– மாலிக் என்ற பெரிய வியாபாரியின் பிள்ளைகள். எங்கள் தகப்பனார் இறந்துவிட்டார். அவருடைய செல்வம் அனைத்தையும் நாங்கள் செலவு செய்து அழித்துவிட்டோம். மிஞ்சியிருப்பது மூன்றே மூன்று மந்திரப் பொருள்கள்தாம். அவற்றுள் யார் எதை எடுத்துக் கொள்வது. என்பதில்தான் இப்போது சண்டை."

தன் அன்னையை ஏமாற்றி– வஞ்சித்துத் தன்னையும் தன் சகோதரனையும் கொல்ல எண்ணிய வியாபாரி மாலிக் கின் புதல்வர்கள்தாம் அம்மூவரும் என்பதைப் புரிந்து கொண்ட முகம்மது, "நான் ஒரு புகழ்பெற்ற நீதிபதி. ஆகவே உங்களுக்கு என்னால் நேர்மையான முறையில் முடிவுகூற முடியும். சர்ச்சைக்குரிய பொருள்களின் விசேஷமென்ன, அதைக் கூறுங்கள்" என்றான்.

"இதோ இந்தப் பைக்குள் கை விட்டு என்ன வேண்டும்

www.tamilnesan1981.blogspot.in

என்று நினைக்கிறோமோ அது உடனே இதனுள் கிடைக்கும்" என்றான் மூத்த மகன்.

"இந்தக் கம்பளத்தின் மீது உட்கார்ந்து கொண்டு, போக வேண்டிய இடத்தைக் கூறி, அங்கு கொண்டுபோகும்படி ஆணையிட்டால்– இந்த மந்திரக் கம்பளம் அவர்களை அங்கு கொண்டுபோய் விட்டுவிடும். இதன் மகிமை .இது தான்" என்றான் இரண்டாமவன்

"இந்த குப்பியில் உள்ள தைலத்தைப் புருவத்தில் தடவிக் கொண்டால் உங்கள் உருவம் பிறர் பார்வைக்குப் புலப்படாமல் மறைந்து போகும். நம் இஷ்டப்படி எங்கும் போகலாம்" என்ற மூன்றாமவன், "கனம் நீதிபதியவர்களே! இவற்றுள் யார் எப்பொருளை எடுத்துக் கொள்வது என்று அறிவாளியான உங்கள் தீர்ப்பை நாங்கள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள் கிறோம்" என்றான்.



"இது நிரம்பச் சுலபமான விஷயம்" என்ற முகம்மது. "இதோ என்னுடைய வில். நான் இதில் ஓர் அம்பை வைத்துப் பாலைவனத்தில் விடுகிறேன். நீங்கள் இந்த அம்பு போய் விழும் இடத்துக்கு ஓடி அதை எடுத்துக் கொண்டு வந்து என்னிடம் தரவேண்டும். உங்களுள் யார் முதலில் அம்புடன் வருகிறீர்களோ அவர்களுக்கே இந்த மூன்று அற்புதப் பொருள் களையும் அளித்துவிடுகிறேன்" என்று கூறி அம்மூன்று மந்திரப்பொருள் களையும் அவர்களிடமிருந்து தான் வாங்கிக் வைத்துக் கொண்டு வில்லிலே நாணைப் பூட்டினான். முகம்மதுவின் முடிவை மூவருமே திருப்தியுடன் ஏற்றுக் கொண்டனர். வில்லிலிருந்து அம்பு புறப்பட்டதும் அம் மூவருமே, அதை அம்பு போல் அதைப் பின்பற்றிப் பாய்ந்து ஓடலானார்கள்.

www.tamilnesan1981.blogspot.in

மந்திரப் பையையும் எண்ணெய் உள்ள குடுவையையும் எடுத்துக்கொண்டு— மந்திரக் கம்பளத்தின்மீது அமர்ந்து கொண்டு— முகம்மது அழகியின் கோட்டைக்குப் போகும்படி ஆணையிட்டான். கோட்டைப் பகுதிக்குப் போனதும் மந்திரப் பொருள்களை ஓரிடத்தில் மறைத்து வைத்துவிட்டுப் பறக்கும் கம்பளத்துடன் கோட்டை வாசலுக்குப் போனான். தன் வரவை அழகிக்கு அறிவிக்கும்படி கூறினான்.

சற்றைக்கெல்லாம் முகம்மது அழகியின் முன்னால் அழைத்துச் செல்லப்பட்டான்.

"ஓ! மறுபடியும் வந்திருக்கிறாயா?" என்றாள் அழகி அழகாகச் சிரித்தபடி.

"உனக்கு ஓர் அற்புதமான புதையலைக் கொண்டு வந்துள்ளேன். நீ என்னுடன் மலையடிவாரத்துக்கு வருவாயானால் அதை உனக்குக் காட்டுவேன்" என்றான் முகம்மது.

அழகிக்கு ஆவல் பிறந்தது. முகம்மதுவுடன் மலையடிவாரத்துக்கு வந்தாள். அதிசயப் பொருள்களை எடுத்துக் கொண்டு – அவளுடன் மந்திரக் கம்பளத்தில் அமர்ந்து, "கடலுக்கு நடுவிலுள்ள பூதத் தீவுக்குப் போ" என்று கட்டளையிட்டான்.

நீண்ட நாள் பிரயாணத்துக்குப் பிறகு இருவரும் பூதத் தீவுக்கு வந்தார்கள். அழகியை முகம்மது மணந்து கொண்டான். யாருமற்ற அத்தீவில் அவ்விருவரும் சுகமாக வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு வேண்டியதையெல்லாம் முகம்மது மந்திரப் பைக்குள் கையை விட்டுக் கேட்டு வரவழைத்துக் கொண்டான்.

ஒருநாள் அழகி முகம்மதுவிடம் கெஞ்சியபடியே "நான் உங்களுடையவளாகிவிட்டேன். இன்னுமா என்னிடம் உங்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை? உங்களிடமுள்ள அதிசயப் பொருள்களைப் பற்றி எனக்குத் தெரிவிக்கக் கூடாதா?" என்று கேட்டாள். அவளுடைய பசப்பு மொழிகளில் மதி இழந்து போன முகம்மது, தன்னிடம் உள்ள மந்திரப் பொருள்களின் குணங்களைப் பற்றிக் கூறிவிட்டான்.

முகம்மதுவுக்கு மனைவியான போதிலும் அந்த அழகியின் கெட்ட குணம் மாறவில்லை. முகம்மது ஏமாந்த

www.tamilnesan1981.blogspot.in

போது பொருள் களுடன்— மந்திரக் கம்பளத்தில் ஏறித் தன்னு டைய கோட்டைக்குப் போய்விட்டாள்.

ஆகாயத்திலே பறந்து செல்லும் தன் அழகு மனைவி யைக் கண்ட பிறகே, தான் வஞ்சிக்கப்பட்டதை அறிந்து முகம்மது தலையைத் தரையில் மோதிக் கொண்டு அழு தான். புலம்பினான். 'இங்கிருந்து எப்படி வெளியேறுவேன்? உயிர் வாழ உணவு கூட இல்லையே' என்ற கதறினான். கண்ணீர் உலரக் களைத்துப் போய் அப்படியே தூங்கிப் போனான்.

கண்விழித்தபோது ஒரு மரத்தின் மீது இரு புறாக்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பதைக் கண்டான். கண் விழித்தாலும் எழுந்திருக்கவில்லை முகம்மது. புறாக்களோ மனித பாஷையிலேயே பேசின.

"இதோ இங்கு படுத்திருக்கும் மனிதனைத் தெரியுமா உனக்கு?"

"தெரியாதே..."

"இவன் பெயர் முகம்மது. தன் மனைவியினால் வஞ்சிக்கப்பட்டவன். இனி இவன் நிலை என்ன தெரியுமா?"

"தெரியாதே..."

"இவன் கண் விழித்து நான் சொல்வதைக் கேட்பானா னால் பிழைக்க முடியும்."

"நான் விழித்துக் கொண்டுதான் இருக்கிறேன். அருமைப் பறவையே. ஆண்டவனின் பெயரால் கேட்கிறேன். நான் என்ன செய்ய வேண்டும், சொல்" என்று கேட்டபடி எழுந்து உட்கார்ந்தான் முகம்மது.

"இதோ இந்த மரத்தின் பட்டைகளை எடுத்துக் காலில் கட்டிக் கொண்டு நீரின்மீது நடந்தாயானல் நீர் விலகாது. பூமி யின் மேல் நடப்பதுபோல் நடந்து போகலாம், மூழ்க மாட்டாய். இம்மரத்தின் ஒரு கிளையை ஒடித்துக்கொள். அதனால் 'ஹாஷ்!' என்று கூறி யாரை அடித்தாலும் அவர்கள் அடுத்த விநாடியே கழுதையாக மாறிவிடுவார்கள். மறுபடியும் 'ஆதம்' என்று கூறி அடித்தால் பழைய உருவை அடைந்துவிடுவார்கள். கடைசியாக இம்மரத்தின் இலை களைப் பார்வை இழந்தவர்களின் கண்களில் வைத்துக்

www.tamilnesan1981.blogspot.in

கட்டினால் அவர்களுக்குப் பார்வை திரும்பவரும்" என்று கூறிப் புறாக்கள் பறந்து சென்றன.

முகம்மது அதற்குப் பிறகும் சும்மா உட்கார்ந்திருப்பானா? பறவைகள் சொற்படியெல்லாம் நடந்து கொண்டான். நேரே முதலில் கோட்டையில் உள்ள அழகியான தன் மனைவியிடம் போனான். திரும்பிவிட்ட கணவனைக் கண்ட அவள் கோபத்துடன் தன் ஆள்களைக் கூப்பிட்டு, "இவனை இங்கிருந்து விரட்டி அடியுங்கள்" என்று ஆணையிட்டாள். அடிக்க வந்த ஆள்களை முகம்மது தன்னிடமிருந்த மந்திர மரத்தின் குச்சியால் தட்டவே அவ்வளவு பேரும் கழுதையாக மாறிக் குரல் எழுப்பினார்கள். பிறகு முகம்மது சுலபமாகக் கோட்டையினுள் நுழைந்து, தன் மனைவியான அந்த அகம்பாவம் பிடித்த அழகியையும் குச்சியால் அடித்து 'ஹாஷ்' எனறான். அடுத்த விநாடி அவள் அழகிய கழுதையாக மாறினாள். அவள் முதுகில் இரு கூடைகளைக் கட்டி அவற்றில் மண்ணை நிரப்பிச் சுமக்கும்படி விரட்டி விரட்டி அடித்தான் முகம்மது. இருட்டும் வேளையில் லாயத்தில் கொண்டு போய்க் கட்டி, மக்கிப்போன வைக்கோலை அதன் முன் போட்டான். கழுதையான அழகி, தொங்கிய தலையுடன் கண்ணீர் வழிய நின்றாள்.

"என் மந்திரப் பொருள்களை எங்கு வைத்திருக்கிறாய்? அவைகளை அடையும் வரையில் உன்னை இந்த நிலையிலிருந்து மாற்ற மாட்டேன்" என்றான் முகம்மது. பாவம், கழுதை மௌனமாகக் கண்ணீர் வடித்தது. அவள் கழுத்தில் மந்திரப் பறவையின் கால்களைக் கொண்ட தாயத்து தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்ட முகம்மது அதைக் கழற்றிக் கொண்டான். பிறகு, அவள் நிலைக்கு இரங்கி மந்திரக் குச்சியினால் அவளைத் தட்டிப் பழையபடி பெண்ணாக்கினான். முன்னை விட அழகாக ஆனால் – ஆணவம் அடங்கிப் போனவளாக அவன் கால்களில் விழுந்து, "இனி நான் எவ்விதச் சூழ்ச்சியும் செய்யமாட்டேன். என்னை உங்கள் மனைவியாக ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று கெஞ்சினாள். முகம்மது அவளை அணைத்துக் கொண்டான். இருவரும் சந்தோஷமாகக் கோட்டையில் வாழ்ந்து வரலானார்கள்.

ஒருநாள் கோட்டைக்கு ஒரு தூதுவன் வந்தான். அவன்

www.tamilnesan1981.blogspot.in

அடுத்த ராஜ்ஜியத்தின் மன்னனிடமிருந்து வந்திருந்தான். அந்த மன்னர் யார்? முகம்மதுவின் சகோதரன் அகமதுதான். மந்திரப் பறவையின் தலை அகமதை அரானசக்கியிருந்தது. முகம்மதுவும் அவன் மனைவியும் அகமதுவின் அரண் மனைக்குச் சென்றார்கள். ஆனந்தக் கண்ணீர் வழிய அகமது தன் சகோதரனை இரு கை நீட்டி வரவேற்று அழைத்துக் கொண்டான்.

"சகோதரனே! இந்த வேளையில் நம் பெற்றோர் இங்கு இருப்பார்களேயானால் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்" என்றான் முகம்மது. உடனே ஆட்கள் அனுப்பப்பட்டனர். விரைவிலேயே குருட்டு விறகுவெட்டியையும் அவன் மனைவி யான குருடியையும் அரசவையில் கொண்டுவந்து நிறுத்தி னார்கள்.

முகம்மது தன்னிடமிருந்த மந்திர இலையை அவர் களின் கண்களில் வைத்துக் கட்ட இருவருக்கும் கண் பார்வை திரும்பியது.

தந்தையும் தாயும் தம் இரு புதல்வர்களையும் கட்டி முத்தமிட்டார்கள். எல்லோரும் நீண்ட நெடுங்காலம் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள்.

www.tamilnesan1981.blogspot.in



*“ஊராருக்குப் பயன்படும்படியான ஒரு நல்ல காரியத்தை அவன் செய்தான் - தன் நலன் கருதாது. அவன் மறைந்த பிறகும் மக்கள் அவன் பெயரைக் கூறிக் கொண்டிருக் கிறார்கள்” என்றார் அப்பா.*

*“யார் அது? அப்படிப்பட்ட நல்ல காரியம் எதைச் செய்தான்?” என்று கேட்டார்கள் கதை கேட்கக் கூடி இருந்த குழந்தைகள்.*

*“அதைத்தான் இன்று கதையாகக் கூறப் போகிறேன் - கேளுங்கள்” என்று கதை சொல்லலானார் அப்பா.*

## 14. பலராமன் பாலம்

அந்தக் கிராமத்துக் குழந்தைகளுக்கான பள்ளிக்கூடம் அடுத்துள்ள பெரிய கிராமத்தில் தானிருந்தது.

படிப்பதில் ஆர்வமுள்ள குழந்தைகள் தொலைவைப் பொருட்படுத்தாமல் இரண்டு மைல் நடந்து போனார்கள் பள்ளிக்கூடத்துக்கு.

அது பெரிய பள்ளிக்கூடம். பக்கத்துக் கிராமங்களிலிருந் தெல்லாம் அந்தப் பள்ளிக்குப் படிக்க வந்தார்கள் குழந்தை கள். வழியில் பெரிய மாந்தோப்பு. வயல்கள், வரப்புகள் எல்லாம் உண்டு. குழந்தைகள் கோஷ்டி கோஷ்டியாக உல்லாசமாகப் பேசியபடியே இரண்டு மைல் தூரத்தையும் கடந்து போவார்கள்.

சிரமம் தெரியாமல் நடந்து போவதற்குக் குழந்தைகள் தமாஷாக ஏதாவது பேசிக்கொண்டு போவார்கள். அவர்கள் கற்பனை, சாகசம் நிறைந்ததாக இருக்கும்.

“தீப்பிடித்த வீட்டிலிருந்து ஒரு குழந்தையைக் காப்பாற்றி னால் எவ்வளவு பாராட்டும் புகழும் கிடைக்கும் தெரியுமா?” என்பான் ஒரு பையன்.

www.tamilnesan1981.blogspot.in

"ஆடுகளைத் தூக்கிப் போகும் புலியைக் கண்ணி வைத்துப் பிடித்தால் கிராமத்துக்கு நல்லது செய்ததாக நன்றி பாராட்டுவார்களே!" என்பான் இன்னொரு பையன்.

"விண்வெளியில் பறந்து சென்று சந்திரனுக்குப் போய் வர வேண்டும். அதுதான் மகத்தான சாதனை" இப்படி கூறுவாள் கல்யாணி.

ஆனால், அதே பள்ளிக்குப் போகும் பலராமன் இப்படி யெல்லாம் நடக்காத கற்பனைகளில் சஞ்சரிக்க மாட்டான். அவன் யாருடனும் பேசுவதில்லை. கூச்ச சுபாவமுள்ளவன். ஆனால், நல்ல படிப்பாளி, உழைப்பாளியும்கூட. பள்ளிக் கூடத்துக்குக் குறுக்குவழியில் சீக்கிரம் போய்விடுவன்.

பலராமனைப் போன்ற சில புத்திசாலிக் குழந்தைகளும் குறுக்கு வழியில் பள்ளிக்குப் போவார்கள். அதனால் அரை மைல் மிச்சமாகும். ஆனலும், அந்தப் பாதையில் ஒரு வாய்க்கால் உண்டு. சின்ன வாய்க்காலானாலும் ஆழமாக இருக்கும். அதன் கரைகளும் கரடுமுரடாகக் கடப்பதற்கு கஷ்டமானது. அதைப் பார்த்தால் அரை மைல் அதிக தூரம் நடக்க வேண்டுமே என்று, சில குழந்தைகள் இந்தக் குறுக்கு வழியில் வருவார்கள்.

போனவருஷம் மழைக்காலத்தில் வாய்க்காலில் வெள்ள



www.tamilnesan1981.blogspot.in

நீரில் ஒரு பையன் இழுத்துச் செல்லப்பட்டு—நல்ல வேளை பிழைத்துவிட்டான். ஆனால், மருத்துவமனையில் பத்து நாள் படுக்கும்படியாகிவிட்டது. இப்படி அந்த வாய்க்கால் பல குழந்தைகளைப் பாடாய்ப் படுத்தி இருக்கிறது. அதனாலேயே பல குழந்தைகள் அந்தக் குறுக்கு வழியில் போவதில்லை. ஆனால், அதிக தூரம் நடப்பதை விரும்பாதவர்கள் மட்டும் இந்தக் குறுக்குவழியிலேயே போய்க் கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்டவர்களில் பலராம்னும் ஒருவன்.

ஒவ்வொரு தடவையும் அந்த வாய்க்காலின் அருகே வந்ததும் பலராமன் நினைத்துக்கொள்வான்— 'இதைச் சுலப மாகக் கடப்பதற்கு நாம் ஏதாவது செய்தால் என்ன?' என்று. இந்த எண்ணம் நாளுக்கு நாள் வலுவடைந்து கொண்டே வந்தது பலராமனிடம். அதன் கரையில் நெடிதுயர்ந்து நின்றது ஓர் இலுப்பமரம். இரண்டு பேர் சேர்ந்து தழுவினால் தான் அதை வளைத்துப் பிடிக்க முடியும். அத்தனை பெரிய மரம் அது. இதை வெட்டி வாய்க்காலின் குறுக்கே பால மாகக் கிடத்தினால் சுலபமாக, நீரில் நனையாமல் வாய்க் காலைக் கடக்கலாமே" என்று எண்ணினான் பலராமன். அவன் தாத்தா விடம் கைக் கோடரி இருப்பதும் நினைவுக்கு வந்தது அவனுக்கு. அது நல்ல கூரான கோடரி. இவனும் நல்ல பலசாலி.

பலராமன் தன் எண்ணத்தை அந்த ஞாயிற்றுக் கிழமையே செயல்படுத்த முனைந்தான். கோடரியால் அந்த இலுப்ப மரத்தை வெட்டலானான். அது சுலபமான காரியமி ல்லையே. ஒருநாளில் அதை வெட்டி வீழ்த்த முடியவில்லை. மறுநாளும் முனைப்போடு செயல்பட்டான் பலராமன். உழைப்பு வீணாவதில்லை அல்லவா? பிரம்மாண்டமான அந்த இலுப்பமரம் வாய்க்காலின் குறுக்கே விழுந்தது.

மரம் விழுந்துவிட்டால் ஆயிற்றா? அதன்மீது நடந்து போக? அதன் கிளைகள் இடைஞ்சலாக இருக்காதா? கிளை களைக் கழித்தாக வேண்டுமே. சின்னப்பையன் பலராமன் பலசாலிதான். அத்தனை பெரிய மரத்தை வெட்டி வீழ்த்தி யது பெரிய சாதனைதான். ஆனாலும் அதைப் பாலமாக்க அனுபவமும் ஆலோசனையும் தேவை அல்லவா? அவன் தாத்தா தம் பேரனின் நல்ல காரியத்துக்கு உதவ முன் வந்தார். கிளைகளைக் கழித்தார். உருளையான அதன்

www.tamilnesan1981.blogspot.in

பக்கங்களை செதுக்கி, இலகுவாக அதன்மீது நடந்து போகும்படி சமதளமாக்கினார். பலராமனும் கூடவே ஒத்து ழைத்தான். வாய்க்காலைச் சுலபமாக வசதியாகக் கடக்க மரப்பாலம் உருவாகிவிட்டது. குழந்தைகள் மட்டுமல்லாமல், கிராமத்து மக்கள் எல்லாருமே இந்தக் குறுக்கு வழியைப் பயன்படுத்தலானார்கள். பாலம் அமைந்துவிட்டத னால், சுற்றுவழியில் யாராவது போக முற்பட்டால் “ஏம்ப்பா நேரத் தைப் பாழாக்கிட்டுச் சுத்திக்கிட்டுப் போகணும்? பலராமன் பாலத்து வழியா போயிடலாம் வா!” என்று அறிவுரை கூறுவது வழக்கமாகிவிட்டது. ஆமாம்! பலராமனின் முயற்சி யில் உருவான அந்த மரப்பாலத்தை அவன் பெயராலேயே அழைத்தார்கள். வருடங்கள் பல உருண்டன. இலுப்பமரம் வலுவிழந்தபோது— அதன்மீது போவது இனி ஆபத்து என்று நிலை ஏற்பட்டதும்— ஊரார் வேறு பல உறுதியான மரங் களை வெட்டி வந்து பக்காவான பாலத்தை உருவாக்கி னார்கள். ஆனால் அப்போதும் அது பலராமன் பாலமாகவே வழங்கியது.

நாள்கள் உருண்டன. குறுக்குப்பாதை முக்கியமான பாதையாயிற்று. ஜனங்கள் மட்டுமே போய்வரப் பயன்பட்ட அதை, வாகனங்களும் போகும் உறுதியான பாட்டையாக்க முடிவு செய்து, வாய்க்கால்மீது பக்காவாகப் பாலமெழுப்ப அரசாங்கமே முன்வந்தது. கான்கிரீட் பாலம் தோன்றியது. அப்போதும் மக்கள் அதை பலராமன் பாலமென்றே அழைக்கலானார்கள்.

உங்களை போல ஒரு பையனின் நினைப்பு, உழைப்பு — அது பொது நன்மையாக இருக்குமானால் எப்படிப் பெயரும் புகழும் அடைகிறது பார்த்தீர்களா?

www.tamilnesan1981.blogspot.in



''சில வேளைகளில் - யாருமே நினைத்துக் கூடப் பார்க்க முடியாதபடி சில அதிசயங்கள் நிகழ்வதுண்டு. அப்படி நடந்த ஒரு அதிசயத்தை இன்று உங்களுக்குக் கதையாகச் சொல்லப் போகிறேன்'' என்று ஆரம்பித்தார் அப்பா!

# 15. பாதையை மறித்த பூதம்


அது ஒரு பயங்கரமான இரவு. பேய்கள் உலாவும் வேளை என்பார்களே, அந்த நேரம். நடுங்க வைக்கும் குளிர் — மூடுபனி வேறு. கைநீட்டும் தூரத்தில் இருப்பதைக் கூடக் காணமுடியாத படி அப்படியொரு பனிமூட்டம். எதுவும் நடக்கலாம் அந்தக் கொடிய இரவிலே. அந்தக் குளிர் இரவைக் கிழித்துக்கொண்டு அசுரவேகத்தில் போய்க் கொண்டிருந்தது அந்த எக்ஸ்பிரஸ் ரயில் வண்டி.

அப்படிப்பட்ட இரவில் ரயில் வண்டியைச் செலுத்திக் கொண்டு போவதென்பது சாதாரணமான காரியமல்ல. வெல் வெட்டுப் படுதாக்களைப் போல, மடிப்புமடிப்பாக ரயில் வண்டியைச் சுற்றி, நாலா பக்கமும் மூடுபனி கனமாக இறங்கியிருந்தது. மிகச் சக்திவாய்ந்த அதன் 'ஹெட் லைட்', பனி மூட்டத்தைக் கிழித்து ஏற்படுத்திய இடைவெளி வழி யாக, எஞ்சின் டிரைவர் தம் கண்களை இடுக்கியபடி பாதை யைப் பார்த்துக் கொண்டிருந்தார். எப்போதுமே நேரந் தவறா மல் வண்டியைச் செலுத்திக்கொண்டு போகக்கூடியவர் அவர். இன்று அவர் உடலில் ஒரு பதற்றம். அதற்கு மூடுபனி யும் அந்தப் பயங்கர இரவும் மட்டும் காரணமல்ல— அன்று அந்த வண்டியில் நூற்றுக்கணக்கான பிரயாணிகளோடு அந்த நாட்டின் மகாராணியே பிரயாணம் செய்து கொண்டி ருந்தார். டிரைவருடைய பதற்றத்துக்குக் காரணம் அதுதான்.

www.tamilnesan1981.blogspot.in

என்ஜின் தலை விளக்கு இருளைக் கிழித்து உண்டாக்கிய ஒளிப்பாதையையே பார்த்தபடி, வண்டியைச் செலுத்திக் கொண்டிருந்த டிரைவரிடமிருந்து 'ஆ!' என்ற ஒலி கிளம்பியது. அவர் நெஞ்சுத் துடிப்பு நின்றேவிட்டது ஒரு கணம். பளீரிட்டுக் கொண்டு சென்ற ஒளியின் நடுவே அது என்ன? தண்டவாளத்தின் குறுக்கே– கறுப்பு அங்கி அணிந்த ஓர் உருவம்– தன் இரு கைகளையும் வீசியபடி நின்றது. பூதமா? பிசாசா? அவர் கைகள் பிரேக்கைப் பரபரப்புடன் அழுத்தமாகப் பிடித்து இயக்கியது. விரைவு வண்டியும் தண்டவாளங்களில் நெருப்புப் பொறி உண்டாகிக் கிரீச்சிட்டபடி, தன் ஓட்டத்தை நிறுத்தியது.

பீதியும் குழப்பமும் அடைந்த பிரயாணிகளை ஒரு வகையாகச் சமாதானப்படுத்திய பிறகு, ரயில்வண்டி அதிகாரிகள் வண்டியிலிருந்து இறங்கிச் சுற்றுமுற்றும் பார்த்தார்கள்; தேடினார்கள். குரல் எழுப்பிக் கூப்பிட்டார்கள். வண்டியைக் கை வீசி நிறுத்திய அந்த மர்ம உருவம் எங்கே? யாரையுமே காணவில்லை. அது–அந்த உருவம் யாராக இருக்கும்? அவர் ஏன் வண்டியை இப்படி நிறுத்த வேண்டும்? ரயில் வண்டியிலிருந்த அதிகாரிகளுக்கு ஒரே வியப்பு. முடிவில் 'யாரோ வேடிக்கைக்கு விளையாட்டாக இப்படிச் செய்திருக்கிறார்கள்' என்ற முடிவுக்கு வந்தார்கள். எஞ்சின் டிரைவர் கூட இந்த முடிவை ஏற்றுக் கொள்ளும் நிலைமைக்கு வந்துவிட்டார். ஆனாலும் உள்ளூர அவருக்கு ஏதோ ஓர் உறுத்தல். கறுப்பு உருவத்தைக் கண்டவர் அவர்தானே?



www.tamilnesan1981.blogspot.in

வண்டியை மறுபடி கிளப்புமுன், முடிவாக உறுதிப்படுத்திக் கொள்ள நினைத்த அவர், வண்டியிலிருந்து கீழே குதித்து ரயில்பாதை வழியே கொஞ்ச தூரம் நடந்து போனார்– ஏதாவது தகவல் தெரிகிறதா என்று பார்க்க. கொஞ்ச தூரம் சென்றதும் திடீரென்று அவர் முகம் வெளுத்தது. விழிகள் பிதுங்கி வெளியே வந்தன. நெஞ்சத் துடிப்பு அதிகமாயிற்று. அப்படி அவர் அங்கே கண்ட காட்சிதான் என்ன? வண்டி நின்றிருந்த இருநூறு கஜங்களுக்கு அப்பால் ஒரு பாலம். அதன்மீது சென்ற ரயில் பாதை – அப்படியே துண்டிக்கப் பட்டு நதிக்குள் சரிந்து விழுந்து கிடந்தது. காட்டாற்றில் வந்த வெள்ளம் செய்திருந்த வேலை அது. அந்த மர்ம மனிதன்– அப்படி ரயில் பாதையின் குறுக்கே நின்று வழி மறித்திருக்கா விட்டால்– அந்த வண்டி, நதிக்குள் தலைகுப்புற விழுந்து, அத்தனை பிரயாணிகளின் உயிரையும் பலி கொண்டிருக்கும். அத்தனை குளிரிலும் வியர்வையால் குளிப்பாட்டப்பட்டவராக ஓடினார் டிரைவர், ஆண்டவனுக்கு நன்றி செலுத்தியபடி.

ரயில் பாதை செப்பனிடப்பட்டு வண்டி போய்ச் சேர வேண்டிய ஊரை அடைந்த பிறகும்கூட அந்த மர்மம் விடு விக்கப்படவில்லை. எல்லோரும் நிம்மதியடைந்தாலும் டிரை வருக்கு அமைதி ஏற்படவில்லை. ஷெட்டிலே எஞ்சினைச் சுற்றிச் சுற்றி வந்தவருக்கு ஹெட் லைட்டைச் சோதனை யிடத் தோன்றியது. அதன் கண்ணாடியைத் திறந்தபோது விளக்கின் அடியிலே ஒரு பெரிய பட்டுப் பூச்சி இறந்து போய்க் கிடந்தது. அதைத் தம் உள்ளங்கையில் வைத்துக் கொண்டு சில கணங்கள் யோசித்தார். பிறகு ஒரு காரியம் செய்தார். பட்டுபூச்சியின் விறைத்த சிறகுகளை விரித்து வைத்துப் பதப்படுத்தினார். ஜாக்கிரதையாக அதை ஹெட் லைட்டின் கண்ணாடி மூடியின் மீது –இறக்கைகள் விரிந்த நிலையில்– ஒட்ட வைத்து விளக்கை மூடினார். பிறகு எஞ்சினுக்குள் ஏறித் தலைவிளக்கின் ஸ்விட்சைப் போட்டார். அடுத்த விநாடி "ஆ...! நான் நினைத்தது சரிதான்!" என்ற வியப்பொலி அவரிடமிருந்து எழுந்தது. லோகோ ஷெட்டின் உட்புற இருளைக் கிழித்து நீண்டு நின்ற ஒளி வெள்ளத்தின் நடுவே–அதே கறுப்பு அங்கி அணிந்த உருவம் நின்று கொண்டிருந்தது. ஆனால் இப்போது அதன் கரங்கள் அசையவில்லை. நிலையாக அசையாமல் நின்றன!

www.tamilnesan1981.blogspot.in

ரயில் வண்டியைப் பயங்கரமான விபத்திலிருந்து காப் பாற்றிய மர்ம உருவம் இந்தப் பெரிய பட்டுப்பூச்சிதான். உடைந்த பாலத்தை வண்டி நெருங்கும் முன்பாக எப்படியோ இந்தப் பட்டுப்பூச்சி– ரயில் வண்டியின் பிரகாசமான ஒளி யினால் கவரப்பட்டுப் பறந்து வந்திருக்கிறது. கனமான மூடுபனியினால் விளக்கில் மோதிச் சிக்கிய பூச்சியின் நிழல், அங்கி அணிந்த உருவமாக, கைகளை வீசி நிற்பது போலத் தோன்றி இருக்கிறது. அந்தப் பூச்சி தன் உயிரைக் கொடுத் துப் பல உயிர்களை– அந்த நாட்டின் மகாராணியையே காப் பாற்றிவிட்டது. இது கதையல்ல. நிஜமாகவே நடந்த சம்ப வம். காப்பாற்றப்பட்ட மகாராணி யார் தெரியுமா? இங்கிலாந் தைப் புகழுடன் ஆண்ட விக்டோரியா மகாராணிதான்! லண்டனுக்குப் போய், இயற்கை வரலாற்றுப் பொருட்காட்சிச் சாலைக்குப் (Museum of Natural history) போய், விக்டோரியா பட்டுப் பூச்சியைக் (Victoria Moth) காண வேண்டுமென்று கேட்டீர்களானால், ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள்ளிருக்கும் பெரியதொரு பட்டுப்பூச்சியைக் காட்டுவார்கள். மகாராணி யின் உயிரைக்காத்த பட்டுப்பூச்சி அதுதான்!

பிரிட்டிஷ் மக்கள் அதை 'உருவமற்ற கொடிக்காரன்' (Phantom Flagman) என்று அழைக்கிறார்கள்.

www.tamilnesan1981.blogspot.in



''அதிசயக் கதைகளுக்குப் பெயர் பெற்றது அரபு நாடு. ஆயிரத்து ஓர் இரவுகள் கதை கேட்ட மன்னர் வாழ்ந்ததும் அதுதான்! இன்று உங்களுக்கு ஒரு அரபுக் கதை கூறப் போகிறேன்'' என்றார் அப்பா.

# 16. மூன்று பிச்சைக்காரர்கள்

புகழ்பெற்ற பாக்தாத் நகரத்தின் வீதியில் ஒரு நாள் மூன்று பிச்சைக்காரர்கள் போய்க் கொண்டிருந்தார்கள். மன்னர் தமது அரண்மனையின் உப்பரிகையிலிருந்து அந்த மூவரையும் பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு ஒரே வியப்பு. வியப்பின் காரணம், அந்த மூன்று பிச்சைக்காரர் களுக்கும் ஒவ்வொரு கண் குருடாக இருந்ததுதான்.

அப்போதே இன்னொரு ரசமான காட்சியையும் கண்டார் அரசர். அந்தப் பிச்சைக்காரர்கள் ஒரு வீட்டின் முன்னால் போய் நின்றதும்— அவ்வீட்டின் கதவு திறந்து கொண்டது. இரண்டு கறுப்பு நாய்களைச் சங்கிலியில் பிணைத்துப் பிடித்துக் கொண்டிருந்த ஒரு பெண், இவர்களை வரவேற்று உள்ளே அழைத்துப் போனாள். அரசருக்கு இதற்குமேல் அரண்மனையில் இருப்புக்கொள்ளவில்லை. அரண்மனையி லிருந்து வெளிப்பட்ட அரசர் நேரே அந்த வீட்டுக்குப் போய்க் கதவைத் தட்டினார். நாய்களைப் பிடித்துக் கொண்டிருந்த அந்தப் பெண் வந்து கதவைத் திறந்தாள். அரசரை உள்ளே அழைத்துக் கொண்டு போனாள். அங்கே ஒரு கூடத்தில் ஒற்றைக் கண் குருடான் அந்த மூன்று பிச்சைக்காரர்களும் உட்கார்ந்திருந்தார்கள்.

"உங்களுக்கு ஒவ்வொரு கண் குருடாகி இருப்பது அதிசயமான செயலாக இருக்கிறதே. இது எப்படி?" என்று கேட்டார் அரசர்.

www.tamilnesan1981.blogspot.in

ஒரு பிச்சைக்காரன்— மன்னரை உட்காரும்படிக் கேட்டுக் கொண்டு, "நாங்கள் ஒவ்வொருவரும் ஒரு கதை சொல்லு கிறோம். அதைக் கேட்டால் எங்கள் ஒரு கண் குருடானதன் காரணம் புரியும்" என்றான்.

மன்னரும் அவர்கள் முன்னே அமர்ந்துகொண்டு கதை கேட்கத் தயாரானார்.

"இங்கிருந்து வெகு தூரத்திலுள்ள ஒரு நாட்டின் மன்னர் எனது தகப்பனார். எனக்கு ஓர் உயிர்த்தோழன். ஒருநாள் அவன் என்னிடம் தனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டான். அருமைத் தோழனாயிற்றே, மறுப்பேனா? செய்வதாக வாக்களித்தேன். சத்தியம் வாங்கிக் கொண்டான். அதன் பிறகுதான் அவன் கேட்ட உதவி எத்தகைய பயங்கர மானது என்பது தெரிந்தது.

ஓர் அற்புத அழகு வாய்ந்த பெண்ணோடு அவனை ஒரு கல்லறைக்குள் வைத்து அதைத் திறக்க முடியாதபடி அடைத்துவிட வேண்டும் என்பதே அவனது வேண்டுகோள். எங்கள் நாட்டின் கல்லறை என்பது பூமி மட்டத்துக்குக் கீழே ஒரு சிறு —ஆனால் விசாலமான— அறை. அதில் இறந்தவர் களையும் அவர்களது உடைமைகளையும் கொண்டுபோய் வைத்து, அதன் நுழைவாயிலை மூடி அடைத்துவிடுவோம். இதுவே சமாதி.

நண்பனின் வேண்டுகோளைக் கேட்ட எனக்கு எப்படி இருக்கும்? ஆனால் சத்தியம் செய்து கொடுத்தபடி வாக்கைக் காப்பாற்ற வேண்டும் என்று வாதாடினான் நண்பன். அவனது அருமைக் காதலிதான் அந்த அழகி. அவள் இறந்து விட்டாள். அந்த வேதனை தாங்காத அவன் இனி வாழ விரும்பவில்லை. அதுதான் அவனது இம்முடிவுக்குக் காரணம். வேறு வழியின்றி அவன் வேண்டுகோளை நிறை வேற்றினேன். ஆனால் அந்தக் கொடுமையை என்னால் தாங்க முடியவில்லை. என் நண்பனை உயிரோட அக்கல் லறைக்குள் வைத்து அடைத்துவிட்டு வந்த காட்சியே என் சிந்தனையைக் குதறிக் குல்லத்துக் கொண்டிருந்தது. என் நண்பனின் தகப்பனாரிடம் போய் நடந்ததைக் கூறிவிட்டேன்.

என்னோடு அவர் கல்லறைக்கு ஓடி வந்தார். அடைப்புக் களை நீக்கி ஆவேசத்துடன் உள்ளே ஓடினார். தம் அருமை

www.tamilnesan1981.blogspot.in

மகனைக் காக்க வேண்டி. ஆனால், அந்தோ! அங்கே என் நண்பன் உயிரோடு இல்லை. என் நண்பனின் தகப்பனாருக்கு ஏற்பட்ட கோபமும் துக்கமும் என்னைக் கொன்றுவிடும் அளவுக்கு உக்கிரமாயின. ஆனால் நான் அவரிடமிருந்து தப்புவதற்காக பெருமுயற்சி செய்தும், என் ஒரு கண்ணை இழக்கும் படியாயிற்று. அன்றுமுதல் நான் இப்படிப் பரதேசி யாகப் பிச்சை எடுத்துத் திரிகிறேன். என் நண்பன் இறப்ப தற்குக் காரணமாக இருந்துவிட்ட எனக்கு அரண்மனை வாழ்வு கசந்துவிட்டது. இதுதான் என் கதை— கண் போன கதை" என்று கூறினான் முதல் பிச்சைக் காரன்.

இரண்டாவது பிச்சைக்காரன் தன் கதையைக் கூற லானான். "நானும் ஒரு மன்னரின் மகன்தான். ஒரு சமயம் நான் வேற்று நாட்டுக்குப் போய்க்கொண்டிருந்தபோது, வழியில் திருடர்களால் கொள்ளையடிக்கப்பட்டேன். தன்னந்தனியாகக் கையில் காசில்லாமலிருந்த நிலையில்— எனக்கு ஒரு தையல் காரன் நண்பனானான். அவனோடு இருக்கும்போது நான் குற்றம் இழைத்தேன். அதற்குரிய தண்டனையாக, ஒரு பூதம் அப்படியே என்னை ஆகாயத்தில் தூக்கி, பூமியில் வீசிக் கொல்ல நினைத்தபோது, நான் அதனிடம் இரக்கம் காட்டும் படிக் கெஞ்சினேன். அந்தப் பூதமும் என்னைக் கொல்லாமல் என் ஒரு கண்ணை மட்டும் குருடாக்கி விட்டுவிட்டது. அது முதல் நான் இப்படிப் பிச்சை எடுத்து வாழ்ந்து வருகிறேன்" என்றான்.

மூன்றாவது பக்கீர் தன் கதையைக் கூறலானான்: "உண்மையில் நான் பக்கீர் அல்ல. நானும் ஓர் அரசகுமாரன் தான். ஒரு சமயம் கடற்பிரயாணம் செய்யும்போது, என் கப்பல் புயலில் சிக்கி— ஒரு பாறையில் மோதி உடையவே, நான் ஒருவன் மட்டுமே ஒரு தீவில் உயிரோடு ஒதுக்கப் பட்டேன். அந்தத் தீவில் ஓர் இளைஞன் எனக்கு நண்பனா னான், ஒருநாள் அவனுக்காகப் பழம் நறுக்குவதற்குக் கத்தி யைப் பயன்படுத்தும்போது எதிர்பாராதவிதமாகக் கத்தி அவன் உடலில் பாய்ந்து அவன் உயிரையே குடித்துவிட்டது. இதனால் மனமுடைந்த நான்— அதற்குத் தண்டனையாக என் ஒரு கண்ணைக் குருடாக்கிக் கொண்டேன். அதன் பிறகு இப்படிக் கந்தலாடையுடன் ஊர் ஊராகப் பிச்சை எடுத்து வாழ்ந்து கொண்டிருக்கிறேன்" என்றான்.

www.tamilnesan1981.blogspot.in

மூன்று பேருடைய சோகக் கதைகளைக் கேட்ட மன்னரின் மனம் அவர்கள்பால் இரக்கம் கொண்டது. அதே சமயத்தில் இரண்டு கறுப்புநாய்களைச் சங்கிலியால் பிணைத்து இழுத்து வந்த அந்தப்பெண், "நானும்கூட உங்களுக்கு ஓர் அதிசயமான கதையைக் கூறப் போகிறேன்" என்றாள்.

"இந்த இரண்டு நாய்களும் என்னுடைய சகோதரிகள் தான். என் இரு சகோதரிகளுடன் நான் ஒரு சமயம் கடல் பிரயாணம் மேற்கொண்டேன். கொஞ்சநாள் கடலில் சென்ற



www.tamilnesan1981.blogspot.in

எங்கள் கப்பல் ஒரு தீவின் அருகே நங்கூரமிட்டு நின்றது. அந்தத் தீவில் காணப்பட்ட எல்லாரும் கற்சிலைகளாக இருந்தனர். உயிர்த் துடிப்போடு இயங்கும் யாரையும் அங்கே காண முடியவில்லை. கடைசியாக ஓர் அரண்மனையின் ஒரு பெரிய கூடத்தில் ஒரே ஒரு வாலிபன் மட்டும் உயிரோடு உட்கார்ந்திருந்தான். அவனைச் சுற்றி இருந்த எல்லாரும் சிலைகளாகப் பலவித நிலைகளில் நின்று கொண்டும்— உட்கார்ந்தபடியும் இருந்தனர். நான் அந்த் வாலிபனின் அழகில் மனத்தைப் பறிகொடுத்தேன். என்னோடு அவனைக் கப்பலுக்கு அழைத்து வந்தேன். எங்கள் தேசத்துக்குப் போனதும் நாங்கள் இருவரும் திருமணம் செய்து கொள்ளு வது என்று முடிவு செய்தோம். நாங்கள் இருவரும் ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தோம். எங்கள் கப்பலைப் பாக்தாத் நகரத்துக்குச் செலுத்தலானோம்.

நானும் அந்த அழகிய வாலிபனும் மகிழ்ச்சியாக உல்லாசமாக இருப்பது என் சகோதரிகளுக்குப் பொறாமை யாக இருந்தது. ஒருநாள் நாங்கள் இருவரும் கப்பலின் மேல் தட்டில் நின்றவாறு கடலுக்குள் ஓடும் மீன்களையும் வெள்ளி அலைகளையும் பார்த்து ரசித்தபடி மகிழ்ந்திருக்கும்போது, என் சகோதரிகள் இருவரும் எங்களைக் கடலுக்குள் பிடித்துத் தள்ளிவிட்டார்கள். நாங்கள் கடலில் மூழ்கிச் சாகவேண்டும் என்பதே அவர்கள் எண்ணம். எனக்கு நன்றாக நீந்தத் தெரி யும். ஆனால் அந்தச் சுந்தரவாலிபனுக்கு நீந்தத் தெரியாது.

அவனைக் காப்பாற்ற நான் எவ்வளவோ போராடினேன். முடியவில்லை. அந்த அழகன் ஆழ்கடலின் அடியிலே ஜல சமாதியானான். நான் மட்டும் நீந்தி நீந்தி ஒரு தீவில் கரையேறினேன். எனக்கிழைத்த துரோகத்துக்குத் தண்டனை யாக என் சகோதரிகள் இருவரையும், பெரிய பாம்பு வடிவ முடைய ஓர் பூதம் இரு நாய்களாக்கிவிட்டது. அதுமுதல் என் சகோதரிகளான இவ்விரு நாய்களையும் நான் பராமரித்து வருகிறேன்" என்று தன் கதையைக் கூறி முடித்தாள்.

பாக்தாத் மன்னர் அந்த அழகியின் கதையைக் கேட்டு முன்னைவிட மனம் இளகினார். அந்தப் பிச்சைக்காரர்களை யும், அந்தப் பெண்ணையும் பார்த்து, "நீங்கள் வாழ்க்கையில் ரொம்பவும் வேதனை அனுபவித்துவிட்டீர்கள். இனி வாழ்க் கையில் இன்பங்களை அனுபவிக்க வேண்டிய தருணம்

www.tamilnesan1981.blogspot.in

வந்துவிட்டது" என்றார். மன்னர் வெறும் நாடாளும் அரசர் மட்டுமல்ல. நல்ல மனம் படைத்த அவர், மந்திர தந்திரங் களில் வல்லவரும்கூட, ஏதோ மந்திரங்களைக் கூறி வெறும் வெளியை நோக்கி யாரையோ கூப்பிட்டார். அவர் முன்னால் குபுகுபுவென்று பல வண்ணப் புகை பொங்கி எழுந்து சுருண்டு மேலே கிளம்பியது. முடிவில் அதன் நடுவே இறக்கையோடு கூடிய ஒரு பெரிய பாம்பு தன் நாக்குகளைச் சொடுக்கியபடி தோன் றியது. அதன் வாயிலிருந்தும் கண்களி லிருந்தும் தீ ஜ்வாலை கொழுந்து விட்டுக் கொண்டிருந்தது.



அந்தப் பாம்பைப் பார்த்து அரசர் கட்டளையிட்டார். "வேத னைகளை அனுபவித்து வரும் இவர்களுக்கு இனிச் சந்தோஷத் தைக் கொடு" என்றார். அடுத்த விநாடி புகையும் பாம்பும் மறைந்தன. ஆனால் அதேவேளையில் கறுப்பு நாய்கள் இரண்டும் இரு அழ கிய பெண்களாயின. பிச்சைக் காரர்களின் குருடான கண் கள் நேராயின. அவர்களின் கந்தல் ஆடை மறைந்து அரச குமாரர்களாகவே விளங்கினார்கள்.

அந்த மூன்று சகோதரிகளும் அந்த மூன்று அரசகுமாரர் களை மணந்து கொண்டார்கள். அந்த மூன்று தம்பதிகளை யும் பாக்தாத் அரசர், தமது அரண்மனையில் சில காலம் விருந்தாளிகளாக வைத்திருந்து – பிறகு அவரவருடைய நாட்டுக்கு ஏராளமான வெகுமதிகளுடன் அனுப்பி வைத்தார்.

www.tamilnesan1981.blogspot.in



''எல்லாருடைய பார்வையும் ஒரே மாதிரி இருக்காது. சிலர் ஒரு பொருளை, சம்பவங்களைப் பார்க்கும்போது விசேஷமான கோணத்தில் பார்ப்பார்கள். இப்படிப் பார்ப் பவர்களே துப்பறிவதில் வல்லவர்களாக விளங்குவார்கள். கண்ணனின் பார்வை அப்படிப்பட்டதுதான். அவன் ஒரு நாட்டின் மதி மந்திரியானான் - எதையும் கூர்ந்து நோக்கும் குணமும் ஆராயும் மனோபாவமும் கொண்டவனாக இருந்ததினால். அவன் கதையையே இன்று கேட்கப் போகிறீர்கள்'' என்றார் அப்பா.

# 17. காணாமல் போன வைரம்

மங்களபுரி செல்வம் கொழிக்கும் நாடு. பல் கலையும் பல வளமும் பொருந்திய மங்களபுரியின் மன்னர் மன்மத வர்மர், குடிமக்களின் இதயத்திலே இடம் கொண்டவர். மக்களின் மகிழ்ச்சியே தமது வாழ்வாகக் கருதுபவர்.

மங்களபுரியின் பிரஜைகளில் ஒருவர் ரத்தின சிம்மர். அவர் ஒரு நகை வியாபாரி. அறுபது வயதான அவர்— சுற்றாத தேசமில்லை. யாருடனும் அன்போடு பழகும் குணம். சாந்தம் தவழும் அவர் முகத்திலே— சதா சிரிப்புத்தான் மலர்ந்திருக்கும். தம்முடைய சிறிய வீட்டில் அமைதியாக வாழ்க்கை நடத்தி வந்தார்.

மதியூகிகள் என்று பலராலும் பாராட்டப்பட்ட கண்ணன், மாதவன் என்று இரு பையன்கள் அதே ஊரில் வசித்து வந்தார்கள். களை பொருந்திய முகம். கண்களிலே ஒரு கவர்ச்சி. சதா துருதுருவென்றிருக்கும் இவ்விருவரிடமும் வைர வியாபாரி ரத்தின சிம்மருக்கு அளவு கடந்த அன்பு. கிழவர் ரத்தின சிம்மருக்குக் குழந்தைகளோ, குடும்பமோ கிடையாது. ஆகவே கண்ணனும் மாதவனும் அடிக்கடி

www.tamilnesan1981.blogspot.in

அவர் வீட்டுக்கு வந்து அளவளாவுவார்கள். கிழவர் தாம் வியாபாரத்துக்காகப் பல நாடுகளைச் சுற்றியபோது அவர் களுக்குச் கண்ட, கேட்ட அதிசயங்களையெல்லாம் கதை கதையாகச் சொல்வார்.

ஒருநாள் இப்படிக் கண்ணனும் மாதவனும் கிழவரிடம் பேசிக் கொண்டிருக்கும்போது, "உங்களுக்கு இப்போது நான் ஒரு அதிசயமான பொருளைக் காண்பிக்கப் போகிறேன்" என்று சொல்லிவிட்டு மாடிக்குப் போனார். ஆவலோடு உட் கார்ந்திருந்த கண்ணன், மாதவன் முன்னால், சிறிது நேரத்தில் வேலைப்பாடமைந்த ஒரு பேழையைக் கொண்டு வந்து வைத்தார். அதைத் திறந்ததும் அதனுள்ளிருந்து வெளிப்பட்ட ஒளி இருவரின் கண்களையும் கூச வைத்து விட்டது. வியப்பினால் திகைத்துப் போய்விட்டார்கள். அப்படி அந்தப் பெட்டிக்குள் இருந்தது என்ன தெரியுமா? ஒரு பெரிய வைரம். நடுப்பகலில் ஜ்வலிக்கும் சூரியனைப்போலப் பள பளத்துக் கொண்டிருந்தது. நன்றாக வளர்ந்த ஒரு எலுமிச்சம் பழம் அளவு இருந்தது அந்த வைரம்.

"இதன் மதிப்பு என்ன தெரியுமா?" என்று கேட்டார் கிழவர்.

"இத்தகைய வைரத்தை நாங்கள் பார்த்ததே இல்லையே" என்றார்கள் கண்ணனும் மாதவனும்.

"யாருமே பார்த்திருக்க மாட்டார்கள். இதற்குப் பொருள் கொடுத்து வாங்கும் அரசர்கள் இந்தப் பூலோகத்தில் கிடை யாது" என்று கிழவர் அதன் பெருமையை விளக்கிக் கொண் டிருக்கும்போது, யாரோ உள்ளே வரும் காலடி ஓசை கேட்டது. மூவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

"ஓ, கஜபதி ராயரா, வாருங்கள்" என்று வரவேற்றார் ரத்தினசிம்மர். பெயருக்கேற்ற பெருத்த உடலோடு கூடிய ஓர் உருவம் உள்ளே வந்தது. வழுக்கைத் தலை; வட்டமான முகம், குட்டையான உடல். கண்ணனுக்கும் மாதவனுக்கும் கூட அவரைத் தெரியும். அந்தத் தெருக்கோடியில்தான் அவர் வீடு.

"அது என்ன பேழையில்?" என்று கேட்ட கஜபதிராய ருக்கு வைரத்தைக் காண்பிக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது

www.tamilnesan1981.blogspot.in

கிழவருக்கு. வைரத்தின் அழகிலே மயங்கிய கஜபதி, "ரத்தின சிம்மரே! இதுபோன்ற விலை மதிப்பற்ற வைரத்தை இப்படிப் பாதுகாப்பில்லாமல் வைத்திருப்பது ஆபத்தில்லையா!" என்றார். ரத்தின சிம்மர் லேசாகச் சிரித்துவிட்டு, "இது என்னிடம் பத்திரமாகவே இருக்கிறது. என் படுக்கை அறையில் தலையணைக்கு அடியிலே இந்தப் பேழை இருக்கும். வேறு எங்கு சென்றாலும் கூடவே எடுத்துச் செல்லுவேன். இப்படி ஒரு வைரம் என்னிடம் இருப்பது உங்கள் மூவருக்குத் தான் தெரியும். இதைப் பிறரிடம் சொல்லாதீர்கள்" என்று கேட்டுக் கொண்டார் கிழவர். அதன்படியே ரகசியத்தைக் காப்பதாக வாக்களித்தனர் மூவரும். கஜபதி, வீட்டுக்குக் கிளம்பினார்.

சிறிது நேரத்தில் கண்ணனும் மாதவனும் கிழவரிடம் விடை பெற்றுக்கொண்டு வீட்டுக்குக் கிளம்பினார்கள். கஜபதியின் வீட்டைக் கடந்துதான் அவர்கள் செல்ல வேண்டும். ஒரு கொழுத்த பூனையை வைத்துக்கொண்டு, அதை வருடியபடி கஜபதி தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தார். அவர் அன்போடு வளர்க்கும் பூனை அது.

**வி**டிந்தால் தீபாவளி, மங்களபுரி கோலாகலத்தில் மூழ்கிக் கிடந்தது. தீபாவளிச் சந்தையிலே தினுசுதினுசான ஆடை அணிகள் கொட்டிக் குவிக்கப்பட்டிருந்தன. வானத்திலே சீறிச் சென்று ஒளி பொருந்திய வண்ணம் பூக்களைக் கொட்டும் வாணங்கள் விற்கும் கடை ஒரு பக்கம். விதவிதமான வாணங்கள் செய்வதிலே மங்களபுரித் தொழிலாளிகள் பிரசித்தி பெற்றவர்கள்.

சந்தைக்குச் சென்று வேடிக்கை பார்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார்கள்— கண்ணனும் மாதவனும். மறுநாள் அதிகாலையில் எழுந்திருந்து, பண்டிகையை வரவேற்க நகர மக்கள் சீக்கிரமே படுத்துக்கொண்டுவிட்டனர். ரத்தினசிம்மரின் வீட்டு வாசலில் நாலைந்து பேர் நின்று கொண்டிருப்பதைத் தூரத்திலேயே கண்ட கண்ணனும் மாதவனும், கிழவருக்கு ஏதாவது உடல் நலமில்லையோ என்ற கவலையுடன் விரைவாக வீட்டை அணுகினார்கள். அங்கு கூடியிருந்தவர்களின் பேச்சிலிருந்து அவருக்கு ஏதோ ஆபத்து என்பதை அறிந்து தவிப்புடன் உள்ளே ஓடினார்கள்.

www.tamilnesan1981.blogspot.in

அங்கே கண்ட காட்சி என்ன தெரியுமா? ரத்தின சிம்மர் ஒரு நாற்காலியிலே உட்கார்ந்திருந்தார். வைத்தியர் ஒருவர் அவர் தலையைச் சுற்றிக் கட்டுப்போட்டுக் கொண்டிருந்தார். கஜபதியும் அரண்மனையைச் சேர்ந்த வீரன் ஒருவனும் நின்று கொண்டிருந்தார்கள். அவன் இரவுப் பாராக்காரனாகத்தான் இருக்கவேண்டும் என்று யூகித்தான் கண்ணன். வைத்தியரின் கட்டுக்கும் மீறிக் கிழவரின் தலைக்காயத்திலிருந்து ரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

ரத்தின சிம்மர் இவர்களைக் கண்டதும். "கண்ணா, என் விலை மதிப்பற்ற வைரம் பறிபோய்விட்டது" என்றார். அவர் குரல் நடுங்கிற்று.

"திருட்டுப் போய்விட்டதா? எப்படி?" என்றான் மாதவன் திடுக்கிட்டுப் போய். கஜபதி பதில் சொன்னார்.

"நான் வீட்டில்: என் பேரனுக்கு எல்லா வெடிகளும் வாங்கிக் கொடுத்தேன். ஆகாசவாணம் வேண்டும் என்று அழுதான். வாணக் கடைக்குப் போவதற்காக வந்து கொண்டிருந்தபோது ரத்தின சிம்மரின் வீட்டுக் கதவு திறந்து கிடப்பதைக் கண்டு உள்ளே நுழைந்தேன். கீழே யாருமில்லை. 'எட்டு மணிக்கெல்லாம் படுத்துக் கொள்ளும் பழக்கமுடையவராயிற்றே இவர்' என்று வியப்போடு மாடிப்படி ஏறும்போது, மேலேயிருந்து தடதடவென்று இறங்கி வந்த யாரோ ஒருவன் என்மீது மோதி, என்னைக் கீழே தள்ளிவிட்டு வெளியே ஓடி இருளில் மறைந்து போனான். நான் தவிப்போடு மேலே ஏறி வந்து பார்த்தேன். ரத்தின சிம்மர் படுக்கையில் அலங்கோலமாக மூர்ச்சையாகிக் கிடந்தார். தலையிலிருந்து ரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. அருகிலே பேழை திறந்து கிடந்தது. அதில் வைரத்தைக் காணோம்" என்றார் கஜபதி.

"அதேபோலத்தான் நானும் விளக்கு எரிகிறதே, வீடு திறந்து கிடக்கிறதே என்று உள்ளே புகுந்தேன். அப்போது இவர் படபடப்புடன் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்து கொண்டிருந்தார்" என்றார்– வீரனைப் போல் முறுக்கு மீசையுடன் முண்டாசும் இடைவாளும் அணிந்திருந்த அந்த மனிதர்.

www.tamilnesan1981.blogspot.in

“வைத்தியரை அழைக்கத்தான் நான் அப்படி வந்து கொண்டிருந்தேன். எதிர்ப்பட்ட இவர் என்னை வெளியேபோக விடாமல் தடுத்துவிட்டார்” என்றார் கஜபதி.

“ஆமாம், இந்தப் பெரிய சரீரத்தைத் தூக்கிக் கொண்டு இவர் எப்படி ஓடி, எப்போது வைத்தியருடன் வருவது? ஆகவே வீதியில் போன ஒருவரிடம் சொல்லி வைத்தியரை அழைத்து வரச் செய்தேன்” என்றார் வீரர்.

“விலை மதிப்பற்ற பொருள்களை இப்படி வைத்திருப்பது எப்போதுமே ஆபத்துதான். மங்களபுரி மக்கள் நல்லவர்களா னாலும் இம்மாதிரிப் பொருள்கள் யார் மனதையும் கெடுத்து விடும். அது சரி. உங்களிடம் வைரம் இருக்கும் விஷயம் மூன்றே பேருக்குத்தான் தெரியும் என்று சொன்னீர்களே அந்த மூன்று நபர் யார் என்று சொல்ல முடியுமா?” என்று கேட்டார் வீரர், ரத்தின சிம்மரைப் பார்த்து.

“இதோ இந்த இரு பையன்களும் என் நண்பரான இவரும்தான் அந்த மூவர்” என்று கிழவர்—கண்ணன், மாதவன், கஜபதி மூவரையும் காண்பித்தார். கண்ணனும் மாதவனும் திடுக்கிட்டனர், அரசாங்க அதிகாரியான அந்த வீரன் தங்கள் மீது சந்தேகம் கொள்வானோ என்று.


உடனே கஜபதி முகம் சிவக்க “இம்மாதிரி சந்தேகம் கிளம்பும் என்று எனக்குத் தெரியும். வீரரே, நீர் வந்தபோது இந்த வீட்டில் நான்தான் இருந்தேன். ஆகவே என்னை இப்போதே சோதனை போட்டுக் கொள்ளலாம்” என்றார். கஜபதியின் வார்த்தைகள் ரத்தின சிம்மருக்கு என்னவோ போலிருந்தன.

“நண்பரே, இது என்ன இப்படி...?” என்றார். ஆனால் கஜபதி பிடிவாதமாகத் தம்மைச் சோதித்துக் கொள்ளும்படி வற்புறுத்தவே வீரரும் அவருடன் அடுத்த அறைக்குச் சென்றார்.

நடந்தவற்றையெல்லாம் கேட்டது முதல் ஏதோ சிந்தனையில் இருந்தான் கண்ணன். இம்மாதிரி விஷயங் களில் உண்மையைக் காண்பதிலே கண்ணனும் மாதவனும் மிகுந்த ஆர்வம் காட்டுவார்கள். இருவரும் கிழவரின் படுக்கை அறைக்குச் சென்று தங்களிடமிருந்த மத்தாப்

www.tamilnesan1981.blogspot.in

பூவைக் கிழித்து நல்ல வெளிச்சம் உண்டாக்கி ஆராய்ந்தார்கள். அந்த அறையில் ஜன்னல் ஏதுமில்லை. உயரத்தில் ஒரு காற்றுப்போக்கி மட்டும் இருந்தது. அதன் வழியாகச் சிறு பையன்கூட நுழைய முடியாது. ஆகவே திருடன் அது வழியாக வந்திருக்க முடியாது என்ற முடிவுடன் கீழே சமையல் அறைக்கு வந்தார்கள். அங்கு சுவரில் சாவி ஒன்று மாட்டப்பட்டிருந்தது கண்ணனின் பார்வையில் பட்டது. அது ரத்தின சிம்மர் எங்காவது வெளியில் போகும்போது வீட்டு வேலைகள் தடைப்படாதிருக்கச் சமையல்காரிக்குக் கொடுத்து விட்டுப் போகும், வாசல்கதவின் அதிகப்படியான சாவி என்பது அவனுக்குத் தெரியும்.



"மாதவா, கண்டுபிடித்துவிட்டேன்" என்று விரலைச் சொடுக்கினான் கண்ணன். பிறகு சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு. மாதவனின் காதருகில் "நம் இருவரைப் போலவே ரத்தின சிம்மருடன் நெருங்கிப் பழகுபவர் கஜபதி ஒருவர்தான். வைரத்தைப் பற்றி அறிந்த மூன்றாவது நபரும் அவர்தான். இந்தச் சாவி இங்கு மாட்டப்பட்டிருப்பது நம்மைப் போலவே அவருக்கும் தெரிந்திருக்கவேண்டும்" என்றான்.

"ஆனால் அவர் வாசல் கதவு திறந்திருந்ததைப் பார்த்து விட்டு உள்ளே வந்ததாக அல்லவா சொல்கிறார். தம்மைச் சோதனை போட்டுக் கொள்ளும்படி வேறு வற்புறுத்தினார். வைத்தியரோ, கிழவர் சில நிமிஷங்கள் தாம் மயங்கி இருந்திருக்க வேண்டும் என்று சொல்கிறார். அப்படி இருக்க, கஜபதி வைரத்தைத் திருடி அதை எங்கோ, வெளியே பதுக்கி விட்டு வந்து மறுபடி வீரனைச் சந்தித்திருக்க முடியுமா? இத்தனை பெரிய சரீரத்தைத் தூக்கிக் கொண்டு நடக்கவே மூச்சு வாங்குமே அவருக்கு" என்றான் மாதவன்.

www.tamilnesan1981.blogspot.in

“நீ சொல்லுவதெல்லாம் வாதப்படி நியாயம்தான். ஆனால் நான் நிச்சயமாகச் சொல்கிறேன். கஜபதிதான் இதைச் செய்திருக்க வேண்டும். தம்மைச் சோதனையிட்டுக் கொள்ளும்படி சொல்வது தம்மீது பிறர் சந்தேகங் கொள்ளா திருக்கத்தான்.”

“அவரிடம் வைரம் இல்லாதபோது அவரை எப்படிக் குற்ற1வாளி என்று சொல்ல முடியும்?... ம்..., ஒருவேளை இந்தத் திருட்டில் இவருக்கு உதவியாக இன்னொரு நபர் சம்பந்தப்பட்டிருப்பாரோ? அதாவது காற்றுப் போக்கி வழியே வைரத்தை வெளியே காத்துக் கொண்டிருக்கும் இன்னொரு நபரிடம் வீசி இருப்பாரோ?” என்றான் மாதவன்.

கண்ணன் இதற்குப் பதில் சொல்லவில்லை. மௌனமாகச் சமையலறைக் கதவைத் திறந்து கொண்டு தோட்டத்துக்குப் போனான். மாடியிலுள்ள காற்றுப் போக்கிக்கு நேர் கீழே ஒரு கீற்றுக் கொட்டகை இருந்தது. கண்ணன் மறுபடியும் மத்தாப்பூவைக் கொளுத்தி அதை ஆராய்ந்தான். கீற்றுகள் மக்கிப்போய் மோசமான நிலையில் இருந்தன. ஒரு சிறுவன்கூட அதன்மீது ஏறி நிற்க முடியாது. தாங்காது. தோட்டத்தில் தப்பி வெளியேறச் சுவர் ஏறிக் குதித்திருக்க வேண்டும். அந்தச் சுவரையும் ஆராய்ந்தான் கண்ணன். பாசி படிந்த அந்தச் சுவரில், மனிதன் பற்றி ஏறிய கீறல் அடையாளம் ஏதுமில்லை. ஆகவே இந்தத் திருட்டில் இரண்டு மனிதர்கள் சம்பந்தப்படவில்லை என்ற முடிவுக்கு வந்தான் கண்ணன். அப்படியானால் வைரம் எப்படி மாயமாக மறைந்தது?

சிந்தனை செய்தபடியே மறுபடியும் சமையலறைக்கு வந்தான் கண்ணன். பளிச்சென்று ஏதோ அவன் மனத்தில் உதயமாயிற்று, “மாதவா, கஜபதி பலே ஆள்தான்” என்றான். பிறகு இருவரும் கூடத்துக்கு வந்தார்கள். கண்ணன் வீரரைப் பார்த்து, “உங்களிடம் தனிமையில் சில விஷயங்கள் பேச வேண்டும், வருகிறீர்களா?” என்றான். அவரை அழைத்துக் கொண்டு சமையலறைக்குச் சென்றான். சிறிது நேரத்தில் திரும்பி வந்த வீரரின் முகத்தில் ஏதோ குழப்பம் காணப்பட்டது. தொண்டையைக் கனைத்துக்கொண்டே கஜபதியைப் பார்த்து, “உங்களோடு நானும் உங்கள் வீட்டுக்கு வர விரும்புகிறேன்” என்றான்.

www.tamilnesan1981.blogspot.in

இதைக் கேட்டதும் கஜபதியின் முகம் பீதியினால் வெளுத்துப் போயிற்று. அடுத்த நிமிஷமே கோபத்தினால் முகம் சிவக்க, "இதற்கு என்ன அர்த்தம்? என்னைச் சோதனையிட்ட பிறகுமா என்மீது சந்தேகம்?" என்றார்.

கஜபதியின் முக மாறுதலைக் கவனித்துவிட்ட வீரர். நிதானமாக "உங்களோடு நான் வருவதை நீங்கள் ஆட்சே பிக்கக்கூடாது" என்றார். அவர் குரலில் கண்டிப்புக் கலந்திருந்தது.

இரவுப் பாராக்கார வீரன், கண்ணன். மாதவன் இவர்களோடு கஜபதி தம் வீட்டை அடைந்தார். வீட்டின் கதவு சாத்தி இருந்தது. "தட்டுங்கள்" என்றார் வீரர்.

"வேண்டாம், வீட்டில் உள்ளவர்களின் தூக்கத்தைக் கலைக்கக் கூடாது என்றே நான் வெளியில் பூட்டிக் கொண்டு வாணக் கடைக்குக் கிளம்பினேன்" என்று இடையிலிருந்த சாவியை எடுத்துக் கதவைத் திறக்கலானார். நடுங்கும் அவர் கரங்கள் பூட்டின் துவாரத்தில் சாவியை நுழைக்க முடியாமல் தடுமாறின. கண்ணன் வீரரின் காதோடு ஏதோ சொன்னான். உடனே வீரரும், "ஐயா, சிறிது நேரம் கதவு அப்படியே திறந்திருக்கட்டும்" என்றார். கஜபதியின் முகம் சுண்ணாம்பாக வெளுத்துவிட்டது.

கதவு திறக்கப்பட்ட சில விநாடிகளுக்கெல்லாம் "மியாவ்" என்று ஓர் ஒலி கேட்டது. எங்கோ இருளிலிருந்து வெளிப்பட்ட கஜபதியின் அருமைப் பூனை— வீட்டுக்குள் நுழைவதற்கு வந்தது. கண்ணன் ஒரே தாவலில் அதை வாரி எடுத்தான். கஜபதி அவன் செய்கையைத் தடுக்க முயன்றார், முடிய வில்லை. கண்ணன் வீரரைப் பார்த்து, "இதோ பார்த்தீர்களா?" என்று பூனையின் கழுத்தில் உள்ள ஒரு சுருக்குப் பையை இழுத்துப் பிரித்து அதிலிருந்து ஜ்வலிக்கும் வைரத்தை வெளியில் எடுத்து அவரிடம் கொடுத்தான். வீரர் அப்படியே ஆச்சரியத்தில் அசந்து போய்விட்டார். கண்ணனை அணைத்துக் கொண்டு, "தம்பி! முதலில் நீ சொன்னபோது— ஏதோ சிறு பிள்ளை விளையாட்டு என்று அலட்சியமாக எண்ணினேனே! ஆகா! உன் புத்தி சாதுர்யமே சாதுர்யம்" என்று அவனைப் புகழ்ந்தார். மாதவனுக்குக்கூடப் பூனையின் கழுத்தில் வைரம் கட்டப்பட்டிருக்கும் விஷயத்தைக் கண்ணன் எப்படிக் கண்டு

www.tamilnesan1981.blogspot.in

பிடித்தான் என்று விளங்கவில்லை. குனிந்த தலையோடு நின்று கொண்டிருந்த கஜபதியின் கரங்களில் விலங்கை மாட்டி விட்டு வீரர், "தம்பி, இதை எப்படி நீ யூகித்து அறிந்தாய்? அதைச் சொல்லு" என்று கேட்டார். கண்ணன் விளக்கினான்.

"கஜபதியைத் தவிர வேறு யாரும் இதைச் செய்திருக்க முடியாது. ஆனால் அவர் எப்படி வைரத்தை அப்புறப்படுத்தி இருப்பார் என்று சிந்தித்தேன். பகலிலேயே வந்து சமைய லறைச் சுவரில் உள்ள வாசல் கதவின் சாவியை எடுத்துக் கொண்டு போயிருக்க வேண்டும். ரத்தின சிம்மரின் வீட்டுக் கதவுக்குக் கதவிலேயே பூட்டு. தனியாக நாதாங்கி கிடை யாது. உள்ளிருப்போர் உள்ளே பூட்டிக் கொண்டாலும் அதே சாவியால் வெளியிலிருந்த படியே கதவைத் திறந்து விடலாம்.

"ரத்தின சிம்மரின் படுக்கை அறையிலுள்ள காற்றுப் போக்கியில் நுழையக்கூடிய, அப்படி நுழைந்து வெளியே. அதன்கீழ் உள்ள மக்கிப் போன கூரைமீது குதித்தால் கூடக் காயம் படாமல் தப்பித்துக்கொள்ளக் கூடிய ஒரே ஒரு ஜீவராசி பூனைதான். எங்கு கொண்டு போய்விட்டாலும் தான் வளரும் இடத்துக்கு எப்படியும் வந்து சேர்ந்துவிடக் கூடிய ஜந்துவும் பூனைதான். ஆகவே முன்னேற்பாட்டுடன் கஜபதி தம் பூனையோடு உள்ளே புகுந்து தூங்கும் ரத்தின சிம்மரைத் தாக்கிக் காயப்படுத்திவிட்டு, வைரத்தை எடுத்துப் பூனையின் கழுத்தில் உள்ள சுருக்குப் பையில் போட்டு இறுக்கி, காற்றுப் போக்கி வழியே அதை வெளியே தள்ளி யிருக்கிறார். நீங்கள் கீழே வந்திராவிட்டால் ரத்தின சிம்மரைக் கொன்றாலும் கொன்றிருப்பார்."

கண்ணன் இதை விளக்கிக் கொண்டிருக்கும்போதே ஊர் காவல் அதிகாரி வீரர்களுடன் அந்த இடத்துக்கு விரைந்து வந்து சேர்ந்தார். வந்தவர் பாராக்கார வீரனைக் கண்டதும் வியப்புடன். "மகாராஜா, இது என்ன வேஷம்?" என்று வணங்கி நின்றார். அப்போதுதான் இத்தனை நேரம் தங்க ளோடு உரையாடிக் கொண்டிருந்தவர் பாராக்காரர் இல்லை, மன்னர் மன்மத வர்மர் என்பதைக் கண்ணனும் மாதவனும் அறிந்து ஆச்சரியமடைந்தார்கள்.

"நகர் சோதனை செய்வதற்காகவும்— நாளை தீபாவளிக் கொண்டாட்டத்துக்கு எப்படியெல்லாம் மக்கள் ஏற்பாடு செய்

www.tamilnesan1981.blogspot.in

திருக்கிறார்கள் என்பதை அறியவும் இப்படி மாறுவேடம் அணிந்து வந்தேன். வந்த இடத்தில் வருங்கால மந்திரியை, மதியூகி கண்ணனைக் கண்டுபிடித்துவிட்டேன்" என்று அவனை அன்போடு அணைத்துக் கொண்டார்.

கஜபதி சிறைக்கு அனுப்பப்பட்டார்.

கண்ணனும் மாதவனும் மன்னரோடு அரண்மனைக்குச் சென்றார்கள். ரத்தினசிம்மர் அந்த வைரத்தைத் தமது காணிக்கையாக மன்னரை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொண்டார்.

அந்த வருஷம் தீபாவளியைக் கண்ணன், அரண்மனையில் எவ்வளவு குதூகலமாகக் கொண்டாடியிருப்பான் என்று நான் சொல்லவா வேண்டும்?

www.tamilnesan1981.blogspot.in



*‘‘நெஞ்சை நெகிழ வைத்து, கண்ணீரை வரவழைக்கும் ஒரு கதையை - ஒரு சின்னப் பெண் தன் தாயின் மீது கொண்டிருந்த பாசத்தை விளக்கும் கதையைக் கேட்கப் போகிறீர்கள் இன்று. ‘ஆதி’ என்ற கிராமத்துப் பெண்ணின் கதை’’ என்றார் அப்பா.*

*‘‘சொல்லுங்க அங்கிள்- ரொம்ப ஆவலைத் தூண்டு விட்டுட்டீங்க!’’ என்றனர் குழந்தைகள்.*

# 18. நீலப் போர்வை

அது ஓர் அழகான போர்வை. போர்வை என்பது கூடத் தவறு. ஷால், குளிருக்கு அடக்கமாய்ப் பெரிய மனிதர்கள் மேலே போர்த்திக் கொள்ளும் உயர்ந்த கம்பளியால் ஆன ‘ஷால்’ அது. வானத்தின் நீல நிறத்தில், ஓரங்களில் தகதகக்கும் தணல் சிவப்பில் பூக்கள் பின்னி– தொட்டுப் பார்க்கவே கதகதப்பும் களிப்பும் ஊட்டுவதாய் இருந்தது, அந்த ஷால்.

அந்தக் கடையைத் தாண்டிப் போகும்போது,தன் அம்மா சற்றே தயங்கி நின்றதையும், தொங்கிக் கொண்டிருந்த அந்த உல்லன் ஷாலை ஆசையோடு தொட்டுப் பார்த்துவிட்டு மேலே நகர்ந்ததையும் ஆதி கவனித்தாள். அதைத் தடவிக் கொடுத்தபோது அம்மாவின் முகத்தில் பளபளத்த ஆசையையும், சட்டென்று அதை மூடி மறைத்த நிராசையையுங்கூட ஆதி பார்த்தாள். ‘அந்த அழகிய ஷால் என் அம்மாவுக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டும்’ என்று ஆண்டவனை வேண்டிக் கொண்டாள் குழந்தை ஆதி.

அன்று சந்தை நாள். ஆதியும் அவள் அம்மாவும் சட்டி பானைகளையும், அவர்கள் தோட்டத்தில் விளைந்த கறிகாய்களையும் வண்டியில் ஏற்றிக்கொண்டு சந்தைக்குப் போய் விற்றுவிட்டு, வீட்டுக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டு

www.tamilnesan1981.blogspot.in

திரும்புவார்கள். வாரம் ஒருநாள் இது வழக்கமாய் நடை பெறும். அவர்கள் குக்கிராமம், சந்தை கூடும் பெரிய கிராமத்திலிருந்து ஆறு, ஏழு கல் தொலைவில் இருந்தது. குண்டும் குழியுமான கிராமப் புறத்து வண்டித் தடத்தில் 'தடக் படக்' என்று ஆடி அசைந்தபடி அவர்கள் வண்டி செல்லும். முன்னும் பின்னும் வேடிக்கை பார்த்துக் கொண்டே வண்டியின் குலுங்கலுக்கு ஏற்ப– வையாளி போட்டபடி சவாரி செய்வதில் ஆதிக்கு ரொம்ப ஆசை. சட்டி பானைகளுக்கும், கத்தரி, தக்காளிக் கூடைகளுக்கும் நடுவே அவைகளுக்குப் பாதுகாப்பாய் ஆதி அமர்ந்திருந்தாலும், அவள் கவனம் எல்லாம் தொலைதூரத்துக் காட்சிகளிலும், துள்ளியோடும் முயல், அணில் ஆகியவற்றிலுமே லயித்தி ருக்கும். கொஞ்ச நாள்களாக அவள் எண்ணமெல்லாம் அந்தச் சந்தையில் உள்ள ராவுத்தர் கடையின் நினைவாகவே இருந்தது.

"சாமி, ஆண்டவனே! அந்த ஷாலை யாரும் வாங்கிச் சென்றிருக்கக் கூடாது" என்று பிரார்த்தனை செய்து கொண்டே பிரயாணம் செய்வாள். இப்போதெல்லாம் அவள் கண்கள் வேறு எந்தக் காட்சியையும் கண்டு இரசிப்பதில்லை. காரணம், அவள் மனக்கண்ணிலே அந்த நீலநிற ஷால், திரையாக விழுந்து மறைத்துக் கொண்டிருந்ததுதான்.

ராவுத்தர் கடைதான் சந்தையிலேயே பெரியகடை– நகரங் களில் உள்ள டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ் போல. அங்கு இல்லாத சாமான்களே கிடையாது. வாரத்தின் எல்லா நாள் களும் எப்போதும் வியாபாரம் செய்யும் கடையுங்கூட. மற்ற கடைகள் எல்லாம் சந்தை தினத்தன்று மட்டுமே திறந்தி ருக்கும். ராவுத்தர் கடை நிரந்தரமானது.

அன்றும் அவர்கள் ராவுத்தர் கடையைத் தாண்டி நடந் தார்கள். அவர் கடையில் எவ்வளவோ பொருள்களைக் காட்சிப் பொருளாக்கி இருந்தாலும், ஆதியின் கண்கள் அந்த ஷாலைத்தான் தேடி அலைந்தன. சிரித்துக்கொண்டு தொங் கும் அந்த நீலநிற ஷாலைக் கண்டதும் அவள் விழிகள் விரிந்து பளபளக்கும். 'நல்லவேளை, இன்னும் யாரும் அதை வாங்கிப் போகவில்லை' என்று குதூகலப்படும் அந்தக் குழந்தை உள்ளம். ஆசையோடு அதன் அருகில் ஓடிப்போய்

www.tamilnesan1981.blogspot.in

அதைத் தொட்டு மகிழ்வாள். மெத்தென்று அதைத் தன் பட்டுக் கன்னத்தில் பதித்துப் பூரித்துப் போவாள்.

"இதை நீ வாங்கிக்கொள்ளப் போகிறாயா, அம்மா?" என்று கேட்டாள் தாயாரிடம்.

ஆதியின் தாயார் தலையை அசைத்தாள். "ம்ஹூம். முக்கியமான குடும்பச் சாமான்கள் வாங்கத்தான் முடியும். தேவையில்லாத பொருள்களை வாங்க நம்மிடம் பணம் கொட்டியா கிடக்குது?" என்று கூறியபடி ராவுத்தரிடம் மளிகைச் சாமான்கள் பட்டியலைக் கொடுத்து, பொருள் களைப் பொட்டலம் கட்டிப் போடச் சொன்னாள்.

ஆதி அந்த ஷாலையே பார்த்தபடி நின்று கொண்டிருந் தாள். அவள் மனத்தில் எத்தனையோ விசித்திரமான எண் ணங்கள். 'இந்த அழகான—மிருதுவான ஷால் என் அம்மா வுக்குக் கிடைக்கவேண்டும்.' இதையே திருப்பித் திருப்பி அவள் சிந்தனை சிணுங்கிக் கொண்டிருந்தது.

அவள் அம்மா ஏதோ சாமான் வாங்க இரண்டு கடைகள் தள்ளிப் போயிருந்தபோது, "இந்த ஷால் என்ன விலை ராவுத்தர் ஐயா?" என்று கேட்டாள்.

"பதினைஞ்சு ரூவா" என்றார் ராவுத்தர்— அன்பு கலந்த முறுவலுடன். எப்போதும், யாரிடமும் சிரித்த முகத்தோடு பேசிப் பழகுவதில் ராவுத்தர் வல்லவர். "ரொம்ப ஒசந்த கம்பளி ஷால் ஆக்கும் இது!"

ஆதியின் முகத்தில் சிந்தனை படர்ந்தது. அவள் கைகள் கழுத்திலிருந்த மணிமாலையை வருடின. வண்ணவண்ணக் கற்கள். கிளிஞ்சல், சங்குகளாலான மாலை அது. "இதோ பாருங்கள். இந்த மாலை ரொம்ப அழகான மாலை. இந்த நீலக் கல்லு மேலேயும் சிவப்புக்கல்லு மேலேயும் சூரியஒளி பட்டால் என்னமா ஜ்வலிக்கும், தெரியுமா?" என்றாள் ஆதி.

ராவுத்தர் தம் புன்சிரிப்பு மாறாத முகத்துடன் சில விநாடிகள் அந்த மாலையைப் பார்த்தார்.

"ம்... ஆமாமா, நல்ல மாலைதான். இதை நீ விக்கிற தானா மூணு ரூபாய் தருவேன்" என்றார். தன் மாலை பதினைஞ்சு ரூபாய்க்கு விலைபோகும். அதைக் கொடுத்து விட்டு அம்மாவுக்கு அந்த ஷாலை வாங்கிவிடலாம் என்று

www.tamilnesan1981.blogspot.in

எண்ணமிட்ட ஆதியின் முகம் தொங்கிப் போயிற்று. மாலையைத் தடவிக் கொண்டிருந்த அவள் கைகள் நழுவிச் சரிந்தன.

"மூணு ரூவாதானா? நான் நெனச்சேன்..." நினைத்ததைச் சொல்லத் திராணியற்றவளாய்த் தயங்கியவள் கடைசியில் சொல்லியேவிட்டாள். "இந்தக் கம்பளி எனக்கு வேணும்!"

"கிடைக்காது, பாப்பா. உன் மணிமாலைக்கு இது கிடைக்காது!"

'கடக் முடக்'கென்று ஆடி அசைந்து செல்லும் வண்டியில் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த ஆதி, வழியில் எந்தக் காட்சியையும் வேடிக்கை பார்க்கவில்லை. அந்த அழகான நீலநிற ஷாலைத் தன் அம்மாவினுடையதாக்க எப்படிப் பணம் சேர்ப்பது என்பதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தது அந்தப் பிஞ்சு உள்ளம். முந்திரிப் பழம் பொறுக்கி விற்கலாம்; ஏலந்துப்பழம், கிளாக்காய் இவைகளையெல்லாம் சேகரிக்கலாம். ஆனால், அதற்கெல்லாம் இது காலமில்லையே. அந்தப் பருவம் வருவதற்குள் அந்த ஷாலை வேறு யாராவது வாங்கிப் போய்விட்டால்? தவிர, அப்படிப் பழமும் காயும் பூவும் சேகரித்து விற்றால் என்ன கிடைத்துவிடும்— பிரமாதமாக? விற்பதற்கு அவளிடம் இருப்பதெல்லாம் அந்த மணி மாலைதான். ஆனால் அதற்கு மூன்று ரூபாய்தான் தருவேன் என்கிறார் ராவுத்தர். அந்தப் போர்வையோ பதினைந்து ரூபாய்.

"பணம் சேர்ப்பது என்பதுதான் எவ்வளவு சிரமமான காரியம்! எப்படித்தான் எல்லோரும் பணம் சேர்க்கிறார்களோ?" இப்படியெல்லாம் குழம்பியது அந்தக் குழந்தையின் உள்ளம். 'அம்மாவுக்கு அந்த ஷாலை வாங்கித் தர தன்னால் முடியாது!' என்று நிராசையோடு அந்த எண்ணத்தைக் கைவிடவும் மனசில்லை. ஆனால், எப்படி அதை வாங்குவது, வாங்க முடியும்?

அடுத்த தடவை ஆதி, சந்தைக்குப் போனபோது ராவுத்தர் கடையில் அந்த நீல நிற ஷாலைக் காணோம். அவள் நெஞ்சுத் துடிப்பே நின்றுவிட்டது. 'அத்தனை அழகான ஷாலை எத்தனை நாளைக்குத்தான் யாரும் வாங்காமல் விட்டு வைத்திருப்பார்கள்? எனக்கு வேண்டுமானால் பதினைந்து ரூபாய் பெரிய விஷம். எத்தனை

www.tamilnesan1981.blogspot.in

பணக்காரர்கள் இருக்கிறார்கள்! என்னைப் போலப் பணம் சேமிக்கத் திட்டமிட வேண்டாமே!' சூடான கண்ணீர் ஆதியின் விழிகளில் சுரக்கலாயிற்று.

"அது வித்துப் போச்சுங்களா?" என்று கேட்டாள் ஆதி. ராவுத்தரிடம். அவள் குரல் உலர்ந்து கிடந்தது. "அதுதான் அந்த நீலவண்ணப் போர்வை—யாராவது வாங்கிட்டுப் போயிட்டாங்களா?"

ராவுத்தர் ஆதியை ஒரு விநாடி உற்றுப் பார்த்தார். அவளோ, அவள் கேள்வியோ அவருக்குப் புரியவில்லை. பல ஜோலிக்காரர். ஆனால், சட்டென்று நினைவுக்கு வந்து விட்டது. "ஓ! அந்த ஷாலைக் கேட்கிறாயா?" என்றவர் சிரித்துக்கொண்டே, "விக்கலை, இருக்குது. நீ அதை வாங்கிக்கப் போறியா?" என்றார்.

அவர் பதில் ஆதிக்கு இதமாய் இருந்தது. அதே சமயம் பயமாயும் இருந்தது. ஏதோ ஒரு குருட்டுத் துணிச்சலில். "ஆமாம்" என்றவள் தன் பேச்சு அம்மாவின் காதில் விழாத வாறு குரலைத் தணிவாக்கிக் கொண்டு. "அதை நான் வாங்கிக்கப் போறேன். ஆனால் அதுக்கான முழுப் பணம் இப்போ என்கிட்டே இல்லை. இதோ..." என்று மணி மாலையை ராவுத்தரின் கைகளுக்குள் வைத்து மூடியபடியே "இந்த வைச்சுக்குங்க. அடுத்த தடவை வரும்போது இன்னும் ஏதாவது கொண்டுவரேன். அந்தப் போர்வையோட மதிப்புக்குச் சரியான பணம் தரும்வரை அதை வேற யாருக்கும் விக்காம எனக்காக வச்சிருப்பீங்களா?" என்றாள். அவள் குரல் கெஞ்சலாய் ஒலித்தது. அந்தப் பார்வை, நடுங் கும் விரல்கள், ஆர்வம் வழியும் குரல்— அத்தனையும் அந்த வியாபாரியை என்னவோ செய்தன. வியப்பு மறைந்து கனிவு கூடியது ராவுத்தரின் மனத்தில். ஆதியின் தலையில் கை வைத்தபடி, "பாப்பா, உனக்கு என்ன வயசு?" என்று கேட்டார்.

"ஒன்பது... எங்கம்மாதான் சொன்னாங்க, 'அடி ஆதி, ஒனக்கு ஓம்பது வயதாயிடுத்துடி'ன்னு.

"ஓ!..." என்றவர், "சின்னப் பெண்ணே! உனக்காக அந்த ஷாலை விக்காம வைச்சிருக்கேன்— மீதிப் பணத்தை நீ கொண்டு வரும்வரை" என்றவர், தம் வியாபாரத்தைக் கவனிக்க விரைவாகச் செயல்பட்டார்.

www.tamilnesan1981.blogspot.in

ஆதிக்கு ஆனந்தமான ஆனந்தம், ஆகாயத்திலே மிதப்பது போலக் குதூகலப்பட்டாள். அந்த ஷால், நீலநிறப் போர்வை, மெத்தென்று மிருதுவான– கதகதப்பான கம்பளிப் போர்வை அவளுக்கே, அவளுக்கு! 'இனிமேல் அது என்னுடையதுதான். எப்படியும் அதை வாங்கிவிடுவேன். அந்தப் போர்வையை அம்மா தன் தோள்மீது மடித்துப் போர்த்திக் கொண்டால் எப்படி இருக்கும்? பெருமையால் பூரித்துப் போவாளே!' சட்டென்று ஆதியின் இதயம் படபடத்தது. 'ஆனால்... மீதிப் பணத்தை நான் எப்படிச் சம்பாதிப்பது?'



அடுத்து வந்த நாள்கள் ஆதியை ஒரேயடியாக மாற்றி விட்டன. அவள் அம்மாகூட ஆச்சரியப்பட்டாள். 'எங்கே இந்தப் பொண்ணு கண்ணிலேயே படலியே' என்று எண்ணினாள். ஏதோ செய்து கொண்டிருந்தாள், ஆதி. எங்கோ போனாள். எதையோ மறைத்து மறைத்து வைத்துப் பாதுகாத்தாள். காட்டுக்கும் மேட்டுக்கும், கழனிக்கும் மலைக்கும் அலைந்தாள். அடுத்த சந்தையன்றுகூட அவள் தன் தாயாருடன் போகவில்லை. அதற்கடுத்த சந்தை நாள்– அன்று, சட்டி பானைகளுக்கிடையே எதையோ பதுக்கி வைத்துக் கொண்டு பிரயாணம் செய்தாள். அம்மா வியாபாரத்தில் கவனமாய் இருக்கும்போது அதை எடுத்துக்கொண்டு ராவுத்தர் கடைக்குப் போய், அதை அவரிடம் கொடுத்தாள். அப்போது அவள் உள்ளம் மகிழ்ச்சியால் எப்படித் துள்ளிற்று தெரியுமா? நெஞ்சு படபடத்தது. அது ஒரு மண் குடுவை. அது நிறைய மலைத் தேன் இருந்தது. அத்தனை தேனையும் சேகரிக்க அவள் எத்தனை பாடுபட்டிருந்தாள்! கோபம் கொண்ட தேனீக்கள் அவள் கைகளில் எப்படிக் கொட்டின தெரியுமா? ஆனால், அதையெல்லாம் மறந்து – பெருமை அவள் குரலில் தொனித்தது.

www.tamilnesan1981.blogspot.in

"ராவுத்தரய்யா! அந்தப் போர்வைக்கான பணத்துக்காக இந்த மலைத்தேனை வைச்சுங்குங்க. அடுத்த வாரம் இன்னும் ஏதாவது கொண்டு வரேன்."

'ராவுத்தர் ஏன் அப்படிப் பார்க்கிறார்? ஏன் சிரிக்க வில்லை? தேன் குடுவையை வாங்கிக் கொண்ட அவர் பார்வையில் அது என்ன?' ஆதியால் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ராவுத்தர் சட்டென்று திரும்பினார். கடையின் இன்னொரு கோடியில் நின்றிருந்த வெள்ளைச் சட்டைக் காரரிடம் ஏதோ பேசினார். அது என்ன என்றும் ஆதிக்கு விளங்கவில்லை. மறுபடியும் அவர் ஆதியிடம் வந்தார். இப் போதும் அவளால் அவர் பார்வையைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

"பாப்பா, எங்கிட்ட வேறு நல்ல நல்ல ஷாலெல்லாம் இருக்கு. நீ பார்த்து வைச்ச நீலநிற ஷாலை, அதோ அந்தப் பெரியவர் வாங்கிக்கிட்டார். உனக்கு வேறு ஜோரான ரோஸ் நிறத்திலே, பொன் நிறத்திலே வேறு போர்வை தரேன், என்ன?"

ஆதிக்குத் திடீரென்று உலகமே இருண்டுவிட்டது போலி ருந்தது. 'அவள் போர்வை, அவள் பார்த்துப் பார்த்து வைத்தி ருந்த நீலநிறப் போர்வை; யாரோ ஓர் அந்நியனுக்கு உரிமை யாவதா?' அவளால் பேசவே முடியவில்லை. தொண்டை அடைத்துக்கொண்டது. குபுக்கென்று கொப்புளித்த கண்ணீ ரிலே காட்சிகளெல்லாம் மிதக்கலாயின. அந்த வெள்ளைச் சட்டைக்காரர் ஒரு பொட்டலத்தைத் தம் கக்கத்தில் வைத்துக்கொண்டு வெளியேறுவதைக் கண்டாள் ஆதி.

'ஜனங்கள், பணக்காரர்கள் இவ்வளவு கொடியவர்களா? சே, என்ன உலகம் இது!'

தள்ளாடித் தடுமாறியபடி ராவுத்தர் கடையிலிருந்து வெளியே வந்தாள். அவள் உள்ளத்திலே வேதனையும் கோபமும் வெறுப்பும் புயலாகக் குமுறிக் கொண்டிருந்தன. ஆனால் அவள் அழவில்லை. வண்டியில் ஊர் திரும்பும் போது மௌனமாகவே இருந்தாள். 'பணம் படைத்த நாகரிக நகரவாசிகள் ஏன் இப்படி ஏழை நாட்டுப்புற மனிதர்களிடம் இரக்கமே காட்டுவதில்லை?' என்று எண்ணமிட்டபடியே பிரயாணம் செய்தாள். வீட்டுவாசலில் அவள் அம்மா சாமான்களை உள்ளே கொண்டு வைக்க உதவும்படி

www.tamilnesan1981.blogspot.in

ஆதியை அழைத்தபோது, மறந்துவிட்ட எதையோ நினைத்துக் கொண்டவளாக, "அடி, ஆதி! மறந்தே போச்சு. வெள்ளைச் சட்டை போட்டுக் கொண்டிருந்த ஒருத்தர் இதை என்கிட்ட கொடுத்தாரு. நீ ராவுத்தர் கடையிலே இதை வாங்கினியாமே. அப்படி என்னாடி எனக்குத் தெரியாம நீ வாங்கினே? பெரிய மனுஷி!" என்றபடி சிரித்துக்கொண்டே ஆதியிடம் ஒரு பொட்டலத்தைக் கொடுத்தாள் அவள் அம்மா.

சோம்பிக் கிடந்த ஆதியிடத்தில் குபீரென்று குதூகலம் பீறிட்டது. பரபரப்படைந்தாள். விழிகள் விரிந்தன. வெள்ளைக் காகிதத்தினாலான பொட்டலம் மிருதுவாக, மெத்தென்று சின்னக் குழந்தையின் உடலைப்போல இருந்தது. 'நான் வாங்கினேனா? அப்படியா அவர் கூறினார்? நான் என்ன வாங்கினேன் ராவுத்தரிடம்? அதுதான் கை மாறிப்போய் விட்டதே!' அவளால் நிதானிக்க முடியவில்லை. பரபர வென்று அந்தப் பொட்டலத்தைப் பிரித்தாள். அதனுள்ளே...

அந்த ஷால்... அந்த ஆகாய வர்ண அழகுப் போர்வை. அவள் ஆசை ஆசையாகத் தன் அம்மாவுக்கென்று பார்த்துப் பார்த்து மகிழ்ந்த நீலநிற ஷால், மெத்தென்று மடித்து வைக்கப்பட்டிருந்தது. அதன்மீது ஒரு கடிதமும் இருந்தது. நாலாவது வரை படித்துள்ள ஆதிக்கு அதில் எழுதியிருந்த தைப் படிக்கச் சற்றுச் சிரமமாக இருந்தாலும் எழுத்துக் கூட்டிப் படித்தாள்.

"உன் அம்மாமீது உனக்குள்ள அன்பு இந்தப் போர்வை யைப் பெற்றுத் தந்திருக்கிறது. உன்னைப் போன்ற ஒரு பெண்மீதுள்ள என் பாசமும் அன்பும் உன் பொக்கிஷத்தைத் திரும்ப உனக்கு அளித்திருக்கிறது. வெள்ளைச் சட்டை போட்டுக் கொண்டு நகரத்தில் வாழும் நாகரிகமானவர் களுக்கும் நாட்டுப்புறத்து மக்களைப் போலவே இதயம் உண்டு."

மடித்திருந்த கம்பளிப் போர்வையின் நடுவே அவளு டைய மணிமாலை ஒரு காகிதத்தில் சுருட்டி வைக்கப் பட்டிருந்தது. இப்போதும் ஆதிக்கு அழுகை தொண்டையை அடைத்தது. ஆனால் இது ஆனந்த அழுகை. களிப்பு மிகுதியினால் கண்களிலிருந்து பொங்கிய கண்ணீர் கன்னங்களின் வழியே உருண்டு சிதறியது. அந்த அழகான

www.tamilnesan1981.blogspot.in

கம்பளியை அதனுள்ளிருந்த அவளுடைய பொக்கிஷமான மணிமாலையுடன் மார்போடு அணைத்துக் கொண்டாள். அருகிலிருந்த தன் அம்மாவையும் சேர்த்துக் கட்டிக் கொண்டாள்.

அந்த நீலநிறப் போர்வையை அவளுக்குப் பரிசாக வழங்கியது அந்த வெள்ளைச் சட்டைக்காரரா அல்லது ராவுத்தரேதானா? அது ஆதிக்குத் தெரியாது. தெரிய வேண்டிய அவசியமும் இல்லை. ஆனால் அவள் ஒரு பெரிய இரகசியத்தைத் தெரிந்துகொண்டாள். அந்த இரகசியம் உங்களுக்கும் எனக்குங்கூடத் தெரியும். அதுதான்:

"பணக்கார—நாகரிக நகர வாசியின். இதயமும், நாட்டுப் புறத்து மனிதனின் இதயமும் ஒன்றேதான், வித்தியாச மில்லை!"

www.tamilnesan1981.blogspot.in



*“இன்றைக்கும் ஒரு கிராமத்துப் பெண்ணைப் பற்றியே கதை சொல்லப் போறேன்” என்று கூறியபடி வந்தார் அப்பா.*

*“இதிலும் அந்தச் சின்னப் பெண் கஷ்டப்படுகிறாள். ஆனால் முடிவு சந்தோஷமாக இருக்கும். சொல்லவா?”*

*“சொல்லுங்க அங்கிள் - ஆதி பெண்ணோட கதை போலன்னா - எத்தனை கதை வேணுமானாலும் கேட்கலாம்!” என்றார்கள் குழந்தைகள்.*

# 19. சின்னப்பெண்ணே, சிங்காரி!

வெகு காலத்துக்கு முன்னாலே ஒரு குடியானவனும் அவன் மனைவியும் ஒரு மலையடிவாரத்தில் வசித்து வந்தார்கள். அவர்களுக்கு ஒரு பெண்ணும் சின்ன, பாப்பாப் பையனும் இருந்தார்கள். மலைச்சரிவில் உள்ள சிறுநிலத்தைப் பண்படுத்திப் பயிர்செய்து, அதில் விளையும் தானியங்களையும் காய்கனிகளையும் அடுத்துள்ள நகரத்தில் கொண்டு போய் விற்று வாழ்ந்து வந்தான் குடியானவன்.

ஒருநாள் குடியானவனும் அவன் மனைவியும் சந்தைக்குக் கிளம்பினார்கள், பொருள்களை விற்றுவர. தாயார் தன் மகளை அழைத்து, “சின்னப் பெண்ணே, சிங்காரியே! சின்னப் பாப்பாவை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள். நாங்கள் திரும்பிவரும்போது உனக்குச் சீனிமிட்டாய் வாங்கி வருகிறோம்” என்றாள். சின்னப் பெண்ணும் சம்மதித்தாள். அவர்கள் இருவரும் சந்தைக்குப் போனார்கள். சின்னப்பெண் தன் தம்பியை வீட்டின் வெளியே உள்ள மரத்தடியில் புல் தரையில் உட்காரவைத்தாள். தன் தோழிகளுடன் விளையாடப் போய்விட்டாள். அம்மா சொன்ன அறிவுரைப்படி நடக்கவில்லை. தம்பியைப் பற்றி மறந்தே போனாள்.

www.tamilnesan1981.blogspot.in

திடீரென்று ஆகாயத்தில் காட்டு வாத்துகள் கூட்டமாக வந்தன. அந்தப் பக்கத்தில் அத்தகைய வாத்துகள் அதிகம். பார்ப்பதற்கு அன்னப் பறவைகளைப்போல இருந்தாலும் அவை வாத்துகள்தாம். வெள்ளை வெளேர் என்ற நீண்ட இறக்கைகளை விரித்தபடி அவை வெகுதூரம் பறந்து செல்லும். அப்படி வந்த வாத்துக் கூட்டத்தில்– சில வாத்து கள் குபீரென்று கீழே பாய்ந்து சின்னப் பாப்பாப் பையனைத் தூக்கிக் கொண்டு பறந்து போய்விட்டன.

சின்னப் பெண் சிங்காரி விளையாடிக் களைத்துப் போய் வீட்டுக்கு வந்தாள். அப்போதுதான் அவளுக்குத் தம்பியின் நினைவு வந்தது. அவனைக் காணாமல் போகவே அவளுக் குப் ப்கீர் என்றது. 'ஐயோ! அம்மா வந்து கேட்டால் என்ன சொல்லுவேன்?' என்று தவித்துப் போனாள். அங்கும் இங்கும் தேடினாள். எங்கும் காணவில்லை. ஆனால் தம்பி இல்லாமல் தாயாரைச் சந்திக்க அவளுக்குத் தைரியமில்லை. ஆகவே தேடிக்கொண்டே போனாள். தம்பியின் பெயரைக் கூறிக் கூப்பிட்டுக்கொண்டே நடந்தாள். பெரியவர்கள் பேச்சை லட்சியம் செய்யாமல் நடந்துகொண்டதற்கு வருந்திக் கண்ணீர் விட்டுக் கொண்டே ரொம்ப ரொம்பத் தூரம் போய் விட்டாள்.

தூரத்தில் ஒரு குடிசை தெரிந்தது. களைத்துச் சோர்ந்து போன சிங்காரி, அதை நோக்கி நடந்தாள். குடிசையினுள்ளே ஒரு தொண்டு கிழவி உட்கார்ந்திருந்தாள். என்ன ஆச்சரியம்! அவளுக்கு அருகே அவளுடைய தம்பிப் பயல் வண்ண வண்ணக் கற்களை வைத்துக்கொண்டு விளையாடிக் கொண் டிருந்தான். சிங்காரிக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி; களைப்பெல் லாம் பறந்துவிட்டது; கண்ணீரெல்லாம் உலர்ந்துவிட்டது. களிப்போடு "பாட்டி, பாட்டி, என் தம்பி இங்கே உங்களிடம் எப்படி வந்தான்?" என்று கேட்டாள்.

அடுப்பில் எதையோ காய்ச்சிக் கொண்டிருந்த கிழவி, 'கக்–கக்–கக்' என்று சிரித்தாள். "இவனுடைய அக்காவா நீ? அழகாக இருக்கிறாயே. இவனைக் காட்டுவாத்துகள் தூக்கி வந்து இங்கு போட்டுப் போயின" என்றாள் கிழவி. அவள் ஒரு சூனியக்காரி. குழந்தையைத் தூக்கி வந்தது அவளுடைய வாத்துகள்தாம். ஆனால் இது சிங்காரிக்குத் தெரியாது.

www.tamilnesan1981.blogspot.in

"பாட்டி, பாட்டி! இருட்டிவிட்டது. நான் தம்பியோடு வீட்டுக்குப் போக வேண்டும்" என்றாள்.

பாட்டி மறுபடியும் சிரித்தாள். "அழகுப் பெண்ணே! இந்த வேளையில் தனியாகத் தம்பிப் பாப்பாவுடன் போகலாமா? தவிர நீ ரொம்பக் களைத்திருக்கிறாய்: இரவு இங்கு தங்கி இளைப்பாறிவிட்டுக் காலையில் போகலாம்" என்றாள். சிங்காரியும் அவள் அன்புக்குக் கட்டுப்பட்டாள்.

"இதோ இந்த அடுப்பைக் கவனித்துக்கொள். நான் உங்களுக்கு உணவும் படுக்கையும் தயார் செய்துவிட்டு வருகிறேன்" என்று அடுத்த அறைக்குப் போனாள். சிங்காரி அடுப்பிலிருந்த பாத்திரத்தில் கொதித்துக் கொண்டிருந்ததைக் கிளறிக் கொண்டிருந்தாள்.

"அக்கா, அக்கா! எனக்குப் பசிக்குது" என்றான் தம்பி, அவள் காலைக் கட்டிக் கொண்டு. அப்போது குடுகுடு வென்று ஒரு சுண்டெலி ஓடிவந்தது. தன் முன்னங்கால் களைத் தூக்கிக் கொண்டு, பின்னங்கால்களில் உட்கார்ந்தபடி சிங்காரியைப் பார்த்துப் பேசிற்று. "சின்னப் பெண்ணே, சின்னப் பெண்ணே! அடுப்பில் கொதித்துக் கொண்டிருக்கும் உணவில் எனக்குக் கொஞ்சம் கொடு. உனக்கு ஒரு சங்கதி சொல்கிறேன்" என்றது, தன்னுடைய கீச்சுக் குரலில் மெதுவாக. சிங்காரிக்குச் சுண்டெலி பேசியது வியப்பாக இருந்தது. கொதித்துக் கொண்டிருந்த பதார்த்தத்திலிருந்து கொஞ்சம் எடுத்து ஒரு தட்டில் போட்டு ஊதி, அதன் முன்னால் வைத்தாள்.

சுண்டெலி சொல்லிற்று, "சின்னப் பெண்ணே, அழகுப் பெண்ணே! இங்கே அரை நாழியும் தங்காதே. உன் அன்புத் தம்பிப் பாப்பாவுடன் இப்போதே இங்கிருந்து ஓடிவிடு. அந்தக் கிழவி ஒரு மந்திரக்காரி. உங்கள் இருவரையும் கொல்வதற்காக அடுத்த அறையில் அவள் அரிவாளைத் தீட்டிக் கொண்டிருக்கிறாள்" என்றது. சிங்காரிக்குப் பகீர் என்றது. தம்பியை இழுத்துத் தன் உடம்போடு இறுக்கி அணைத்துக் கொண்டாள். பயத்தில் அவளால் பேசவே முடியவில்லை. சுண்டெலிதான் மறுபடி பேசிற்று.

"சீக்கிரம் ஓடிவிடு, உன் தம்பியுடன்" என்று துரிதப் படுத்தியது. சிங்காரி, தம்பியுடன் ஒரே ஓட்டமாக வெளியில்

www.tamilnesan1981.blogspot.in

ஓடினாள். வெளியில் ஒரே இருட்டு. ஆனால் அவள் உள்ளத்தின் பயமோ அவளை விரட்டிக் கொண்டிருந்தது. கண்மண் தெரியாமல் தம்பியைத் தூக்கிக் கொண்டு ஓடினாள், ஓடினாள், ஓடிக் கொண்டே இருந்தாள்.

அடுத்த அறையிலிருந்து கிழவி குரல் கொடுத்தாள், சற்றைக்கொருதரம். "சின்னப் பெண்ணே, சிங்காரியே, அடுப்பில் உள்ளதை விடாமல் கிளறிக் கொண்டிருக்கிறாயா?" என்று.

"கிளறிக் கொண்டிருக்கிறேன். பாட்டி!" என்று பதில் வந்தது. பதில் கூறியது சிங்காரியல்ல— சுண்டெலி! அடுத்த அறையில் எல்லாம் தயார்ப்படுத்திவிட்டு வந்தாள் கிழவி. ஆனால் அங்கு யாரையும் காணாது திகைத்தாள்; குதித்தாள்; கோபத்தில்! "தப்பி விட்டாளே தம்பியுடன்!" என்று படபடத்தாள். "விடமாட்டேன் அவர்களை. எப்படியும் பிடித்து விடுவேன்" என்று வீறாப்புடன் சபதமிட்டாள்.


சிங்காரி தம்பியைத் தூக்கிக்கொண்டு இரவெல்லாம் ஓடினாள். பொழுது விடிந்தபிறகும் அவள் ஓய்வு கொள்ளவில்லை. சூரியன் மெள்ளமெள்ள வானத்திலே ஏறிக் கொண்டிருந்தான்.

இப்போது தம்பி அக்காவின் கையைப் பிடித்துபடி நடந்தான். அவளால் அதற்குமேல் அவனைத் தூக்கிக் கொண்டு ஓட முடியவில்லை. அவ்வளவு வேகமாகவும் ஓட முடியவில்லை.

"அக்கா அக்கா! பசிக்குத்தான் எதுவும் இல்லை. தாகமாக இருக்கிறது. குடிக்கவாவது கொஞ்சம் தண்ணீர் கொடு" என்றான். சிங்காரிக்கும் தாகம் நாக்கை வரட்டியது. ஆனால் மந்திரக்கிழவியைப் பற்றிச் சுண்டெலி சொல்லிய பிறகு அவளால் எதையுமே நம்பமுடியவில்லை. எங்கு எதில் என்ன மந்திரம் இருக்குமோ என்று பயந்து நடுங்கினாள். "தம்பி, தம்பி! தாகத்தைத் தாங்கிக்கொள். விரைவிலேயே நாம் நம் குடிசைக்குப் போய்விடுவோம். அங்கு பயமின்றி எதையும் உண்ணலாம். குடிக்கலாம்" என்றாள். அக்காவின் வார்த்தைக்கும் அவள் அன்புக்கும் கட்டுப்பட்டுக் கொஞ்ச நேரம் பேசாதிருந்தான். ஆனால் அவனால் தாகத்தைத் தாங்க முடியவில்லை. தவிர, கண்ணுக்கெட்டிய தூரம் வரை நீர்நிலையே காணோம். பாதையோரத்தில் ஒரு சின்னக்குழி. அதில் கொஞ்சம் தண்ணீர் தேங்கியிருந்தது. அது ஒரு

www.tamilnesan1981.blogspot.in

ஆட்டின் குளம்பு செய்த குழி. அதில் தான் தண்ணீர் தேங்கி யிருந்தது. முன்னால் அக்காவைப் போக விட்ட தம்பி சட்டென்று குனிந்து அந்தத் தண்ணீரை உறிஞ்சிக் குடித் தான். அத்தனை தாகம் பாவம், அவனுக்கு. அடுத்த விநாடி அவன் ஒரு ஆட்டுக்குட்டியாக மாறிப் போனான்!



தன் விரலைப் பிடித்து வந்த கை நழுவியதைக் கண்டு சிங்காரி திரும்பினாள். அங்கே தம்பியைக் காணவில்லை. ஓர் அழகிய ஆட்டுக்குட்டி நின்று கொண்டிருந்தது. அவளுக்குத் திக்கென்றது. "ஐயோ! இதென்ன?" என்றாள் பதறிப்போய். ஆட்டுக்குட்டி பேசியது "அக்கா, அக்கா! நான்தான் உன் தம்பி. நீ நம் அம்மாவின் பேச்சைக் கேட்காததனால் இத்தனை கஷ்டப்படுகிறாய். நான் உன் வார்த்தையைக் கேட்காததனால் ஆட்டுக்குட்டியாகிப் போனேன். இந்தக் காடு அந்த மந்திரக்காரியின் ஆளுகைக்கு உட்பட்டது என்பதை ஆட்டுக்குட்டியான பிறகுதான் புரிந்துகொண்டேன்" என்றான். பாவம், சிங்காரி! ஆட்டுக்குட்டியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு 'கோ'வென்று அழுதாள்.

ஆட்டுக்குட்டி துள்ளித் துள்ளி ஓடிவர அவள்தன் பிரயா ணத்தைத் தொடர்ந்தாள். இனி நடக்க முடியாது என்ற நிலை யில் பாதையோரத்தில் ஒரு பாறைமீது அமர்ந்து விக்கி விக்கி அழலானாள். அப்போது அவ்வழியாக ஒரு தேர் வந்தது. அதில் ஓர் அரசன் அமர்ந்திருந்தான். அவன் அடுத்த நாட்டு இளவரசன். முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு ஒரு பெண் அழுது கொண்டிருப்பதையும், அருகே அழகான ஓர் ஆட்டுக்குட்டி அவள் முகம் பார்த்தபடி பரிதாபமாக நிற்பதை யும் கண்டு–தன் தேரை நிறுத்தினான். அவளிடம் வந்து அன்புடன் அவள் வேதனையின் காரணம் கேட்டான்.

www.tamilnesan1981.blogspot.in

சின்னப் பெண் சிங்காரி தன் சோகக் கதையையெல் லாம் அவனிடம் கூறினாள்.

"இதற்காக அழுவானேன், அழகுப் பெண்ணே! நீ என் அரண்மனைக்கு வா. உன்னை அரசியாக்குகிறேன். உன் அருமைத் தம்பி ஆட்டுக்குட்டியும் நம்முடனேயே உண் ணட்டும், உறங்கட்டும்" என்று கூறி அவளைத் தன் தேரில் ஏற்றிக்கொண்டு அரண்மனைக்குப் போனான். அங்கே சிங்காரியைத் தன் மனைவியாக்கிக் கொண்டான். சிங்காரி யும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தாள். ஆட்டுக்குட்டியும் அரண்மனைத் தோட்டம் முழுதும் குதித்து விளையாடிக் குஷியாகப் பொழுது போக்கிற்று.

ஒருநாள் இளவரசன் வேற்றுநாட்டுக் காட்டுக்கு வேட்டை யாடச் சென்றான். அரண்மனை உப்பரிகையில் உட்கார்ந்து காற்று வாங்கிக் கொண்டிருந்தாள் சிங்காரி. அப்போது ஒரு பெண் அங்கு வந்தாள். அவள் கையைக் காட்டும்படி சொன் னாள். ரேகையைப் பார்த்து ஆரூடம் கூறினாள். அவள் வாழ்க்கையில் நடந்ததையெல்லாம் அப்படியே தப்பாமல் கூறினாள், அந்தக் குறி சொல்பவள். சிங்காரிக்கு அவளை ரொம்பப் பிடித்துப் போயிற்று. இனிமேல் தன் வாழ்க்கையில் நடக்கப் போவதைப் பற்றிக் கேட்டாள். "அதை இங்கே சொல்ல முடியாது. என்னோடு தனியாக வந்தால் சொல்லு கிறேன்" என்றாள்.

சிங்காரியும் வருங்காலத்தை அறிந்துகொள்ளும் ஆவ லில் குறிசொல்பவளுடன் அரண்மனையிலிருந்து யாருக்கும் தெரியாமல், யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பி னாள். குறி சொல்லும் குறத்தியாக வந்திருப்பவள் மந்திரக் கிழவி என்று– பாவம் சிங்காரிக்குத் தெரியுமா? அக்காவின் பின்னாலேயே ஆட்டுக்குட்டித் தம்பியும் சென்றது.

ஊருக்கு வெளியே ஒரு குன்றின்மீது ஏறினாள் குறத்தி. கீழே ஒரு காட்டாறு ஓடிக்கொண்டிருந்தது. சட்டென்று குறத்திதன் சொரூபத்தைக் காட்டினாள். சிங்காரி மீது பாய்ந்தாள். அவளைக் கீழே தள்ளிக் கட்டினாள். சிங்காரி கதறக்கதற, அவள் உடலோடு ஒரு பாறையையும் சேர்த்துக் கட்டி, கீழே காட்டாற்றில் உருட்டிவிட்டாள். பிறகு மந்திரக் கிழவி சிங்காரியாக உருமாறி அரண்மனைக்குத் திரும்பி

www.tamilnesan1981.blogspot.in

னாள். அவளை யாரும் சந்தேகிக்கவே இல்லை. வேட்டையி லிருந்து திரும்பிய ராஜகுமாரனுங்கூட— போலி மனைவியைப் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் ஆட்டுக்குட்டிக்கு மட்டுமே அத்தனையும் தெரியும். அதனால் அக்காவுடன் மட்டுந்தான் அதற்குப் பேச முடியும், மற்றவர்களுடன் பேசமுடியாது. பிறர் பேசுவதை மட்டும் புரிந்துகொள்ளும். தனிமையில் இருக்கும் போது தனக்குத்தானேயும் வாய்விட்டுப் பேசிக் கொள்ளும்.

அக்கா மறைந்த பிறகு அது உண்ணவில்லை, உறங்க வில்லை. அரசகுமாரன் அதன் நிலை கண்டு வருந்தினான். "ஏன் இப்படி உன் தம்பி ஏங்கிப் போகிறான்?" என்று கேட்டான் மனைவியிடம். அப்போதுதான் அவளுக்கு அந்த ஆட்டுக்குட்டி சிங்காரியின் தம்பி என்பது புரிந்தது. அதைக் கண்காணிக்கலானாள். அது சிங்காரியைக் கட்டிக் காட்டாற்றில் வீசிய அந்தப் பாறைக்குப் போய் நின்றுகொண்டு, "அக்கா, அக்கா! நீ ஆற்றுக்குள்ளிருந்து வரமாட்டாயா? என் வருத்தத்தைப் போக்கமாட்டாயா?" என்று புலம்புவதை ஒளிந்திருந்து கேட்டாள் கிழவி. 'இது உயிருடன் இருந்தால் நமக்கு ஆபத்து' என்று உணர்ந்து ராஜகுமாரனிடம் நைச்சிய மாக அதைக் கொன்றுவிடும்படி கேட்டுக்கொண்டாள். முத லில் அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. "உன் தம்பியையா கொல்லச் சொல்லுகிறாய்?" என்று பதறிப் போனான். ஆனால் போலிச் சிங்காரியோ, "ஆட்டுக்குட்டி என்னுடைய தம்பி என்றால் என்னை எல்லாரும் ஏளனம் செய்யமட்டார் களா? அவன் மறுபடி உருமாற முடியாதபோது, இப்படி வாழ்ந்து உங்களுக்கும் எனக்கும் அவமானத்தை அளிக் கலாமா?" என்று சமத்காரமாக அவன் மனத்தை மாற்றிச் சாகசமாடினாள். முடிவில் அவனும் ஒப்புக் கொண்டான்.

கொலையாளியைக் கூப்பிட்டு உத்தரவிட்டான். இதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தது அந்த ஆட்டுக்குட்டி. கொலையாளி மறுநாள் காலை அதைக் கொன்றுவிடுவ தாகக் கூறி, ஆட்டை இழுத்துப்போய்க் கட்டிப் போட்டான். இரவிலே அது தன் கட்டுகளைக் கடித்துத் துண்டித்துக் கொண்டு காட்டாற்றின் கரைக்கு ஓடிற்று. அதன் சின்னக் கறுப்புக் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. "அக்கா, அக்கா, அன்பு அக்கா! ஆற்றுக்குள்ளிருந்து வர மாட்டாயா அக்கா? என்னைக் கொல்லக் கத்தியைத் தீட்டிக்

www.tamilnesan1981.blogspot.in

கொண்டிருக்கிறான் அரண்மனைக் கொலைக்காரன்" என்று கதறியது தனிமையில்.

ஆற்றிலிருந்து அதன் கதறலுக்குப் பதில் வந்தது. "சின்னத் தம்பி என் செல்லத் தம்பி! நான் என்ன செய்வேன்? கனமான பாறாங்கல்லுடன் என்னைக் கட்டிப் போட்டிருக் கிறாளே பாவி! பஞ்சு மணலுக்குள் நான் தஞ்சமடைந்தி ருக்கிறேனே. எப்படித் தம்பி என்னால் மேலே வர முடியும்?" சோகமான குரலில் நெஞ்சடைக்கக் கூறினாள் சிங்காரி.

கொலையாளி காலையில் ஆட்டிக்குட்டியைக் காணாமல் திடுக்கிட்டான். ராஜாவின் ஆக்கினையாயிற்றே. ஆட்டுக் குட்டியைத் தேடிக்கொண்டே ஆற்றங்கரைக்கு வந்தான். அங்கே, ஆட்டுக்குட்டி ஆற்று நீரை நோக்கிக் கத்துவதையும், ஆற்றிலிருந்து வரும் பதில் குரலையும் கேட்ட அவன் அதிசயம் அடைந்து, ஓடோடிப் போய் அரசகுமாரனிடம் இரகசியமாக விஷயத்தைக் கூறினான்.

அரசகுமாரன் வீரர்களுடன் ஆற்றங்கரைக்கு விரைந் தான். வலைவீசச் செய்தான். கல்லோடு கட்டுண்டு கிடந்த சிங்காரி மேலே இழுக்கப்பட்டாள். அவள் கட்டுகளை அகற்றி அரண்மனைக்குக் கொண்டு வந்து வெந்நீரிலே குளிப் பாட்டினார்கள். சிங்காரியின் உடலில் உயிர் வந்தது. கண் விழித்தாள். முன்னங் கால்களைத் தூக்கிக் குதிபோட்டது ஆட்டுக்குட்டி. அதை ஆசையோடு தழுவிக் கொண்டாள்; அரசகுமாரன் அவர்கள் இருவரையும் சேர்த்து அணைத்துக் கொண்டான்.

இதற்குள் போலி சிங்காரியான மந்திரக்காரியைக் கொலை காரனிடம் ஒப்படைத்திருந்தான் ராஜகுமாரன். கொலை களத்தில் அவள் தலை உருண்ட அதே வேளையில் ஆட்டுக் குட்டியின் உருவம் மறைந்தது. அங்கு சிங்காரியின் சின்னத் தம்பி சிரித்துக் கொண்டு நின்றான்.

எல்லாருடைய ஆனந்தமும் எப்படி இருந்திருக்கும்? இந்தக் கதையைக் கேட்கும் உங்களுக்கு ஏற்பட்டுள்ள மகிழ்ச்சியைப் போலத்தானே!

www.tamilnesan1981.blogspot.in



''அங்கிள்! இன்னிக்கு நான் ஒரு குட்டிக் கதை சொல்லப் போறேன்- நீங்க கேக்கணும்'' என்றாள் தீப்திக் குட்டி.

''என்ன கதை - எதைப் பற்றிய கதை?'' கேட்டார் அப்பா.

''தந்திரக்கார நரியைப் பற்றியது'' என்றாள் தீப்தி.

''உன்னைப் போலவா?'' என்று சிரித்த அப்பா, "சரி, உன் நரிக் கதையைச் சொல்லு நாங்கள் கேட்கிறோம்'' என்றார்.

## 20. முட்டாள் முதலை!

ஒரு காட்டின் நடுவே ஒரு காட்டாறு ஓடியது. அதில் ஒரு முதலை வசித்து வந்தது. ஆற்றின் கரை ஓரத்தில் ஒரு பாறையின் அடியில் ஒரு பெரிய நண்டும் வாழ்ந்து வந்தது. முதலையும் நண்டும் தோழர்களாக இருந்தன. ஆற்றங் கரைக்கு வரும் பிராணிகளைக் கௌவி இழுத்துக்கொண்டு ஆற்றுக்குள் போய்விடும் முதலை. இதனால் அந்தப் பகுதிக்கு மிருகங்கள் வருவது வரவரக் குறைந்து போயிற்று. முதலைக்குப் பசிக்காதா? பட்டினியினல் பரிதவித்த முதலை தன் நண்பனான நண்டிடம் “தோழா, என்னால் பசியைத் தாங்க முடியவில்லை. எந்தப் பிராணியும் இந்தப் பக்கம் வருவதுமில்லை. தயவு செய்து நீ எனக்காக ஓர் உதவி செய். ஒரு நரியைத் தண்ணீர் குடிக்க இங்கு அழைத்து வா. நான் அதை என் ஆகாரமாக்கிக் கொள்கிறேன்” என்றது.

நண்டு தன் நண்பனின் யோசனைக்கு இணங்கிச் செயல் படவில்லை.

“நண்பனே, ஏன் பேசாமலிருக்கிறாய். இந்த உதவியைக் கூட நீ எனக்குச் செய்யக் கூடாதா?” என்று கேட்டது முதலை.

“நரிக்கு உன் குணம் நன்றாகத் தெரியும். நான் கூப்பிட் டால் அது வருமா?” என்றது நண்டு.

www.tamilnesan1981.blogspot.in

ஆற்றை அடுத்து ஒரு பெரிய மரம் இருந்தது. அது கல்யாண முருங்கை மரம். அந்த மரம் முழுவதும் செவேல் என்று பூக்கள் பூத்துக் குலுங்கின. தரையெல்லாம் பூக்கள் ஏராளமாக உதிர்ந்து கிடந்தன. இதைக் கண்ட முதலைக்கு ஒரு யோசனை தோன்றியது.

"நண்பனே! நான் ஆற்றிலிருந்து வெளியே வந்து தரையில் செத்துப்போனது போல் அசையாமல் கிடக்கிறேன். என் மீது இந்தப் பூக்களையெல்லாம் போட்டு மூடி வை. அதன் பிறகு நீ நரியை நீர் அருந்த இங்கு அழைத்து வா" என்றது நண்டிடம்.

நண்டுக்கு இது நல்ல யோசனையாகப் படவே சம் மதித்தது. முதலை மரத்தடிக்கு நகர்ந்து வந்து முடங்கிக் கொண்டது. நண்டு கீழிருந்த மலர்களையெல்லாம் எடுத்து முதலையின்மீது வைத்து மூடியது. பிறகு நரியைச் சந்திக்கக் காட்டுக்குள் சென்றது.

"எதற்காக நான் உன்னோடு ஆற்றுக்கு வரவேண்டும்?" என்று கேட்டது தந்திரக்கார நரி.

"நீ ரொம்ப நாளாகத் தாகத்தால் தவித்துக் கொண்டிருக் கிறாயே என்றுதான் வந்து கூப்பிட்டேன்" என்று கூறியது நண்டு.

"உண்மைதான். வயிராற நல்ல தண்ணீர் குடித்து எத்தனை நாட்கள் ஆயிற்று. அது சரி, முதலை அங்கே இருக்குமே அது என்ன ஆயிற்று?"


"அதை நினைத்துத்தான் நீ பயப்படுகிறாயா? அது செத்துப்போய்விட்டது. மரத்தடியில் விரைத்துப் போய்க் கிடக் கிறது. அது என் நண்பனாயிற்றே. என் மரியாதையைத் தெரி விக்க அதன் உடலை மலர்களால் மூடிவிட்டு வந்திருக் கிறேன்" என்றது நண்டு.

நரியும்– நண்டு சொல்வது உண்மைதானா என்பதைக் காணக் கிளம்பியது. ஆற்றங்கரைக்கு வந்து நண்டு தூரத்தில் மலர்களால் மூடப்பட்டு மரத்தடியில் முதலை கிடப்பதைக் கண்டது. நரியாயிற்றே, அத்தனை இலகுவில் அதற்கு நம்பிக்கை பிறக்குமா?

"நண்டாரே! இதென்ன விசித்திரமாக இருக்கிறதே.

www.tamilnesan1981.blogspot.in

முதலைகள் இறந்துவிட்டால் அவற்றின் வால் மட்டும் இப்படியும் அப்படியும் அசைந்தபடி துடிக்கும் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் உன் நண்பனான முதலையின் வால் ஆடாமல் அசையாமல் இருக்கிறதே. உண்மையில் அது செத்துப் போயிருக்கிறதா அல்லது..."



கண்மூடிப் படுத்திருந்த பைத்தியக்கார முதலை, கைக்கு வந்த உணவு வாய்க்கு எட்டாமல் போய்விடப் போகிறதே என்று – வேகவேகமாகத் தனது வாலை மேலும் கீழுமாக ஆட்டியது! அவ்வளவுதான். அதன் பிறகுமா நரி அங்கு நின்று கொண்டிருக்கும்?

"நண்டாரே! என்னை ஏமாற்றி, உனது நண்பனுக்குப் படையல் வைக்கப் பார்க்கிறீரா?" என்று சொல்லிக்கொண்டே காட்டுக்குள் ஓடி மறைந்தது குள்ளநரி.

www.tamilnesan1981.blogspot.in



''இன்று என்ன கதை கேட்கும் கூட்டம் குறைவாக இருக்கு'' என்றார் அப்பா.

''அது வந்து அங்கிள்—நம்ம கோபு, ராமு, மணி, மீனா, பட்டு, சீதா, ரவி எல்லாரும் இன்னிக்கு அவாளுடைய அப்பா, அம்மாவோட சர்க்கஸ் பார்க்கப் போயிட்டாங்க. இன்னிக்குக் கடைசி நாளாம்'' என்றான் ஹரீஷ்.

''ஓ! அதானா? சரி, உங்களுக்கு நான் சர்க்கஸ் பற்றியே ஒரு கதை சொல்றேன்'' என்று தொடங்கினார் அப்பா.

# 21. கரம் மசாலா பாப்கார்ன்

ரங்கன் குதிபோட்டுக் கொண்டு ஓடினான். அவன் கையில் முழுசாக ஐந்து பத்துப் பைசாக்கள் இருந்தன. ஊரிலிருந்து வந்திருந்த அவன் மாமா அவனுக்குப் பரிசாகக் கொடுத்த பைசாக்கள் அவை. நேரே ராவுத்தர் கடையை நோக்கி ஓடினான் ரங்கன். அவனுக்குப் பிடித்த மசாலா பாப்கார்ன் அங்குதானே கிடைக்கும்?

கடையில் கூட்டமில்லை. ராவுத்தர் மட்டும் கல்லாப் பெட்டியின் அடியில் காசுகளை எண்ணிக் கொண்டிருந்தார். ரங்கனைக் கண்டதும், "வா, தம்பி! என்ன வேணும்? ஏன் இப்படி ஓடி வந்தே? உன்க்கு மூச்சு இறைக்குதே?" என்றார்.

"கரம் மசாலா பாப்கார்ன் இருக்குதா?" என்று கேட்டான் ரங்கன்.

"நிறைய இருக்குது தம்பி. காலையிலே வந்திருந்தா கிடைச்சிருக்காது. இப்பத்தான் புது 'ஸ்டாக்' வந்திருக்கு? எத்தனை பாக்கெட்டுகள் வேணும்?" என்றார் ராவுத்தர்.

"ஒண்ணு போதும். அதுக்குத்தான் காசு இருக்கு என் கிட்டே" என்று ரங்கன் ஐம்பது பைசாவைக் கொடுத்தான்.

www.tamilnesan1981.blogspot.in

ராவுத்தர் ஒரு பாலித்தீன் பையிலிருந்த பாப்கார்னையும் மீதி ஐந்து பைசாவையும் ரங்கனிடம் கொடுத்துக்கொண்டே, "தம்பி! உன் சிநேகிதங்க கிட்டேயெல்லாம் சொல்லு. ராவுத்தர் கடையிலே நல்ல பாப்கார்ன் நிறைய வந்திருக் குன்னு..." என்றார்.

"ஓ! சொல்றேனே!" என்று கூறிக்கொண்டே ஓடினான் ரங்கன்.

"பாவிப் பயல் இருபது பாக்கெட்டுக்கு ஆர்டர் கொடுத் திருக்க, ஐம்பது பாக்கெட்டைத் தலையிலே கட்டிட்டுப் போயிட்டான். எப்படித்தான் இத்தனையும் விக்கப் போவுதோ!" என்று அலுத்துக்கொண்டார் ராவுத்தர்.

வீட்டுக்குத் திரும்பும்போது தேர்முட்டிப் பக்கமாகப் போனான் ரங்கன். அங்கு வழியில் மழைநீர் தேங்கிய ஒரு பெரிய குட்டை இருக்கும். அதில் எப்போதும் ஊரில் உள்ள எருமைகளும் வாத்துக்களும் உல்லாசமாக விளையாடிக் கொண்டிருக்கும். யாரும் அவைகளை லட்சியம் செய்ய மட்டார்கள். அவையும் யாரையும் லட்சியம் செய்யாமல் குட்டை நீரில் குஷியாக நீந்திக்கொண்டிருக்கும். இன்று என்ன அதிசயம்! குட்டையைச் சுற்றி ஒரே கூட்டம்! ரங்கன் எம்பிப் பார்த்தான். ஏதும் தெரியவில்லை. அவன் குள்ளம், ஆகவே கூட்டத்துக்குள் புகுந்து தலையை நுழைத்துப் பார்த்தான். கூட்டத்துக்கான காரணத்தை அறிய ஆவல் அவனுக்கு.

அங்கே... ? என்ன ஆச்சரியம்! எருமைகளோ வாத்துக் களோ இல்லை. நட்ட நடுக் குட்டையில் அது என்ன மிருகம்? பெரிய தலை, பூத உடல்... ஓ! நீர் யானை யல்லவா இது? இது எப்படி வந்தது இங்கே? ரங்கனின் குழப்பம் அங்கு கூடியிருந்தவர்களின் பேச்சைக் கேட்டபோது தெளிந்தது.

"ஊரிலே சர்க்கஸ் வந்திருக்கில்லையா? அதிலே இருக் கிறதாம் இந்த மிருகம். அவங்க கவனக் குறைவா இருந்த போது இது வெளியே கிளம்பி வந்துடுச்சி..."

"ஆமா! விறகுபேட்டைக்கிட்டே டேராப் போட்டிருக்குதே புதுச் சர்க்கஸ் கம்பெனி, இன்னிலேயிருந்துதான் 'ஷோ'

www.tamilnesan1981.blogspot.in

ஆரம்பம். இது நீர் யானை. இதுக்குத் தண்ணீன்னா ரொம்பக் குஷி. அடேயப்பா, எத்தனை பெரிய தலை இதுக்கு!"

ரங்கனுக்கு இப்போது எல்லாம் விளங்கி விட்டது. புதிதாக வந்துள்ள சர்க்கஸ் கம்பெனி, இந்த நீர் யானைப் படத்தைப் போட்டே போஸ்டரெல்லாம் ஒட்டியிருந்தது. பாவம் வாத்துக் கள் 'க்வாக் க்வாக்' என்று கூச்சலிட்டபடி எதிர்க் கரையில் பீதியடைந்து போய்க் கூட்டமாய் ஒண்டியபடி நின்றிருந்தன. தீயணைப்புப் படைக்கு ஆள் அனுப்பியிருக் கிறார்களாம்— நீர் யானையை ஏரியிலிருந்து கிளப்பிக் கொண்டு போக. சர்க்கஸ் கம்பெனி நிர்வாகிகள் கவலை யோடு குட்டைக்கரையில் நின்று கொண்டிருந்தார்கள்.

'கிணிங் கிணிங்' என்று விடாமல் தொடர்ந்து கேட்ட மணியோசை தீயணைப்பு வண்டி வருவதை அறிவித்தது. "வழி விடுங்கள், வழி விடுங்கள்" என்ற குரல் பரபரப்பை ஏற் படுத்தியது கூட்டத்தில். ஃபயர் என்ஜின் வண்டி ஆட்களுடன் குட்டைக்கரைக்கு வந்து நின்றது. நெருப்பணைக்கும்போது, நீரைப் பீச்சியடிக்க உதவும் குழாய் மூலம் ஹிப்போமீது நீரை வேகமாக அடித்தால் அது கரையேறி விடும் என்று முடிவு செய்தார்கள். அதன்படி மடித்துச் சுருட்டி வைக்கப்பட்டிருந்த தேர் வடம் போன்ற குழாயைப் பிரித்துப் பரபரப்புடன் செயல் பட்டபோது, நீர் யானை குப்பென்று குட்டை நீருக்குள் முங்கி மூழ்கிவிட்டது. அதன் சிறிய காதுகளும் பிதுங்கிய கண் களும் மட்டுமே நீர் மட்டத்துக்கு மேல் தெரிந்தன. இந்த நிலையில் அதன்மீது எப்படித் தண்ணீரைப் பிச்சியடிப்பது? குட்டையிலிருந்து அதைத் தங்களால் வெளியேற்ற முடியா தென்று தீயணைப்புப் படையினர் தண்ணீர்க் குழாய்களைச் சுருட்டிக்கொண்டு 'டிங் டிங் டிங்' என்று மணியடித்தபடியே திரும்பிப் போனார்கள்.

இதற்குள் சர்க்கஸ் நிர்வாகிகள் ஏற்பாடு செய்திருந்தபடி ஒரு லாரி வந்தது. அதில் ஒரு பளுதூக்கி (கிரேன்) பொருத் தப்பட்டிருந்தது. குட்டையின் கரை அருகில் பின்னோக்கி அந்தக் கிரேனைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். அதன் யந்திரம் 'கர்ர் ... புர்ர்' என்று சத்தமிட்டது. கிரேன் துதிக்கை போல் குட்டை நீரில் ஹிப்போவின் மீதாகத் தழைந்தது. அதை அப்படியே தூக்கிக் கரையில் வைத்து விடலாம் என்பது அவர்கள் முடிவு. ஆனால் ஏனோ வெகுநேரம்

www.tamilnesan1981.blogspot.in

முயன்றும் முடியவில்லை. ஹிப்போவை அதன் நிலையிலிருந்து அசைக்கவே முடியவில்லை. அதைத் தூக்கும் அளவுக்கு அந்தக் கிரேனுக்குச் சக்தி இல்லையோ, அல்லது அதைத் தூக்க வசதியான தோது கிடைக்கவில்லையோ? எப்படியோ கிரேனும் தோல்வி கண்டு தொங்கிய முகத்துடன் குட்டைக் கரையை விட்டு நகர்ந்தது.

குட்டைக் கரையைச் சூழ்ந்திருந்த மக்கள், சர்க்கஸ் நிர்வாகிகள், வாத்துக்கள் எல்லோரும் ஹிப்போவைக் குட்டை நீருக்குள்ளிருந்து வெளியேற்றுவது எப்படி என்று தெரியாமல் குழம்பிப்போய் நின்று கொண்டிருந்தார்கள். இதில் வாத்துக்கள்தான் பாவம், தங்கள் உரிமை பறிபோய் விட்டதினாலோ என்னவோ அடிக்கடி இறக்கைகளை விரித்துத் தாவித் தாவி 'க்வாக், க்வாக்' என்று சத்தமிட்டுக் கொண்டிருந்தன.

ரங்கன் இப்போது கூட்டத்தின் முன்னால் குட்டைக் கரையின் ஓரமாக நின்று கொண்டிருந்தான். பாப்கார்ன் சாப்பிட வேண்டும் என்ற நினைவே இல்லாமல் இத்தனையையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். கிரேனும் திரும்பிப் போனபிறகு சட்டென்று அவன் நினைவு பாப்கார்ன்



மீது சென்றது. அதே சமயம் ஹிப்போ தனது பிரும்மாண்ட மான வாயைத் திறந்து கொட்டாவிவிட்டது.

ரங்கனுக்கு என்ன தோன்றியதோ! அவனது விளையாட்டுக் குணம் தலைதூக்கவே, தன் கையிலிருந்த பாப்கார்னில் ஒரு பிடி எடுத்துக் குட்டை நீரில் உள்ள ஹிப்போவின் பக்கம் வீசினான். வெள்ளை வெளேர் என்ற சோளப் பொரி கறுப்பு நீரில் மிதந்தது. அது ஹிப்போவின் கவன்த்தைக் கவர்ந்தது. மிதக்கும் சோளப் பொரிகளைச் சாப்பிடத் தன் நிலையிலிருந்து நகர்ந்து வந்தது ஹிப்போ. எல்லோருடைய விழிகளும் வியப்பினால் விரிந்தன. ரங்கன் இன்னொரு கை அள்ளி வீசினான்.

'க்ளப்' 'சலப்'— ஹிப்போ சோளப் பொரிகளை விழுங்கியபடியே கரையோரமாக வந்தது. ரங்கன் மீண்டும் ஒரு பிடி அள்ளிக் கரைமீது புல்தரையில் வைத்தான். கரம்மசாலா பாப்கானின் ருசி கண்ட நீர் யானை நீரிலிருந்து வெளியேறிப் புல்தரைக்கு வந்தது. சர்க்கஸ் மானேஜருக்கு வியப்பான வியப்பு.

"பலே, பலே! பையா இவ்வளவு சுலபமாக, எங்கள் ஹிப்போவை வெளியேற்றி விட்டாயே!" என்று அவனைத் தூக்கிக் கொண்டு கூத்தாடினார். ரங்கன் கையிலிருந்த பாப்கார்ன் பை காலி! ஹிப்போ 'இன்னும் இல்லையா?' என்பது போலத் தலையை நிமிர்த்திப் பார்த்தது. மறுபடியும் அது குட்டைக்குள் ஓடிவிடப் போகிறதே என்று பயந்து விட்டார் அந்தச் சர்க்கஸ் மானேஜர்.

"தம்பி! பாப்கார்னைக் காட்டியே இதை எங்கள் கூடாரத்துக்குக் கூட்டிக்கொண்டு போய்விடலாம் போலிருக்கிறதே. ஆனால் அதற்கு ஏராளமான பாப்கார்ன் தேவைப்படுமே. நீ எங்கிருந்து வாங்கி வந்தாய் இதை?" என்றார். அவர் அந்த ஊருக்குப் புதிதாயிற்றே.

"கவலைப்படாதீங்க. ராவுத்தர் கடையிலே நிறைய இருக்கு. வாங்க, நான் வாங்கித் தருகிறேன்" என்றான் ரங்கன். அடுத்த சில விநாடிகளில் சர்க்கஸ் கம்பெனியின் கார் ராவுத்தர் கடைக்கு ரங்கனோடு விரைந்தது. அங்கிருந்த அத்தனை பாப்கார்ன் பாக்கெட்டுக்களையும் அள்ளிப் போட்டுக் கொண்டு குட்டைக்குத் திரும்பியது.


www.tamilnesan1981.blogspot.in

ருசிமிக்க பாப்கார்ன் கிடைக்காததால் குளிர்ந்த குட்டைக்குத் திரும்ப முயன்று கொண்டிருந்த ஹிப்போவின் முன்னால் பாப்கார்ன் பாக்கெட்டுகளை உடைத்துக் கொட்டினான் ரங்கன். ஆசையோடு திரும்பியது ஹிப்போ. இப்படியே நிறைய பாப்கார்ன் பாக்கெட்டுகளைக் காலி செய்தே—தன்னைப் பின்தொடர வைத்துச் சர்க்கஸ் கூடாரத்துக்குள், ஹிப்போவுக்காக அவர்கள் வேலியிட்டு அமைத்திருந்த குட்டைக்குள், கொண்டு வந்துவிட்டான் ரங்கன். ரங்கனை எல்லோரும் பாராட்டோ பாராட்டு என்று பாராட்டினார்கள்!

சர்க்கஸ் மானேஜர், "தம்பி, இன்றுதான் சர்க்கஸ் ஆரம்பம். எங்கள் முக்கிய அயிட்டங்களில் ஹிப்போவும் ஒன்று. அது இப்படி ஓடிவிட்டதே என்று ரொம்பக் கவலைப்பட்டு போனேன். நல்லவேளை! உன் சமயோசிதமான செய்கையால் கவலை தீர்ந்தது. நீ தினமும் சர்க்கஸ் பார்க்க வந்துவிடு. உனக்குக் கட்டணம் கிடையாது" என்று அவன் இரு கைகளிலும் மீதமிருந்த இரண்டு பாப்கார்ன் பாக்கெட்டுக்களைக் கொடுத்து நன்றி கூறி அனுப்பினார்.

ராவுத்தருக்குத் தம் சரக்குகளெல்லாம் நொடியில் விற்றுப் போனதில் மகிழ்ச்சி.

வாத்துக்களுக்குக் குட்டையை ஆக்கிரமிப்புச் செய்த ஹிப்போ போனதில் மகிழ்ச்சி. சிறகுகளை விரித்து நீர்மீது பறந்தபடி, ஒன்றையொன்று, துரத்திப் பிடித்து விளையாடின 'க்வாக், க்வாக்' ஒலியோடு.



www.tamilnesan1981.blogspot.in



'' 'கெடுவான் கேடு நினைப்பானா' - இந்தப் பழைய பழமொழி உங்களுக்குத் தெரிந்திருக்குமே'' - என்று கேட்டார் குழந்தைகளை அப்பா.

''தெரியும் அங்கிள்'' என்றனர் குழந்தைகள்.

''அப்படிக் கேடு நினைத்துக் கெட்டவர்களைப் பற்றித் தான் உங்களுக்கு ஒரு கதை சொல்லப் போறேன் இன்றைக்கு'' என்றார் அப்பா.

# 22. குள்ளன் கொடுத்த வரம்

ஓர் அரசருக்கு மூன்று குமாரிகள் இருந்தார்கள். அவர்களுக்குத் தாயார் இல்லை. ஆகவே ராஜகுமாரிகளிடம் மன்னர் உரிமையே வைத்திருந்தார். அரண்மனைத் தோட்டத்தில் ஏராளமான மலர்ச்செடிகளும் பழமரங்களும் இருந்தன. அரசகுமாரிகள் ஆடிப்பாடி மகிழ்வார்கள். பல நேரங்களில் அவர்களோடு மன்னரும் கலந்து கொள்ளுவார். அரசகுமாரிகள் வளர்ந்து பெரியவர்களானார்கள். ஒருநாள் அரசர் அவர்களிடம், “நீங்கள் அரண்மனைத் தோட்டத்தில் எங்கு வேண்டுமானாலும் போகலாம். எந்தப் பழத்தையும் பறித்துச் சாப்பிடலாம். ஆனால் வடக்குக் கோடியிலுள்ள ஒரு பெரிய மாமரத்தின் பழங்களை மட்டும் சாப்பிட்டு விடாதீர்கள். சாப்பிட்டால் அவர்களைப் பூமி பிளந்து பாதாள உலகுக்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிடும்” என்று எச்சரித்தார். குமாரிகளும் அதன்படியே நடப்பதாக ஒப்புக் கொண்டார்கள்.

அடுத்த வருஷம் மாம்புழக் காலம் வந்தது. மரங்களில் பழங்கள் காய்த்துப் பழுத்துக் குலுங்கின. ஒரு காரியத்தைச் செய்யக்கூடாது என்னும் போதுதான், அதில் ஒரு தனி ஈடுபாடும் ஆசையும் ஏற்படும். இது மனித இயல்பு. அரச குமாரிகள் அப்பா குறிப்பிட்ட மரத்தைப் போய்ப் பார்த்தார்கள்.

www.tamilnesan1981.blogspot.in

அற்புதமான அழகோடு பெரிய பெரிய மாம்பழங்கள் காய்த்துத் தொங்கிக் கொண்டிருந்தன. இளவரசிகளுக்கு நாக்கில் நீர் சுரந்தது. ஆனால் அப்பாவின் எச்சரிக்கை நினைவுக்கு வரவே ஏக்கத்துடன் திரும்பிவிடுவார்கள். ஆனால் தினமும் அந்த மரத்தைப் போய்ப் பார்ப்பதை மட்டும் விடவில்லை. ஏதாவது ஒரு பழம் காற்றில் கீழே விழுந்திருக்காதா என்று தேடுவார்கள். ஆனால் பலன் ஏமாற்றம்தான்.

ஒருநாள் கடைக்குட்டி இளவரசி, "நம் தகப்பனார் நம் மீது உயிரையே வைத்திருக்கிறார். அப்படி இருக்க அவர் நம்மைப் பாதாள லோகத்தில் இழக்க நினைப்பாரா? இந்த எச்சரிக்கை நமக்காக இருக்காது. மற்றவர்களுக்காகத் தான் இருக்கும். ஆகவே இம்மரத்தின் பழங்களை நாம் சுவைத்து மகிழலாம்" என்று கூறவே, ஆசையை அடக்க மாட்டாத அக்காமார்களும் அதற்கு இணங்கினார்கள். ஆளுக்கொரு மாம்பழத்தைப் பறித்து உண்டார்கள். அதே சமயம் பூமி பிளக்க மூவரும் அதற்குள் மூழ்கி மறைந்தும் போனார்கள்.

தம் அருமைக் குழந்தைகளைக் காணாத மன்னர் தவித்துப் போனார். நாடெங்கும் வீரர்களைக் கொண்டு தேடச் செய்தார். பலன் இல்லை. "என் குமாரத்திகளை யார் தேடிக்கொண்டு வருகிறார்களோ, அவர்களுக்கு அவர் களையே மனைவியாக்கி வைப்பேன்" என்று நாடு நகரமெங் கும் பறை சாற்றினார். ஏராளமான வீரர்கள் இளவரசிகளைத் தேடிக் கிளம்பினார்கள்.

இப்படிக் கிளம்பியவர்களில் மூன்று சகோதரர்களும் இருந்தார்கள். இவர்கள் வேட்டையாடுவதில் வல்லவர்கள். இளவரசியையும் அதிர்ஷ்டத்தையும் தேடிக்கொண்டு வந்த இவர்கள் எட்டு நாட்கள் பிரயாணத்துக்குப் பிறகு ஒரு பெரிய கோட்டைக்கு வந்தார்கள். அதனுள்ளிருந்த அரண்மனை அற்புதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஒரு பெரிய அறை யின் நடுவே விதம்விதமான உணவுப் பண்டங்கள். அப்போது தான் அடுப்பிலிருந்து இறக்கியவை போன்ற அத்தனை சூட்டுடன், கமகமவென்று வாசனை வீசிக்கொண்டிருந்தன. ஆனால் மனித சஞ்சாரமே இல்லை.

மூவரும் வயிறார உண்டார்கள். பிரயாணக் களைப்பு

www.tamilnesan1981.blogspot.in

நீங்கியதும்— மூவரும் ஒரு முடிவுக்கு வந்தார்கள். ஒவ்வொரு நாளும் மூவரில் ஒருவர் கோட்டையில் தங்க வேண்டியது. மற்ற இருவரும் இளவரசியைத் தேடி அலைய வேண்டியது. அடுத்தநாள் அடுத்தவன் கோட்டையில் தங்க, மற்ற இரு வரும் வெளியே போக வேண்டியது என்று ஏற்பாடு செய்து கொண்டார்கள். அதன்படி மூத்தவன் மறுநாள் கோட்டையில் தங்கி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தான். நண்பகல் வேளை யில் ஒரு குள்ளன் கோட்டைக்கு வந்தான். அவனிடம் பக்குவப்படுத்தப்பட்ட மான் இறைச்சி இருந்தது. அதைத் தன்னிடமுள்ள கத்தியினால் துண்டம் போட்டு மூத்த வேடனுக்கு அளித்தான். அப்போது ஒரு துண்டு இறைச்சி கீழே விழுந்துவிட்டது. அதை எடுக்கும்படி குள்ளன் கேட்டுக் கொண்டான், வேட்டைக்காரனை.

"நீ கீழே போட்டதை நீயே எடுத்துக்கொள்" என்றான் அலட்சியமாக. அது மட்டுமல்ல, குள்ளன் குனிந்து அதை எடுக்கும்போது— அவனைக் காலால் எட்டி உதைத்து, "வேலைக்காரன் யார், எஜமானன் யார் என்பதை இந்த உதை உனக்கு உணர்த்தும்" என்று கொக்கரித்தான். குள்ளன் மௌனமாக வெளியேறினான்.

மறுநாள் இரண்டாவது சகோதரன் கோட்டையில் இருந் தான். அன்றும் குள்ளன் இறைச்சியோடு வந்து அவனுக்கு உபசரித்தான். ஒரு துண்டு கீழே விழுந்தது. அவனும் அகம் பாவத்துடன் குள்ளனை உதாசீனப்படுத்தி அனுப்பினான்.

"மூன்றாம்நாள் கடைசிச் சகோதரன் கோட்டையில் ஓய் வெடுத்துக் கொண்டிருந்தான். இறைச்சியோடு வந்த குள்ளன் கையிலிருந்து ஒரு துண்டு நழுவியது. அதை எடுத்துத் தரும்படி கேட்டான் குள்ளன்.

"எங்களுக்கு உண்ண உணவும் தங்க இடமும் கொடுத்துப் பணிபுரியும் உனக்கு இந்த உதவிகூடவா செய்ய மாட்டேன்? மகிழ்ச்சியோடு எடுத்துத் தருகிறேன்" என்று குனிந்து இறைச்சித் துண்டை எடுத்துக் கொடுத்தான். இதனால் மகிழ்ச்சி அடைந்த குள்ளன், அவனுக்கு இதுவரை யில் யாருக்குமே அளிக்காத தரமான உணவை அளித்தான். "நீ எனக்கு உதவினாய். நானும் உனக்கு உதவப் போகிறேன், அரசகுமாரிகளைக் கண்டுபிடிக்க. பாதாள உலகில் வாழும்

www.tamilnesan1981.blogspot.in

மனிதன் நான். என்னைப் போன்ற குள்ளர்கள் பூமிக்கடியில் ஏராளமாக இருக்கிறார்கள். உன் சகோதரர்கள் உன்னை ஏமாற்றப் பார்ப்பார்கள். ஆகவே அரசகுமாரிகளைக் காண நீ மட்டும் தனியாகச் செல்லவேண்டும். இந்தக் கோட்டைக்கு இரண்டு கல் தொலைவில் ஒரு மலை இருக்கிறது. அதன் உச்சியில் ஒரு கிணறு உண்டு. அதற்குள் ஒரு கூடை மூலமாக இறங்கினால், கிணற்றின் கீழே ஒரு விசாலமான இடம் தெரியும். அங்குதான் அரசகுமாரிகள் இருக்கிறார்கள். அங்கு மூன்று அறைகள் இருக்கும். ஒவ்வோர் அறையிலும் ஒரு ராஜகுமாரி சிறை வைக்கப்பட்டிருக்கிறாள். ஒவ்வோர் அறையையும் 'டிராகன்' என்ற கொடிய மிருகம் காவல் காத்துக்கொண்டிருக்கும். போகும்போது உன் உடைவாளை மறக்காமல் கொண்டு போ. அந்த ராட்சதமிருகத்தின் தலையை வெட்டினால்தான் அவை சாகும். வேறு எவ்வகை யிலும் அவைகளைக் கொல்ல முடியாது" இவ்வளவையும் கூறிவிட்டுக் குள்ளன் மறைந்து போனான்.

அன்று மாலை கோட்டைக்குத் திரும்பிய அண்ணன் மார் இருவரும், 'இன்று பகல்பொழுதை எப்படிக் கழித்தாய்?' என்று தம்பியிடம் கேட்டார்கள். தம்பி நடந்ததையெல்லாம் கூறினான். அண்ணன்களுக்கு அதில் நம்பிக்கை இல்லா விட்டாலும் அந்தக் கிணற்றையும் பார்த்துவிடலாமே என்று முடிவு செய்தார்கள். மறுநாள் காலை மூன்று சகோதரர்



www.tamilnesan1981.blogspot.in

களும் மலை உச்சிக்குப் போனார்கள். முதலில் கிணற்றுக்குள் யார் இறங்குவது என்ன சீட்டுக் குலுக்கிப் போட்டார்கள். முதலில் மூத்தவனும் அடுத்து இரண்டாமவனும் கடைசியாக மூன்றாமவனும் இறங்கவேண்டும் என்று சீட்டு விழுந்தது. கையோடு உறுதியான கயிறும் கூடையும் கொண்டு போயிருந்தார்கள். கூடைக்குள் ஒருவர் அமர மற்ற இருவரும் அதைக் கிணற்றினுள் இறக்கினார்கள். மேலே வர வேண்டுமானால் அதை அறிவிக்க கிணற்றுக்குள் போகிறவன் தன்னுடன் ஒரு மணியைக் கொண்டு போனான். அதை அசைத்து ஒலித்தால்– உடனே மேலுள்ளவர்கள் கூடையை மேலே இழுத்து விடுவார்கள்.

மூத்தவன் கிணற்றின் கீழே போனதும், அங்குள்ள ராட்சத மிருகத்தைக் கண்டானோ இல்லையோ, மணியைப் பலமாக அடித்தான். உடனே தம்பிகள் இருவரும் கூடையை மேலே இழுத்துவிட்டார்கள். மூச்சு வாங்க, வியர்த்து விறு விறுக்க மேலே வந்த அவன் உடல் பயத்தினால் நடுங்கிக் கொண்டிருந்தது. இரண்டாமவனும் இதே மாதிரி அலறி அடித்துக் கொண்டு உடனே மேலே வந்துவிட்டான். கடைசியாக மூன்றாமவனின் முறை வந்தது. கிணற்றின் கடைசி வரையில் தன்னை இறக்கும்படி சொல்லிவிட்டுக் கூடைக்குள் அமர்ந்தான் அவன். கூடை தரையில் போய் இறங்கியதும் கூடையிலிருந்து கீழே குதித்தான். அதன் அறையை நோக்கித் தைரியத்துடன் கையில் கத்தி ஏந்தி முன்னேறினான். அறையினுள்ளே குறட்டை ஒலி கேட்டது. ஓசைப் படுத்தாமல் கதவைத் திறந்தான். அங்கு ஓர் அழகிய பெண் உட்கார்ந்திருந்தாள். அவள் அரசகுமாரியாகத் தான் இருக்க வேண்டும். அவள் மடியில் தனது தலையை வைத்தபடி தூங்கிக் கொண்டிருந்தது அந்தக் கொடிய மிருகம். மூன்றாவது குட்டி வேட்டைக்காரன் தாமதிக்கவில்லை. டிராகனின் தலையை ஒரே வீச்சில் சீவித் தள்ளினான். தனக்கு விடுதலை கிடைத்ததில் அந்த இளவரசிக்கு மகிழ்ச்சியோ மகிழ்ச்சி. அந்த வீரனுக்குத் தன் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியைப் பரிசாகக் கொடுத்தாள்.

அடுத்த அறையில் ஒரு டிராகன் இளவரசியின் மடியில் தலை பதித்துத் தூங்கிக் கொண்டிருந்தது. அதையும் கொன்று அவளுக்கு விடுதலை அளித்தான். மூன்றாவது

www.tamilnesan1981.blogspot.in

அரசகுமாரியின் மடியில் தூங்கிக் கொண்டிருந்தது இன்னொரு டிராகன். இரண்டு டிராகன்களைக் கொன்றவனுக்கு மூன்றாவது எம்மாத்திரம்? மூன்று ராஜகுமாரிகளையும் விடுதலை செய்துவிட்டான். ராஜகுமாரிகள் அந்த வாலி பனைக் கடவுளுக்கும் மேலாக மதித்து வாழ்த்தி மகிழ்ந்து போனார்கள்.

மேலே வருவதற்கு அடையாளமாக மணியை ஒலித்தான். கூடை கீழே வந்தது. ஒவ்வொரு ராஜகுமாரியாக அதில் ஏற்றி மூவரையும் மேலே அனுப்பினான். கடைசியில் தான் மேலே போக மணி ஓசை கொடுத்ததும் கூடை கீழே வந்தது. அப்போதுதான் குள்ளன் தன் அண்ணன்மார்களைப் பற்றி எச்சரித்தது நினைவுக்கு வந்தது குட்டித்தம்பிக்கு. ஆகவே கூடைக்குள் ஒரு பெரிய கல்லைத் தூக்கி வைத்துக் கயிற்றை ஆட்டி மேலே இழுக்கும்படி சமிக்ஞை செய்தான். கூடை மேலே உயர்ந்தது. பாதி வழி போனதும் மேலே இருந்த அண்ணன்மார்கள் இருவரும் கயிற்றைத் துண்டித்து விட்டார்கள். இப்படி ஏதாவது நடக்கும் என்று அவன் எதிர் பார்த்தது நடந்தேவிட்டது. கல்லுடன் கூடை பொதீரென்று கீழே விழுந்தது. ரர்ஜகுமாரிகளுக்கு விடுதலை அளித்த தங்கள் தம்பியை ஒழித்துவிட்டோம் என்று மகிழ்ச்சி அடைந் தார்கள் அண்ணன்மார்கள். தங்களை மீட்டது யார் என்ற உண்மையைக் கூறினால், அவர்களைக் கொன்றுவிடுவதாகப் பயமுறுத்திப் பணியவைத்து, அரண்மனையை நோக்கிப் பிரயாணமானார்கள் இளவரசிகளுடன் அவ்விருவரும்.



www.tamilnesan1981.blogspot.in

குள்ளனின் வார்த்தையைக் கேட்காமல் அண்ணன்மார் களுடன் வந்ததின் பலன், தான் அந்தப் பாழுங் கிணற்றில் பரிதாபமாகச் செத்து மடிய வேண்டியதுதான்– என்று வேதனையுடன் சுற்றுமுற்றும் பார்த்தான் குட்டி வேடன். அப்போது சுவரிலுள்ள ஒரு மாடத்தில் ஒரு புல்லாங்குழல் இருப்பதைக் கண்டான்.

“ஆமாம், இது இப்போது எதற்கு? இதை வாசித்தால் கேட்டு மகிழவோ, ஆனந்தப்பட்டு ஆடவோ இந்தப் பாழுங் கிணற்றில் யார் இருக்கிறார்கள்?” என்று அலட்சியமாகக் கூண்டுப் புலியாக இங்கும் அங்கும் நடந்து கொண்டே யிருந்தான்.

தரைப் புழுதி, பட்டுப் போலானதுதான் மிச்சம். ஒரு வழியும் ஏற்படவில்லை. அடிக்கடி புல்லாங்குழலின் நினைவு மட்டும் வந்து கொண்டிருந்தது. வெறுப்புடன் அதை எடுத்து மூன்று ஒலிகளை உண்டாக்கினான். அடுத்த விநாடியே மூன்று குள்ளர்கள் வந்து அவன் முன்னே குதித்தார்கள். வியப்படைந்த வேட்டைக்காரன் வேகமாகப் பலவித ஒலிகளை உண்டாக்கினான் தொடர்ந்து. ஒவ்வோர் ஒலிக்கும் ஒரு குள்ளன் வீதம் வந்து குழுமிவிட்டார்கள். அத்தனை குள்ளர்களும் அவனுக்கு என்ன வேண்டும் என்று கேட்டார்கள்.

“நான் உட்னே மேலே போகவேண்டும்” என்றான் குட்டித் தம்பி. குள்ளர்கள் அவனுடைய தலை முடியை ஆளுக்குக் கொஞ்சமாகப் பிடித்துக் கொண்டு மேலே எழுப்பினர்ர்கள். அவர்களோடு அவனும் அந்தரத்தில் மிதக்கலானான். சில விநாடிகளில் குள்ளர்கள் அவனை மேலே கொண்டுவந்து விட்டார்கள். குள்ளர்களுக்கு நன்றி தெரிவித்துவிட்டு அரண் மனையை நோக்கிக் கிளம்பினான். அவன் நகரத்துக்கு வந்த போது நகரில் திருமணக் கோலாகலம் திருவிழாவாக அமர்க் களப்பட்டுக் கொண்டிருந்தது. இளவரசிகளுக்கு நாளைக்குக் கல்யாணமாம்.

குட்டித் தம்பி அவசரம் அவசரமாக அரண்மனைக்குள் புகுந்தான். மன்னர், தம் மூன்று குமாரிகளுடன் உட்கார்ந் திருந்தார் ஓர் அறையில். திடீரென்று அங்கு நுழைந்த அவனைக் கண்ட மூன்று அரசகுமாரிகளும் மகிழ்ச்சியால்

www.tamilnesan1981.blogspot.in

திக்குமுக்காடிப் போய் மூர்ச்சையானார்கள். அரசர் இதைத் தவறாகப் புரிந்துகொண்டு தம் பெண்களுக்குத் தீங்கு செய்ய வந்தவன் என்று எண்ணி அவனைச் சிறையில் அடைக்கும் படி உத்தரவிட்டார். ராஜகுமாரிகளுக்கு நினைவு திரும்பிய தும், சிறையில் அடைத்திருக்கும் வாலிபனை விடுதலை செய்யும்படி கேட்டுக் கொண்டார்கள். காரணம் கேட்ட தந்தையிடம், "உண்மையைச் சொல்வதில்லை என்று சத்தியம் செய்து கொடுத்திருக்கிறோம் அப்பா. அதைக் கூற முடியாது!" என்று அழுதார்கள்.

இதில் ஏதோ சூது இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்ட மன்னர், "என்னிடம் கூற வேண்டாம். இந்த அறை யிலுள்ள குத்துவிளக்கிடம் கூறுங்கள். விளக்கு நம் குலதெய்வம் இல்லையா?" என்று கூறி, அறையை விட்டு வெளியேறி அவர்கள் சொல்வதைக் கேட்கும்படியான ஓர் இடத்தில் மறைந்து கொண்டார். மூத்த இளவரசி நடந்தது நடந்தபடி விளக்குத் தேவதையிடம் கூறி முறையிட்டாள். மன்னருக்கு உண்மை தெரிந்தது.

உடனே மணமகனாகப் போகும் மூத்த சகோதரர்கள் இருவரையும் கைது செய்து கைகளிலும் கால்களிலும் கனமான சங்கிலி மாட்டிப் பாதாளச் சிறைக்குள் தள்ளினார். அங்கு அனுப்பப்படுபவர் மறுபடியும் வெளி உலகைப் பார்ப்பதே கிடையாதாம். சிறைப்பட்டிருந்த குட்டித்தம்பியை வரவழைத்து அவனுக்குத் தம் குமாரிகள் மூவரையுமே மனைவியாக்கி மகிழ்ந்தார் மன்னர்.

www.tamilnesan1981.blogspot.in



*"பொங்கல் பண்டிகையை மனிதர்கள் மட்டும்தானா கொண்டாட வேண்டும்? மிருகங்களும் கொண்டாடினால்? எப்படி இருக்கும். நாம் உழவுத் தொழிலுக்கு உதவும் மாடுகளுக்கு மட்டும் பொங்கல் பண்டிகையில் இடமளிக் கிறோம். இதனால் பொறாமை கொண்ட காட்டு மிருகங்க ளெல்லாம்- மனிதர்களின் தயவின்றியே - பொங்கல் பண்டிகையை விழாவாகக் கொண்டாட முடிவு செய்தால் என்ன ஆகும்? கேளுங்களேன் அந்தக் கதையை!" என்று...*

# 23. ஆமையின் அதிர்ஷ்டம்

காட்டில் உள்ள மிருகங்களெல்லாம் பொங்கல் விழாக் கொண்டாட முடிவு செய்தன. விழா என்றால் விருந்தில் லாமல் இருக்கலாமா? சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல், வடை, பாயசம், கூட்டு, கறி, கோஸுமலி என்று அயிட்டங்கள் ஏராளமாக இருந்தன.

விருந்துக்கு முன்னால் விளையாட்டுப் போட்டிகளுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள், விழாக் கமிட்டியார்.

போட்டிகளில் ஏதாவதொன்றில் வெற்றிப் பெற்றுப் பரிசு பெற வேண்டும் என்று ஆசைப்பட்டது ஆமை.

முதலில் ஓட்டப்பந்தயம். ஆமை தன்னைத் தயார்ப் படுத்திக் கொள்வதற்குள் நடுநிலையாளர் நரியார், "ஓட்டப் பந்தயத்தில் புள்ளிமான் வெற்றிப் பெற்றது" என்று அறி வித்தது. 'இதற்குள்ளாகவா?' என்று ஆமை வியப்புடன் நகர்ந்தபோது மிருகங்களெல்லாம் கலகலவென்று நகைத் தன. முயல்தான் ரொம்பவும் கேலியாக, "ஆமையாரே, பழைய நினைப்போ உமக்கு?" என்று கூத்தாடியது. ஒரு காலத்தில் அது தன்னை ஓட்டப்பந்தயத்தில் வெற்றிகொண்டு

www.tamilnesan1981.blogspot.in

அழியாப் பழியை ஏற்படுத்திவிட்டதற்காக— எப்போதுமே ஆமையிடம் அதற்கு அனுதாபம் கிடையாது. முயலாரின் கேலியினால் தடுமாறிப் போய்'. உருண்டு விழ இருந்த ஆமைக்கு—ஆந்தை கைகொடுக்கவே சமாளித்துக் கொண்டது.

'அடுத்துக் குதிக்கும் போட்டி' என்று அறிவிப்பாளரின் குரல் ஒலித்தது.


ஆமை அதிலும் கலந்து கொண்டது. பாவம் முன்னங் கால்களை ஊன்றித் தாவ முயன்றபோது கிர் என்று ஒரு சுற்றுச் சுற்றியது. அடுத்த விநாடி ஒரு குட்டிக் கரணம் போட்டுத் தன் நிலைக்கு வந்து நின்றது. அப்படியே மல்லாந்த நிலையில், தலையும் வயிறும் ஆகாயத்தை நேக்கிய நிலையில் இருந்திருந்தால்— மிருகங்களின் கேலிக்கு ஆளாகி இருக்கும்? நல்லவேளை, உருண்ட அதே வேகத்தில் நிமிர்ந்து விட்டது.

"தாண்டும் போட்டியில் முயல்தான் முதல்" என்றது நரி. பாவம் ஆமையைச் சூழ்ந்து எல்லாம் கிண்டலும், கேலியுமாகக் கும்மாளமிட்டன. 'நான் நிதானமாக நடந்தால் அதற்காக எந்தப் போட்டிகளிலும் கலந்துகொள்ளக் கூடாதா என்ன?' என்று வேதனைப்பட்டது ஆமை— மனத்துக்குள்.

அடுத்து நீச்சல் போட்டி.

'நான் நன்றாக நீந்துவேன். இதில் வெற்றி எனக்குத்தான்' என்று குதூகலத்துடன் கலந்து கொண்டது ஆமை. ஆனால் வெற்றி என்னவோ வாளைமீனுக்குத்தான் போயிற்று!

அடுத்த போட்டி... !



www.tamilnesan1981.blogspot.in

நரி அறிவித்தது: காட்டில் உள்ள நமக்கெல்லாம் ஒளிந்து கொள்ளுவதைப் பற்றித் தெரியும். நான் என் கண்களை மூடிக்கொண்டு பத்து எண்ணுவேன். அதற்குள் போட்டியில் கலந்து கொள்ளும் மிருகங்களெல்லாம் எங்காவது ஒளிந்து கொண்டுவிட வேண்டும். எந்தப் பிராணியை நான் கடைசியாகக் கண்டுபிடிக்கிறேனோ அதுவே வெற்றி பெற்றதாகக் கருதி பரிசு வழங்கப்படும்.

ஓட்டப்பந்தயம், தாண்டிக் குதித்தல், நீச்சல் எல்லாவற்றிலும் தோல்வி கண்டு துவண்டு போயிருந்த ஆமை, "நான் இந்த பாறைக்கருகில் போய் ஒளிந்து கொள்ளுகிறேன்" என்று கூறி மெதுவாகப் பாறையை நோக்கி நகர்ந்தது. அதன் துரதிர்ஷ்டம், அங்கு மரத்தின் வேர் ஒன்று தடுக்கி... பாவம், இந்தத் தடவை எழுந்திருக்க முடியாதபடி மல்லாந்துவிட்டது. நல்லவேளை! கேலி செய்ய அருகில் யாரும் இல்லை. எல்லாரும் அவரவர் ஒளிந்து கொள்ளப் போய்விட்டார்கள்: உதவி செய்ய ஆந்தையும் இல்லை. முக்கிமுக்கிப் பார்த்தது, நேராக நிமிருவதற்கு சுற்றிச் சுற்றிச் சுழன்றதே தவிர, அதனால் தானாக நிமிரவே முடியவில்லை. பல தடவை இப்படிச் செய்ததினால் ரொம்பவும் களைத்துவேறு போய் விட்டது ஆமை.

"நான் இப்படியே மல்லாந்த நிலையிலேயே கிடக்கிறேன். ஏதோ ஒரு பாறையைப் போல" என்ற முடிவுடன் தன் தலை, கால்கள், வால் எல்லாவற்றையும் உள்ளுக்கு இழுத்துக் கொண்டு அசையாமல் கிடந்தது ஆமை.. அதன் அடிவயிறு பழுப்பும் பசுமையுமாக இருந்தது. பாறையும்கூடப் பழுப்பாகவும், அதன்மீது பாசி படிந்து பசுமையாகவும் இருக்கும் இல்லையா? உடல் பகுதிகளை உள்ளுக்கு இழுத்துக் கொண்ட நிலையில் அது ஒரு பாறைத்துண்டு போலவே இருந்தது.

சற்றைக்கெல்லாம் நரியின் குரல் கணீரென்று ஒலித்தது – ஒன், டு, த்ரி–அதோ முயல். ஒன் டு த்ரீ... அதோ மான்– ஒன், டு, த்ரீ– அதோ ஓநாய்" இப்படியே ஒவ்வொரு மிருகமாகக் கண்டுபிடித்து கொண்டே வந்தது நரி.

"ஆமாம், ஆமையை எங்கே காணோம்?" என்றன எல்லா மிருகங்களும். "எங்காவது மல்லாந்து கிடக்கிறதா?"

www.tamilnesan1981.blogspot.in

"ஆமையாரே ஆமையாரே! நீர்தான் வெற்றி பெற்றீர். மறைவிடத்திலிருந்து வாரும்" என்றது நரி.

ஆமைக்கு நரியின் அழைப்பு காதில் விழுந்தது. ஆனால் அதனால் நிமிர்ந்து நேராக நிற்க முடியவில்லை. பாறை போலிருந்து அது அசைவதை முயல்தான் முதலில் பார்த்தது. "இதோ தலையும் வயிறும் மேலாகக் கிடக்கிறார், ஆமையார்!" என்று தன் கால்களைத் தரையில் தம் தும் என்று தட்டி ஆர்ப்பரித்தது முயல்.

உடனே ஆந்தை ஓடிப்போய் அதற்கு உதவியது. ஆமை தன் சகஜ நிலைக்கு வந்து நின்றது.

"எல்லாரையும்விட நீதான் கண்டுபிடிக்க முடியாத படிக்கு மறைந்திருந்தாய். ஆகவே ஒளிந்துகொள்ளும் விளையாட்டுக்கு உனக்கே முதல் பரிசு!" என்று தன் முடிவைத் தெரிவித்தது நரி.

"மல்லாந்து போய் மறைந்திருக்கவேண்டும் என்று தோன்றியதே உனக்கு. நீ புத்திசாலிதான். உன் உடலின் அடிப்பாகம் பாறையைப் போலவே இருக்கிறது" என்று பாராட்டியது ஆந்தை.

ஆமைக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி, பெருமையான பெருமை!

"நேராக இருப்பதைவிட மல்லாந்து கிடக்கும்போது தான் எனக்கு அதிர்ஷ்டம் அடிக்கிறது!" என்றது.



www.tamilnesan1981.blogspot.in



*"அங்கிள்...." என்று தயங்கியபடி நின்றாள் சரோஜா.*

*"என்னம்மா கண்ணு?" என்று கேட்டார் அப்பா.*

*"வந்து... வந்து... இன்னிக்கு உங்களுக்கெல்லாம் ஒரு கதை சொல்லலாமென்று நினைக்கிறேன். நேற்று என் மாமா சொன்ன கதை. ஆப்பிரிக்க நாட்டுக் கதையாம்... ரொம்ப நன்னா இருக்கு" என்று படபடவென்று பொறிந்தாள் சரோஜா.*

*"ஜோராச் சொல்லு - சங்கோஜமில்லாமல் சொல்லு. உன் ஆப்பிரிக்க நாட்டுக் கதையைக் கேட்க நாங்களெல்லாம் ஆர்வமாக இருக்கிறோம்" என்றார் அப்பா.*

# 24. அடிமுட்டாளும் அதிபுத்திசாலியும்

ஒரு சிறுத்தைப் புலி கிராமத்துக்கு அருகே உள்ள காட்டில், ஒரு வேடனால் வைக்கப்பட்டிருந்த பொறிக்குள் விழுந்துவிட்டது. அதனால் அதிலிருந்துவிடுபட முடிய வில்லை. தான் அமைத்த பொறிக்குள் சிறுத்தை சிக்கி யதைக் கண்ட வேடனுக்கு மகிழ்ச்சியாயிருந்தது. பொறியைச் சுற்றிச் சுற்றி வந்து ஆனந்த நடனமாடினான். "ஹா, ஹா! சிறுத்தையே! என் வலைக்குள் விழுந்தாயா, சின்னப்புத்தி சிறுத்தையே! நீ எத்தனை முட்டாளாக இருந்தால் இவ்வளவு இலகுவாக வந்து மாட்டிக் கொண்டிருப்பாய்!" என்று கொக்கரித்தான் வேடன்.

சிறுத்தை பதில் சொல்லிற்று: "என் முட்டாள் தனம்தான் என்னை இங்கே சிறையாக்கி இருக்கிறது. உன் புத்திசாலித் தனம் உன்னை இங்கே கொண்டு வந்திருக்கிறது போலும்!"

வேடனுக்கு வியப்போ வியப்பு. சிறுத்தை பேசுகிறதே! "இதுவரையில் பேசும் சிறுத்தையை யாரும் பிடித்ததே இல்லை. நான்தான் அந்தச் சாதனையைச் செய்துள்ளேன்" என்று குதூகலப்பட்டுக் கொண்டே கிராமத்துக்கு ஓடினான்.

www.tamilnesan1981.blogspot.in

"நான் பேசும் சிறுத்தையைப் பிடித்திருக்கிறேன்!" என்று கூவினான். எல்லோரும் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். தன்னுடன் சிறுத்தை பேசிய விந்தையைக் கூறினான். ஆனால் யாரும் அவனை நம்பவில்லை. "பொய், சிறுத்தை யாவது பேசுவதாவது?" என்றார்கள் ஊரார்.

"உண்மைதான். மற்ற சிறுத்தைகள் பேசாதிருக்கலாம். இது பேசுகிறது."

"சிறுத்தைகள் மனித பாஷை பேசுவதாவது? முழுப் பொய்.'

"நான் சொல்வது பொய்யானால், நான் இனிமேல் காட் டிலேயே வசிக்கிறேன். கிராமத்துப் பக்கமே வரமாட்டேன்? போதுமா" என்று சவால் விட்டான் வேடன்.

"நீ உன் வார்த்தையை மீறக்கூடாது. நினைவிருக்கட்டும். உன்னால் நிரூபிக்க முடியாவிட்டால் நீ காட்டுவாசியாகி விட வேண்டியது தான்" என்று உறுதி செய்துகொண்டு– எல்லோ ரும் அவனுடன் காட்டுக்குப் போனார்கள். பொறிக்குள் விழுந்திருக்கும் சிறுத்தையிடம் அழைத்துப் போனான் வேடன்.

"சின்னபுத்திச் சிறுத்தையே! உன் முட்டாள்தனத்தால் வந்து மாட்டிக் கொண்டாயில்லையா?" என்று கேட்டான். சிறுத்தை பதிலே சொல்லவில்லை. "ஏ, புள்ளி போட்டுக் கொண்ட மிருகமே! நீ இங்கே வந்து சிக்கிக் கொண்டது



www.tamilnesan1981.blogspot.in

உன் முட்டாள்தனம் தானே?" – கத்தினான். சிறுத்தை மௌனமாக முடங்கிக் கிடந்தது. ஒரு குச்சியை எடுத்து அதைக் குத்தி மறுபடியும் அதேபோல் கத்திக் கூக்குர லிட்டான். ம் ஹூம்! சிறுத்தை வாயே திறக்கவில்லை! கூட வந்தவர்கள் சிரித்தார்கள். "போய்யா, சிறுத்தை எங்காவது பேசுமா? நீதான் முட்டாள். உன் சபதப்படி இனி நீ வாழ வேண்டிய இடம் இதுதான். புரிந்ததா? இனி கிராமத்துக்கு வராதே. இங்கேயே உன் குடிசையை அமைத்துக்கொள்" என்று கூறிப் போய்விட்டனர்.

வேடனுக்கு வேதனையான வேதனை. ஆத்திரத்துடன் சாதுபோலப் படுத்திருக்கும் சிறுத்தையைப் பார்த்து, "ஏ முட்டாள் மிருகமே! ஏன் நீ பேசவில்லை? முதலில் என்னி டம் மட்டும் பேசினாயே. நான் சாட்சிகளை அழைத்து வந்த போது ஏன் உன் வாய் அடைத்துப் போயிற்று?" என்று கத்தினான்.

சிறுத்தை நிதானமாகப் பதில் சொல்லிற்று: "என்னுடைய முட்டாள்தனம் என்னை இங்கே சிறைப்படுத்தியிருக்கிறது. உன்னுடைய புத்திசாலித்தனம் உன்னைக் கானகவாசியாக்கி யிருக்கிறது. நம்மில் ஒருவர் ரொம்ப புத்திசாலி: மற்றவர் அடி முட்டாள். இப்படியே நாம் இருவரும் நம் வாழ்நாளை இங்கு முடித்துக் கொள்ளுவோம்."

அதிபுத்திசாலியும் அடிமுட்டாளும் சகோதரர்கள் என்று ஒரு பழமொழி வழங்குகிறது ஆப்பிரிக்காவில். அது இதனால் தானாம்?

www.tamilnesan1981.blogspot.in



*''அங்கிள்! இன்று சீனு தன் ஜாமெட்ரி பாக்ஸை ஸ்கூலில் தொலைத்துவிட்டான். வீட்டில் அவனுக்கு செம டோஸ்!'' என்றாள் குட்டிக் கல்யாணி...*

*''சீனு, நீ உன் பொருள்களை ஒழுங்காக வைத்துக் கொள்ளுவதில்லை என்று உன் அப்பா என்னிடம் குறைப் பட்டுக் கொண்டிருக்கிறார் முன்பு. இப்போ ஜாமெட்ரி பாக்ஸையே தொலைத்து விட்டிருக்கிறாய். உனக்காகவே இன்று, உன்னைப் போலவே பொறுப்பு இல்லாதிருந்த ஒரு பையனைப் பற்றிச் சொல்லப் போறேன்'' என்றார் அப்பா.*

# 25. சங்கரின் பென்சில் பெட்டி!

சங்கர் சூட்டிகையான பையன்; எப்போதும் துருதுரு வென்று ஏதாவது செய்து கொண்டிருப்பான். விளையாட்டி லும் சூரன் அவன்.

அவன் பிறந்த நாளைக்கு ஒரு அழகான பெட்டி பரிசாகக் கிடைத்தது. அது உறுதியான பிளாஸ்டிக்கினாலான ஒரு பென்சில் பெட்டி. அதில் காகிதப் பென்சில், ரப்பர், ஒரு சின்னப் பேனாக்கத்தி, ஒரு குட்டி ஸ்கேல், பென்சிலைத் திருகிக் கூராக்கும் கருவி— இத்தனையும் இடம் பெற்றி ருந்தன. சங்கருக்குக் குஷியான குஷி. எப்போதும் பேப்பரும் பென்சிலுமாக ஏதாவது படம் வரைந்து கொண்டிருப்பவனா யிற்றே அவன். பென்சில், ரப்பர், பேனாக்கத்தி, இப்படி சகலமும் கொண்ட கையடக்கமான ஒரு பெட்டி பரிசாகக் கிடைத்தால் கேட்க வேண்டுமா? பள்ளியில் தன் தோழர் களிடம் காட்டிப் பெருமையடித்துக் கொள்ளத் திட்டமிட்டு, அந்தப் பரிசுப் பெட்டியைத் தன் ஸ்கூல் பையினுள் வைத்துக் கொண்டான். அந்தப் பெட்டியிலிருந்த பொருள்களும்

www.tamilnesan1981.blogspot.in

சங்கருக்குத் தாங்கள் உதவியாக இருக்க வேண்டுமென்று உறுதி செய்துகொண்டன.

ஆனால்...

இவ்வளவு சூட்டிகையான, புத்திசாலியான சங்கரிடம் ஒரு கெட்ட குணம் உண்டு. விளையாட ஆரம்பித்து விட்டனானால் ஆளே மாறிவிடுவான். அன்றும் அப்படித் தான். பள்ளிக்குப் போகும் வழியில் வண்ணத்துப் பூச்சிகளை பார்த்ததும் குஷி பிறந்துவிட்டது அவனுக்கு. அவைகளைப் பிடிக்கத் துரத்திக் கொண்டு ஓடினான். இவனிடம் அகப்படுமா அவை? சங்கரும் அவற்றை விடுவதாக இல்லை. புத்தகப் பையைச் சுழற்றி வண்ணத்துப்பூச்சிகளைத் தாக்க முற்பட்டான். அதனால் அவன் ஸ்கூல் பேக் மரத்தி லும் சுவர்களிலும் மோதி அடி வாங்கியதுதான் மிச்சம். பட்டுப் பூச்சிகள் பறந்தோடி விட்டன.

'அன்றிரவு சங்கர் அயர்ந்து தூங்கிக் கொண்டி ருந்தபோது அவன் புத்தகப் பையிலுள்ள பென்சில் பெட்டியி லிருந்து அழு குரல் கேட்டது. பெட்டி குலுங்கித் திறந்து கொள்ள அதிலிருந்து உருண்டு வந்து வெளியே விழுந்தது பென்சில். அச்சச்சோ, அது ஏன் இப்படிக் குள்ளமாகி விட்டது? புழுக்கையாகிப் போன பென்சில்தான் விசித்து, விசித்து அழுகிறது. புத்தகப் பைக்குள்ளிருந்து தாவிக்



www.tamilnesan1981.blogspot.in


குதித்து வெளியே வந்த பேனாக்கத்தி கேட்டது, குட்டிப் பென்சிலை, "எதற்காக அழுகிறாய் இப்படி?"

"ஆழாமால் பின் என்ன செய்வது? என் உடம்பைப் பார். என்னைக் கூராக்கும் 'திருகன்' என் தோலை உரித்து என் முனையை ஒடித்து ஒடித்து என்னைக் குள்ளனாக்கி விட்டான். பார்த்தால் தெரியவில்லை?" என்றது விக்கியபடியே குட்டிப் பென்சில்.

இதைக் கேட்டதும் பேனாக்கத்தி பென்சில் ஷார்ப்னரின் காதைப் பிடித்து வெளியே இழுத்து, "ஏண்டா இப்படிச் செய்தாய்?" என்று கேட்டது.

பென்சில் ஷார்ப்பனரான அந்தக் கருவி, "நான் என்ன செய்வேன். சங்கர் வண்ணத்துப்பூச்சிகளைப் பிடிக்கும் சாக்கில் புத்தகப் பையைச் சுழற்றி அதன்மீது அடிக்க, பை விளக்குக் கம்பத்தில் மோதிய அதிர்ச்சியில், பெட்டிக்குள் இருந்த என் பல் பழுதாகிப் போச்சு, என்னால் பென்சிலை சீராகச் சீவ முடியவில்லை. உடைந்த பல்லில் பட்டு அதன் கூர் முறிந்து போகிறது. சங்கர் மீண்டும் மீண்டும் அதை என் வாயில் கொடுத்துத் திருகும்போது உடைந்த என் பல் அதன் உடம்பை இப்படி..."

இப்போது ரப்பரும், ஸ்கேலும் விசும்பிக் கொண்டே வெளியே வந்தன. "பேனாக் கத்தியாரே, எல்லாம் உம்மால்



www.tamilnesan1981.blogspot.in

தான். சங்கரின் கையில் இருக்கிறோம் என்று, எங்களை எப்படியெல்லாம் கீறிக் காயப்படுத்திவிட்டீர்?" என்று தங்கள் உடலில் பேனாக்கத்தி ஏற்படுத்தி இருந்த காயங்களைக் காட்டின.

"என் கஷ்டத்தை நான் யாரிடம் போய்க் கூறுவேன்!" என்று நெடுமூச்சு விட்டது பேனாக்கத்தி. "அவன் உங்களை வெட்டும்படி கூறும்போது நான் பேசாதிருக்க முடியுமா? என்னைக் கையில் வைத்துக் கொண்டு எப்படியெல்லாம் பொருள்களை நாசமாக்குகிறான் தெரியுமா? இன்று காலை தோட்டத்தில் மரங்களின் உடலைப் பதம் பார்த்தான். பாவம், அவை தங்கள் பட்டை பிளந்து, கண்ணீர் பெருக்கின. தாத்தாவின் மேஜை மீது கீறி, தன் பெயரை எழுதியிருக்கிறான். அது மட்டுமா? தோட்டத்தில் மண்ணைக் கிளறி – என்னைக் கொண்டு குழி பறித்தான், என் உடலெல்லாம் சேறும் மண்ணும். இதோ பாருங்க. என் முனை எப்படி மழுங்கிப் போயிருக்கிறது" என்று தன் முனை மழுங்கி வளைந்த முதுகைக் காட்டியது பேனாக் கத்தி.

"நம்மை சரியாகப் பயன்படுத்தாமல் இப்படியெல்லாம் தவறாக நடந்து கொண்டால் அவன் நன்றாக படித்து முன்னேற நாம் எப்படி அவனுக்கு உதவ முடியும்?" என்றன பென்சில் பெட்டியிலிருந்த பொருள்கள். அவனுக்குப் புத்தி புகட்ட வேண்டும் என்று திட்டமிட்டன.

அதன்படி—

மறுநாள் சங்கர் தன் புத்தகப் பையைச் சுழற்றியபடி துள்ளிக் குதித்துக் கொண்டு பள்ளிக்குப் போனான். வகுப்பு தொடங்கியது. புழுக்கைப் பென்சிலை எடுத்து எழுதலானான். "மளக்!" பென்சிலின் முனை உடைந்தது.

பென்சிலைச் சீவ, கூராக்கும் கருவியை எடுத்தான். பல்லுப்போன அது பரிதாபமாக அவனைப் பார்த்தது. 'ச்சே! என்றவன், பென்சிலின்' முனை ஒடியும்போது ஏற்பட்ட கிறுக்கலான கோட்டை அழிக்க ரப்பரின் உதவியை நாடினான். ஆனால் பேப்பரெல்லாம் மேலும் கறுப்பாகியதே தவிர பென்சில் கோடு அழியவில்லை.

"எல்லோரும் நோட்டில் ஸ்கேலினால் மார்ஜின் கோடு

www.tamilnesan1981.blogspot.in

இழுத்துக் கொள்ளுங்கள்" என்று ஆசிரியர் கூறவே, சங்கர் ஸ்கேலை நோட்டில் பதித்து, புழுக்கைப் பென்சிலின் மழுங்கிய முனையினால் கோடு போடலானான். ஆனால் அவன் கிழித்த நேர்கோடு கோணல் மாணலாக இருந்தது. அவன் தோழர்கள் சங்கர் படும் அவஸ்தையைப் பார்த்து சிரிசிரி என்று சிரித்தார்கள்.

சங்கருக்குப் புத்தி வந்தது. இனி தன் பொருள்களைக் கருத்தோடு பாதுகாக்கவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான். பென்சில் பெட்டியில் இருந்த பொருள்களும் அவன் மனம் மாறி குணம் பெற்றதை அறிந்து மகிழ்ந்து நிம்மதிப்பட்டன.

www.tamilnesan1981.blogspot.in



*"ஜாமெட்ரி பாக்ஸை சீனு தொலைத்தது போல, மாலு தன்னுடைய "கலர் பாக்ஸை" நாசமாக்கியதற்காக இன்று அம்மாவிடம் 'பூசை' வாங்கினாளாமே?" என்று கேட்டார் அப்பா. மாலு தலைகுனிந்தபடி கண் கலங்கினாள்.*

*"கவலைப்படாதே மாலு. நீ படம் போட்டுத் தானே கலர் பாக்ஸ் கரைந்தது. உன்னைப் போலத்தான் ஒரு குட்டிப் பெண்..." என்ற அப்பாவை முந்திக் கொண்டு முந்திரிக் கொட்டையாகக் கூறினான் முருகேஷ் "இன்று அப்பா சொல்லப் போவது ஒரு கலர் பாக்ஸோட கதை!' அப்படித் தானே அங்கிள்?"*

## 26. அனுஷா கண்ட கனவு

அனுஷாவைத் தெரியுமா உங்களுக்கு? ரொம்ப விஷமக்காரப் பெண். ரொம்பச் சூட்டிகையான குட்டியும்கூட. 'அனுஷ்'— இப்படித்தான் அவளை கூப்பிடுவார், அவள் தாத்தா. அப்போது பார்க்க வேண்டுமே, கருவண்டுக் கண்களில் நட்சத்திரங்கள் ஜ்வலிக்கும்படி— அவள் சிரிக்கும் அந்தச் சிரிப்பு. ஓ! வேறு எந்தக் குழந்தையிடமும் அந்தக் கவர்ச்சிச் சிரிப்பை காண முடியாது!

அனுஷாவுக்கு பிராணிகள் என்றால் கொள்ளை ஆசை. மிருகங்களின் படங்களைக் கொண்ட புத்தகத்தைக் கண்டால் விட மாட்டாள். இரண்டு கால்களையும் நீட்டிக் கொண்டு, துடைமீது புத்தகத்தை விரித்துப் போட்டுக் கொண்டு, அம்மா விடம் போய் உட்கார்ந்து விடுவாள். அனுக் குட்டிக்கு ஒவ்வொரு மிருகத்தைப் பற்றியும் அவள் அம்மா சொல்லியாக வேண்டும். அனுஷ் ரொம்ப ஆர்வமாக, உன்னிப்பாக அதை யெல்லாம் கேட்டுக் கொள்ளுவாள்.

www.tamilnesan1981.blogspot.in

அடுத்து, அவளுக்கு ரொம்பப் பிடித்தமானது ஒரு குட்டிப் பூனைப் பொம்மை. நிஜப் பூனை போலவே, கண்ணாடி மணிக்கண்கள் பளபளக்க, மெத்தென்ற வெல்வெட் உட லோடு, நைலான் மீசை படபடக்க— அனுஷா அந்தப் பூனைப் பொம்மையைப் பிரியவே மாட்டாள். தூங்கும்போது கூட பட்டுவை – அதன் பெயர் அது – அவள் தன் பக்கத்தி லேயே படுக்க வைத்துக் கொள்ளுவாள்.

அனுஷாவின் பிறந்த நாளுக்கு அவள் தாத்தா, அவளுக்கு ஒரு கலர் பாக்ஸ் வாங்கிக் கொடுத்தார். ஒன்று சொல்ல மறுந்துவிட்டேனே! அனுஷா ரொம்ப நன்றாகப் படம் போடுவாள். வீட்டுச் சுவரிலெல்லாம் அவள் வரைந்த விதவிதமான மிருகங்களும், மனிதர்களும், அலங்கரிக்கும். வீட்டில் எந்தப் புத்தகத்தை எடுத்தாலும் அதிலே அனுஷா வின் கைவ்ண்ணம் காட்சியளிக்கும்.

வெறும் வாயை, மெல்லும் பாட்டிக்கு அவல் கிடைத்ததுபோல என்பார்களே அப்படி, காகிதப் பென்சிலா லும், அப்பாவின் பால்பாயின்ட பேனாவாலும் படம் போட்டுத் தள்ளிக் கொண்டிருந்த அனுக்குட்டிக்கு, கலர் பாக்ஸ் கிடைத்தால் சும்மா இருப்பாளா? அவள் அம்மா காட்டிய, புத்தகங்களில் பார்த்த மிருகங்களையெல்லாம், வீடெங்கும் சுவரிலெல்லாம், கிடைத்த காகிதத்திலெல்லாம், வண்ண வண்ணங்களாக வரைந்து தள்ளினாள். பூனை,



www.tamilnesan1981.blogspot.in

யானை, ஒட்டகச் சிவிங்கி, எலி, பட்டுப் பூச்சி, சிட்டுக் குருவி இன்னும் யாருமே பாத்திராத ஏதேதோ, கற்பனை மிருகங்களையெல்லாம் உருவாக்கிக் குவித்தாள். கடைசியா௪ அவள் தீட்டிய படம், அவள் அருமை பட்டுவான— பூனைக்குட்டிக்கு விருப்பமான சுண்டெலியின் படம்.

அன்று முழுதும் கலர் பாக்ஸிலுள்ள வண்ணங்கள் முழுவதையும் காலி செய்து வரைந்த களைப்பில், படுத்துத் தூங்கிப் போனாள் அனுஷ்!

திடீரென்று, நடுத் தூக்கத்தில் திடுக்கிட்டுக் கண் விழித்தாள் அனுஷ்! கூடத்தில் ஒரே கூச்சல், சத்தம், கலாட்டா! என்ன என்று பார்க்க மாடிப் படிகளில் 'தட தட'வென்று இறங்கி வந்தாள், அவள் தோழி பட்டு பின் தொடர. ஆனால் பாதி வழியிலேயே திரும்பி வேகவேகமாகப் படிகளில் ஏறலானாள். அவள் வரைந்த சுண்டெலி உயிர்பெற்று அவளைத் துரத்திக் கொண்டு வந்தது— படிகளில் தாவித் தாவி ஏறியபடி...! அனு நடுநடுங்கிப் போய்விட்டாள். அவள் வரைந்த அந்த எலி, இப்போது எவ்வளவு பெரிதாக வளர்ந்துவிட்டது. அதன் அருகில் அனுஷா ரொம்ப ரொம்பச் சின்னவளாகக் காட்சியளித்தாள்.

தன் தோழி பட்டுவைப் பார்த்தாள் — உடனே "நீ மட்டும் பெரிய பூனையாக இருந்தால்?" என்று கத்திய அனுஷாவுக்குச் சட்டென்று ஒரு ஐடியா தோன்றியது. அந்தப் பெரிய சுண்டெலியைப் பயமுறுத்தி விரட்ட, ஒரு பெரீய ய்—ய்—ய்—ய பூனையை வரைந்தால் என்ன? அது நல்ல ஐடியாவாகப் படவே, பிரஷ்ஷை வண்ணத்துக்குள் முக்கி, ஒரு பெரிய ய்—ய்—ய பூனையை வரையலானாள்.



அனுஷ் அந்தப் பெரிய்ய பூனையை வரைந்து முடிக்கும் முன்பே, அது அந்தப் பெரிய சுண்டெலியைத் துரத்த ஆரம்பித்துவிட்டது... "ஏய் ஏய்... அதைக் கடிச்சுக் கொன்னுடாதே!" என்று கத்தினாள் அனு. சுண்டெலி அவளைத் துரத்தினாலும் கூட, சுண்டெலிகளிடம் அவளுக்கு ரொம்ப பிரியம். எலியைத் துரத்தி ஓடும் பூனையைத் தடுக்க முயன்றாள். ஆனால் முடியவில்லை. பூனையின் வாலைப்




பிடித்து இழுத்து நிறுத்த முயன்ற போது, அது அவளையும் இழுத்துக்கொண்டு ஓடிற்று, அவள் வரைந்த அந்தப் பெரிய்ய பூனை!

பாவம் அனுஷ்! பூனை ஓடிய வேகத்தில் அவள் பிடி நழுவ– தொபுக்கடீரென்று, தான் தரையில் வரைந்திருந்த நெருப்புக்கோழி முட்டைப் படத்தின் மீது விழுந்தாள். அந்த முட்டைக்கு இப்போது உயிர் வந்து நிஜமுட்டையாகி விட்டதே! ஆனால் அது நெருப்புக் கோழியுடையதல்ல. அவள் புத்தகத்தில் தவறான பக்கத்தைப் பார்த்து அந்த முட்டையை வரைந்து விட்டாள். அது முதலையின் முட்டை. அனுஷாவுக்கு முதலையைக் கண்டால் பிடிக்காது. ஆனால் என்ன செய்ய முடியும்? அந்த முதலை முட்டை உடைந்து– அதிலிருந்து முதலை வெளிப்பட, அலறி அடித்துக் கொண்டு தன் பட்டுவுடன் ஓடினாள் அனுஷ்.

அப்பாடா... ஆ!... முதலைகிட்டேயிருந்து ஒரு தினுசா தப்பி, அவளுக்கு ரொம்பப் பிடித்த டினாசரஸ் – அம்மா அதோட பெயரை அப்படித்தான் சொல்லி இருந்தாள் – மேலே வந்து உட்கார்ந்தாள். "டினோ!" என்று செல்லமாகக் கூப்பிட்டாள். அதுவும் உயிர்பெற்றிருந்தது. அவள் வரைந்

www.tamilnesan1981.blogspot.in

திருந்த எல்லா மிருகங்களுமே உயிரோடிருந்தன! என்ன ஆச்சரியம்! அந்த ராட்சச மிருகமான டினாசரஸ்ஸினால் வேகமாக நடக்க முடியாது. பெரிய உடலில்லயா? ஆகவே அனு அதற்கு நான்கு கால்களை வரைந்தாள். வேடிக்கை யாக இருந்தது. அப்படியும் அதோட நீண்ட கழுத்தை வைத்துக் கொண்டு அது எப்படி?



அம்மா அவள் தலைமுடியைச் சேர்த்துக் குவித்து, உச்சந் தலையில் ரப்பர் பாண்டினால் கட்டி இருந்த தன் உச்சிக் குடுமியைத் தடவிக் கொண்டாள், அனுஷ். உடனே ஒரு ஐடியா தோன்றிவிட்டது, அனுவின் குட்டித்தலைக்குள்! “ஹையா! நான் உனக்கு இறக்கை வரைஞ்சுடறேன்!” என்று வர்ணத்தைக் குழைத்து டினோ உடலின் இரண்டு பக்கங் களிலும் இறக்கைகளை வரைந்தாள். வரைந்த அடுத்த வினாடி, டினாசரஸ் ஆகாயத்திலே பறக்க ஆரம்பித்து விட்டது!— அனுஷ், அதன் நீண்ட கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

டினாசரஸ் ஒரு ஊருக்கு மேலே பறந்து போய்க் கொண்டிருந்தது. அனு கீழே பார்த்தாள். “ஐயையோ!” அவள் வரைந்த பெரிய்ய்ய பூனை. ஒரு ஆவின் லாரியை நோக்கிப் பதுங்கிப் பதுங்கி...! அவ்வளவுதான், லாரி பாலையும் அது மடக்கு மடக்குன்னு குடிக்கப் போறது! அப்புறம் அம்மா பூத்துக்குப் போனா, பால் இல்லேங்கப் போறாங்க!” வருத்தப் பட்ட அனுஷுக்குச் சட்டென்று நினைவுக்கு வந்தது... பெரிய்ய்ய பூனையை வரைந்தபோது, அதற்கு வாய் வரைய மறந்துவிட்டாள். ஆகவே அந்தப் பொல்லாத பூனையினால் பாலை குடிக்க முடியாது. “நல்லவேளை பொழைச்சேன்!” என்று நிம்மதிப் பட்டாள் அனுக்குட்டி!

டினாசரஸ் ‘சர் சர்’ என்று ஆகாயத்தில் பறந்து போய்க்


www.tamilnesan1981.blogspot.in

கொண்டிருந்தது. சட்டென்று அதற்கு 'லஞ்ச்டைம்' நினைவுக்கு வந்துவிட்டது போலிருக்கு. குபீரென்று கீழே பாய்ந்தது. ஒரு அடர்ந்த கானகம். அதில் வரிசைகட்டி நின்ற மரங்களின் இலைகளையெல்லாம் 'லபக் லபக்! லபக்' என்று அபேஸ் செய்து, வரிசையாக மொட்டை மரங்களாக நிற்க வைத்துவிட்டது டினோ. அனுஷாவுக்கு அதன் கழுத்தைக் கட்டிக் கொண்டு தொங்கியபடி வருவது, அலுத்துப் போச்சு. "என்னை வீட்டில் கொண்டு விட்டுடு" என்றாள் டினாசரஸிடம். அத்தனை மரங்களை மொட்டையடித்தும்– அந்த ராட்சத மிருகத்தின் பசி அடங்கவில்லை. ஆனால், அனுஷாவின் விருப்பத்தை நிறைவேற்றாவிடில் அவள் அழுவாளே.

எதற்கும் பயப்படாதது டினாசரஸ், அனுவின் அழுகையைத் தவிர! ஆகவே ஆகாயத்தில் பறந்தபடி, தன் நீண்ட கழுத்தைக் கீழாகத் தாழ்த்தியது. அனுவும் அவள் தோழி பட்டுவும்– சறுக்குப் பலகையில் சரிஞ்சு கீழே வருவதுபோல் 'சர்ர்ர்' என்று கீழே விழுந்தார்கள்.


நல்லவேளை– அனு வரைந்திருந்த யானை அங்கிருந்ததோ பிழைந்தாள். தன் துதிக்கையை உயர்த்தி, அவளைத் தாங்கிக் கொண்டது யானை. அனுஷ் கீழே இறங்கலானாள். அவள் வரைந்திருந்த அத்தனை மிருகங்களும் அங்கிருந்தன. அவள் தாத்தா வாங்கிக் கொடுத்திருந்த கலர் பாக்ஸ் மந்திரச் சக்தி வாய்ந்தது போலிருக்கு. எல்லா மிருகங்களுமே உயிர் பெற்றிருந்தன. ஆனால், எல்லாம் ரொம்பக் கோபம் கோபமாக இருந்தன. அனுவிடம், "என்னை ஏன் பெரிஸ்ஸ்ஸா வரைஞ்சே?" என்று கேட்டது சுண்டெலி. "ஆறு கால்களைக் கொண்டு நான் எப்படி ஓடுவேன்" என்று கேட்டது நாய்.' எல்லா மிருகங்களும் ஒரே சமயத்தில் தங்கள் தங்கள் குறைகளைக் கூறிக் கூச்சல் போடலாயின!

அனுவுக்கு பயம்ம்ம்மா போச்சு? பட்டு, அவள் கால்களுக்கிடையே வந்து ஒண்டிக் கொண்டது. அதுக்கும்



www.tamilnesan1981.blogspot.in

பயமான பயம். இவர்களை எப்படி சமாளிப்பது என்று அனுஷ் தவித்துக் கொண்டிருந்தபோது சடசட படபடவென்று மழை பெய்ய ஆரம்பித்தது. அவ்வளவுதான். அத்தனை மிருகங்



களும் மழை நீரில் கரைந்து, கரைந்து உருத் தெரியாம்ம்ம மல் போய்க் கொண்டே... மந்திர வண்ணத்தையெல்லாம் மழைநீர் அடித்துக் கொண்டு போக, இங்கும் அங்கும் உருத் தெரியாதபடி திட்டுத் திட்டாக கொஞ்சம் வண்ணங்கள்...

மழைநீரில் கரையாமல் தப்பியது மீன் மட்டும்தான். ஆனால், அது தண்ணீர் இல்லாமல், மூச்சுவிட முடியாமல் திணறியது. அனுஷ் கெட்டிக்காரியாச்சே! சட்டென்று தேங்கி இருந்த நீல வர்ணத்தை விரல்களில் எடுத்து மீனைச் சுற்றி ஒரு குட்டையை வரைய... 'களக்...' என்ற குட்டை நீரில் துள்ளிக் குதித்த மீன் பிழைத்துக் கொண்டது.

அனுஷாவின் கலர் பாக்ஸில் இப்போது ஒன்றுமே இல்லை. எல்லா மந்திர வர்ணமும் கரைந்து போய் விட்டி ருந்தன. இப்போது அவள் அருகே இருந்தது, அவள் அருமைப்

www.tamilnesan1981.blogspot.in

பூனைக் குட்டி பட்டு மட்டும்தான். ரொம்ப வருத்தத்தோடு பட்டு பின் தொடர, அனுஷா தன் அறையை நோக்கித் திரும்பினாள்.

'கக்கூ கக்கூ கக்கூ' என்று சிட்டுக் குருவியின் குரல் கேட்டு அனுஷா கண்விழித்தாள். "அடட... இத்தனை நேரம் நான் கண்டதெல்லாம் கனவுதானா!" என்று கூறித் தன் அருகிலிருந்த பூனைக்குட்டி பொம்மையை அணைத்துக் கொண்டு முத்தமிட்டாள், கனவு கலைந்த அனுஷ்குட்டி.

www.tamilnesan1981.blogspot.in



*ஆயிரத்து ஓர் இரவுகள்'' கதை கேட்ட, பாக்தாத் காலி:ப் அரூண் அல்பாஷாவைப் பற்றி உங்களுக்கெல்லாம் அதிகம் தெரிந்திருக்காது. உலகப் புகழ்பெற்ற அரபுக் கதைகளின் ஆதிகர்த்தா அவர்தான். காலி:ப் அவர்களைப் பற்றி நிறைய கதைகள் உண்டு. அதில் ரசமான ஒரு கதையை இன்று உங்களுக்குக் கூறப் போகிறேன் என்று தொடங்கினார் கதையை அப்பா.*

## 27. மாயமாய் மறைந்த வஸீர்

காலிஃப் அரூண் அல்பாஷா பஞ்சணை மெத்தையிலே சொகுசாகக் கண் மூடியபடி படுத்திருந்தார். ஆஸ்தான பாடகன் மாலிக் தாகா உற்சாகமாகப் பாடிக் கொண்டிருந்தான்.

"இய்யா, இய்யா, இய்யா... யா யா... யா... யா..."

வஸீர் இஸ்பகான். வழக்கப்படி "நான் காலிஃப்பாகணும், நான் காலிஃப் ஆகணும். எப்படி... எப்படி?" என்று குதித்துக் கொண்டிருந்தார்– தன் அறைக்குள். அடியாள், ஷேக் ஆஸாப் தன் எஜமானனின் தவிப்பைப் பார்த்து, வேதனையோடு நின்று கொண்டிருந்தான்.

"நான் காலிஃப் ஆகவில்லையானால் – இனிமே அந்தக் காலிஃப்பை நான் பார்க்கவே போறதில்லை."


"ஜனாப்! நீங்க எப்போதும் காலிப்பை பார்க்க முடியாமல் செய்ய ஒரு வழி இருக்கு. நகரத்துக்கு ஒரு புதிய மந்திரவாதி வந்திருக்கிறான். பெயர் உமர். எல்லாவற்றையும் மாயமாக மறையச் செய்கிறாராம்" என்றான் ஆஸாப்.

துள்ளிக் குதித்தார் வஸீர் "இதை ஏன் இத்தனை நேரம் சொல்லவில்லை. வா, வா, வா, அவரைப் போய்ப் பார்க்கலாம்" என்று அஸாபின் நெஞ்சின் மீதுள்ள சட்டையைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஓடினார் வஸீர்.

www.tamilnesan1981.blogspot.in

“ஆ வந்து... ஏன் சொல்லலைன்னா... வந்து உங்களோட முந்தைய திட்டங்களெல்லாம் படுதோல்வி அடைந்ததனாலே” வஸீரின் இழுப்புக்கேற்ப ஓடிக்கொண்டே குழறினான் ஆஸாப்.

“மூடு வாயை... தோல்விகள் தான் வெற்றிக்கான படிகள். உமரோட வீடு எங்கே, காட்டு” என்று ஓடிக்கொண்டே காலிஃபை யார் கண்ணுக்கும் தெரியாமல் “மந்திரவாதி செய்துவிட்டால் ஆஹா... நாட்டை ஆள்வதற்கு



காலிஃப் இல்லாமல் போய்விடும். நானே காலிஃப் ஆகி விடலாம் சுலபமாக...” குதூகலப்பட்டுக் கொண்டார்.

“ஜனாப்... இதுதான் உமரின் வீடு” என்று ஒரு வீட்டைக் காட்டினான் ஆஸாப்.

“வாசல் கதவு திறந்தே இருக்கு. வருபவர்களை வருக வருக என்று வரவேற்கும் பண்பாளர் போலிருக்கு. நீ இங்கேயே இரு. நான் போய் மந்திரவாதி உமரைச் சந்தித்து விட்டு வருகிறேன்” என்று வேகமாக உள்ளே நுழைந்தார்.

மட் ...டா ...ர்

அடுத்து விநாடி வஸீர் உறுதியான ஏதோ ஒன்றின்மீது மோதிக் கொண்டு கீழே விழுந்தார். பாவம் அவர் மூக்கு விண்விண் என்று தெறித்தது வலியினால். மந்திரவாதி தன் வீட்டு தேக்கு மரக்கதவை பிறர் பார்வைக்குப் படாதபடி மந்திரம் போட்டு மறைந்திருந்தார். அது தெரியாமல் வஸீர் கதவில் போய் மோதிக் கொண்டார்... “உள்ளே வாருங்கள்” என்று குரல் கேட்டது. வஸீர் மோதிக்கொண்ட சத்தம் கேட்டு உமர், தன் வீட்டுக் கதவின் மீதிருந்த மந்திரத்தை அகற்றிக் கதவைத் திறந்து கொண்டு வந்தார்.

www.tamilnesan1981.blogspot.in

"மன்னிக்கணும் — பொருள்களை மறையச் செய்யும் ஆற்றல் படைத்தவர்— மந்திரவாதி உமர் என்பதை ஜனங்கள் மறந்து விடுகிறார்கள். என் மந்திர மகிமை என் வீட்டு வாசல் கதவிலிருந்தே ஆரம்பமாகிறது. இன்னும் பாருங்கள்— வீட்டில் எதையும் ஒழுங்கு பண்ணவில்லை. சாமான்கள் எங்கு பார்த்தாலும் இறைந்து கிடக்கின்றன" என்றார் மந்திரவாதி உமர்.

வஸீர் சுற்றுமுற்றும் பார்த்தார். வீடு வெறிச்சோ என்றிருந்தது. எந்தப் பொருளையும் அங்கு காணவில்லை. மனிதன் பைத்தியமாக இருப்பானோ — என்று நினைத்துத் திரும்பும்போது —

"ஜாக்கிரதை உங்கள் முன்னால் ஆடும் நாற்காலியுள்ளது" என்றார் உமர். விழித்துப் பார்த்த வஸீருக்கு வெற்றிடம்தான் தெரிந்தது. நாற்காலியைக் காணோம். ஆனால் உமர் நாற்காலியில் உட்கார்ந்திருப்பதுபோல அந்தரத்தில் கால்மீது கால் போட்டபடி அமர்ந்திருந்ததைக் கண்டு திகைத்துப் போனார் வஸீர்.

"நீங்கள் யார் உங்களுக்கு என்ன வேண்டும்?" உமர் கேட்டார்.

வியப்பை உதறிவிட்டு வஸீர் கூறினார்— "நான் இஸ்பகான். இந்த நாட்டு வஸீர்" என்று கையை உயர்த்திப் பேசியபோது—

"ஐயோ போச்சு... போச்சு என்று கத்தினார் உமர். உடனே "க்ளிங்... க்ளிங்..." என்று ஏதோ கீழே விழுந்து உடையும் ஒலி கேட்டது. ஆனால் எதுவும் கண்ணுக்குத் தெரியவில்லை. மந்திரவாதி உமரோ "ஐயோ என் அருமையான பூஜாடியை உடைத்துவிட்டாயே" என்று குனிந்து வெற்று வெளியில் துழாவினார்.

வஸீருக்குத் தலை சுற்றியது. இந்த மந்திரவாதி பலே ஆளுதான் போலே? என்று எண்ணியவர் "உமர் பொருள்களை மறையச் செய்யும் உம்முடைய மந்திரத்தை எனக்குச் சொல்லித்தர வேண்டும்" என்றார்.

"அதுக்கு ரொம்ப விலையாச்சே, ரொம்ப, ரொம்பப் பணம் தரணும் வஸீர் அவர்களே."

"எவ்வளவு?"

www.tamilnesan1981.blogspot.in

"நூறாயிரம் மராவிடிஸ் (நாணயம்)கள்"

"அவ்வளவா? முடியாது பத்தாயிரம்"

"இதென்ன கத்திரிக்கா வியாபாரமா? சேச்சே.நாற்பதாயிரம்னாப் பேசுங்க..."

"பத்தாயிரத்துக்கு மேலே ஒரு பைசா கிடையாது..."

"பகல் கொள்ளை இது. சரி... எடுங்க பணத்தை."

வஸீர் பேரத் தொகையைக் கொடுத்தார். உமர் தன் மந்திரத்தை விளக்கினார்.

"மனிதர்களையோ, பொருள்களையோ மறையச் செய்ய, அவர்கள் முன் நின்று, கைகளால் தன் இரு கண்களையும் மூடிக்கொண்டு 'ஆப்ரகடப்ரா! நான் உன்னைக் காண விரும்பவில்லை' என்று மூன்று தடவை கூற வேண்டும். அடுத்த விநாடி அவர்கள் மாயமாக மறைந்து போவார்கள்."


"இவ்வளவுதானா?"

"ஆமாம். ஆனால் காணாமல் போக விரும்பும் பொருள் அசையாமல் அப்போது உம் முன் நிற்க வேண்டும்."

"எனக்கு நம்பிக்கைப் படவில்லை. இப்போதே சோதித்துப் பார்க்கப் போகிறேன்" என்று கூறி 'ஆஸாப்' என்று குரல் கொடுத்தார், வஸீர் இஸ்பகான்.

"இதோ வருகிறேன் ஜனாப்" என்று குரலை அடுத்து மடார் என்ற சத்தம் கேட்டது.

"முட்டாள்... முட்டாள் கதவைத் திறந்து கொண்டு வர வேண்டாமா?" என்று கத்தினார், தன் காலடியில் வந்து விழுந்த ஆஸாப்பிடம் வஸீர்.



www.tamilnesan1981.blogspot.in

பாவம் ஆஸாப் தன் குடமிளகாய் மூக்கை அழுத்திப் பிடித்துக் கொண்டு "கதவு ஏதும் தெரியவில்லை ஜனாப்" என்றான்.

"சரி... சரி... அப்படியே அசையாமல் நில்" என்று கூறித் தன் கண்களைக் கையால் மூடிக் கொண்டு "அப்ரகடப்ரா நான் உன்னை காண விரும்பவில்லை..." என்று மூன்று முறை கூறினார். அடுத்த விநாடி ஆஸாப்? – ஆளைக் காணோம்!

"ஆஹாஹா! ஏக்கமுற்றிருந்த என் கண்களுக்கு எத்தனை இனிமையான காட்சி..." என்று குதித்தார் இஸ்பகான்.

"நான்தான் கூறினேனே!" என்றான் உமர் தம் தாடியைக் கோதியபடி.

"என் அருமை ஆஸாப் வெற்றி, வெற்றி வா போகலாம்."

"ஜனாப்! உன்னைக் காண விரும்பவில்லை, என்பதைக் கூறவா என்னைக் கூப்பிட்டீர்கள்?" என்று கேட்டான் உருவமற்ற ஆஸாப்.

அடுத்த விநாடி மடார் என்ற சத்தம் கேட்டது. தலையை நிமிர்த்திக் கொண்டு நடந்த வஸீர் கண்ணுக்குத் தெரியாத எதன் மீதோ மோதிக்கொண்டு குப்புற விழுந்து கிடந்தார்.

"ஜனாப்! இங்கு நடப்பது எல்லாமே மாயமாக இருக்கிறது" என்று குரல் கொடுத்தான் உருவமிழந்த ஆஸாப்.

தலைசுற்ற எழுந்த இஸ்பகான் "பேசாமல் நட, அரண்மனைக்கு போவோம் வா" என்று தள்ளாடித் தடவிக் கொண்டே நடந்தார் – மீண்டும் எதிலும் மோதிக் கொள்ளக் கூடாதென்று.

"ஜனாப்! ஐயோ, நான் உருவமற்றுப் போனேனா?" என்று கதறினான். அங்கிருந்த கண்ணாடியில் தன் பிரதி பிம்பம் தெரியாததைக் கண்ட ஆஸாப்.

"அதனால் என்ன?" எரிந்து விழுந்தார் வஸீர்.

"நான் எப்படி முகக்ஷவரம் செய்து கொள்ளுவேன்?"

வஸீர் பதில் கூறவில்லை. அரண்மனை வாசலுக்கு வந்ததும். "நீ இங்கேயே எனக்காகக் காத்திரு" என்று கூறி விட்டு உள்ளே போனார். வாயிற் காப்போன் திருதிருவென்று

www.tamilnesan1981.blogspot.in

விழித்தான். வஸீருடனோ யாருமில்லை. ஆஸாப் அவன் கண்ணுக்கு தெரியவில்லை. ஆகவே தன்னிடம்தான் வஸீர் கூறுகிறார் என்று எண்ணி "அப்படியே ஆகட்டும் வஸீர் அவர்களே!" என்று விரைப்பாக நின்றான். ஈட்டியை இறுக்கிப் பிடித்தபடி.

வஸீர், காவல்காரன் குரல் கேட்டு எரிச்சலுடன் திரும்பியவர், "முட்டாள் உன்னச் சொல்லவில்லை ஆஸாபிடம் கூறினேன்" என்றார்.

"உருத்தெரியாத மாய மனிதனை இதுவரை யாரும் பார்த்ததில்லையே? இவன் எப்படி என்னை...?" வெற்று வெளியிலிருந்து ஆஸாபின் குரல்மட்டும்வரவே பீதியடைந்த காவல்காரன் ஈட்டியைக் கீழே போட்டு விட்டு "உதவி, உதவி! காப்பாற்றுங்கள்" என்று ஓடினான்.

காலிஃப் வழக்கப்படி மெத்து மெத்து திண்டிலே சரிந்து கிடந்தார். — வஸீர் உள்ளே புகுந்தபோது.

"என் அருமை இஸ்பகான். உன்னைப் பார்த்து ரொம்ப நாளாயிற்றே" என்றார்.

"அசையாதீர்கள்—நகராதீர்கள் அப்படியே படுத்திருங்கள்" என்று கூறித் தன் கண்களை மூடிக்கொண்டு அப்ரகடப்ரா என்று ஜபிக்க ஆரம்பித்தார் வஸீர்.

"உங்களை நான் காண விரும்பவில்லை" என்று வஸீர் கூறியதைக் கேட்ட காலிஃப் உடனே தன் மெத்தையிலிருந்து எழுந்தபடி "இப்படி நீ சொல்வது நாகரீகமற்ற செயல்"



www.tamilnesan1981.blogspot.in

என்றார். வஸீர் ஆத்திரத்துடன் குதித்தார் அடம்பிடிக்கும் குழந்தைபோல. "இது ஒரு விளையாட்டுக்காக–அசையாதீர் கள் நகராதீர்கள்..!"

"இந்த விளையாட்டை நான் விரும்பவில்லை"

"ஒரே ஒரு தடவை. எனக்காக இப்படி ஒரு தடவை மட்டும் இந்த விளையாட்டுக்கு ஒப்புக் கொள்ளுங்கள். ஜஹாம்பனா!" மன்றாடினார் வஸீர்.

"சரி... சரி... சதி கிதி ஏதுமில்லையே இதில்?"

"காலிஃப் அவர்களே தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள். கொஞ்ச நேரம்தான்..." என்று தன் கைகளால் கண்களை மூடிக்கொண்டு அப்ரகடப்ராவை உச்சரித்து–

கண்களைத் திறந்தபோது காணோம்... காலிப் ஹோகயா!

"வெற்றி... வெற்றி... முடித்துவிட்டேன் கர்ரியத்தை!" என்று குதூகலக் கூச்சலுக்கு–

"இஸ்பகான் நல்ல சூடான தேநீர் சாப்பிடுகிறீர்களா?" என்ற காலிஃபின் குரல் பின்னாலிருந்து கேட்டது.

"நான் உங்களை நகரக் கூடாது என்றேனே, ஏன் அங்கு போனீர்கள்?"

"ரொம்ப களைப்பாக இருந்தது. சூடாகத் தேநீர் குடிக்க லாமென்று. சரி... சரி... வஸீர் நீ போகலாம். உன் விளையாட்டு தமாஷாக இருந்தது... எனக்குத் தூக்கம் வருகிறது. சற்று கண் மூடவேண்டும்."

"விசுவாசமிக்கவர்களின் தலைவரே! கொஞ்ச நேரம் தான்."

"இன்னொரு நாள் விளையாடலாம். இன்று எனக்குத் தூக்கம் வருகிறது..." என்று கொட்டாவியோடு, இஸ்பகானை வெளியில்னுப்பிக் கதவை மூடினார் காலிஃப் அரூண் அல்பாஷா.

பாவம் வஸீர் எரிச்சலுடன் கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு வேகவேகமாக நடந்தார்.

"ஜனாப் நான் இன்னும் உயிரோடுதான் இருக்கிறேன்" என்று உருவமிழந்த ஆஸாப் குரல் கொடுத்தான்.

வஸீர் தம் அறைக்குப் போய் கன்னத்தில் கையை

www.tamilnesan1981.blogspot.in

வைத்தபடி உட்கார்ந்து கொண்டு... இப்போது என்ன செய்யலாம்? என்று குழம்பிக் கொண்டார்.


"ஜனாப், எனக்கு மீண்டும் உருக்கொடுங்கள்... உடம்பை ஏதோ பண்ணுது – அதைக் கண்ணாடியில் பார்த்துக்கவும் முடியலியே, வைத்தியர்கிட்டயும் போக முடியாது" அந்தரத்தில் நின்றிருந்த ஆட்டுத் தொடை கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கொண்டிருந்தது– ஆம் ஆஸாப் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

வஸீர் அவன் தொண தொணப்பை காதில் வாங்கவில்லை. "ஆ வழி தெரிந்துவிட்டது" என்று துள்ளிக் குதித்தார். "காலிஃப் தூங்கிக் கொண்டிருப்பார். அப்போது ஆடவோ அசையவோ மாட்டார். அதுதான் சரியான சமயம். காலையில் காலிஃப் எழுந்திருக்கும்போது ஆள் காலி – காணாமல் போயிருப்பார்...!"

"வைத்தியரிடம் என்னைச் சோதிக்கும்படி கெஞ்சினாலும் அவரால் என் நாக்கைப் பார்க்க முடியாதே" என்று தன் தாபத்தைக் கூறி கொண்டிருந்தான் ஆஸாப்.

"முட்டாள் ஆஸாப்! ஏன் இப்படிப் புலம்பரே? வா, காலிஃபோட படுக்கையறைக்குப் போகலாம். நீ தெரியாதிருப்பதே நல்லது" என்று காலிஃப்பின் படுக்கை அறைக்குள் பூனை போலப் புகுந்தார் வஸீர்.

"இருட்டா இருக்கு. நல்ல வெளிச்சமில்லே, இதுவும் நல்லதுக்குத்தான்..."



www.tamilnesan1981.blogspot.in

"ஜனாப்... நான் உங்க பக்கத்திலேதான் நிக்கறேன்" வஸீர் கண்களை மூடிக்கொண்டு, "அப்ரகடப்ரா"வை உச்சாடனம் செய்து முடித்து, "இந்தத் தடவை நிச்சயம் வெற்றிதான்" என்று கண் விழித்த அதே சமயத்தில்.

"என் அருமை வஸீர் இந்த நேரத்தில் என் படுக்கையறையில் என்ன செய்கிறீர்?" என்று காலிஃப்பின் குரல் கேட்டது பின்னால்.

"ஜனாப்... ஓடிவந்து என் பின்னால் மறைந்து கொள்ளுங்கள்" என்று கிசுகிசுத்தான் ஆஸாப்.

"நீ... நீங்கள்... படுக்கையில் ப...டுக்கவில்லையா?" குழறினார் வஸீர் இஸ்பகான்.

"மாலையில் தேநீர் அருந்தியது தப்பு... தூக்கம் வரல்லே. தோட்டத்தை ஒரு சுற்றுச் சுற்றி வரலாம்னு போனேன்... அது சரி நீர் இங்கே என்ன செய்கிறீர்?"

"வந்து... வந்து... காலிஃப் போட பார்வை சரி இல்லே. எனக்குப் பயமாயிருக்கு" என்று வஸீரின் காதருகில் கிசுகிசுத்தான் உருவமற்ற ஆஸாப்.

"என் படுக்கை, எங்கே என் படுக்கை...? அதைக் காணோம் யாரோ கொண்டு போய்விட்டார்கள்" என்று கத்தினார் காலிஃப். வஸீர் புயல்போல ஓடிக்கொண்டிருந்தார். படுக்கையைப் பார்த்து – காலிஃப் இருப்பதாக எண்ணிப் போட்ட மந்திரம் பலித்துவிட்டது.

தன் அறைக்கு வந்த வஸீருக்கு ஆத்திரமும், எரிச்சலும் ஏமாற்றமும். "ஏதாவது வழி செய்தாக வேண்டும்... ஏதாவது..." என்று தம் மேஜைமீது ஓங்கிக் குத்தினார். பாவம், ஆஸாபின் கைமீது அந்தக் குத்து விழுந்து அவன் அலறினான் "ஐயோ என் கை... கை!" என்று.

மறுநாள் காலை–

காலிஃப் திண்டுமீதமர்ந்து உல்லாசமாகக் கண்ணாடியில் தன்முக அழகைப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது– வெறிகொண்டவர் போல உள்ளே புகுந்தார் வஸீர்.

"நகராதீர்கள், அசையக் கூடாது" என்று கத்திவிட்டு பரபரப்போடு வேகவேகமாகத் தன் கண்களைக் கைகளால் மூடிக்கொண்டு" அப்ரகடப்ரா... நான் உங்களை..."

www.tamilnesan1981.blogspot.in

"இஸ்பகான் இங்க பாரப்பா... அட இதென்ன தமாஷ்? முகத்தை..." என்ற காலிப் கண்ணாடியை வஸீரின் முகத்துக்கு முன்னால் நீட்டியபடி நின்று கொண்டிருந்தார்.

வஸீர் கண் விழித்தார். அருக்குத் திகிலான திகில்— நல்லவேளை மூன்று தடவை உச்சரிக்கவில்லை. கண்ணாடி யில் தெரியும் தன் பிம்பத்தைப் பார்த்திருந்தால் அவரே யல்லவா மறைந்திருப்பார்! வியர்த்துக் கொட்டியது வஸீருக்கு. காலிஃப் போய் விட்டார் குளிப்பதற்கு.

காலிஃப்பை காணாமல் போகச் செய்ய மார்க்கமே இல்லையா? என்று யோசித்தபடி நடந்த வஸீருக்கு மின்னலைப் போல ஒரு யோசனை உதித்தது. "ஆஹா இது ஏன் முன்பே தோன்றாமல் போயிற்றே" என்று பரபரத்தவர் "ஆஸாப்" என்று கத்திக்கொண்டு ஓடினார்.

அடுத்த வினாடி—


உருத்தெரியாதிருந்த அவன் மீது மோதிக்கொண்டு...

"ஜனாப் நான் எப்போதும் உங்க அருகேதானே இருக்கிறேன்."

"காலிஃப்பை காணாமல் போகச் செய்ய உன்னால்தான் முடியும். உருத்தெரியாமல் உள்ள உன்னை யாரும் சந்திக்க முடியாது. உனக்கு எவ்விதக் கஷ்டமும் இல்லை."

"நான் என்ன செய்ய வேண்டும் ஜனாப்?"

"ரொம்ப சுலபம்... காலிஃபின் முன்னால் நின்று கொண்டு கண்களை மூடியபடி..." சொல்ல வேண்டியதைச் சொல்லிக் கொடுத்தார் வஸீர். அப்போது அவர் முன்னால்



www.tamilnesan1981.blogspot.in

காலிஃப்பின் காலை உணவுக் குவியல் மேஜைமீது பரப்பப் பட்டிருந்தது. மேஜை மாயமாக, உணவுப் பண்டங்கள் உள்ள பாத்திரங்கள் மட்டும் அந்தரத்தில் நிற்கலாயின.

வஸீர் திரும்பி "ஆஸாப் புரிந்ததா?" என்று கேட்டார்.

"புரிந்தது ஜனாப். ஆனாலும் ஒருமுறை சொல்லிப் பார்த்துக்கொள்கிறேன்" என்று வஸீரின் முன் நின்று ஆஸாப் "ஆப்ரகடப்பரா நான் உங்களைக் காண விரும்பவில்லை... நான் உங்களைக் காண... நான்...

"சரி... கச்சிதமாகக் கூறுகிறாய்"

"ஜனாப் நீங்கள்... நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?" அலறினான் ஆஸாப்.

"ஏ... என்ன... இங்கே தானே..."

வஸீர் உருவமற்றவராகிப் போனார்...

சிறிது நேரத்துக்குப் பின்—

வீரர்கள் அந்த அறைக் கதவையும் ஜன்னல்களையும் மூடிப் பலகைகள் வைத்து ஆணி அடித்துக் கொண்டி ருந்தனர்.

உள்ளிருந்து வஸீரின் குரல் கேட்டது... "நிறுத்து... ஆணி அடிக்காதே... திறந்து விடு... காலிஃப் அவர்களே என்னைத் தெரியவில்லையா?"

காலிஃப்பிடம் சேனாதிபதி கூறிக் கொண்டிருந்தார். "மாட்சிமை தங்கிய காலிஃப் அவர்களே! இந்த அறைக்குள் ஆவிகள் நடமாட்டமிருக்கிறது. பொருள்கள் அந்தரத்தில் நட மாடுகின்றன. மது கோப்பைகள் தானாக எழும்பிப் பறக் கின்றன. ஒருவரையொருவர் ஏசிக் கொள்கிறார்கள். ஆனால் யாருமில்லை..."

"நல்லவேளை, இந்த அறையைப் பலகைகள் வைத்து அடைத்து மூடியது சரியான முன்னேற்பாடுதான். வஸீரோ இங்கு எங்குமில்லை. ஆனால் குரல் மட்டும் உள்ளிருந்து கேட்கிறது. அவருக்கு மந்திர தந்திரமெல்லாம் தெரியும். எப்படியாவது ஆவிகளிடம் இருந்து விடுபட்டு வந்து விடுவார்" என்றார் காலிஃப் நம்பிக்கையுடன்.

www.tamilnesan1981.blogspot.in



அப்பா அன்று கதை சொல்லாமல் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். குழந்தைகள் பொறுமையாகக் காத்திருந்தனர். வெகுநேர மௌனத்துக்குப் பின் அப்பா கூறினார். உன் சின்ன வயதில் எனக்கொரு நண்பன் இருந்தான். அவன் நினைவில்- உங்களை மறந்துவிட்டேன்" என்றார்.

''உங்கள் நண்பரைப் பற்றியே இன்று எங்களுக்குக் கதையாகச் சொல்லுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார்கள் குழந்தைகள்.

## 28. ராமு என் நண்பன்

ராமு என் நண்பன். ரொம்பப் புத்திசாலி. ஒருநாள் நான் அவனைத் தேடிப் போனேன். ஒரு மரக்கிளையில் 'புல்லப்ஸ்' எடுத்துக் கொண்டிருந்த அவன் என்னைக் கண்டதும் கீழே குதித்தான்.

அப்போது அவ்வழியே பத்து வயதுச் சிறுமியொருத்தி சென்றாள். குறுகுறுக்கும் வட்டக் கருவிழிகள். சுருள் சுருளான கருங்கூந்தல். சிரித்த முகம். சிவந்த மேனி, சின்ன மூக்கு. அவள் நடையே அழகாக இருந்தது. நான் வியந்து கொண்டிருந்தேன். ராமு அவளை ஏறெடுத்தும் பாராமல் தலை குனிந்து தன் கால் விரல்களையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் போய் விட்டாள். ராமுவின் செய்கை எனக்குத் திகைப்பாக இருந்தது.

"ஏண்டா, ராமு! நீ பெண்களோடு பேசியதே இல்லையா?" என்று என்னால் கேட்காமலிருக்க முடியவில்லை.

"பெண்களா?" என்றான் ராமு. "பெண்களே முட்டாள்கள்" என்றான் அவன்.

www.tamilnesan1981.blogspot.in



www.tamilnesan1981.blogspot.in


"நீ பெண்களோடு பழகியதே இல்லையா? ஏன் பெண் களைக் கண்டால் இப்படி வெறுக்கிறாய்?" என்று கேட்டேன். கேள்வி கேட்கப்படுவதை விரும்புகிறவன் ராமு. ஆனால் பதில் சொல்வதை வெறுப்பவன்.

நாங்கள் நடந்து கொண்டிருந்தோம். ராமு ஒரு கூழாங் கல்லைக் காலால் எத்தி வீசினான். எனக்கு அவன் உள் ளத்தைப் புரிந்து கொள்ளத் தெரியும். நான் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் வேறு திசையில் பேச்சைத் திருப்ப முயன்றான் அவன்.


அருகே இருந்த மதகுச் சுவர் மீது ஏறி தாவி, உட்கார்ந்து கொண்டு கால்களை வீசியபடியே "கம் சாப்பிட்டிருக் கிறாயா?" என்று கேட்டான் என்னிடம்.

"'கம்'மா? அது என்ன 'கம்—கோ' என்றேன் நான். ராமுவின் வாயிலிருந்து ஒரு பலூன் உருவாயிற்று. "பப்பிள் கம்" என்றான் குளறியபடியே.

"ராமு உன் சாமர்த்தியமான தமாஷ்களை நான் ரசிக்



www.tamilnesan1981.blogspot.in



www.tamilnesan1981.blogspot.in

கிறேன். நான் கேட்டதற்குப் பதில் சொல்லவில்லையே! பெண்களின் விஷயமாக உன் பதில் என்ன? நீ தக்க பதில் கூறாவிடில், பெண்களைக் கண்டு நீ பயப்படுகிறாய் என்ற உண்மையை ஒப்புக் கொண்டு விடு" என்றேன்.

ராமு என்னை ஒரு மாதிரியாகப் பார்த்துக் கொண்டு ஒதுங்கிப் போனான். பிறகு என்னிடம் நெருங்கி வந்து, "யாரப்பா? நானாப்பா? இல்லை, இல்லவே இல்லையப்பா!" என்றான், நையாண்டியுடன். அவனது ஒரு கால் நடைபாதை யிலும் மற்றொரு கால் வீதியிலும் இருந்தது.

"பெண்கள்...! அவர்கள் சிரிப்புக்கு அர்த்தமே இல்லை. தோள்பட்டையில் முகவாயை இடித்துக்கொண்டு, கன்னத் தைச் சிவப்பாக்கிக் கொள்ளும் அவர்களிடமா எனக்குப் பயம்? ப்பூ! பெண்களே முட்டாள்கள்!" என்றான் ராமு.

பிறகு பெண்கள் செய்யும் சேஷ்டைகளைப் பல கோணங்களில் பாவம் பிடித்துக் காட்டியபடியே, "சில பெண்கள் கட்டுப்பெட்டியாக வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடப்பார்கள். சில அடக்கமில்லாமல் திரியும். தாஜா செய்து காரியத்தைச் சாதித்துக் கொள்ளுவதிலே சாமர்த்தியக்காரி கள் பெண்கள். அதிகாரம் செய்து அடக்கி ஆள வேண்டு மென்ற விருப்பமுடையவர்கள். விளையாட்டுகளில் பங்கு கொள்ளமாட்டார்கள். பாட்டு, நாட்டியம் என்றால் விருப்பமு டன் ஓடி விடுவார்கள்" என்று பெண்களைப் பற்றிய தன்



www.tamilnesan1981.blogspot.in

கருத்துக்கள் சிலவற்றை உதிர்த்தவன், அருகிலிருந்த தபால் பெட்டியின் நாக்கை ஆட்டி விஷமம் செய்யலானான்.

அவன் மறுபடியும் அந்த விஷயத்திலிருந்து வேறு திசைக்குத் திரும்ப விரும்புகிறான் என்பதை நான் புரிந்து கொண்டேன். கால்களை அகட்டிக் குனிந்து அந்த இடை வெளி வழியாக என்னைப் பார்க்கலானான் ராமு. "நீ சூடா 'சாப்பிட்டிருக்கிறாயா?" என்று கேட்டான்.

"சூடாவா? நான் எதையுமே சூடாகத்தான் சாப்பிடுவேன்" என்றேன். அவன் அந்த நிலையிலேயே சிரித்தான். "சூடா




www.tamilnesan1981.blogspot.in

என்பது பம்பாய்ப் பக்கத்தில் விற்கப்படும் சுவையான 'மிக்ஸரு'க்குப் பெயர்" என்றான் அவன்.

எனக்கு அவன் போக்குப் பிடிக்கவில்லை. "டேய், ராமு! உன் எண்ணத்தின்படி. பெண்கள் நல்ல பாம்புகள் என்றல்லவா ஆகிறது. சுண்டெலி– பூனையைப் பற்றி வர்ணிப்பது போலிருக்கிறது, நீ பெண்களைப் பற்றி வர்ணிப்பது. நீ நினைப்பது போல அவர்கள் அப்படி ஒன்றும் மட்டமானவர்களில்லையப்பா!" என்றேன் நான்.

அப்போது நாங்கள் புதிதாகக் கட்டி முடிந்துகொண்டிருக்கும் ஒரு வீட்டின் முன்னால் நடந்து போய்க் கொண்டிருந்தோம். அப்போதுதான் பூசி வீட்டுச் சென்ற சிமிண்ட் தரையின் மீது, கோணங்கி ராமு குச்சியில் நுழைத்த ஒரு தகர டப்பாவை நெற்றியில் நிற்க வைக்க முயன்றபடி தள்ளாடி நடந்தான். அவன் கால்கள் சிமிண்டுத் தரையில் அச்சு அச்சாகப் பதிந்தன. நடந்தபடியே எனக்குப் பதில் கூறினான்.



www.tamilnesan1981.blogspot.in

"தங்களைப் பற்றிப் பீத்திக் கொள்ளும் பிரகிருதிகள் பெண்கள், 'உனக்குத் தெரியாத தெல்லாம் எனக்குத் தெரியும்' என்பார்கள். நம் பொறுமையை இழக்கும்படி நம்மைப் பரிகாசம் செய்வதில் பலே கெட்டிக்காரிகள், அவர்கள் நம்மை அடிக்கலாம். ஆனால் அவர்களை நாம் திருப்பி அடிக்க முடியாது. பெண்களே நியாயமற்றவர்கள். பெண்களைக் கண்டாலே எனக்கு ஆத்திரம்."

சட்டென்று ராமுவின் முகம் மின்மினிப் பூச்சியாக மாறியது. எதிரிலிருந்த நெருப்பணைக்கும் படைக்குப் பயன்படும் குழாய் முட்டின் மீது தாவி ்க்ககளைப் பதித்துத் த்வளை போலத் தத்திக் குதித்து அப்பால் சென்றான். அந்தப் புத்தம் புதிய வீட்டின் இரும்புக் கேட்டில் பூசி இருந்த– காயாத சிவப்பு வர்ணத்தில் விரல்களைப் பதித்துக் கோடு கிழித்தபடியே ஓடினான். பிறகு பெண்களைப் பற்றித் தன் குற்றச்சாட்டைத் தொடர்ந்தான்.

"பொம்மைகளுக்குக் கல்யாணம் செய்து வைத்துக் குடும்ப விளையாட்டு விளையாடும் பெண்களின் அழகைப் பார்த்திருக்கிறாயா? 'இன்னும் வேடிக்கை, தங்களை ஆண் பிள்ளைகளாக நினைத்துக் கொண்டு அவர்கள் நடிக்கும் அந்தக் கண்றாவியை என்னவென்பது? நீச்சல்குளத்தில் மட்டும் ஏனோ அவர்கள் என்னைவிட நன்றாக நீந்துகிறார்கள்" என்ற ராமு இப்போது தலைகீழாக நின்றான், சிரஸாஸனம் செய்வதைப்போல. கால்களை இப்படியும் அப்படியும் ஆட்டியபடியே, "கடகடா... சுடுசுடு... நடுவிலே பள்ளம். அது என்ன" என்றான்.

"ஆட்டுக் கல்லுரல்!" என்றேன் நான்.

"உனக்கு இதை யாரோ ஒரு பெண் சொல்லிக் கொடுத்துவிட்டாள்" என்றான் ராமு. தலைகீழ் நிலையிலிருந்து சரியாக நின்ற அவன் வெறுப்புடன் "பெண்கள், ஹும்! அடுத்த நிமிஷம் அவர்கள் என்ன செய்வார்கள் என்று யாராலும் சொல்லவே முடியாது. வீட்டு வேலை செய்து பழக்கமிருந்தால்– நகத்துக்குச் சாயம் பூசிக் கொண்டு நிற்பார்களா இந்தக் குட்டிகள்? நீயே சொல்லு" என்று கேட்டான் ராமு. அவனையே பேசவிட்டு நான் பேசாதிருந்தேன்.

www.tamilnesan1981.blogspot.in

"பள்ளிக்கூடத்தில் குசுகுசுவென்று பேசுவது அவர்கள். ஆனால் பொல்லாப்போ நமக்கு. இது ஏன்?" ராமு நடந்து கொண்டிருந்தான். "அவர்கள் எப்போதுமே நேர்மையான வர்கள். நாம்—பையன்கள் எப்போதுமே தவறிழைக்கக் கூடிய வர்கள் என்பது ஆசிரியரின் எண்ணம். எனக்குத் தெரியும், அவர்களும் தப்புச் செய்வார்கள் என்று. ஏனென்றால், 'இந்தப் பையன்களே முட்டாள்கள்!' என்று அவர்கள் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். பெண்களாம், பெண்கள்!" — அலுத்துக் கொண்டான் ராமு.

இப்போது அவன் நிலை வேடிக்கையாக இருந்தது. புல் தரையில் குப்புறப்படுத்துக் கொண்டு இரண்டு கால்களையும் அருகிலிருந்த ஒரு மரத்தின் மேல் தூக்கி வைத்துக் கொண்டிருந்தான்.

"மரத்தில் ஏறுவேன். மாங்காயைப் பறிப்பேன் என்று ஜம்பமடித்துக் கொள்வார்கள். அத்தனை பெண்களையும் மரத்திலேற்றி விட்டு வேடிக்கை பார்க்க வேண்டும். ம்... ஆனால் எங்கே? நாம்தான் மரத்தில் ஏறி அவர்களுக்கு மாங்காயைப் பறித்துப் போடுகிறோமே!"

"பெண்களின் சாமர்த்திய மெல்லாம் எனக்குத் தெரியும். 'கொட்டும் மழையில் நனைந்தபடி வெட்டவெளியில் நின்று விளையாடுவேன்' என்று வீறாப்புப் பேசுவார்கள். என்றைக்கா வது நல்ல மழை பெய்யும்போது அன்று வீறாப்புப் பேசிய வளை வீதிக்கு இழுத்து வருவோம் என்று அவள் வீட்டுக்கு



www.tamilnesan1981.blogspot.in

போனாமானால்— நாம்தான் முட்டாள்களாவோம். மழை பெய்யும்போது அவர்கள் வீட்டை விட்டுத் தலையை வெளியே நீட்ட மாட்டார்கள். அப்போது தான் அம்மாவின் பட்டுப் புடவையைக் கட்டிக் கொண்டு அறைக்குள்ளேயே அழகு பார்த்துக் கொண்டிருப்பார்கள்!

"கரப்பான் பூச்சியைக் கண்டால் முகம் சுளித்து வெறுப் புடன் நடுங்குவார்கள். அவர்களைத் திருப்திப்படுத்த அவை களில் ஒன்றைக் கொன்றுவிட்டாலோ, 'ஐயோ, பாவம்!' என்று அதனிடம் அநுதாபப்பட்டுக் கொண்டு— நம்மைக் கொலைகாரனாகப் பார்ப்பார்கள். பெண்களைப் பற்றி இன்னுமா தெரிந்து கொள்ள வேண்டும்? பெண்களே முட்டாள்கள்!" என்று கொட்டித் தீர்த்தான் ராமு.

இத்தனை நேரம் அமைதியோடு அவன் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த நான் கேட்டேன்? "அதுசரி, உன் அம்மாவைப் பற்றி என்ன சொல்லுகிறாய்? அவளும் ஒரு பெண்தானே?" என்றேன்.

ராமுவின் கண்கள் பளபளத்தன. "அம்மாவா, அம்மாவா?" என்றான் ஆச்சரியத்துடன். பிறகு "அம்மா இந்தப் பெண் வர்க்கத்தைச் சேர்ந்தவளே அல்ல. அம்மா எப்போதுமே அம்மாதான்!" என்றானே, பார்க்கலாம்.



www.tamilnesan1981.blogspot.in



அவசர அவசரமாக வந்தார் அப்பா. "நீங்களெல்லாம் ரொம்ப நேரமாக் காத்திண்டிருக்கேளா?" என்று கேட்டார்.

அன்று அவர் பனியன் அணியவில்லை. நெற்றியிலும் மார்பிலும் கைகளிலும் பட்டையாக விபூதி.

"இன்று சிவராத்திரி. இரவு முழுதும் நான் விழித்து சிவன் கோயிலில் லிங்கத்துக்கு அபிஷேகம் செய்வதைப் பார்ப்பது ரொம்ப விசேஷம். அதனால் இன்று கதை இல்லையோ என்று கவலைப்பட வேண்டாம். நான் இன்று விடியவிடிய- பெரீய்ய கதையாச் சொல்லப் போறேன்.

"இடைவேளை உண்டு.

"இரவு ஒரு மணிக்குக் கோயிலுக்குப் போய் தரிசனம் பண்ணிவிட்டு வந்து மறுபடி கதை சொல்லுவேன் இரண்டு நெடுங்கதைகள் - சிவராத்திரி ஸ்பெஷல். இன்று இரவு நீங்களும் தூங்கக் கூடாது - சிவராத்திரி இல்லையா?"

முதல் நெடுங்கதையைச் சொல்ல ஆரம்பித்தார் அப்பா.

## 29. பலே பாலு பங்களா மர்மம்

அவன் பெயர் பாலு...

உங்களுக்கெல்லாம் தெரிந்த அதே பாலுதான்!

ஆனால் 'பலே பாலு'வா இன்னும் அவன் புகழ் பெற வில்லை. புகழ் வரவில்லையே தவிர அவனுக்குள்ள திறமை, சாமர்த்தியம், தைரியம் இவையெல்லாம் எங்கும் போய்விட வில்லை.

இந்த ஊரிலிருந்துதான் பட்டணத்துக்கு அவன் அப்பா மாற்றலாகிப் போனார். இது ஒரு சின்னக் கிராமமுமல்ல, ஆனால் பெரிய நகரமுமல்ல. அமைதியும் இனிமையும் நிறைந்த ஊர். பாலு படிக்க வேண்டிய பள்ளி மட்டும் மூன்று

www.tamilnesan1981.blogspot.in

மைல்களுக்கப்பாலிருந்தது. ஏனென்றால் அவன் அப்பா அவனைக் கான்வெண்ட் பள்ளியில் சேர்த்திருந்தார். அம் மாதிரிப் பள்ளி இந்த ஊரில் இல்லை. ஆகவே தினமும் பாலு சைக்கிளில்தான் பள்ளிக் கூடத்துக்குப் போவான். அன்றும் அப்படித்தான்— புத்தக மூட்டையைக் காரியரில் வைத்துக்கொண்டு, தண்ணீர்ப் புட்டியைத் தோள் வழியாக மார்பின் குறுக்கே மாட்டிக் கொண்டு கிளம்பினான்.

“மம்மி, போயிட்டு வரேன்!” என்று கூறியபடி ஜிவ் வென்று சைக்கிளில் ஏறி அமர்ந்து— விர்ரென்று பறந்தான் பாலு.

“சாயந்திரம் சீக்கிரமா வந்துடு. ஊர் சுத்திட்டு வராதே” என்று அவன் அம்மா கூறியபோது— அது காதில் விழாத தூரத் துக்கு அவன் போயே போய்விட்டான்! பாலுவுக்கு சைக்கிள் சவாரி என்றால் அல்வாவை விழுங்குவது போலாயிற்றே!

அந்த ஊர்க் கோடியில் மதகுப் பாலம். அதைக் கடந்து தான் பாலு போயாக வேண்டும். இன்னும் அந்த மதகுப் பாலத்துக்கு பாலு வரவில்லை. அந்தப் பாலத்தின் மதகுச் சுவர்மீது பாலு வயதுடைய ஒரு பையன் சாய்ந்தபடி நின்றான். அவன் உடையும் தோற்றமும் அவன் ஏழை, அனாதை என்பதை அறிவித்தன. ஓடிவந்த களைப்பில் அவன் மார்பு ஏறி ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. உட லெல்லாம் வியர்வை வழிந்தது. ‘இனி என்னால் ஓட முடியாது. பசி வயிற்றை இழுத்துப் பிடித்துக்கிட்டுது’ என்று தனக்குள் சொல்லிக் கொண்டான், அந்தப் பையன். அழுக்குச் சட்டையால் முகத்து வியர்வையைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தவன் தூரத்தில் ஒரு ரேக்ளா வண்டி கனவேகமாக வருவதைப் பார்த்து விடுகிறான். அவன் பார்வையில் மிரட்சி, பீதி. உடலில் ஒரு பரபரப்பு.

வண்டி நெருங்கிவிட்டது. ரேக்ளா குதிரை மின்னல் வேகத்தில் பாய்ந்து வந்து கொண்டிருக்கிது. ‘நான் உன்னிடம் மாட்டிக்கொள்ள மாட்டேன்’ என்று தனக்குள் கூறிக் கொண்டே மதகுமேல் ஏறினான் கந்தன்.

ஆம், அந்தப் பையன் பெயர் கந்தன். கந்தன் மதகு மீது ஏறுவதை ரேக்ளா வண்டியில் வரும் மனிதன் பார்த்து விட்டான். ‘ஏய்... ஏய்! பயலேநில்லு. தண்ணிலே குதிக்காதே’

www.tamilnesan1981.blogspot.in

என்று கத்தியபடி குதிரையை இழுத்து நிறுத்திவிட்டு மதகு மீதுஓடி வந்தான். ஆனால் கந்தன் தாமதிக்கவில்லை. 'தொபீர்' என்று ஆற்றில் குதித்தே விட்டான்!

"டேய். உனக்கு நீந்தத் தெரியாது மரியாதையாக் கரை யேறி வந்துடு" என்று மதகுச் சுவர் மீதாக எட்டிப் பார்த்தபடி கூவினான் வண்டியில் வந்த மாணிக்கம். அவன் வயது ஐம்பதுக்கு மேலிருக்கும். ஒரு காலத்தில் கட்டுமஸ்தான உடலாக இருந்திருக்கும். இன்று தளர்ந்து போயிருந்தது. முகத்தில் கொடூரம். அதை எடுத்துக் காட்டும் கொடுவாள் மீசை. சிங்கத்தின் பிடரி பேன்ற கிராப் உடலை மூடி ஒரு பனியன். முண்டாவிலே சிகப்புக் கயிற்றில் ஒரு தாயத்து. முட்டுக்கு மேலே தூக்கிக் கட்டிய மல்வேட்டி. இடுப்பில் மணிபர்ஸ் வைத்த அகலமான பெல்ட். இதுதான் மாணிக்கம். அந்தப் பையன் கந்தனின் மாமா.

மாணிக்கத்தின் கூச்சலுக்குக் கந்தன் மூச்சே விட வில்லை. மூச்சுவிட முடியவில்லை கந்தனால். அவனுக்கு நீந்தத் தெரியாது. ஆகவே காலைக் கையை உதைத்துக் கொண்டு, தட்டுத் தடுமாறி மூழ்கி, மேலே வந்து தத்தளித் தான். தண்ணீரைக் குடித்து விடாதபடி மூச்சுக் கட்டினான். நல்ல வேளையாக ஆற்றின் நடுவே எதற்காகவோ ஒரு மரத்தை நட்டிருந்தார்கள். நட்டிருந்தார்களோ அல்லது நடு ஆற்றில் வளர்ந்திருந்த ஒரு மரம் பட்டுப்போய் அப்படி மொட்டையாக நின்றதோ தெரியவில்லை. எப்படியானாலும் கந்தனை மூழ்கவிடாமல் காப்பாற்ற அங்கு அப்படி ஒரு பட்ட மரம் நின்று கொண்டிருந்தது. அவனும் அதைத் தழுவிக் கொண்டு கழுத்தளவு நீரிலே குளிரிலே நடுங்கியபடி நின்று கொண்டிருந்தான். மாணிக்கம் மதகின் மீதிருந்து "வந்து விடு, வந்துவிடு" என்று கத்திக் கொண்டிருந்தான். கந்தனைப் பிடித்துக் கொண்டு வர நீரில் குதிக்கவில்லை அவன். புது பனியன் நனைந்துவிடும் என்பதினாலா. அல்லது மாணிக்கத் துக்குமே நீந்தத் தெரியாதா?

இந்தச் சமயத்தில்தான் 'கிணிங் கிணிங்' என்று தனது ஸ்பிரிங் மணியில் ஒலியெழுப்பியப்படி அங்கு வந்தான் பாலு. மாணிக்கத்தின் கத்தலைக் கேட்டான்.

"என்ன சமாசாரம்?" என்று கேட்டபடி சைக்கிளை விட்டு இறங்கினான் பாலு.

www.tamilnesan1981.blogspot.in

"அதோ தண்ணீரிலே பாரு ஒரு பயல். அவனுக்கு நீந்தத் தெரியாது" என்றான் மாணிக்கம் கந்தனைச் சுட்டிக் காட்டி.

"இவ்வளவுதானே? நீங்கள் என் சைக்கிளைப் பாத்துக் குங்க. இதோ ஒரு நிமிஷத்திலே உங்கள் பையனைக் கொண்டு வந்து சேக்கறேன்" என்று சட்டையைக்கூடக் கழற்றாமல் 'தொபுகடீர்' என்று மதகின் மீது ஏறி நீருக்குள் 'டைவ்' அடித்துக் குதித்தான் பாலு. நீச்சல் என்றால் பாய்ச்சல் குதிரை மாதிரி போவான் பாலு. நீந்திக் கொண்டே "தம்பி பயப்படாதே. அப்படியே அந்தக் கம்பத்தைக் கெட்டியாகப் புடிச்சுக்கோ, நான் வரேன்" என்று கூவினான் பாலு. ஆனால் கந்தனோ அவன் சொன்னதற்கு மாறாக, தன் பிடியைத் தளர்த்திக் கொண்டு, அவனிடமிருந்து தப்பி ஓடும் நோக்கத்துடன் தண்ணீரில் மிதக்கலானான்.

பாலுவிற்குக் கந்தனின் செயல் வியப்பளித்தாலும், கை மாறிப் போட்டு– இரண்டே எட்டில் அவன் தலைமயிரைப் பற்றி அவனைப் பிடித்துக் கொண்டான்.

"என்னை விட்டுடு... நான் அந்த மனிதரிடமிருந்து தப்பிப் போகத் தவிக்கறேன். என்னைக் காப்பாத்தி அவர்கிட்டே கொண்டு போகாதே. என்னை விட்டுடு"–என்று திமிறித் துடித்தான் கந்தன். பாலுவிற்கு வியப்பான வியப்பு. இதில் ஏதோ மர்மமிருக்கிறது என்று உணர்ந்தான்.

"சரி,சரி நான் உன்னை அவர்கிட்டே கூட்டிப் போகல்லே. ஆனா உன்னைத் தண்ணிலேந்து காப்பாத்தி அந்தக் கரைக்குக் கொண்டு சேர்க்கலாமில்லையா? அதுவுமே கூடாதா?" என்று கேட்டான் பாலு. தற்கொலை செய்து கொள்ளுவது கந்தனின் நோக்கமில்லையே, ஆகவே பாலுவின் வேண்டுகோளுக்குச் சம்மதித்தான். அவனை நீருக்கு மேலாக இருக்கும்படி வைத்துக் கொண்டு, நீந்தி மறு பக்கத்துக் கரையில் ஏறினான் பாலு. மதகின் மீதிருந்து கொடுவாள் மீசை மாணிக்கம் "பயல்களா! டேய், எங்கிட் டேருந்து தப்பிட முடியாது. வந்துடுங்க" என்று கூச்சல் போட்டுக் கொண்டிருப்பது லேசாகக் கேட்டது. கரையேறிய கந்தன் பாலுவிற்கு நன்றி கூறினான். "நீந்தத் தெரியாத என்னை இந்தக் இக்கட்டிலிருந்து காப்பாத்தினதுக்கு உனக்கு ரொம்ப நன்றி. நான் அந்த மனிதனிமிடருந்து தப்பியாக வேண்டும். நான் வருகிறேன்" என்று பரபரத்தான் அவன்.

www.tamilnesan1981.blogspot.in

"அவரிடமிருந்து நீ ஏன் தப்பி ஓடணும் என்று நான் இப்போ உங்கிட்டே கதை கேட்டுக்கிட்டிருந்தா உன்னைத் துரத்தி வரும் அவர் கிட்டே மாட்டிப்பே. ஆனால் இப்போ நீ ஓடினாலும் உன்னாலே அவரிடமிருந்து தப்ப முடியாது. நான் செய்வது சரியோ தப்போ– அது இப்போ எனக்கே தெரியாது... உனக்கு உதவணும்னு மட்டும் என் மனம் நினைக்குது... என்னைப் பின் தொடர்ந்து ஓடிவா" என்று ஈர உடையுடன் ஓடினான் பாலு. ஆற்றின் மறுகரையில் அடர்ந்த காடு இருந்தது. அதில் குன்றும் மலையும் கல்லும் கட்டியும் புதரும் உண்டு. பொழுது போகாத நேரத்தில் சாகசச் செயல் களையும் கதைகளையும் நிறையப் படித்திருக்கும் பாலு, அதே ஆர்வத்தில் நண்பர்களோடு இங்கு அடிக்கடி சுற்றி யிருக்கிறான். அப்போது இரு மலைப்பாறைகளுக்கு நடுவே, குகை போன்று ஒரு மறை விடம் இருப்பதைப் பார்த்து வைத்திருந்தான். அங்கு தான் இப்போது கந்தனுடன் ஓடினான் பாலு. அந்தக் காட்டுக்குள் யார் கண்ணிலும் படாமல் ஒளிந்து கொள்ளக் கூடிய இடம் அது.

நனைந்த உடைகளைப் பிழிந்து பாறைமீது உலர்த்திக் கொண்டே பாலு, "இன்று நான் பள்ளிக் கூடம் போவது உன்னால் தடைப்பட்டு விட்டது. அதற்கு ஈடு செய்வது போல உன்னிடமிருந்து ஒரு நல்ல கதையை எதிர்பார்க்கிறேன். அவர் யார்? அவரிடமிருந்து நீ ஏன் ஓடிப் போக விரும்பு கிறாய் என்பதை இப்போதாவது கூறலாமல்லவா?" என்று கேட்டான்.

கந்தன் தன் கதையைக் கூறலானான்.

"எனக்கு நினைவு தெரிந்த பிறகு, நான் என் அப்பாவை அதிகம் பார்த்ததில்லை. எனக்கு அம்மாதான் எல்லாம். அப்பா எப்போதாவது திடீரென்று ஒருநாள் வருவார். சில நாள் எங்களுடன் இருப்பார். பிறகு எங்கோ போய்விடுவார். அம்மாவிடம் எனக்கு உயிர். அவளிடம் அப்பாவைப் பற்றிக் கேட்டால் விவரமாக ஏதும் கூற மாட்டாள். கண்ணீர் வழியும். அம்மா அழுவதை என்னால் தாங்க முடியாது. ஆகவே நான் அவளை ஏதும் கேட்கமாட்டேன்.

"ஒருநாள் என் அருமை அம்மா திடீரென்று இறந்து போனாள். என் அப்பா என்னை, நீ பாலத்தில் பார்த்தாயே

www.tamilnesan1981.blogspot.in

ஒரு மனிதர், அவரிடம் கூட்டி வந்து, 'இனி இவர்தான் உனக்கு எல்லாம். இங்குதான் நீ வாழவேண்டும்' என்று கூறி என்னை அவரிடம் விட்டுவிட்டுப் போய்விட்டார். அதன் பிறகு என் அப்பாவை நான் பார்க்கவே இல்லை.

"இந்த மனிதர் என் மாமா. என் அம்மா உயிரோடு இருந்தபோது நான் இவரைப் பார்த்ததேயில்லை. இவர் பெயர் மாணிக்கம். என்ன தொழில் செய்கிறார், எப்படிச் சம்பாதிக்கிறார் என்று தெரியாது. ஆனால் இவரிடம் நிறையப் பணம் புழங்கியது. யார் யாரோ இவரைத் தேடி வருவார்கள். ரகசியமாகப் பேசுவார்கள், சிரிப்பார்கள், குடிப்பார்கள். எனக்கென்னவோ அவர்களின் பேச்சும் நடத்தையும் பிடிக்கவே இல்லை. இயற்கைக்கு மாறான, நியாயமில்லாத வழிகளைக் கையாண்டு வாழ்கிறார்கள் என்று மட்டும் தோன்றியது. என் மாமாவை எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் அவருக்கோ என்னைவிட மனமில்லை. நானோ அநாதை. என்னிடம் நிறைய வேலை வாங்கினார். என் வயதுக்கும் என் சக்திக்கும் மேலான வேலைகளை எனக்கு அளித்தார். ஆனால் பசியாற உணவு தரமாட்டார். என்னைத் தன் அடிமையாக, அதற்கும் கேவலமாக நினைத்து நடத்திய அவரிடம் என்னால் எப்படி வாழ முடியும்? ஆகவேதான் ஒருநாள் ஓசைப் படாமல் அவர் வீட்டிலிருந்து கிளம்பி விட்டேன். என் துரதிர்ஷ்டம் வழியில் என் மாமா வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரரைச் சந்திக்கும்படியாயிற்று. என் செய்கையை அவர்தான் என் மாமாவுக்குத் தெரிவித்திருக்க வேண்டும். என்னைத் துரத்தியபடி அவரது ரேக்ளா வண்டி வந்தது, தற்செயலான நிகழ்ச்சியல்ல. நல்ல வேளை உன் உதவி கிடைத்தது. நரகத்திலிருந்து விடுதலை பெற்றேன்" என்று தன் கதையை முடித்தான் கந்தன்.

"அது சரி, உன் மாமா சட்டத்துக்குப் புறம்பான காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார் என்றால் அதை நீ போலீசுக்குத் தெரிவித்திருக்கலாமே?" என்று கேட்டான் பாலு.

"முடியாது. அவரைக் குற்றவாளி என்று நிரூபிக்க என்னிடம் எவ்வித ஆதாரமும் கிடையாது. தவிரவும் அவர் என்னுடைய சொந்த மாமா" என்றான் கந்தன்.

"ஓஹோ! சரி. எங்கு போய் எப்படி வாழப் போவதாகத் தீர்மானித்திருக்கிறாய்?"

www.tamilnesan1981.blogspot.in

"மாமா வீட்டுக்கு அடுத்த வீட்டில் இரண்டு ஆண்டு களுக்கு முன்பு ஒருவர் இருந்தார். அவருக்கு என்னிடம் அனுதாபம் உண்டு. இப்போது அவர் இங்கிருந்து ஐம்பதாவது மைலில் ஓர் ஊரில் இருக்கிறார். எப்படியாவது அவரிடம் போய்விட்டால், என் வாழ்க்கைக்கு ஏதாவது ஒரு வழியைச் செய்வார் அவர்" என்றான் கந்தன்.

"என்னால் முடிந்த உதவியை உனக்குச் செய்கிறேன், கவலைப்படாதே" என்றான் பாலு.

கந்தனுக்கு உதவுவதாக முடிவு செய்த பாலு அந்த மறைவிடத்திலிருந்து அவனை அழைத்துக் கொண்டு கிளம்பினான். பள்ளிக்குப் போகும் வழியில் ஒரு பெரிய பங்களா இருந்தது. பழங்காலத்தது. எந்த ஜமீன்தாருடை யதோ. ஆனால் இன்று பாழடைந்த நிலையில் ஊருக்கு வெளியே ஒதுக்குப் புறமாக இருந்தது. தினமும் அதைத் தாண்டிக் கொண்டுதான் பாலு பள்ளிக்குப் போவான். அடர்ந்து வளர்ந்து கிடந்த பெரிய தோப்பின் நடுவே இருந்தது அந்த மாளிகை— மர்மக்கதைகளில் வரும் பங்களாவைப் போல. அதை அடைந்த பாலு, "இங்கு நீ இரண்டொரு நாட்கள் கவலையில்லாமல் தங்கியிருக்கலாம். இந்தப் பங்களாவில் இப்போது யாரும் இல்லை. உன் மாமா உன்னைத் தேடி அலுத்துப் போய், நீ கிடைப்பாய் என்ற எண் ணத்தைக் கைவிடும் வரையில்— நீ இங்கு இருக்கலாம். நான் உனக்குப் பசிக்கு உணவு கொண்டு வந்து தருகிறேன்" என்றான்.

கந்தன் பாலுவைக் கட்டிக் கொண்டான். அவன் கண்கள் கலங்கின. "பாலு! என் அம்மாவுக்குப் பிறகு இப்படி யொரு அன்பை உன்னிடம்தான் அனுபவிக்கிறேன். எனக்காக நீ எவ்வளவு சிரமப்படுகிறாய்" என்றான். பாலுவுக்கு கந்தனை ரொம்பப் பிடித்துவிட்டது.

"நான் இருட்டிய பிறகு உணவோடு வந்து உன்னைச் சந்திக்கிறேன். இப்போது நான் ஸ்கூலுக்கு ஓடியாக வேண்டும். என்சைக்கிள் அந்தப் பாலத்திலேதான் இருக்கும். அதைப் பூட்டியிருப்பதினால் உன் மாமா அதைக் கிளப்பிக் கொண்டு போயிருக்க மாட்டார். பயமில்லாமல் இருப்பாயா இங்கு?"

www.tamilnesan1981.blogspot.in

“பயமா? என் மாமாவிடம் நான் ஒவ்வொரு விநாடியும் நடுங்கிக் கொண்டு வாழ்ந்தேனே— அதைவிட இது எவ்வளவோ மேல்” என்று உற்சாகமாகக் கந்தன் கூறவே, பாலு விடை பெற்றுக் கொண்டான்.

கந்தன் அந்தப் பெரிய பங்களாவை அதிசயமாகப் பார்த்தான். “எத்தனை பெரிய கட்டடம்! இப்படிப் பாழடைந்து கிடக்கிறதே. ஒரு காலத்தில் இது ரொம்ப அழகாக இருந்திருக்க வேண்டும்” என்று எண்ணியபடியே அதனுள் புகுந்து ஆராயலானான். விசாலமான கூடங்களும் அறை களுமாக இருந்தது. ஆங்காங்கே குப்பை கூளங்கள். இவனைப் போலவே வழிப் போக்கர்களோ, பிச்சைக்காரர் களோ அங்கு தங்கிச் சமையல் செய்திருப்பதற்கான அடை யாளங்களாக கரியும், விறகும், சாம்பலுமாகக் காணப் பட்டன. சில சாமான்கள் உடைந்தும், மக்கியும் நாசமாயும் இருந்தன.

திடீரென்று கிரீச்சென்று ஒரு சத்தம். தைரியசாலியான கந்தனின் நெஞ்சுமே தடதடத்தது. ‘ஏதாவது கதவு காற்றில் அசைந்திருக்கலாம்’ என்று திடப்படுத்திக் கொண்டான்... மெள்ள நடந்தான்.

மறுபடியும் “தடால்’ என்று ஒருசத்தம். கந்தனுக்கு அதிர்ச்சி. சட்டென்று கீழே கிடந்த ஓர் உடைந்த கழியைக் கையில் எடுத்துக் கொண்டான். “யாரது? யார் இங்கே?” என்று கேட்க நினைத்தான். ஆனால் குரல் குழறியது. ஏதோ சாமான்கள் சரிந்துவிழுவது போன்ற சத்தம். கையில் கழி யுடன் அங்கு போனான். பாதி திறந்திருந்த ஓர் அறைக் குள்ளிருந்துதான் அப்படிச் சத்தம் வந்தது. துணிவைக் கூட்டிக் கொண்டு உள்ளே எட்டிப் பார்த்தான். தட்டு முட்டுச் சாமான்கள், உடைந்த நாற்காலி, மேஜை, சட்டி பானை, குச்சி— கோல் இப்படிக் கண்டான் முண்டான்—சாமான்கள் அங்கு குவிக்கப்பட்டிருந்தன. அந்த பங்களாவின் பொருள் களை அங்கு அப்படிக் குவித்திருந்தார்கள் போலும். பூட்டு இற்றுப்போய்த் தானாகக் கதவு திறந்திருக்கிறதா அல்லது யாராவது பூட்டை உடைத்து...

கந்தனுக்கு யோசிக்க நேரமில்லை. உள்ளே முழு இருட்டுமில்லை. நல்ல வெளிச்சமுமில்லை.

www.tamilnesan1981.blogspot.in

“யாரது? யாராக இருந்தாலும் வெளியே வாருங்கள்” என்று கத்தினான் கந்தன். அப்படிக் கத்துவது அவனுக்கே வேடிக்கையாக இருந்தது. கொஞ்ச நேரம் சலனமே இல்லை — அவன் இதயத் துடிப்பைத் தவிர. பிறகு ‘மியாவ்’ என்ற ஒரு குரல் கேட்டது. கவிழ்ந்து கிடந்த ஒரு கள்ளிப் பெட்டிக்கு அடியிலிருந்து ஒரு பூனை தலையை நீட்டி மறுபடியும் ‘மியாவ்’ என்றது. திகிலோடு நின்று கொண்டிருந்த கந்தன் குபீரென்று சிரித்துவிட்டான். “அட நீ தானா? என்னைப் போல நீயும் இந்த வீட்டில் தங்கி இருக்கிறாயா? நீயும் அனாதைதானா?” என்று அந்தப் ‘பூனைக் குட்டியை எடுத்து அணைத்துக் கொண்டான். ‘இனி நீயும் நானும் தோழர்களாக இருப்போம்’ என்றபடி அதன் பட்டுடலைத் தடவிக் கொடுத்தான். பூனையும் சுகமாகக் கண்களை மூடிக்கொண்டு அவன் அணைப்பில் சுருண்டு சுகமாக முடங்கிக்கொண்டது.

அங்கு கிடந்த பொருள்களை ஆராய்ந்தான் கந்தன். ஒரு மெழுகுவர்த்தி கிடைத்தது. காலிப் பெட்டிகள் சிலவற்றை ஒன்று சேர்த்துப் போட்டான். அதிகக் குப்பையில்லாத ஓர் அறையில்— படுக்க, உட்கார வசதியாக. காலி சீசா ஒன்று கிடைத்தது. அதன் வாயில் மெழுகுவர்த்தியைத் திணித்துக் காடா விளக்குப் போலாக்கினான். அவன் அதிர்ஷ்டம் ஒரு நெருப்புப் பெட்டிகூடக் கிடந்தது அங்கு. யாரோ விட்டுப் போயிருக்க வேண்டும். “இரவு இருட்டுக்கு இந்த மெழுகு வர்த்தி உதவியாக இருக்கும். பொழுது போகத் தோழனாக நீ கிடைத்துவிட்டாயே!” என்று பூனைக்குட்டியை அணைத்துக் கொண்டான்.

**மா**லையில் பாலுவின் வீடு தேடி, ஏட்டையா ஏழுமலை வந்தார். பாலுவும் வீட்டிலிருந்தான். போலீஸ்காரரைக் கண்டதும் பாலுவின் அப்பாவுக்கு வியப்பும் திகைப்புமாக இருந்தது. “என்ன சார்? வாங்க. என்ன விசேஷம்?” என்று வரவேற்றார்.

“உங்க பையன் பாலுவைப் பத்தித்தான் சார். பள்ளிக் கூடத்திலிருந்து வந்துவிட்டானா?” என்றார் ஏட் ஏழுமலை.

“இருக்கிறானே, என்ன விஷயம்? ஏய் பாலு!” என்று குரல் கொடுத்தார்.

“எங்களுக்கு ஒரு கம்ப்ளெய்ண்ட் வந்திருக்கு. நம்ம தம்பி, வீட்டைவிட்டு ஓடிப் போக முயற்சி செய்த ஒரு

www.tamilnesan1981.blogspot.in

பெற்றோருக்கு உண்டு. ஆகவே அவன் செயல்களுக்குக் குறுக்கு விசாரணை செய்வதில்லை அவர்கள்.

கந்தனுக்குத் தரவேண்டிய உணவுடன் கால்களை எட்டப் போட்டு நடந்தான் பாலு. ஒரு மைல் போகவேண்டுமே. நிலவு திட்டுத்திட்டாகச் சாலைகளில் கோலம் போட்டிருந்தது. 'பாவம், கந்தன் காலையிலிருந்து பட்டினியாகக் கிடக்கிறான். களைத்துப் போய்த் தூங்கி இருப்பான்" என்று நினைத்த படியே நடந்தான். நிழலுக்கு நிழல் பதுங்கியபடி ஓர் உருவம் அவனைப் பின் தொடர்ந்து கொண்டிருந்தது. பாவம் பாலு அதை உணராதவனாக வேகவேகமாக நடந்து கொண்டிருந் தான். பெரிய பெரிய மரங்கள் சூழ்ந்திருந்ததால் அந்தப் பெரிய கட்டடம் இருளில் மூழ்கிக் கிடந்தது. இரவு வேளை களில் வெளியே கிளம்பினால் எப்போதுமே பாலுவிடம் டார்ச், விளக்கு இருக்கும். அதன் உதவியால் வாசல் பக்கத்தை ஆராய்ந்தான். கதவு திறந்திருந்தது. 'பாவம், கந்தன், பசியினால் களைத்துத் தூங்கிப் போயிருப்பான்' என்று எண்ணியபடி 'கந்தா, கந்தா!' என்று குரல் கொடுத்தான், கட்டடத்தின் உள்ளே போய். வெளியில் மரங்களினூடே காற்று புகுந்து 'ஊ' என்ற ஒலியை எழுப்ப— அது உள்ளே அச்ச மூட்டும் படியாக எதிரொலி செய்தது. பாலுவைத் தொடர்ந்து வந்த உருவம் ஓர் இருண்ட பகுதியில் மறைந்து நின்றபடி "இந்தப் பையன் இந்த வேளையில் இங்கே ஏன் வருகிறான்? காலையில் கந்தனுக்கு உதவிய பையனல்லவா இவன். ஒருவேளை கந்தன் இங்கேதான் ஒளிந்துகொண்டிருக்கிறானோ?" இப்படி எண்ணமிட்டது. அந்த உருவம். அது மாணிக்கம்தான் என்பதை இப்போது நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்களே!

பாலு அந்தப் பங்களாவில் இங்கும் அங்கும் 'கந்தா கந்தா!' என்று கூப்பிட்டுக் கொண்டே தேடினான். ஆனால் எங்கிருந்தும் அவன் குரலுக்குப் பதிலில்லை. ஓர் அறையில் இரண்டு மூன்று உடைந்த பெட்டிகளை ஒன்று சேர்த்துப் போட்டு, அதன் மீது கிழிந்ததோர் மெத்தையை விரித் திருந்தது. அருகிலே கையுடைந்த ஒரு நாற்காலி. அதன் மீது கண்ணாடிப் புட்டியின் வாயில் செருகிய மெழுகு வர்த்தி —ஆடாமல் அசையாமல் எரிந்து ஒளி பரப்பிக் கொண்டிருந் த்து. ஆனால் அந்தப் படுக்கையில் கந்தனைக் காண

www.tamilnesan1981.blogspot.in

பையனுக்கு உதவி செய்து, அவனைத் தப்ப வைத்திருக்கிறான். அவன் மாமா எங்களிடம் புகார் கொடுத்திருக்கார். அது விஷயமாய் பையனை நேரே விசாரிச்சுட்டுப் போகலாம்ன்னு தான் வந்தேன்" என்றார் ஏட்டையா.

பாலுவின் அப்பா மௌனமாகத் தன் பார்வையாலேயே பாலுவை "இதெல்லாம் என்ன?" என்று கேட்டார். அப்பாவின் கோபமான பார்வையைப் பார்த்த பாலு,. அன்று காலையில் நடந்த கதையையெல்லாம் ஒளிக்காமல் கூறினான்.

"அந்தப் பையனை அவர் ரொம்பக் கொடுமைப்படுத்தி இருக்கார். பசிக்குக்கூட உணவு தருவதில்லையாம். அவன், தன் கதையைக் கூறியதைக் கேட்க ரொம்பப் பரிதாபமாக இருந்தது. அவன் மாமா ரொம்ப பொல்லாதவராம். அதனாலே நான் அவனுக்கு 'ஹெல்ப்' பண்ணினேன்ம்பா."

பாலுவின் விளக்கத்தினால் திருப்தியடைந்த ஏட் "ஆக, அந்தப் பையனை நீ அந்தப் பாழடைஞ்ச பங்களாகிட்ட விட்டுட்டு ஸ்கூலுக்குப் போயிட்டே. அவன் ஐம்பது மைலுக்கு அப்பாலுள்ள யாரோ தெரிஞ்சவர்கிட்ட போகப் போறதாகச் சொன்னானாக்கும், அப்படித்தானே தம்பி?" என்றார்.

"ஆமாம் சார், அவன் அவரைத் தேடித்தான் போயிருப்பான்" என்றான் பாலு. ஏட் அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டார்.

இருட்டிக் கொஞ்ச நேரமாயிற்று. துணிச்சல்காரப் பாலு, தன்னை நம்பிக் கொண்டு பசியோடு காத்திருக்கும் கந்தனைச் சந்திக்கத் தயாரானான். மாலையிலேயே அவனுக்குத் தருவதற்காக உணவைத் தயாராக ஒரு பையில் எடுத்துப் பத்திரப் படுத்தி இருந்தான். கந்தன் நினைவினால் பாலுவிற்குப் பசிகூடத் தெரியவில்லை. 'நல்ல வேளை போலீஸ்காரர் அதிகம் குடையவில்லை. அப்பாவும் 'அப்செட்' ஆகவில்லை' என்று நிம்மதியடைந்தான் பாலு.

"அப்பா நாளைக்கு டெஸ்ட்... நாங்க இரண்டு மூணு பேரா சேர்ந்து படிக்கப் போறோம்— கணக்குப்பிள்ளை பையன் ராமசாமியோட அவன் வீட்டிலே. வர கொஞ்சம் லேட்டானாலும் கவலைப் படாதீங்க" என்று கூறியபடி கிளம்பினான் பாலு. தவறான வழிக்குப் போக மாட்டான், பொய் சொல்லமாட்டான் அவன்— என்ற நம்பிக்கை அவன்

www.tamilnesan1981.blogspot.in

வில்லை. "இவற்றைக் கண்டு வசதியாகத் தூங்க இப்படி ஒரு படுக்கை தயார் செய்திருப்பது கந்தனாகத் தானிருக்க வேண்டும். ஆனால் அவன் எங்கே?" பாலுவின் உள்ளம் கேட்டது. ஆனால் விடை கிடைக்கவில்லை.

'கந்தன் எங்கே மாயமாக மறைந்து போனான்?' வினா விசுவ ரூபமாகி பாலுவின் நெஞ்சைக் கலக்கியது. இத்தனை நேரமும் பாலுவை நிழல் போலப் பின் தொடர்ந்து, பின் னாலேயே வந்து கொண்டிருந்தான் மாணிக்கம். ஆனால் பாலுவின் எண்ணமெல்லாம் கந்தனைப் பற்றியே இருந்த தால் மாணிக்கம் அவன் சிந்தனையில் இடம் பெறவில்லை.

டார்ச் விளக்கினால் அனேகமாக வீட்டின் எல்லாப் பகுதிகளையும் ஆராய்ந்துவிட்டான் பாலு. கந்தன் இருப்பதற் கான அடையாளமே காணோம். மறுபடியும் மெழுகுவர்த்தி எரிந்து கொண்டிருந்த அறைக்கு வந்த போது, டார்ச் விளக்கின் ஒளி ஒரு மூலையில் எதையோ சுட்டிக் காட்டுவது போலிருந்தது. புழுதி படிந்த தரையில் விரல்களால் ஏதோ எழுதியது போல. நெஞ்சுத் துடிப்புடன் குனிந்து அதன்மீது டார்ச் ஒளியைப் பரவ விட்டான் பாலு. கோணல் மாணலான கையொப்பத்தில் –'அபாயம் கந்தன்'–என்று எழுதி இருந்தது. பாலுவுக்குத் 'திகீல்' என்றது.

'அபாயம் என்றால்? ஐயோ கந்தனுக்கு என்ன நேர்ந் ததோ தெரியவில்லையே!' என்று அவன் வாய்விட்டுக் கூறிய



www.tamilnesan1981.blogspot.in

அதே நேரத்தில், அவன் பின்னாலிருந்து கட்டைக் குரலில் மாணிக்கம், "டேய், பொடிப் பயலே, இதெல்லாம் என்ன? கந்தனை என்ன செய்தே? உண்மையைச் சொல்லிடு. இல்லே நான் ரொம்பப் பொல்லாதவனா இருப்பேன்" என்றான்.

கந்தன் காணாததைவிட அங்கு மாணிக்கத்தைக் கண்ட பாலுவுக்குப் பகீரென்றது. 'என்னைப் பின் தொடர்ந்தல்லவா வந்திருக்கிறான்?' என்று திடுக்கிட்டவன், மறுவிநாடியே சமாளித்துக் கொண்டு "இந்தாய்யா, உன் மிரட்டலை யெல்லாம் எங்கிட்ட வச்சுக்காதே. நான் அந்த அப்பாவிக் கந்தனில்லே புரிஞ்சுதா" என்றான் பாலு, அவனுக்கே உரிய துணிச்சலுடன்.

மாணிக்கம் தன் கொடுவாள் மீசையை முறுக்கியபடி "என்னடா துள்ளுரே, பொடிப் பயலே! இப்ப மருவாதையா கந்தன் பயல் எங்கேன்னு சொல்லிடு. இல்லே..." என்று முன்னால் வந்தான் மாணிக்கம்.

பாலு சட்டென்று கீழே கிடந்த ஒரு உடைந்த நற்காலியின் காலை கையில் எடுத்துக் கொண்டான்— தற்காப்புக்காக. "என் மேலே கை வச்சே... விஷயமே வேறயாப் போயிடும். அப்புறம் போலீசுக்குத் தான் நீ பதில் சொல்ல வேண்டி இருக்கும். கந்தன் இங்கேதான் இருப்ப தாகச் சொன்னான். ஆனால் இப்போ இங்கே இல்லே. இதோ கீழே பாருங்க" என்று புழுதியில் எழுதி இருப்பதைக் காண்பித்தான்.



"எனக்கு இதெல்லாம் படிக்கத் தெரியாது. நீ சொல்லு" என்றான் மாணிக்கம்.

"அபாயம்— கந்தன் அப்படின்னு எழுதி இருக்கான் கந்தன்."

www.tamilnesan1981.blogspot.in

"அப்படின்னா என்ன அபாயம்? இந்தப் பாழடைஞ்ச வீட்டிலே அவனுக்கு யாரு என்ன செஞ்சிருப்பாங்க?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. கந்தனுக்கு ஏதோ ஆபத்து. அவனைக் காப்பாத்தி – உதவ நான் ஆட்களை இங்கே கூட்டிவரப் போறேன்" என்று கிளம்பிய பாலுவைத் தாவிப் பிடிக்க ஓடி வந்தான் மாணிக்கம். "டேய்... பொடியா... உதவி கிதவி எதுவானாலும் அதைக் கவனிக்கத்தான் நான் இருக்கேன் இங்கே, புரிஞ்சுதா. நீ எங்கேயும் போகக் கூடாது. கந்தன் பயலை என்னிடமிருந்து கடத்திக் கிட்டுப் போன உனக்குத் தகுந்த மரியாதை செய்தாவணும்!"

பாலுவா அவன் கையில் சிக்குவான்? கையிலிருந்த உடைந்த கழியை மாணிக்கத்தின் முட்டியை நோக்கி வீசினான். அதன் தாக்குதலினால் அவன் தடுமாறிய இடைவெளிக்குள், அந்த அறையைவிட்டு வெளியேறினான் பாலு. ஆனால் மாணிக்கம் சுதாரித்துக் கொண்டு பின்னால் ஓடி வரவே, சட்டென்று உடைந்து கவிழ்ந்து கிடந்த ஒரு ஓட்டை நாற்காலியைத் தூக்கித் தலைக்கு மேல் சுழற்றி மாணிக் கத்தை நோக்கி வீசினான். சண்டைப் படங்களில் கதா நாயகன் வில்லனைத் தாக்கும் லாகவங்களைக் கண்டு வியந்திருக்கும் பாலுவுக்கு, இப்போது தானே அப்படிச் செயல்படுவதில் ஒரு மகிழ்ச்சி.

பாலுவின் . குறி மாணிக்கத்தின் மார்பில் தாக்கவே அவன் 'அம்மாடி' என்று தலைகுப்புறக் கவிழ்ந்து விழுந்தான். பாலு அந்தக் கட்டடத்தை விட்டு இருளில் ஓடி மறைந்தான்.

ஓடிக்கொண்டிருக்கும் போதே அவன் எண்ணமும் ஓடியது. "மாணிக்கம் கந்தனை நாடி அங்கு வரவில்லை, அந்தக் கட்டடத்துக்கு வேறு ஏதோ காரணத்துக்காக வந்திருக்கிறான். என்னைக் கண்டதும் சாதுரியமாகப் பேசுகிறான். இல்லாவிட்டால் உதவிக்கு வெளியாட்களை நான் அழைத்து வருவதை அவன் விரும்பாமல் என்னைத் தடுத்து நிறுத்த முயற்சிப்பானேன்? எதற்கும் நான் உடனே ஏட்டையாவைப் போய்ப் பார்க்க வேண்டும். மாலையில் நான் கூறியதற்கும் இப்போது நடந்துள்ளதற்கும் என்னை அவர் குற்றம் சாட்டினாலும் – கந்தனுக்கு ஏதோ அபாயம். அதிலிருந்து அவனைக் காப்பாற்ற நான் உண்மையைக்

www.tamilnesan1981.blogspot.in

கூறிப் போலீஸின் உதவியை நாடத்தான் வேண்டும்" ஓடிக் கொண்டே இந்த முடிவுக்கு வந்தான் பாலு.

ஏட் ஏழுமலையின் வீட்டுக் கதவைத் தட்டினான் பாலு. போலீஸ் ஸ்டேஷனுக்குப் போவதைவிட ஏட்டையாவிடம் போய் விஷயத்தைக் கூறுவதையே விரும்பினான் அவன். டூட்டியிலிருந்து திரும்பி வந்த ஏழுமலை உணவை முடித்துக் கொண்டு அப்போதுதான் படுக்க ஆயத்தம் செய்து கொண் டிருந்தார். கதவு தட்டப்படவே திறந்தவர், அங்கு பாலுவைக் கண்டதும் அவர் கண்கள் வியப்பினால் மலர்ந்தன.

"என்ன தம்பி, இந்த நேரத்திலே?" என்றார் ஏட். ஓடிவந்த வேகத்தில் மூச்சு வாங்கிற்று பாலுவுக்கு அவரிடம் அன்று மாலை சொல்லாமல் மறைத்த விவரங்களையும் கூறிய பாலு "ராத்திரி அவனுக்கு நான் உணவுடன் அந்தப் பாழும் பங்களாவுக்குப் போனேன் சார்.. ஆனா கந்தன் அங்கு இல்லை. அது மட்டுமில்லே. தரையில் படிந்திருந்த புழுதியில் 'அபாயம்– கந்தன்' என்று எழுதி இருக்கிறது. அதைக் கந்தன் தான் எனக்கு அறிவிக்க எழுதி இருக்கவேண்டும். நீங்க உடனே ஏதாவது செய்து கந்தனைக் காப்பாத்தணும்" என்றான்.

"தம்பி நீ சாயந்திரமே இதை என்கிட்டே சொல்லி இருந்தா – கந்தனுக்கு இப்படியொரு அபாயமில்லாம காப்பாத்தி இருக்கலாமில்லையா? இப்போ நீ பெரிய சிக்கலிலே மாட்டிக் கிட்டாயே? ம். சரி. கிளம்பு போவோம்" என்று சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பினார் ஏழுமலை.

ஏட்டையாவுடன் பாலு மறுபடி அந்தப் பாழடைந்த பங்களாவுக்கு வந்தபோது, அது அமைதியிலாழ்ந்திருந்தது. பாலு டார்ச் விளக்கொளியில் வழி காட்டிக் கொண்டு உள்ளே புகுந்தான். ஏழுமலை பின் தொடர்ந்தார்.

"இங்கேதான் ஏட்டு சார்... இதோ இந்த இடத்தில்தான் தரையில்" என்று டார்ச்சை இங்கும் அங்கும் அடித்தபடி அதைத் தேடினான். அவன் குரலில் அவநம்பிக்கையும் பர பரப்பும் கலந்திருந்தன. தரையில் எழுதியிருந்த அபாய அறிவிப்பு எழுத்தைக் காணவில்லை. பாலுவின் தவிப்பைக் கண்ட ஏட் "என்ன தம்பி? மர்மக் கதையெல்லாம் நிறையப் படிப்பே போலிருக்குதே!" என்றார் ஏளனமுடன்.

www.tamilnesan1981.blogspot.in

"சத்தியமாச் சொல்றேன் சார். இங்கே, இதோ இங்கே தான் சார், தரையிலே எழுதி இருந்தது. யாரோ அதை வேணுமின்னே அழிச்சிருக்காங்க இதோ பாத்தீங்களா... அங்கே புழுதி ஒரே சீரா இருக்கு. இங்கே கலங்கி இருக் கில்லையா?" என்று தான் பொய் சொல்லவில்லை என்பதை ருஜுப்படுத்தும் தவிப்போடு பேசினான் பாலு.

அதே சமயம் ஏதோ ஒரு சத்தம். முக்கி முனகும் ஒலி, மூச்சுத் திணறலுடன் அவஸ்தைப் படுபவரின் திணறல்—கேட்டது. உன்னிப்பாக அதை உற்றுக் கேட்ட ஏட்டையா "அதென்னது... ஒனக்குக் கேக்குதா தம்பி?" என்றார்.

"ஆமாம் சார், யாருக்கோ ஏதோ ஆபத்து. உதவி வேண்டி ஒலி கொடுக்கிறார்— பேச முடியாத நிலையில்." டார்ச் விளக்கை சுழற்றி வீசியபடி ஒலி வந்த திசை நோக்கி ஓடினான் பாலு. ஏட்டும் பின் தொடர்ந்தார். அங்கு ஓரிடத்தில் தரையில் மூட்டைப் போலக் கட்டுண்டு கிடந்தான் மாணிக்கம். அவன் கைகள் இரண்டையும் பின்னுக்கு முறுக்கிச் சேர்த்து உடலைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த ஒரு கட்டு, அவன் கூச்சல்போட முடியாதபடி திறந்து வாயில் பற் களுக்கிடையே பதிந்திருந்தது.

'மாணிக்கம்னா...! கந்தனுடைய மாமா... இவரை யார் இப்படிக் கட்டிபோட்டாங்க" டார்ச் அவன்மீது ஒளி பாயும்படி நின்றான் பாலு. ஏட்டு ஏழுமலை குனிந்து மாணிக்கத்தின் கட்டுக்களைத் தளர்த்துவதில் ஈடுபட்டிருந்தார் அப்போது...

"சார்... சார்..!" பீதியுடன் கூவினான் பாலு. "அதென் னது? உங்களுக்குத் தெரியல்லே ஏதோ எரியற வாசனை—புகை... நெருப்பு சார்!" கலவரமுடன் கத்தினான் பாலு.

ஏட் ஏழுமலை நிமிர்ந்து பார்த்தார். எதிரில் உள்ள ஹாலி லிருந்து திகுதிகுவென்று தீ ஜ்வாலைக் கொழுந்துகள் நர்த்தனமாடியபடி சிரித்துக் கொண்டிருந்தன.

"தம்பி... இந்த பங்களாவிலே எங்கோ தீ பிடிச்சு வேக மாய்ப் பரவிக்கிட்டு வருது... இந்த மனுஷனை வெளியே கொண்டு போகணும். இவனுக்கு நினைவு இல்லை. கொஞ்சம் இப்படிப் புடி பாக்கலாம்" என்றார் ஏட்.

ஆனால் பாலுவின் எண்ணமெல்லாம் கந்தனாக

www.tamilnesan1981.blogspot.in

இருந்தது. "கந்தன் என்ன ஆவன் சார், அவன்...? அவனும் இதே பங்களாவிலேதான் எங்கேயோ இருக்கணும். அவனுக்கு ஆபத்து சார். அவனைக் காப்பாத்தியாகணும்" என்று ஓடலானான். தீ ஜ்வாலையின் வெளிச்சத்தில், அந்த ஹாலின் கோடியில் ஒரு மாடிப்படி இருப்பது தெரிந்தது. அதை நோக்கி ஓடினான் அவன்.

"தம்பி தம்பி –பாலு– மேலே போகாதே... இது பழங் காலத்துக் கட்டடம். ஏய்...! முரட்டுப் பையனா இருக்கியே. வீணா ஆபத்திலே சிக்கிக்காதே வந்துடு" கத்தினார் ஏட். ஆனால் பாலு நிற்கவில்லை, நிதானிக்கவில்லை, திரும்பவில்லை. 'கந்தா கந்தா" என்று கூவிக் கொண்டே மாடிப்படிகளில் ஏறி ஓடினான். மாடியிலுள்ள ஒவ்வொரு அறையினுள்ளும் புகுந்து தேடினான்.

"இங்கு இல்லை... இங்குமில்லை... இங்கேயுமில்லையே ... ஐயோ கந்தா! உனக்கென்ன ஆபத்து!" என்று பரிதாப மாகக் கூவியபடி பைத்தியம் போல் இங்கும் அங்கும் ஓடினான். புகை கண்களையும் நெஞ்சையும் கரிக்கச் செய்தது. கமறல் எடுத்து இருமினான். மூச்சுவிட முடியாமல் திணறினான். புகை மூட்டத்திலும், அனல் காந்தலிலும் அல்லல் பட்டபடி பாலு கந்தனைத் தேடிக் கொண்டிருந்த போது, ஏட் தான் ஒருவராகவே மாணிக்கத்தை வெளியே தூக்கி போய் ஒரு மரத்துடன் கட்டிப் போட்டுவிட்டு, அவரும் உள்ளே விரைந்தார். அவரது நோக்கம், ஆபீஸர் வீட்டுப் பையன் பாலுவைக் காப்பாற்ற வேண்டுமென்பதுதான். அதே மாடிப் படிகளில் ஏறி அவர் மேலே போவதற்குள், கீழ்ப் பகுதியில் தீ பயங்கரமாகப் பரவி எல்லாவற்றையும் கபளீகரம் செய்து கொண்டிருந்தது.

பாலுவின் தவிப்பும் தேடலும் வீண் போகவில்லை. ஒரு அறைக்குள்ளிருந்து "உதவி–உதவி" என்ற குரல் கேட்டது. அதை நோக்கி ஓடினான் பாலு. அதே சமயத்தில் ஏட்டும் அங்கே வந்துவிட்டார். அந்த அறையின் கதவு உட்புறமாகத் தாளிடப்பட்டிருந்தது. பாலு அதை மூர்க்கமாகத் தட்டிக் கொண்டிருந்தான். "கதவைத் திறவுங்களேன். இந்த வீடு முழுவதும் தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கிறது" என்று கத்தினான் கமறும் குரலில். ஏட்டையாவைக் கண்டதும் "சார்–சார்! கந்தனின் குரலைச் சற்று முன்பு இந்த அறைக்

www.tamilnesan1981.blogspot.in

குள்ளிருந்து கேட்டேன். ஆனால் கதவு பூட்டி இருக்கிறது என்ற போது அவன் அழுதே விடுவான் போலிருந்தது.

ஏட் ஏழுமலை தன் சட்டையைக் கழற்றி வலக் கையை மூடிச் சுற்றிக் கொண்டார். "தம்பி நீ இப்படி ஒதுங்கி நில்லு. இந்தக் கதவுமேலே மோதி இதை உடைத்துத்தான் திறந்தாக ணும். கட்டடத்திலே தீ வேகமாகப் பரவிக்கிட்டு வருது" என்றபடி அந்தக் கதவின் மீது வேகமாக ஓடிப்போய் மோதுவ தற்குத் தயாரானார். பாலு ஒதுங்கிக் கொண்டான்.

**மூ**ன்றாவது மோதலில் கதவு முறிந்து உள்புறமாக விழுந்தது: உள்ளே ஒரு மேஜையின் முன்னால் ஒருவர் உட் கார்ந்திருந்தார். ஒரு நாற்காலியோடு சேர்த்துக் கயிற்றினால் கட்டப்பட்டிருந்தான் கந்தன். மேஜை மீது க்ளுகோஸ் பிஸ்கட் அளவில் வரிசையாக அடுக்கப்பட்டிருந்த தங்கக் கட்டிகள் பளபளத்துக் கொண்டிருந்தன. உள்ளே நுழைந்த ஏட்டைக் கண்ட அந்த மனிதர், "நீ போலீஸ் ஹெட் கான்ஸ் டபிளில்லே?" என்று கேட்டார்.

"ஆமாம்... என்னை உங்களுக்கு எப்படித் தெரியும், நீங்க யாரு— இந்த பையனை ஏன் இப்படிக் கட்டிப் போட்டிருக் கீங்க!"

"நீ கேக்கும் வேகத்துக்கு என்னாலே பதில் சொல்ல முடியாது. நான் எதிர்பார்த்தது வேறே ஆளை. கீழே ஒருத்தனைக் கட்டிப் போட்டிருக்கேன். அவனுடைய கூட் டாளியைத்தான் இங்கே எதிர்பார்த்தேன்... ஆனால் நீ வந்ததும் நல்லதாப் போச்சு..." என்றவரிடம் ஏழுமலை இடை மறித்தார். இதற்குள் பாலு கந்தனின் கட்டுக்களை அவிழ்க்கப் போனான்.

"தம்பி என் உத்திரவில்லாமே ஏன் அவன் கட்டுக்களை அவிழ்க்கப் போறே" என்று கடிந்து கொண்டார்.

உடனே ஏட் "சார், எனக்கு எல்லாமே ஒரே மர்மமாக இருக்கு. எது எப்படியானாலும் இந்தக் கட்டடம் தீப் பிடிச்சுக் கிட்டுது. வேகமாக பரவிக்கிட்டு வருது. நாம் எல்லாருமே இங்கிருந்து தப்பியாகணும்" என்றார்.

"தீயா... நிஜமாவா... அடேடே... இதுவும் அந்தப் பய வேலைதான். ம்—சரி. ஹெட் கான்ஸ்டபிள், நான் யார் என்பதை மாத்திரம் சொல்லிடறேன். பிரபல கடத்தல்

www.tamilnesan1981.blogspot.in



www.tamilnesan1981.blogspot.in

கார்களை வளைத்துப் பிடிக்கும் விசேஷ போலீஸ் படையின் அதிகாரிகளுள் ஒருவன் நான். இந்தப் பாழடைந்த பங்களா கள்ளக் கடத்தல் காரியத்துக்குப் பயன்படும் கேந்திரமா இருந்து வருவதை அறிந்து— கடத்தல் காரர்களை வேட்டை யாட வந்தேன்... சரி, சரி... இதோ இந்தப் பைக்குள் தங்கக் கட்டிகளை அள்ளிப் போடு, நாம் வெளியேறலாம்" என்று பரபரத்தார்.

"மாடிப்படி வழியா இறங்கி வெளியேற முடியாதுங்க... கீழேயெல்லாம் பயங்கரத் தீ பரவிட்டது" என்ற ஏட் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். "நல்லவேளை இதோ இந்த ஜன்னல்கிட்டே ஒரு வேப்பமரம் தழைஞ்சிருக்கு. நாம் இது வழியாத்தான் கீழே இறங்கியாகணும். தம்பி பாலு" என்று கூப்பிட்டார். இதற்குள் கந்தனை விடுதலை செய்திருந்தான் பாலு. மூலையில் பதுங்கியிருந்த பூனைக்குட்டி மியாவ் என்று குரல் கொடுத்தபடி கந்தனின் காலடியில் வந்து உராய்ந்து கொண்டு நின்றது.

"உன்னை விட்டுட்டுப் போக மாட்டேன், கவலைப் படாதே" என்று அதைத் தூக்கி அணைத்துக் கொண்டான் கந்தன்.

ஏழுமலை பாலுவை ஜன்னல் வழியே வேப்ப மரத்துக் குத் தாவி அதன் வழியே கீழே இறங்க முடியுமா என்று கேட்டார்.

"நீங்க கவலைப் படாதீங்க சார். நான் மட்டுமில்லே, கந்தனையும் கூட நான் பத்திரமா கீழே கொண்டு போய்ச் சேர்த்துடறேன்" என்று கூறியபடி பாலு வெகு லாகவமாக வேப்ப மரத்தில் தொத்திக் கொண்டான். கந்தனுக்கும் தன்னோடு இறங்க உதவினான். ஏட்டும் அந்த அதிகாரியும் தங்கக் கட்டிகளுடன் அதே மரத்தின் வழியாகக் கீழே இறங்கினார்கள்.

இதற்குள் அக்கம் பக்கத்துக் கிராமத்திலுள்ளவர்கள் சொக்கப்பனை போலத் தீ எரியும் வெளிச்சம் கண்டு அதை அணைப்பதற்கு வந்து கூடினார்கள். வேறு சிலர் ஓடிப் போய் தீ அணைக்கும் என்ஜினுடன் வந்திருந்தார்கள். அந்தப் பெரிய தீயை அணைப்பதில் அத்தனைப் பேரும் மும்முர மாக ஈடுபட்டிருந்த போது ஏட்டிடம் கடத்தல் வேட்டையாட

www.tamilnesan1981.blogspot.in

வந்த அதிகாரி விளக்கிக் கொண்டிருந்தார். இப்போது மாணிக்கத்துக்கு நினைவு திரும்பி இருந்தது... அவனைக் சுட்டிக்காட்டி "இந்த மனிதனும் இன்னொருவனும் வெளி நாட்டிலிருந்து கடத்தி வரப்படும் பொருள்களை வாங்கி, அதைக் குறிப்பிட்ட நபர்களுக்கு ஒப்படைக்கும் காரியத்தை இந்தப் பாழடைந்த– வீட்டைக் கேந்திரமாக வைத்துக் கொண்டு செய்கிறார்கள் என்று எங்களுக்குத் தகவல் வந்தது. நான் மாறு ஷேத்தில் இந்த மாணிக்கத்தைக் கண்காணித்தேன். இவனுடன் இந்தப் பையனையும் பார்த் திருக்கிறேன். இவர்களுடைய காரியத்துக்கு இந்தப் பையனும் உதவி செய்கிறவன் என்ற முடிவோடு தான் இந்த நிமிஷம் வரை நான் இருந்து வந்தேன். அதனால் தான் இந்த வீட்டில் பதுங்கி இருந்த இவனைக் கண்டதும் கட்டிப் போட்டேன். இங்கு பதுக்கப்பட்டிருந்த தங்கக் கட்டிகளை முன்பே கைப்பற்றி விட்டேன். இதை அப்புறப்படுத்த மாணிக்க மும் அவன் கூட்டாளியும் வருவார்கள். அப்போது அவர் களையும் மடக்கிப் போடவே மறைந்திருந்தேன். எதிர்பார்த்த படியே மாணிக்கம் வந்தான். அதற்கு முன்பே நான் இந்தப் பையனைக் கட்டிப்போட்டு விட்டேன்."

இப்போது பாலு, இடையிலே பேசினான். "அப்போ மாணிக்கம் என்னைப் பின் தொடர்ந்தது தற்செயலாக நிகழ்ந்ததுதானா? தங்கக் கட்டிகளை இங்கிருந்து எடுத்துப் போய் விநியோகிக்கத்தானா இங்கு வந்திருக்கிறான்?"

"ஆமாம்... மணிக்கத்தைக் கட்டிப் போட்டுவிட்டு அவன் கூட்டாளியின் வருகையை எதிர் பார்த்துக் கொண்டிருந்த போதுதான் நீங்கள் வந்தீர்கள். ஆனால் கூட்டாளி தப்பி விட்டான். இந்த வீட்டுக்குத் தீ வைத்தது அவனாகத் தானிருக்க வேண்டும். மாணிக்கம் சிக்கி விட்டதை எப்படியோ அறிந்து கொண்டுவிட்ட அவன், இந்த வீட்டுக்கே தீ வைத்து எல்லாவற்றையும் அழிக்க முனைந்திருக்கிறான்" என்று பேசிக்கொண்டே வந்தவர்– தூரத்தில் தீயின் ஒளியில், கூட்டத்தில் யாரையோ பார்த்துவிட்டு... "அதோ, அதோ! நான் நினைத்தபடியே மாணிக்கத்தின் கூட்டாளி நிற்கிறான்" என்று மின்னலென ஓடினார். அதே சமயத்தில், தீயைத் தீவிரமாக அணைப்பதில் ஈடுபட்டிருந்த கூட்டத்தில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒரு மனிதன்– தன்னை

www.tamilnesan1981.blogspot.in

நோக்கி ஓடிவரும் போலீஸ் அதிகாரியைப் பார்த்து விட்டு தலை தெறிக்க ஓடினான். ஆனால் அவன் துரதிர்ஷ்டம் தீயணைக்கும் படையினர், தண்ணீர்க்குழாய் டியூப்பை எதேச்சையாக இழுக்கவே அவன் அதில் கால் இடறித் தலை குப்புறக் கீழே விழுந்தான். அது போதுமே கடத்தல் வேட்டை அதிகாரிக்கு. அவனைக் கோழிக் குஞ்சைக் குள்ளநரி அமுக்குவது போல அமுக்கிவிட்டார்.

அவனைக் கண்ட கந்தன் "இந்த மனிதரை நான் என் மாமாவுடன் அடிக்கடி பார்த்திருக்கிறேனே" என்றான்.

"தம்பி நீ ஆரம்பத்திலேயே என்னிடம் முழு உண்மையையும் சொல்லாதது தப்பு. ஆனாலும் இந்தக் கடத்தல் காரங்களைப் பிடிக்கிறதுக்கு உன் செயல் பயன்பட்டதினாலே உன்னை மன்னிச்சுட வேண்டியதுதான்" என்றார் ஏட்டு ஏழுமலை பாலுவைப் பார்த்து.

பாலுவின் சாகஸம் பற்றி அந்த ஊரில் பேசாதவர்கள் இல்லை. போலீஸ் இலாகாவே அவன் தைரியத்தையும் துணிச்சலையும் சமயோசிதப் புத்தியையும் பாராட்டிக் கௌரவித்தது. கான்வென்டில் அவனை ஹீரோவாக்கி விட்டார்கள்.

கந்தன்—

அவன் துன்பம் அகன்றது. மாணிக்கம் சிறைச்சாலை வாசியாகவே அவன் மறுபடியும் அநாதையானான். ஆனால் அவனுக்கு வாழ்வளிக்கும் முயற்சியைப் பாலுவின் அப்பா மேற்கொண்டார். படிக்க வேண்டுமென்ற ஆர்வமுள்ள அவனை ஒரு கருணை இல்லத்துக்குச் சிபாரிசு செய்து சேர்த்துவிட்டார். இப்போது அவன் பசிக்கு வயிறாற உணவும் அறிவுக்குப் படிப்பும் கிடைத்து வருகின்றன. பாலுவை அவன் மறக்கவே இல்லை. மறக்கவும் மாட்டான். அடிக்கடி பாலுவும் கந்தனும் சந்தித்துக் கொள்ளுவார்கள். ■■■

*"சிவராத்திரி முடியவில்லை. ஆகவே —*

*நான் சிவன் கோயிலுக்குப் போய் விசேஷ அபிஷேகம் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன். உங்களுக்கு இண்டர்வெல்!... திரும்பி வந்ததும் இதேபோல 'த்ரில்லிங்கான' இன்னொரு கதை விடியும்வரை கூறி சிவராத்திரியைப் பூர்த்தி செய்வோம்" என்றபடி அங்கவஸ்திரத்தை விரித்துப் போர்த்திக்கொண்டு சிவன்கோவில் நோக்கி நடந்தார் அப்பா.*

www.tamilnesan1981.blogspot.in



*கோயிலிலிருந்து அப்பா திரும்பி வந்தபோது - நள்ளிரவு மணி 1.30. குழந்தைகள் பாலுவின் சாகசம் பற்றி உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.*

*யார் கண்களிலும் தூக்கத்தின் சுவடே இல்லை. அப்பா-குழந்தைகளுக்கு சிவன் கோயில் பிரசாதத்தை வழங்கினார். பிறகு "அடுத்த கதையை ஆரம்பிக்கலாமா?" என்று கேட்டார். "காத்திருக்கிறோம்.. தாராளமாக!" என்றார்கள் குழந்தைகள்.*

# 30. ஆவி உலவும் அரண்மனை



கோடை விடுமுறை...

பள்ளிக்கூடம், பாடங்கள் டெஸ்ட்கள், பரீட்சைகள் என்ற கவலைகள் ஏதும் இல்லாமல் நாற்பது நாட்கள் விருப்பப்படி கழிக்கலாம். ஊர் சுற்றலாம், கவலை இன்றித் தூங்கலாம், விழிப்பு வந்தாலும் எழுந்திருக்காமல் படுக்கையில் புரண்டு, புரண்டு...

அதுசரி, ஒரு நாலு நாள் ஆனால்— இது போரடிக்காதோ?

போரடிக்கத்தான் செய்யும்—உள்ளூரிலேயே இருந்தால்?

வெளியூர் போனால்?

www.tamilnesan1981.blogspot.in

நல்ல ஐடியா. அவ்வளவு போரடிக்காது. புது ஊர் இல்லையா? நாலு இடங்களுக்குப் போகலாம். சுற்றுப்புறங்களில் இருக்கும் ஊர்களுக்கும் இடங்களுக்கும் விசிட் செய்யலாம். பிக்னிக் ஸ்பாட் இருந்தால் கொண்டாட்டம்தான். புதிய நண்பர்கள் ஏற்படுவார்கள். அவர்களுடன்...

'அதுதான் சரி...! இந்த விடுமுறைக்கு என் மாமா வீட்டுக்குப் போவதென்று தீர்மானித்தான் அவன்– அதாவது நம் கதாநாயகன் – பாலு, நம்ம பலே பாலுதான். அவன் மாமா வேலூர் அருகே இருக்கிறார். ஒரு பண்ணை நடத்துகிறார். ஏதோ ஆராய்ச்சிகள் செய்கிறார் பண்ணையில். அவருக்கு இரண்டு குழந்தைகள். மது, ஜெய் (ஜெயஸ்ரீ) என்று பெயர். கான்வெண்டில் படிக்கிறார்கள், படுசுட்டிகள். அவர்களும் கோடைவிடுமுறைக்கு ஹாஸ்டலிலிருந்து பண்ணைக்கு வந்திருப்பார்கள். மூன்று பேரும் சேர்ந்தால்...? ஓ! நாற்பது நாள் லீவு போனதே தெரியாமல் ஓடிவிடும்.'

அன்று இரவே அப்பாவிடம் தன் விருப்பத்தைக் கூறினான். அவரும் ஓ.கே. கூறிவிட்டார். 'டிரங்கால் போட்டு உன் மாமாவுக்கு நீ வருவதாகத் தெரிவித்து விடுகிறேன். நாளையே கிளம்பலாம்' என்றார் அப்பா. அவன் அப்பாவும் அம்மாவும் எப்போதுமே அவன் மகிழ்ச்சியில் நாட்டமுடையவர்கள். நானும் அவர்கள் மனம் கோணாமல் நடந்து கொள்ளுவான். படிப்பிலும் அக்கறை குறையாது.

அவனை வரவேற்க ஸ்டேஷனுக்கே வந்துவிட்டார்கள் மதுவும் ஜெய்யும். அவனை லீவுக்கு அழைக்கும்படி அவர்களே என் மாமாவிடம் கூறினார்களாம். 'உன் அப்பா டிரங்காலில் பேசியதைக் கேட்டதும் எங்கள் இருவருக்கும் எவ்வளவு ஹாப்பி தெரியுமா? ஒரே த்ரில்!' என்று இருவரும் என்னைக் கட்டிக் கொண்டார்கள். எனக்கும் மகிழ்ச்சியான மகிழ்ச்சி. "இந்த லீவை மூவரும் சேர்ந்து தூள் கிளப்பப் போகிறோம்" என்று. (இனி அவனே உங்களுக்குத் தன் கதைய்யக் கூறுவான்!)

ஸ்டேஷனிலிருந்து பண்ணைக்கு மயிலைக் காளை பூட்டிய வில் வண்டியில் போவதே எனக்குப் புதிய அனுபவமாக இருந்தது. காளைகளின் கழுத்தில் கட்டியுள்ள சலங்கைகளின் 'ஜல் ஜல்' சத்தம்தான் எவ்வளவு இனிமையாக இருக்கிறது. மாமாவுக்கு நான் வந்ததில் ரொம்ப சந்தோஷம்.

www.tamilnesan1981.blogspot.in

நாங்கள் மூவரும் விடுமுறையை எப்படிக் கழிப்பது என்று, அன்று பகலிலேயே திட்டமிடத் தொடங்கிவிட்டோம். 'உங்கள் விருப்பப்படி எங்கு வேண்டுமானாலும் போகலாம். எல்லா வசதிகளும் செய்து தரச் சொல்லுகிறேன்' என்று கூறி விட்டார் மாமா. மதுவும் ஜெய்யும் ரயில், பஸ் மோட்டாரில் பயணப்படும் திட்டங்களை வகுத்தார்கள். எனக்கென்னவோ அப்படிப்பட்ட பயணத் திட்டங்களில் நாட்டமில்லை. விடு முறையில் கடைசி கட்டத்தில் வேண்டுமானால் க்ஷேத்ராடன ஊர்வலங்களை வைத்துக் கொள்ளலாம். இப்போது சாகசச் செயல்களில் ஈடுபட வேண்டும். அதில் உள்ள திரில்லே தனி. "மேல் நாடுகளில் நம் போன்றவர்கள் காடு, மலை, வனம் இப்படி– ஆள்நடமாட்டம் இல்லாத பகுதிகளுக்குத் தனியாகப் போய் இயற்கையை ரசித்து, சாகசங்களில் ஈடுபடுகிறார்கள். அதுபோல நாம்... இங்கு எங்காவது போகலாமே" என்று என் விருப்பத்தைக் கூறினேன்.

"நீ நினைப்பதுபோல நம் ஊரில் காடாவது மலை யாவது? அப்படியே இருந்தாலும் நம்மை அங்கெல்லாம போகவும் விடமாட்டார்கள். நாமும் போக மாட்டோம்..." என்றான் மது.

"மது! அந்த மலை மேலே இருக்கே அந்தப் பேய் பங்களா, அதுக்கு நம்ம பாலுவைக் கூட்டிக்கிட்டுப் போனா என்ன" என்றாள் ஜெய்.

"பேய் பங்களாவா?" என்று ஆர்வத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்தேன் நான். திகிலூட்டும் கதைகளைப் படிப்பதிலே தனி ஈடுபாடு உண்டு எனக்கு. பேய், பிசாசு, ஆவிகளின் சேஷ்டைகள், உண்டு–இல்லை என்ற மாறுபட்ட கருத்து இருந்தாலும் அது தொடர்பான சங்கதிகளில் எனக்கு ஆர்வம் அதிகம்.

"ஆமாமா... இங்கிருந்து மூணு மைல்லே ஒரு சின்ன மலை இருக்கு. அதுமேலே ஒரு பாழடைந்த அரண்மனை. இந்தப் பக்கத்திலே ஒரு ஜமீந்தார் இருந்தாராம். அவருக்கு ஒரு வெள்ளைக்கார ஆசை நாயகியாம். அவளும் ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவளாம். அவளுக்காக ஜமீன்தார் அந்த அரண்மனையைக் கட்டி இருக்கிறார். 'துரைசானி அம்மா அரண்மனைன்னு' இந்தப் பக்கத்திலே சொல்லுவாங்க.

www.tamilnesan1981.blogspot.in

ஆனால், அது இப்போ புதர் மண்டி பாழடைஞ்சு கிடக்கு. அது கிட்டே யாரும் போறதில்லை" என்றான் மது.

"ஏன்...? அப்படி பயப்படும்படியா அதிலே என்ன இருக்கு?" என்று கேட்டேன் நான்.

"அந்த வெள்ளைக்கார ராணி உயிரோட இருந்த போதே அந்த அரண்மனைக்கு யாரும் போறதில்லையாம். ஜமீந்தார் இறந்தப்பறம் அவமட்டும் நாலஞ்சு வேலைக்காரங்களோட தனியா இருந்தாளாம், அவ்வளவு பெரிய அரண்மனையிலே. அப்போ அவ ஒரு பூனையை வளர்த்தாளாம். வெள்ளைக் காரர்களுக்குத்தான் பூனை வளர்ப்பதில் ஆசையாச்சே. சில பேர் சொல்றாங்க, அந்த வெள்ளைக்கார கிழவி செத்துப் போயிட்டான்னு. சிலபேர் அவ ஒரு சூனியக்காரி, சாகல் லேங்கராங்க. ஆனால் இரவு நேரங்களிலே அந்த அரண் மனையிலிருந்து விசித்திரமான சத்தங்கள் கேட்குமாம். பூனையோட கத்தல்னு சிலபேர் சொல்றாங்க. அவவளர்த்த பூனை கறுப்பு. அது ரொம்பப் பெரிசா இருக்குமாம். அந்த அரண்மனையிலே இப்போ அதுதான் ஆட்சி நடத் துங்கறாங்க." — இது ஜெய்யின் விளக்கம்.

"அரண்மனையை யாரும் வாங்கிப் பயன்படுத்த முயற் சிக்கல்லியா?"

"வாங்கறதா? சும்மா இல்லே, பத்து லட்சம் பணத்தையும் கொடுத்து அரண்மனையை வச்சுக்கோன் னாலும் யாரும் வாங்கிக்க மாட்டாங்க தெரியுமா?"

"அதுக்குள்ளே போனவங்க திரும்பி வரதே இல்லை யாம்."

"அதிசயமா இருக்கே!"

"அதிசயம் மட்டுமில்லே, பயங்கரம்... அந்த அரண் மனை மேலே ஏதோ சாபம் விழுந்திருக்காம்... அந்த வெள்ளைக்கார ராணி—அரண்மனையைப் பூனையின் பேருக்கு எழுதி வைச்சிருக்காளாம்... ஏதேதோ கதைகளெல் லாம் சொல்றாங்க.. நம்பும் படியாவும் இல்லே நம்பாமலும் இருக்க முடியல்லே."

"போலீஸ் இதிலே ஒண்ணும் செய்ய முடியல்லியா?"

"போலீஸ் என்ன செய்ய முடியும்? அது ஜமீன் அரண்

www.tamilnesan1981.blogspot.in

மனை. தனியாரோட உடைமை. ஜனங்களோட கதைகளைக் கேட்டுட்டு, போலீஸ் பார்ட்டி ஒரு தடவை அங்கே போய் பார்த்திருக்கு. அரண்மனையோட பாதுகாப்பாளரோட. ஆனா அங்கே அந்தக் கறுப்புப் பூனையைத் தவிர வேறு ஏது மில்லேன்னு ரிப்போர்ட் கொடுத்துட்டு தன் கடமையை முடிச்சுக்கிட்டது.”

“அப்படின்னா அந்த அரண்மனைக்குப் பாதுகாப்பாளர் வேற இருக்காரா?”

“பாதுகாப்பாளர் அங்கே இல்லை. பக்கத்துக் கிராமத் திலே இருக்கார். ஏன்னா, அந்த அரண்மனையிலே நாற்காலி மேஜை, மெத்தை எல்லா சாமானும் அப்படி அப்படியே இருக்கு. புழுதி படிஞ்சு... ஒட்டடை புடிச்சு—உபயோகப்படுத்தாத தினாலே. பாதுகாப்பாளர்னு பேரேயொழிய— அவர் அங்கே போறதே இல்லை. அவருக்குமே பீதி, அந்த ஆவி உலவும் அரண்மனைக்குள்ளே போக.”

அவர்கள் சொல்லச் சொல்ல என் ஆவல், அக்னி நட்சத்திரத்து வெயில் போல சூடேறியது.

“நாளைக்கு நாம் அந்தப் பேய் அரண்மனைக்குப் போறோம்” என்றேன் நான்.

“சும்மா விளையாடாதே பாலு...” என்றான் மது.

“விளையாட்டில்லே, நிஜமாகத்தான் சொல்றேன். சாபம் பெற்றதாக— ஆவி உலாவுவதாகக் கூறும் அந்தப் பாழடைந்த அரண்மனைக்கு நாம் நாளைக்கு விசிட் செய்யப் போறோம்!”

“வேணாம், வீண் தொல்லையை வலியப் போய் வாங்கிக்காதே.”

“தொல்லையுமில்லை கொள்ளையுமில்லை... நீங்க வராட்டாப் போங்க... அங்கே போற வழியை மட்டும் எனக்குக் காட்டிடுங்க போதும்” என்றேன் நான். மதுவும் ஜெய்யும் என்னை ஒரு விதமாகப் பார்த்தார்கள்.

www.tamilnesan1981.blogspot.in



2

துரைசானி அம்மா அரண்மனை என்றழைக்கப்படும் ஆவி உலவும் அரண்மனைக்குள் போய்ப் பார்த்தேயாக வேண்டும் என்ற என் பிடிவாதத்துக்கு முடிவில் ஜெய்யும் மதுவும் இணங்கினார்கள்.

“அதற்குப் போகும் வழியைக் காட்டிவிட்டு ஓடிவர நாங்கள் அப்படியொன்றும் பயந்தாங்குளிகள் அல்ல. அந்தப் பாழ் அரண்மனைக்கு நாங்களும் வருகிறோம். ஆனால் அதனுள்ளே புகுந்து ஆராயப் போவது நீ மட்டுமே. வீராதி வீரனான நீ உள்ளே போவதைப் பார்த்துக்கொண்டு நாங்கள் வெளியிலேயே நிற்போம். உள்ளே போய் நல்ல படியாகத் திரும்பி வரவேண்டுமே என்று கவலையோடு காத்திருப் போம்” என்றான் மது.

மறுநாள் மூவரும் அந்த அரண்மனைக்குக் கிளம்பினோம். நான் மறக்காமல் ஒரு டார்ச் லைட்டை எடுத்துக்கொண்டேன். காலை நேரம்—இதமான வெயில், சுகமான காற்று. ஊரிலிருந்து ஒதுங்கி வெகு தூரத்தி லிருந்தது அந்தக் குன்று. ஒரு காலத்தில் ஜமீந்தாரின், வண்டி வாகனங்கள் நடமாட்டத்தினால் பாதை சீராக

www.tamilnesan1981.blogspot.in

இருந்திருக்கும். இப்போது குண்டும் குழியும் புதருமாக, நடக்க சிரமமாக இருந்தது. ஆனால் என் ஆவல் அதை யெல்லாம் லட்சியம் செய்யவில்லை. பஞ்சுப் பொதிகளாக மேகங்கள்— வெகு வேகமாக நகர்ந்து சூரியனை மறைத்தது. 'உய்' என்று திடீரென்று வீசிய சுழற் காற்று புழுதியை வாரித் தூற்றியது கண்களில்.

"பாத்தியா, அரண்மனையை நெருங்கும் போதே இப்படிக் கண்களிலே மண்ணை வாரித் தூவுது" என்றாள் ஜெய். அந்தக் காற்றையும், பாழ் அரண்மனை ஆவியையும் இணைத்து, அவள் கூறியது எனக்குச் சிரிப்பாக இருந்தாலும், உள்ளத்தின் ஒரு மூலையில் இனம் புரியாத சில்லிப்பும் ஏற்பட்டது. 'இதற்காகப் பின்வாங்கி விடுவதா என்ன?' என்ற வீறாப்பு உந்தித்தள்ள...

புதர்களையும், ஒற்றையடிப் பாதைகளையும் கடந்து அரண்மனையின், நுழை வாசலுக்கு வந்து சேர்ந்தோம். மிக உயரமான மதில்சுவர்களால் சூழப்பட்டிருந்தது அந்த அரண்மனை. பிரும்மாண்டமான இரும்புக் கதவு. அதன் ஒரு பகுதியில் ஒரு 'குட்டி'க் கதவு. அத்தனை பெரிய கதவை அடிக்கடி திறந்து மூட முடியாது என்பதற்காக இந்தச் சின்னத் திட்டி வாசல். என் நல்ல காலம், அந்தச் சின்னத் திட்டிவாசல் திறந்திருந்தது. மதில் சுவர் சூழலுக்கு நடுவே ஒரு காலத்தில் அந்த அரண்மனை கம்பீரமாகக் காட்சியளித் திருக்கும். ஆனால் இப்போது? அரண்மனையைச் சுற்றிப் புதர் மண்டிக் கிடந்தது. அரண்மனையின் மேலும், சுவர் களிலுமேகூட குத்துச் செடிகள் வேரோடி இருந்தன.

இதற்குமேல் நாங்கள் வர முடியாது என்பது போல மதுவும் ஜெய்யும் அந்தத் திட்டி வாசலருகே நின்று விட்டார் கள். நானும் அவர்களை வற்புறுத்தவில்லை. நெஞ்சைநிமிர்த்திக் கொண்டு, திட்டி வாசலைக் கடந்து உள்ளே புகுந்தேன்.

"உன் ஆராய்ச்சியை சீக்கிரமாக முடித்துக்கொண்டு வா. நாங்கள் இங்கேயே உனக்காகக் காத்திருக்கிறோம்" என்று கூறியபடி, இருவரும் ஆளுக்கொரு பாறைக் கல்லைத் தேர்ந் தெடுத்து, அதில் உட்கார்ந்தபடி, நிலக் கடலைப் பொட்ட லத்தை எடுத்துக் கொரிக்கலானார்கள்!

நான், புல்லும் புதரும் மண்டிக் கிடந்த நடைபாதை

www.tamilnesan1981.blogspot.in

வழியே அரண்மனையின் அருகே போனேன். அரண்மனையின் கதவுகள் எல்லாம் மூடிப் பூட்டுப் போட்டிருந்தன— ஜன்னல்களும்தான். சில கதவு, ஜன்னல்களின் குறுக்கிலும் நெடுக்கிலும் மரச் சட்டங்களை வைத்து ஆணி கொண்டு முடுக்கி இருந்தார்கள்.

'இதனுள் எப்படி நுழைவது?' என்று குழம்பியபடி, அந்தப் பாழ் அரண்மனையைச் சுற்றி வரலானேன். பின் பக்கத்தில் ஏதாவது ஒரு ஜன்னல் கதவு திறந்திருக்காதா என்ற நப்பாசை. என் ஆசை வீண் போகவில்லை.

ஓர் ஓரத்தில் ஒரு சிறிய ஜன்னல். அதன் குறுக்கே வைத்து முடுக்கி இருந்த சட்டம் பெயர்க்கப்பட்டிருந்தது. அதன் கம்பிகளில் இரண்டு துரு ஏறியதினால் இற்றுப் போய், வளைந்து விடுபட்டுத் தொங்கிக் கொண்டிருந்தது. கொஞ்சம் சிரமப்பட்டால், அதை நன்கு விலக்கி வழி பண்ணிக்கொண்டு, உள்ளே புகுந்து விடலாம். நான் யோசிக்கவில்லை. அந்த ஜன்னல் தெரியாமல் உயர்ந்து வளர்ந்திருந்த காட்டுச் செடிகளை ஒடித்து வழி பண்ணிக் கொண்டு, அதன் அருகே போனேன். ஜன்னலின் துருப் பிடித்த கம்பிகளை ஆட்டி அசைத்து அப்புறப்படுத்துவது சிரமமாக இல்லை. என் உடலை வளைத்து, ஜன்னலின் அந்த இடை வெளியில் நுழைந்து— உள்ளே குதித்தேன்.

அது அந்த அரண்மனையின் விசாலமான சமையலறை. கோட்டை அடுப்புகளும், கரி ஏறிய சுவர்களும், பெரிய பெரிய பாத்திரங்களும்... தரையில் கறுப்புக் கடப்பைக்கல்லும் பரப்பப்பட்டிருந்தது. சில இடங்களில் அந்த சதுரக் கல் பெயர்ந்து உடைந்து காணப்பட்டது. நான் உள்ளே நுழைந்த சின்ன ஜன்னலைத் தவிர, அங்கிருந்த ஏராளமான பெரிய பெரிய ஜன்னல்களெல்லாம மூடப்பட்டிருந்தன. அவற்றின் இடுக்குகளிலிருந்து ஒளி, கீற்றாக ஆங்காங்கே மினுக்கிட்டன. நான் நுழையக் காரணமாக இருந்த சிறிய ஜன்னல் வழியாக வந்த வெளிச்சம்தான், அந்த சமையல் அறையில் மங்கிய ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்தது.

நிதானமாக சமையல் கூடத்தை ஆராய்ந்தேன், அங்கிருந்து அரண்மனையின் வேறு பகுதிக்குச் செல்ல ஏதாவது வழி இருக்கிறதா என்று. வலது கைப் பக்கத்தில்

www.tamilnesan1981.blogspot.in

மாடிக்குப் போகப் படிக்கட்டுகள் தென்பட்டன. இடது பக்கத்தில் தள்ளு கதவோடு கூடியதோர் வழி...

தள்ளுக் கதவின் வழியாகப் போனால் சாப்பாட்டு அறைக்குப் போகலாம். அதன் வழியே உள்ளே புகுந்து போய்ப் பார்க்கலாமா? அல்லது, படிகள் வழியே ஏறி— மாடிக்குப் போகலாமா? சில வினாடிகள் சிந்தித்தேன்.

மாடிக்குப் போகவே முடிவு செய்தேன். சுழல் படிகளை நோக்கி மெல்ல நடந்தேன். தரையெல்லாம் ஒரே புழுதி. எலி, பெருச்சாளி இவற்றின் கழிவுகள். மூச்சுத் திணற வைக்கும் ஒரு வகை துர்நாற்றம்... மாலை மாலையாக ஒட்டடைகள்— சிலந்திக் கூடுகள்... டார்ச் விளக்கினால் ஒட்டடைகளையும், சிலந்தி வலைகளையும் விலக்கிக் கொண்டு— படிகளில் ஏறலானேன். பலகைகளால் ஆன படிகள் அவை. நான் கால் வைத்ததும் 'கிறீச்' சென்று முனகிற்று. அப்போதுதான் முதல் முதலாக என் இதயத் துடிப்பு அதிகமாயிற்று. என் இதயத்துடிப்பின் 'தடக் தடக்' ஒலியைத் துல்லியமாக என் காதுகள் கேட்டன.

மிகவும் எச்சரிக்கையோடு, நிதானமாகப் படிகளில் என் கால்களைப் பதித்து ஏறினேன். கைப்பிடிச் சட்டம் பல இடங்களில் உளுத்துப் போயிருந்தது. அதேபோலப் படிகளும் மடுத்துப் போய் என் கனத்தைத் தாங்காமல் முறியுமானால்— அந்த நினைப்பே 'குப்'பென்று வியர்வையைப் பெருக்கியது. சுழல் படிகளை கடந்து மேலே போனதும், விதானத்தில பதித்திருந்த சித்திரக் கண்ணாடி மூலம் மஞ்சளான ஒளி படர்ந்த கூடத்தில் நின்றேன்.

அங்கிருந்து இடது பக்கத்திலும் வலது பக்கத்திலும் இன்னும் மேலே போகப் படிகள் தெரிந்தன. இவை சுழல் படிகளல்ல— மரப்படிகளுமல்ல. உறுதியான கட்டடத்தினா லான படிகள்.


இவ்விரண்டு மாடிப்படிகளைத் தவிர, நான் நின்றிருந்த இடத்துக்கு நேராக, அந்தக் கூடத்தில் ஒரு கதவும் இருந்தது —பாதி திறந்த நிலையில்... எனக்கு மீண்டும் ஒரு குழப்பம்— மாடிப்படி வழியாக மீண்டும் மேலே போவதா? அப்படிப் போவதானால் எந்தப் படி வழியாகப் போவது? இல்லை, திறந்துள்ள கூடத்துக் கதவு வழியே உள்ளே நுழைந்து ஆராய்வதா?

www.tamilnesan1981.blogspot.in

இடது–வலது பக்கமிருந்த மாடிப் படிகளை அலட்சியப் படுத்திவிட்டு– கூடத்துக் கதவில் கை வைத்து, இன்னும் விரியத் திறந்து, உள்ளே எட்டிப் பார்த்தேன். அது ஒரு பெரிய ஹால். உள்ளே சோபாக்களும் நாற்காலிகளும் பெட்டிகளும் குவிந்து கிடந்தன. ஒரு மூலையில் பழங்காலத்துப் புனலோடு கூடிய கிராமபோன் பெட்டி. இரண்டு ஆள் உயரத்துக்கு ஒரு சுவர்க் கடிகாரம்– பெரிய பெண்டுலத்தோடு–ஓடாமல், ஒட்டடை யும் புழுதியும் படிந்து நின்று கொண்டிருந்தது தரையில். இன்னொரு மூலையில் மரத்தாலான ஒரு ஆடும் குதிரை.

ஜமீன்தாரின் பிள்ளையோ பேரப் பிள்ளையோ அதில் உட்கார்ந்து ஆடி இருக்கவேண்டும். சுருணையாகக் கயிறுகள்... புழுதி படிந்த தரையில் சில புத்தகக் குவியல்கள், அதன் அருகே? என் ரத்தம் சில்லிட்டது. மயிர்க் கூச்சல் உண்டாயிற்று. விழிகள் நிலைக்குத்தி நின்றன.

அது, அது... மல்லாந்த நிலையில் விரைத்துக் கிடந்த அந்த உடல்...? என் மார்பை அழுத்திப் பிடித்துக் கொண்டேன், இதயத் துடிப்பைக் கட்டுப்படுத்த.



3

ஆவி உலவும் அந்தப் பாழடைந்த அரண்மனைக் குள்ளே புகுந்து ஆராய்வதாக பாலு, குட்டி வாசல் வழியே உள்ளே போனதும், மதுவும் ஜெய்யும் வெளியே காத் திருந்தார்கள். அந்த மனித நடமாட்டமில்லாத அரண்மனை வாசலில், தன்னந்தனியே உட்கார்ந்திருப்பது அவர்களுக்கு என்னவோ போலிருந்தது.

'பாலுதான் தைரியசாலியோ–நாம் என்ன கோழைகளா?' என்ற எண்ணம் அவ்விருவர் மனதையும் குடைந்து கொண் டிருந்தது.

www.tamilnesan1981.blogspot.in

"மது, இங்கே சும்மா உட்கார்ந்திருப்பதற்குப் பதில் உள்ளே போய் அரண்மனையின் வெளிப் பக்கத்தைச் சுற்றிப் பார்த்தால் என்ன?" என்றாள் ஜெய்.

"நான் நினைத்த மாதிரியே நீயும் நினைக்கிறாய். சரி வா போகலாம்" என்று திட்டி வாசல் வழியே புதர் மண்டிக் கிடக்கும் அரண்மனையின் முற்றத்துக்குள் புகுந்தான் மது. ஜெய்யும் பின் தொடர்ந்தாள். இருவரும் நிதானமாக —கவன மாக—அந்தப் பாழ் அரண்மனையைச் சுற்றி வந்தபடி நோட்ட மிட்டார்கள்.

"எல்லாக் கதவுகளும் ஜன்னல்களும், மூடி சீல் வைத்துக் கிடக்கின்றதே, பாலு எப்படி உள்ளே நுழைந் தான்?" என்று கேட்டான் மது.

"எப்படியோ நுழைந்திருக்கிறான். இல்லாவிட்டால் நம் கண்ணில் பட்டிருப்பானே. அரண்மனையினுள்ளே இருட்டில் எந்தப் பகுதியில் நின்று தவித்துக் கொண்டிருக்கிறானோ தெரியவில்லை" என்றபடி பூட்டிய கதவுகளின் ஒரு பூட்டை இழுத்துப் பார்த்தாள் ஜெய். என்ன அதிசயம்—அல்லது அதிர்ஷ்டமா? துரு ஏறிக் கிடந்த அந்தப் பூட்டு, அவள் இழுத்ததும் படக்கென்று விடுபட்டுத் திறந்து கொண்டது. ஜெய்யும் மதுவும் வியப்பும் திகைப்பும் வழிய ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அந்த மௌனத்தை ஜெய்தான் கலைத்தாள். "நான் உள்ளே போய் பாலுவைத் தேடறேன். நீ இங்கேயே நில்லு. ஆனால் ஒரு நிபந்தனை. பத்து நிமிஷம் வரைக்கும் நான் திருப்பல்லேன்னா, நீ உடனே உள்ளே உதவிக்கு வரணும், என்ன?" என்றாள். மதுவாய் பேசாமல் சரி என்று தலை யாட்டினான். அவன் நெற்றியில் வியர்வை பூக்க ஆரம்பித்தது. உள்ளங்கை ஜில்லாயிற்று. ரிஸ்ட் வாட்சைப் பார்க்கக் கையைத் திருப்பியபோது அது நடுங்கிற்று. அப்போது—

"க்ர்ர்ர்ர்ர்ரீச்...—" என்ற ஒலி... மதுவின் இதயத் துடிப்பு கிடுகிடுத்தது. வேறொன்றுமில்லை. ஜெய் உள்ளே போக அந்தக் கதவைத் திறந்தபோது ஏற்பட்ட சத்தம்தான் அது! நெஞ்சை அழுத்திக் கொண்டான் மது. "பாலு உள்ளே போய் அரை மணியாயிற்று. அடுத்து ஜெய்யும் உள்ளே போயிருக்

www.tamilnesan1981.blogspot.in

கிறாள். பத்து நிமிஷம் காத்திருக்கும்படி சொல்லி இருக்கிறாள்..."— இதையே நினைத்துக் கொண்டு, அடிக்கடி ரிஸ்ட் வாட்சைப் பார்த்தபடி அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தான் மது. 'சே, கடிகாரம் ஓடல்லியா?' கையை உதறினான். காதருகே வைத்துப் பார்த்தான்.

'உள்ளே போன் அவர்களுக்கு ஏதும் நேராதிருக்க வேண்டுமே. துரைசானியின் ஆவி, அந்த அரண்மனையில் உலாவுவதாகக் கூறுவார்களே—ஏன் ஒட்டி உலர்ந்த ஓர் உருவம், வெள்ளையுடையோடு கண்கள் மட்டும் நெருப்பாக ஜ்வலிக்க, அரண்மனை மதில் மீது ஓடியதைப் பார்த்ததாக குப்பம்மாப் பாட்டி கூறி இருக்கிறாளே...!' வானத்தில் மேகங்கள் திரண்டன. சூரியனை மறைத்தன. சில்லென்ற மழைக் காற்று வீசியது. மது, படபடப்போடு கைக் கடிகாரத்தைப் பார்த்தான். "ஐயோ...!" அவனையறியாமல் வாய் கூவியது 'ஜெய் உள்ளே போய் பனிரண்டு நிமிஷமாகிவிட்டதே. அவள் இன்னும் திரும்பவில்லையே... என்ன ஆகி இருக்கும்? ஏதாவது ஆபத்து?'— மீண்டும் கடிகாரத்தைப் பார்த்தான். பதினாலு நிமிஷமாகி விட்டது. அவன் நெஞ்சம் தடதடத்தது. 'ஜெய்யைத் தேடிக் கொண்டு உள்ளே போகலாமா?— இல்லை உதவிக்கு ஊருக் குள் ஓடலாமா? இரண்டு பேரும் இந்த ஆவி அரண்மனைக் குள் போய் மாட்டிக் கொண்டு விட்டார்களே!'— மதுவின் முகத்திலிருந்து வியர்வை வழி வகுத்துக் கொண்டு கழுத்து வழியாக— நடு முதுகில் இறங்கி குறுகுறுத்தபடி ஓடியது. சட்டென்று உடம்பைச் சிலிர்த்துக் கொண்டான்.

"சே! நான் ஏன் இப்படி பீதியடைய வேண்டும்? நான் திரும்பி வராவிட்டால் என்னைத் தேடிக் கொண்டு உதவிக்கு நீயும் உள்ளே வா'— என்று ஜெய் சொல்லிவிட்டு எத்தனை தைரியமாக உள்ளே போனாள். அவளுடைய துணிச்சல் எனக்கில்லையா?" என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்ட மது, கைக்குட்டையினால் முகத்து வியர்வையை அழுத்தித் துடைத்துக் கொண்டான். ஆவி உலவும் அரண் மனைக்குள் அவனும் நுழைந்து ஜெய், பாலு இருவரையும் தேட முடிவு செய்தான். சற்று முன்பு அவனை வளைத்துக் கொண்டிருந்த பயம் விடுபட்டு விட்டது.

இருள் சூழ்ந்த அந்த ஆவி உலவும் அரண்மனைக்குள்

www.tamilnesan1981.blogspot.in

மூன்றாவது நபராக மதுவும் புகுந்தான். "ஜெய்—ஜெய்— எங்கே இருக்கே?" என்று குரல் கொடுத்துக் கொண்டே தட்டுத் தடுமாறியபடி முன்னேறினான். 'பயப்படக்கூடாது பயப்பட ஒன்றுமில்லை' என்று தைரியப்படுத்திக் கொண்டா லும், 'ஜெய்' என்று கூப்பிடும்போது மதுவின் குரல் கிறீச்சிட்டு விகாரமாக ஒலித்தது, அவனுக்கே வெட்கமாக இருந்தது.

கொஞ்ச நேரம் அவன் குரலுக்கு எவ்விதப்பதிலும் இல்லை. உள்ளே இருள் கனமாகிக் கொண்டே... அப்போது ஒரு முனகல்... குரல் வளையை அமுக்கினால் மூச்சுத் திணறுவார்களே— வார்த்தைகள் வெளிவர முடியாமல், அப்படியொரு அவஸ்தை... உதறிய பீதி வந்து ஒட்டிக் கொண்டது மதுவிடம்... அதைச் சமாளிக்க பலமாக "ஜெய்... ஏய், ஜெய்! நீ எங்கே இருக்கே?" என்று கத்தினான்.

"இங்கே இங்கேதான் காப்பாத்து... வா" என்று ஒரு குரல் குழறியது. அது ஜெய்யோட குரல்தான். குரல் வந்த திசையை— திசையாவது திக்காவது—ஒரே இருட்டு! தூணில், சுவரில் முட்டிக் கொள்ளாதிருந்தால் போதாதா?—உத்தேச மாக உதவி கேட்டு குரல் வந்த திசையில், தடுமாறியபடி நகர்ந்தான். மிகமிக லேசாகத் தெரிந்த வெளிச்சத்தின் அந்தப் பரப்பில், இனங்காண முடியாதபடி, கண் முன்னே விட்டில் பூச்சிகள் நடனமாடின.

அங்குலம் அங்குலமாக நகர்ந்து எதிலோ கை வைக்க— அது தள்ளு கதவு...! தானாகத் திறந்து கொண்டு வழி பிளக்க, சமையலறையிலிருந்து ஒழுகிய வெளிச்சத்தில்— அந்த சாப்பாட்டுக் கூடமும், அதை அடுத்த ஒரு ஹாலும் தெரிய... அங்கே... ஜெய்... மாடிப்படிக்கு அருகே சுருண்டு, தன் இரு கைகளாலும் உடம்பை வளைத்துத் தழுவிக் கொண்டு, ஒரு ஓரமாக—மூட்டையாக—

மது ஓடினான்—மங்கலான வெளிச்சமிருந்ததால்—ஜெய் யிடம் "ஜெய்க் குட்டி, என்ன நடந்தது? ஏன் இப்படி கிலி பிடிச்சுப் போய் ஒண்டிக்கிட்டிருக்கே? என்ன விஷயம்.?" என்றான்.

"நா... நான்... நாம் சிக்கிக்... கொண்டோம் மது..."

"சிக்கிக் கொண்டாயா...?"

"ஆமாம்... அரண்மனையை இருட்டிலே துழாவிக்

www.tamilnesan1981.blogspot.in

கொண்டே வரும்போது... ஒரு பூனை... கறுப்புப் பூனை... இப்ப நீ இருக்கியே அங்கே இருந்தது... அது... அது வந்து, அந்த துரைசானி—அதான் ஜமீந்தாரோட வெள்ளைக்கார மனைவி வளர்த்த பூனை போலிருக்கு. வளர்ப்புப் பூனை தானேன்னு அதைத் தடவிக் கொடுக்கப்போனேன். அப்போ அது ஒரு சீறல் சீறித்துப் பாரு... இதோ இப்பக்கூட என் உடம்பு புல்லரிக்கிறதைப் பாரு. ஐயோ! என்ன பயங்கரம்! அதன் கண்களைப் பார்க்கவே பயம்மா இருந்தது மது!



உடம்பு வேறு கறுப்பா— அதிலே இரு கண்கள் மட்டும் கொள்ளிக்கட்டை மாதிரி சேப்பா ஜ்வலிச்சுது... அதன் சீறல்— என்னைப் பார்த்துச் சிரிக்கிற மாதிரி இருந்தது. முதுகை வளைத்துக் கொண்டு, அது என் கிட்ட வராமல் தூர இருந்தபடியே, இப்படியும் அப்படியும் அலைந்தது— என்னைத் தன் பயங்கரக் கண்களால் பார்த்துக்கொண்டு...!

“அதுக்கும் எனக்கும் நடுவிலே கம்பிக் கதவு போன்ற ஏதோ ஒரு தடை இருப்பது போல—அது கூண்டுக்குள்ளே இருக்கிற மாதிரி—ரொம்ப நேரம் அப்படி வாலையும் முதுகை யும் நிமிர்த்திய படி நடந்து விட்டு ஓடிப் போயிற்று. எனக்

www.tamilnesan1981.blogspot.in

கென்னமோ—அதோ அங்கே கம்பிகள் இருக்கிற மாதிரி—அந்த வழியாப் போன ஏதோ பயங்கரம் நடக்கும்னு ஒரு அச்சம். அதான் இங்கேயே ஒண்டிண்டு உக்கார்ந்திருக்கேன்" என்றாள் ஜெய்.

"ஐயோ, ஜெய்! இதென்ன பைத்தியக்காரத்தனம்? இந்தப் பாழ் அரண்மனையோட கட்டுக் கதைகளையெல்லாம் நீ கேட்டிருக்கே. அதனால்தான் ஒரு கறுப்புப் பூனைக்கு இப்படிப் பயந்துட்டே. அது மந்திரப் பூனைய்ல்ல—எந்தப் பூனையோட கண்ணுமே இருட்டில் அப்படித்தான் ஜ்வலிக்கும். இதுக்காகப் போய்...!"


"அது இல்லே மது? நீ அந்தப் பூனையைப் பார்த்திருந்தா இப்படிச் சொல்லமாட்டே! எத்தனை பெரிய பூனை தெரியுமா? அது வாயைத் திறந்து சீறின போது... ஐயோ! அதன் பற்களை—இப்போது நினைத்துக் கொண்டாலும், அம்மாடி! அந்த சூனியக்காரப் பூனை, என் மீது ஏதோ ஒரு சக்தியை ஏவி விட்டுட்டுப் போயிருக்கு. அந்தக் கம்பித் தடுப்புகள்..."

"கம்பியுமில்லே தடுப்புமில்லே, உன் மனபிரமைதான். இதோ பார், நான் அங்கு போய்த் திரும்புகிறேன் பார். நீயா ஏதோ கம்பின்னு கற்பனை பண்ணிண்டு...—" மது அவள் குறிப்பிட்ட இடத்துக்குப் போய்த் திரும்பினான். அவன் எவ்வளவோ முயற்சித்தான், அவள் பிரமையைப் போக்க. ஆனால் ஜெய்யின் மனம் தைரியப்படவில்லை.

"அந்தப் பூனை—அது என்மீது ஏதோ மந்திரம் போட்டிருக்கு... நான் நிச்சயமாகச் சொல்றேன்..." என்று ஜெய் குரல் தடுமாறப் பேசியபோது, பூனையின் 'மியாவ்' குரல் மாடியிலிருந்து கேட்டது. பூனையின் அந்த 'மியாவ்' ஒலி மதுவின் உள்ளத்திலும் ஒருவித பீதியை உண்டாக்கிற்று.



www.tamilnesan1981.blogspot.in



# 4

**பா**லுயைத் தொடர்ந்து அந்தப் பாழடைந்த அரண் மனைக்குள் ஜெய்யும் மதுவும் போனார்கள். ஜெய் ஒரு கறுப்புப் பூனையைக் கண்டு கலவரப்பட்டுப் போனாள். மது அவளுக்குத் தைரியம் கூறினான். அப்போது அந்தப் பூனை யின் வித்தியாசமான குரல் கேட்கவே, மதுவும் திகிலடைந்தான். இவ்விருவரையும் அப்படியே விட்டுவிட்டு நாம் பாலுவைப் பார்ப்போம்.

மல்லாந்த நிலையில் செத்துப் போய் விரைத்துக் கிடந்த உடலைக் கண்டு, தன் மார்பை அழுத்திப் பிடித்துக் கொண்டு, இதயத் துடிப்பைக் கட்டுப்படுத்த முயன்ற பாலு வாகிய நான் அந்த உடலின் அருகே போனேன். கொழுத்த அந்த எலி, செத்துப் போய் வெகு நாளாகி இருக்க வேண்டும் என்பதை, அதை உற்றுப் பார்த்துத் தெரிந்து கொண்டேன். "ப்பூ! இந்த எலிக்குப் போயா, இத்தனை பயம் பயந்தேன்!" என்று எண்ணியபோது எனக்குச் சிரிப்பு வந்தது. கால்களைத் தூக்கி வைத்தபடி செத்துக் கிடக்கும் அந்த எலியைத் தாண்டி அப்பால் போய் நின்று, அந்த அறையை நோட்டம் விட்டேன். ஒரு பெரிய மூடி போட்ட அலமாரி இருந்தது. அதைத் திறந்த போது நாப்தலின் நாற்றம் குப்பென்று

www.tamilnesan1981.blogspot.in

வீசியது. அந்த அலமாரியில் அடுக்கடுக்காகத் துணிகள் இருந்தன. ஜமீன்தாரின் பகட்டான வெல்வெட் உடைகள், ஜரிகை வேட்டிகள், சில்க் கவுன்கள், பாவாடைகள். அலமாரி யின் ஒரு மூலையில் ஒரு பெரிய இரும்பு வளையத்தில், மூன்று பெரிய சாவிகள் கோர்க்கப்பட்டு—ஒரு கொக்கியில் தொங்கிக் கொண்டிருந்தன. அடேயப்பா! ஒவ்வொரு சாவியும்தான் எத்தனை பெரிசு! முக்கால் அடி நீளமிருக் குமா?

அதிசயித்தபடியே அலமாரியை ஆராய்ந்து கொண் டிருந்தபோது, ஏதோ ஒரு விநோதமான சத்தம் கேட்டது... அது என்னது? நான் யோசிக்கும் போதே ஒரு சுண்டெலி கதவிடுக்கிலிருந்து குடுகுடுவென்று அறையின் குறுக்கே ஓடியது. அது போட்ட சத்தம்தானா அது? சுண்டெலிதானா னாலும் அந்தப் பாழடைந்த வீட்டில், அந்தச் சூழ்நிலையில் எனக்கு என்னமோ அது, நடுக்கமா, பயமா, அருவெருப்பா? குறுக்கே ஓடிய அந்தச் சுண்டெலி, இப்போது சட்டென்று திரும்பி என்னை நோக்கி ஓடி வரலாயிற்று. நான் கலவரப் பட்டு— அது என் மீது விழாதிருக்கத் தாவிக் குதித்தேன். அதே சமயத்தில் ஒருவேளை அது என் மீது தாவி விழுமானால், அதை உதறித் தள்ள ஆயத்தமாகக் காலை வீசினேன். என்ன ஆச்சர்யம்! என் கால் அந்தச் சுண்டெலி மீது படவே இல்லை. ஆனால் அது 'கிரீச்' என்று கத்தியபடி என் முன்னால் தரையில் சுருண்டு விழுந்தது, செத்தும் போயிற்று! என் நெஞ்சு 'தடக் தடக்' என்று பலமாகத் துடிக்கலாயிற்று. குடுகுடு வென்றும், குறுக்கும் நெடுக்கும் ஓடிய சுண்டெலி, இப்படித் தரையில் சுருண்டு விழுந்து சாவானேன்? மர்மமாக இருந்தது எனக்கு. அதே சமயத்தில் பயமும் பரவியது.

அசைவற்றுக் கிடக்கும் செத்துப் போன அந்தச் சுண் டெலியையே பார்த்துக் கொண்டு நகர்ந்தபோது, தரையில் ஒரு பெரிய தாமிர வளையம் காலில் தடுக்கிற்று. தடுமாறிய நான் உற்றுப் பார்த்தேன். தரையோடு தரையாக மரத்தாலான ஒரு கதவு. அதைத் திறப்பதற்கான கைப்பிடி வளையம்தான் அது. அந்தத் தளத்தின் கீழே போக வழியா அது? அது எப்படி?— நானே மாடியில் தானே இருக்கிறேன், சமதரையில் இருந்தால் அல்லவா கீழே போக வழி இருக்கும்? அந்த

www.tamilnesan1981.blogspot.in

அரண்மனை, அதன் அமைப்பு, அங்குள்ள அறைகள், பொருள்கள் எல்லாமே விசித்திரமாக, மர்மமாக இருந்தன எனக்கு. 'தாமிர வளையக் கைப்பிடியைத் தூக்கித் திறந்து பார்க்கலாமா— இல்லை, வந்த வழியே திரும்பிப் போய்விட லாமா' என்று சில விநாடிகள் சிந்தித்தேன்.

இந்த ஆவி உலவும் அரண்மனையின் மர்மங்களை முழுவதும் பார்த்துவிடலாம் என்ற முடிவோடு, தாமிர வளை யத்தைப் பற்றித் தூக்கினேன். மரக்கதவு மூடி, இலேசாகத் திறக்க வந்தது. கீழே படிகள் சுழன்றபடி போயிற்று எங்கே போகிறது—பாதாளத்துக்கா? கீழே கும்மிருட்டு... படிகளில் இறங்கிக் கீழே போகத் தயக்கமாக இருந்தது எனக்கு. கொஞ்ச நேரம்தான். உடனே திடம் கொண்டு படிகளில் இறங்கினேன். என்னிடம் டார்ச் இருப்பது நினைவுக்கு வரவே தெம்பு ஏற்பட்டது.

நாலு ஐந்து படிகள் இறங்கி இருப்பேன். 'தடால்' என்று சத்தம், என்னைத் தூக்கி வாரிப் போட்டது. என்னது? குப்பென்று இருளும் சூழவே— அப்போதுதான் புரிந்தது, மரக் கதவு விழுந்து தானாக மூடிக் கொண்டுவிட்டது என்று. பரபரப்போடு டார்ச்சை எடுத்து அழுத்தினேன். இருளை விரட்ட முடியாமல் என் டார்ச் திணறியது. பாட்டரி போட்டு நாளாயிற்று, வீக்காகி விட்டது. அது சரி, அந்தக் கதவு எப்படி மூடிக்கொண்டது? நான் அதைத் தரையோடு தரையாக அல்லவா திறந்து வைத்துவிட்டு உள்ளே இறங்கினேன். அத்தனை கனமான கதவு தானாக எப்படி எழும்பி மூடிக்கொள்ளும்? யாராவது தூக்கி மூடினால் ஒழிய, அது சாத்தியமில்லை. அப்படியானால், இந்தப் பாழ் அரண் மனையில் யாராவது இருக்கிறார்களா? யாரும் இருப்பதாகத் தெரியவில்லையே. கண்ணுக்குத் தெரியாத நபரானால், அது... அது ஆவியர்கத்தான் இருக்க வேண்டும். ஆவி என்றதும் அந்த நினைவு என் கைகளை ஜில்லிடச் செய்தது. என்னை அறியாமல் என் கைகள் நடுங்கலாயின. டார்ச் நிதானமிழந்து ஆடியது. அடுத்த விநாடி வியர்வையில் நனைந்த என் கையிலிருந்து அந்த டார்ச் நழுவி விழுந்து, படிகளில் உருண்டு இருளில் எங்கோ போய் விழுந்தது, "தட்" என்ற ஒலியுடன். அதன் பிறகு எவ்வித ஒலியும் ஒளியு

www.tamilnesan1981.blogspot.in

மில்லை. ஒரே நிசப்தம்—இருள்! என் இதயத் துடிப்பும், விழிகள் முன்னால் பூச்சிகள் பறப்பதும்...

ஒரு வெறியோடு வேகத்தோடு, இறங்கி இருந்த அந்த நாலைந்து படிகளையும் 'தடதட'வென்று தாவி மேலே ஏறினேன்... இருளில் என் தலை, மூடிய அந்தக் கதவில் மடார் என்று முட்டியது. ஆவேசத்தோடு தலையின் அதிர்வையும் பொருட்படுத்தாமல்—இரு கைகளாலும் அந்தக் கதவை நெட்டித் தள்ளித் திறக்க முயற்சித்தேன். ம்... ஹூம்! முடியவில்லை. வெளியிலிருந்து சுலபமாகத் திறக்க முடிந்த அந்தக் கதவை, இப்போது கீழிருந்து திறக்கமுடியவில்லை! வியர்வை வெள்ளமாகப் பெருக்கெடுத்தது.

ஏதோ ஒரு பயம், பீதி நெஞ்சைப் பிசையலாயிற்று. இனி மேலே போக வழி இல்லை. கீழே இறங்கித்தான் பார்த்தாக வேண்டும்... கால்கள் துணியாகத் துவண்டன. இருந்தாலும் துணிச்சலைத் திரட்டிக் கொண்டு, இருட்டில் படிகளைக் காலால் துழாவித் துழாவி இறங்கலானேன். அப்போது நிசப்தத்தைக் கிழித்துக்கொண்டு "மியாவ்" என்ற குரல், பூனையின் குரல்தான்— ஆனால் நேசாபவக் குரலாக இல்லாமல் பீதியுண்டாக்கும்படி சீறிற்று அந்த அந்த 'மியாவ்' குரல். பூனை— வெள்ளைக்காரச் சீமாட்டி வளர்த்த பூனை இது தானா? எங்கே இருக்கிறது? கறுப்புப்பூனை, கொழுத்த பூனை என்றானே மது? அப்படியானால் இந்த இருட்டில் அது இருக்குமிடம் தெரியாது. அது அது தான்— அதன் தக தகக்கும் பச்சையான இருகோளங்கள். அது—அது பூனையின் கண்களா? என் இதயத் துடிப்பு நின்றேவிட்டது! அது பூனையின் கண்ணானால் என் அருகிலேதான் இருக்கிறது, அந்தக் கறுப்புப் பூனை என் மீது பாயுமோ? பூனை தன் இரையைப் பிடிக்கும்போது, கொக்கி போன்ற காலின் நாகங்களை வெளியே நீட்டும் என்பார்களே. அப்படியானால் என் மீது பாயும் அந்தப் பூனை, தன் கால் நகங்களை வெளியே நீட்டி, அதனால் என் உடலைக் கீறிக் கிழித்து — சே... சே! இதென்ன அசட்டுக் கற்பனைகள்.

பயத்தைப் பலவந்தமாக உதறிய அதே சமயத்தில் என் கால்களில் ஏதோ இடறி உருண்டது. குனிந்து துழாவினேன். ஆகா என் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! கையிலிருந்து நழுவி

www.tamilnesan1981.blogspot.in


விழுந்த என் டார்ச்தான் அது! பரபரப்புடன் அதை எடுத்துப் பட்டனை அழுத்தினேன். ஒளி பளீரிடாவிட்டாலும் மங்கலான ஒளி, இருளை விலக்கியபடி நீண்டது. சுழல் படிகளின் முடிவில் நான் நின்று கொண்டிருந்தேன். டார்ச் ஒளியை நாலா பக்கமும் திருப்பி அந்த இடத்தை ஆராய்ந்தேன். அப்போது,

என் எதிரே...?

வேறொரு மாடிப் படியின் கைப்பிடிச்சட்டத்தின் முடிவில் இருந்த ஒரு கோளத்தின் மீது, அது உட்கார்ந்திருந்தது, என்னையே தன் பச்சைச் சுடர்க் கண்களினால் பார்த்தபடி. ஆம்! அந்தக் கறுப்புப் பூனையே தான்! அதன் ரோமங்கள் சிலிர்த்துக் குத்திட்டு நின்றன. அதன் மீசை கம்பி ஊசிபோல விரைத்து நின்றது. என்னையும் என் டார்ச் ஒளியையும் பார்த்து அது சீறியது. அப்போது திறந்த அதன் வாயில் பளீரிட்டன கூர்மையான பற்கள். தன் முதுகை வில்லாக வளைத்து, வாலை உயர்த்தி, வாயை விலக்கிக் கொடூரமாக ஒரு குரல் எழுப்பிற்று. என் நாடி நரம்புகள் ஒடுங்கின. உதறல் கண்ட என் கையிலிருந்த டார்ச் நழுவலாயிற்று. ஆனால் அது கீழே விழாமல், ரொம்பப் பிரயாசையோடு அதை இறுகப் பற்றிக் கொண்டேன். என் கைகளுக்கு அதைப் பற்றிய உணர்வே இல்லை. பட்டென்று டார்ச் அணைந்தது. நான் அணைக்கவில்லை. தானாக எப்படி அணைந்தது? பாட்டரி தீர்ந்துவிட்டதா? அல்லது... அல்லது இதெல்லாம் அந்த ஆவிகளின் சேஷ்டையா?

அப்போது ஒரு மனிதக் குரல் மிகமிக மெலிதாக எங்கிருந்தோ காற்றில் மிதந்து வந்தது. ஒரு கிழவியின் குரல். "மெலிஸா...! நீ எங்கே இருக்கே...? வேர் ஆர் யூ மை டியர் புஸ்ஸி!" இது அந்த வெள்ளைக்கார சீமாட்டியின் குரலா? அவள் தன் கறுப்புப் பூனையைக் கூப்பிடுகிறாளா? என் ரத்தம் உறைந்தது. ஏதும் தெரியாத இருட்டில், ஏதேதோ உருவங்கள் என்னைச் சுற்றி நர்த்தனமாடுவது போலிருந்தன.

www.tamilnesan1981.blogspot.in



5

ஜெய் இன்னும் பீதியிலிருந்து. விடுபடவே இல்லை, மது எவ்வளவோ தைரியம் சொல்லியும்கூட. "இந்தப் பூனை ஏதோ ஒரு மந்திர சக்தியை என் மீது ஏவி விட்டிருக்கு மது!" என்று குழறினாள்.

"அந்தப் பூனையை நான் பாத்துக்கறேன்... நீ பயப் படாதே" என்று மது கூறிய போதுதான், 'மியாவ்' என்ற அதன் குரல் வித்தியாசமாகக் கேட்டது.

துணிச்சலாகப் பேசிய மதுவின் நெஞ்சு அந்தப் பூனை யின் குரலினால் வேகமாகத் துடிக்கலாயிற்று. ஆனால் அவன் ஆண் பிள்ளையில்லையா?

"ஜெய், நீ இந்தப் படி வழியாக மேலே ஏறிப்பார். நான் இந்தப் படி வழியாகப் போய்ப் பார்க்கிறேன்... என்ன? பயப் படாதே. தைரியமாகப் போ..." என்று அவளை உற்சாகப் படுத்தினான். அந்த ஹாலில் இடது பக்கத்திலிருந்து ஒரு மாடிப் படியும், வலது பக்கத்திலிருந்து ஒரு மாடிப்படியும் வளைந்து சென்றன. மது இடது பக்கத்துப் படி வழியே மேலே ஏறினான். பாதிப் படி ஏறியவன் திரும்பிப் பார்த்தான், ஜெய் என்ன செய்கிறாள் என்று. ஜெய் தயாராகியபடி மெதுவாக வலது பக்கத்து மாடிப் படிகளில் ஏறிக் கொண்டி ருந்தாள்.

மது தடதட வென்று மேலே ஏறினான். ஓர் அறையில் போய் முடிந்தது படிகள். அந்த அறை பூட்டி இருக்கவில்லை. ஆகவே திறந்து கொண்டு உள்ளே போனான். பூனை எதுவும் கண்களில் படவில்லை. சற்று நேரம் அறையை ஆராய்ந்தபடி

www.tamilnesan1981.blogspot.in

அங்கு நின்றான்... 'மியாவ்' என்று குரல் கொடுத்துப் பார்த்தான்... எவ்விதப் பயனுமில்லை. அந்த அறையிலிருந்து வேறு அறைகள் பிரியவில்லை. ஆகவே மது திரும்பினான். ஜெய் எப்படி இருக்கிறாள் என்று தெரிந்து கொள்ளத் தடதட வென்று படிகளில் கீழே இறங்கி வந்தான். கூடத்துக்கு வந்ததும், 'ஜெய்' என்று குரல் கொடுத்தான், அவள் ஏறிச் சென்ற மாடிப் படியைப் பார்த்து. ஆனால் அந்தப் பாழ் அரண்மனையில் இவன் குரல்தான் பூதாகாரமாக ஒலித்ததே தவிர, ஜெயாவிடமிருந்து பதிலில்லை. மதுவுக்குப் பயமாகப் போயிற்று. மீண்டும் மீண்டும் 'ஜெய் ஜெய்' என்ற குரல் கொடுத்தபடி— அவள் ஏறிய வலது பக்கத்துப் படிகளில் வேக மாகத் தாவி ஏறினான். இரண்டு மூன்று படிகளாகத் தாவி ஏறியதினாலோ, ஜெய் எங்கே போனாள், என்னவானாள் என்ற கவலையினாலோ, அவனுக்கு மூச்சை அடைத்தது. 'திக்திக்' என்று தாளமிடும் நெஞ்சை அழுத்திக் கொண்டான்.

அந்த மாடிப்படியின் முடிவிலும் ஓர் அறை இருந்தது. ஆனால் அதன் கதவு பூட்டப்பட்டிருந்தது. ஆகவே ஜெய் இதற்குள் போயிருக்க முடியாது. அப்படியானால் மறுபடி கீழே தானே இறங்கிப் போயிருக்க வேண்டும்? ஆனால் கீழேயும் அவளைக் காணோமே! ஜெய் என்னவானாள்? எப்படி மாயமாக மறைந்தாள்? மதுவின் நெஞ்சுத் துடிப்பு அதிகமாயிற்று.

அப்போது...

திடீரென்று மதுவின் முன்னால் ஒட்டி உலர்ந்த ஒரு நெட்டையான பெண் உருவம் தோன்றியது. கறுப்பு கௌன் அணிந்து கொண்டிருந்தது, அவ் உருவம். அதன் கன்னங்கள் ஒட்டி, முகத்தில் சுருக்கங்கள்— கோடு கோடாக— அது, அது தான்... அந்த வெள்ளைக்காரியோ, ஆவியாக உலவுவதாகக் கூறுகிறார்களே துரைசானி— அது இவள் தானோ? மதுவுக்கு வாய் உலர்ந்தது. பேச்சு வெளிப்பட வில்லை. 'வெள்ளை வெளேர்' என்று நரைத்திருந்த தலை மயிரைச் சேர்த்துப் பின்னால் ஒரு மாதிரி முடிந்திருந்தாள், அந்தக் கிழவி. அவள் கண்கள் மட்டும் பச்சை பல்பு எரிவது போல பளீரிட்டுக் கொண்டிருந்தன. மதுவையே பார்த்துக் கொண்டிருந்தன அந்தப் பச்சைவிழிகள்.

www.tamilnesan1981.blogspot.in

அந்தத் துரைசானிதான் இந்தக் கிழியானால் அவள் இறக்கவில்லையா? இல்லை– 'இது... இது... அவளுடைய ஆவியா?' மதுவுக்கு, பேய் பிசாசு ஆவி இதிலெல்லாம் நம்பிக்கையே கிடையாது. 'சிலர் நூறு வயதுக்கும் மேலே வாழ்வதில்லையா? அதுபோல இந்த வெள்ளைக்காரச் சீமாட்டி ஏன் குடுகுடு கிழவியாக உயிரோடு இருக்கக் கூடாது?' இத்தனையும் சில விநாடிகளில் மதுவின் மனதில் மின்னலாக ஓடின. ஆனால் உயிரோடிருப்பதானால் இவள் இந்தப் பாழடைந்த அரண்மனையில் எப்படி...? இவளுக்கு உதவியாகத் துணையாக யார்...? இப்படிப் பல வினாக்கள் அவன் சிந்தையைக் குடையலாயின. அந்தக் கிழவி ஏதும் பேசாமல் அப்படித் தன்னையே பார்த்துக் கொண்டு நின்றது, மதுவுக்குச் சங்கடமாகவும்– பயமாகவும் இருந்தது. ஆளில் லாத அரண்மனைக்குள் திருட்டுத் தனமாகத் தான் புகுந்து ஆராய்வது, அவன் உள்ளத்தில் குற்றவாளியின் மனப் பான்மையைத் தோற்றுவித்திருந்தது. அந்தக் கிழவி சீமாட்டியானால்– அந்த அரண்மனை அவளுடையது தானே?

"வந்து... வந்து உங்க அரண்மனைக்குள்ளே உங்க உத்திரவில்லாமல் புகுந்தது தப்புத்தான். சும்மா ஒரு இதுக்காக..." என்று குழறினான், மது... "என் தங்கையைத் தேடியாகணும். அதுக்காகத்தான்... கொஞ்ச நேரத்துக்கு முன்னாலேகூட அவ இங்கே தான் இருந்தா... இப்போ திடீரென்று அவளைக் காணோம்..." என்று தன் செயலுக்கு நியாயம் கற்பிப்பவனைப் போல மது–அவன் நெஞ்சுத் துடிப்பைப் போலவே– தடதட வென்று பேசினான். "நான் எப்படியும் அவளைக் கண்டு பிடிச்சு, சீக்கிரமே இங்கிருந்து வெளியே போயிடறேன்" என்று மெள்ளப் பின் வாங்க லானான்.

அப்போது அந்தக் கறுப்பு உடை அணிந்திருந்த குச்சி போன்றிருந்த அந்த உருவம் பேசிற்று... "உன் தங்கையைப் பத்தி நீ கவலைப்பட வேண்டாம். அவள் கீழே இறங்கிப் போயிருப்பா. நாம் ரெண்டு பேருமே அவளைத் தேடுவோம்."

அந்தக் கறுப்பு உடையணிந்த கிழவியின் வார்த்தையில் நம்பிக்கை கொண்டோ, அல்லது அவளிடமிருந்து விடு பட்டால் போதுமென்றோ கருதிய மது, படிகளில் இறங்க

www.tamilnesan1981.blogspot.in

லானான். அந்த கிழவியும் தன்னைப் பின் தொடர்ந்து இறங்கி வருவாள்— ஜெய்யைத் தேடுவதற்கு என்று நினைத்துப் பாதி வழியில் திரும்பிப் பார்த்தான். ஆனால்... அவன் மூச்சே நின்றுவிட்டது போலிருந்தது. அந்தக் கிழவியின் உருவத்தைக் காணோம், எங்கு போனாள்? இப்படி மாயமாக எப்படி மறைய முடியும்? மதுவுக்கு தலை சுற்றியது. மயக்கமே வரும் போலிருந்தது. இந்தப் பாழடைந்த அரண்மனைக்குள் வந்து ஏன் மாட்டிக் கொண்டோம் என்ற சங்கடப்பட்டான். எல்லாம் இந்த பாலு வினால் வந்த வினைதான் என்று எண்ணம் வந்ததும் மறுபடியும் பகீர் என்றது மதுவுக்கு. "ஐயோ! பாலு என்ன ஆகி இருப்பான்? இந்த அரண்மனையில் அவன் எந்த மூலையில் இருக்கிறானோ தெரியவில்லையே! ஜெய்யையும் காணோம்... கடவுளே அவர்களைக் காப்பாற்று. எனக்குத் துணிவைக் கொடு" என்று மனதுக்குள் புலம்பிக் கொண்டே படிகளில் இறங்கினான் மது.

அந்தக் கூடத்திலிருந்த ஏதோ ஒரு கதவைத் திறந்து கொண்டு அடுத்த கட்டுக்குப் போனான், மது. அது அந்த அரண்மனையின் எந்தப் பகுதி என்பது அவனுக்குத் தெரியாது. அவனுக்கென்ன யாருக்குமே தான்! அந்த பாழடைந்த அரண்மனையின் கதவுகள், ஜன்னல்களெல் லாம் தான் மூடப்பட்டிருக்கிறதே! உள்ளே கும்மிருட்டில்லா விட்டாலும், காற்றுப் போக்கி, மற்றும் விரிசல் கண்ட ஜன்னல்களின் வழியே வரும் மங்கலான ஒளியும்தான்— அந்தப் பாழ் அரண்மனையின் உட்புறத்தை ஒருவாறு காணும்படிச் செய்தது.

மது தட்டுத் தடவிக் கொண்டு போகும்போது, தடதட வென்று யாரோ எங்கோ ஒரு கதவை இடித்து உலுக்கும் சத்தம் பூதாகாரமாகக் கேட்டது. சத்தம் எங்கிருந்து வருகிறது என்று நிதானித்து உற்றுக் கேட்டவன் ஓடினான், அந்தப் பக்கத்துக்கு. இருட்டில் ஒரு தூணில் மோதிக் கொண்டு தடுமாறினான். நல்லவேளை தோளில்தான் இடிபட்டது. தூணில் தலை மோதியிருந்தால் அந்த நிலையில் மது அப்படியே கீழே விழுந்து மூர்ச்சையாகி இருப்பான். ஓடிப், போய் உள் பக்கம் தாளிட்டிருந்த ஒரு கதவின் தாழ்ப்பாளை நீக்கினான். பளீர் என்று வெள்ளமாக ஒளி உள்ளே புகுந்தது.

www.tamilnesan1981.blogspot.in

அது வெளியே செல்லும் வழி போலிருக்கிறது. அதன் வாசலில் ஒரு கிராமத்து ஆள் நின்றிருந்தான். கட்டுமஸ்தான உடல். தலையில் ஒரு முண்டாசு. கையிலே ஒருதடி. ஒருவேளை இவன்தான் இந்தப் பாழ் அரண்மனையின் காவல் காரனோ? அவன் முகத்தில் கோபத்தையும் வெறுப்பையும் கண்ட மது உடனே சமாளிக்கலானான்.

“நல்லவேளை நீங்க வந்தீங்க... என்னமாய் பயந்து போயிட்டேன் தெரியுமா? என் தங்கை ஜெய் இந்த அரண் மனைக்குள் எங்கேயோ சிக்கிக் கிட்டிருக்கா... அவளைத் தேடித்தான் அலஞ்சுக்கிட்டிருக்கிறேன். நல்ல சமயத்திலே நீங்க வந்தீங்க” என்று ரொம்ப சகஜமாகப் பேசிக்கொண்டே போனான், மது. அந்த ஆளைக் கண்டதில் அவனுக்குத் தைரியமாக இருந்தது.

ஏதோ பதில் கூற வாய் திறந்த அந்த கிராமத்தானின் கண்கள் திடீரென்று விரிந்தன. திறந்த வாய் திறந்தபடி—அப்படியே வெறிக்கப் பார்த்தபடி கிலி பிடித்துப் போய்—தனக்குப் பின்னால் எதையோ பார்த்துத்தான், அந்த ஆள் இப்படிப் பீதி அடைந்திருக்கிறான் என்பதை அறிந்து மது திருப்பிப் பார்த்தான்.

அவனுக்குப் பின்னால் உள்ளே கறுப்பு கவுன் அணிந்து கையில் ஓர் ஊன்று கோலுடன் அந்த வெள்ளைக்காரக் கிழவி —துரைசானி—நின்று கொண்டிருந்தாள்—தன் பச்சைக் கண்கள் பளபளக்க! அவளைப் பார்த்துத்தான் அந்தக் கிராமத்தான் அப்படி கிலி பிடித்துப் போய், பார்வை நிலைக் குத்தி, திறந்த வாய் மூடாமல் நிற்கிறானோ? சற்று முன் மாடியில் அவள் திடீரென்று மாயமாக மறைந்தது மதுவுக்கு நினைவு வந்ததும் உடல் சில்லிட்டது தொண்டை வறண்டது.

“அரண்மனைக்கு நிறைய விருந்தாளிகள் வருவதைக் காண மகிழ்ச்சியாக இருக்கு. உள்ளே வாங்க எல்லாரும்” என்றாள் அந்த ஒல்லியான கிழவி.

“என் தங்கை ஜெய் எங்கேன்னு தெரியல்லியே... மாடி பூராப் பார்த்துட்டேன், அவளைக் காணோம்...” என்றான் போலியான துணிவுடன், மது. எப்படியாவது அந்தக் கிழவி யின் முன்னிலையிலிருந்து தப்பி ஓடி விட தவித்தது, மனது.

www.tamilnesan1981.blogspot.in

"தூய்மையான குளிர்ந்த காற்றைச் சுவாசிக்க உன் தங்கை வேறு வழியாக வெளியே போயிருப்பாள். நீ கவலைப்படாதே! வா உள்ளே. அரண்மனைக்கு விருந்தாளி யாக வந்திருப்பவர்களை உபசரிக்காமல் அனுப்பலாமா?" என்றாள் தன் கீச்சுக் குரலில் அந்தக் கிழவி.

மது அந்தக் கிராமத்தானைஉதவிக்காகப் பார்த்தான். ஆனால் என்ன ஆச்சரியம்! அவன் குதிகால் பிடரியில் பட ஓடிக்கொண்டிருந்தான், கிழவியின் ஆவியைக் கண்டு! இந்த கிழவி ஆவியா! உயிருள்ளவளில்லையா? இந்த நினைப் போடு மது தானும் ஓட முற்பட்டான். ஆனால்...

அவன் கால்கள் என்ன முயன்றும் அரண்மனைக்கு வெளியே செல்லவேயில்லை. எடுத்த ஒவ்வொரு தப்படியும் பின்னோக்கி அந்தப் பாழ் அரண்மனைக்குள்ளேயேதான் அவன் போய்க் கொண்டிருந்தான். திறந்திருந்த கதவு படீ ரென்று தானாக மூடிக் கொண்டது இருள் சூழ்ந்தது. பச்சை பல்பாக இரு ஒளிப் பிழம்பு மட்டும் தெரிய 'கெக்கெக்கெக்' என்று பயங்கரமான ஒரு சிரிப்பொலி – அந்தப் பாழ் அரண்மனையை உலுக்கியது.



6

வெள்ளைக்காரச் சீமாட்டியின் வித்தியாசமான குரலைக் கேட்டு என் இதயம் படபடத்தது.

"மெல்லிசா' என்பது யாருடைய பெயர்? அந்தக் கறுப்புப் பூனையின் பெயரா? தன் பூனையைத்தான் அந்த வெள்ளைக் காரி அப்படிச் செல்லமாக அழைக்கிறாளா? இது அவள் குரலானால்... அவள் உயிருடன் இருக்கிறாளா... முடியுமா...? அப்படியானால் அவளுக்கு என்ன வயதிருக்கும்? குடுகுடு

www.tamilnesan1981.blogspot.in

கிழவியாக, கூனிக் குறுகி...? ஒரு வேளை அவள் ஆவிதான் குரல் கொடுக்கிறதோ...?'

தடதடக்கும் நெஞ்சத்துடன் நான் அந்தக் குரல் வந்த திசையை நோக்கித் தட்டுத் தடுமாறி நடக்கலானேன். என் கால்கள் என்னை ஒரு பெரிய ஹாலுக்குள் இழுத்துச் சென்றன. தரையெல்லாம் மெத்தென்ற விரிப்புகள், சுவரி லெல்லாம் பெரிய பெரிய படங்கள். ராஜாக்களும், ஜமீன் தார்களும் அலங்காரத்துடன் நாற்காலிகளில் அமர்ந்திருந் தார்கள். ஓவியர்கள் வரைந்த சித்திரங்கள். அத்தனையும் அந்த ஜமீன்தாரின் மூதாதையர்களாக இருக்குமோ? பழமையும் புதுமையும் கலந்து காணப்பட்டன. அந்தப் பெரிய ஹாலில் ஒரு பக்கம் ஆளுயரத்துக்கு ஒரு பழங்காலக் கடிகாரம் 'டிக் டிக்' என்று சத்தமிட்டுக் கொண்டிருந்தது.

எனக்குப் பீதியான பீதி. பாழடைந்த அரண்மனையில் கடிகாரம் எப்படி ஓடும்...? ஓட முடியும்? யார் சாவி கொடுத் தார்கள்? 'திக் திக்'கென்று துடிக்கும் என் இதயத்தை அழுத்திக் கொண்டேன். பிரமையா? உண்மையா? கண் களைக் கசக்கிக் கொண்டு கடிகாரத்தை உற்றுப் பார்த்தேன். பிரமையல்ல. உண்மைதான். அதன் நீண்ட பெண்டுலம் இப்படியும் அப்படியுமாக 'டிக் டிக் டிக்!'– அந்த ஒலி வர வரப் பெரிதாகிறதா? செவிப்பறை கிழிந்து விடும் போல, விநாடிக்கு விநாடி அந்த 'டிக் டிக் டிக் பூ பூ தா தா காரமாக...– இரு காதுகளையும். அழுத்திப் பொத்திக் கொள்ளுகிறேன்.

அப்போது அதே குரல் – கீச்சுக் குரலில் கேட்கிறது!

"மெல்லிசா... மெல்லிசா!" எனக்கு மூச்சடைக்கிறது. இங்கும் அங்கும் பார்க்கிறேன். ஒரு கோடியில் மாடிப்படி தெரிகிறது. வெறி பிடித்தவனைப் போல ஓடுகிறேன் அதை நோக்கி– அந்தக் குரல் மாடியிலிருந்துதான் வந்திருக்க வேண்டும் என்று ஏதோ ஒரு நம்பிக்கை. படிகளை இரண்டு மூன்றாகத் தாவி ஏறுகிறேன். என் உடலில் வியர்வை வெள்ளமாக வழிகிறது. சட்டையெல்லாம் நனைந்து, உடம் போடு ஒட்டிக் கொண்டிருக்கிறது. மாடியின் உச்சிப் படியை அடைந்ததும் திடீரென்று ஒரு பயங்கரமான அமைதி. கடிகாரத்தின் கர்ண கடூரமான 'டிக் டிக்...டிக்" ஒலி, 'டக்' சென்று நின்றுவிட்டது. என் தொண்டை காய்ந்து... நாக்கு வறண்டு... அந்த நிசப்தமே இப்போது பயமாக இருக்

www.tamilnesan1981.blogspot.in

கிறது. என் நெஞ்சுத் துடிப்பு 'ஸ்டீரியோ போனிக்' ஒலிபரப்புப் போல தட் தட் தட் தட்...

'ஓ' என்று குரலெடுத்துக் கத்திக் கதறி அழ வேண்டும் போல் ஒரு வெறித்தனம். ஆனால், குரல்வளை செயல்பட மாட்டேன் என்கிறதே!

அப்போது... அந்த நிசப்தத்தைப் பிளந்து கொண்டு யாரோ இருமும் சத்தம் கேட்டது. வரிசையாக மூன்று கதவுகள் தெரிந்தன. அதில் ஒரு கதவு மட்டும்... மட்டும் தாளிடப்படா... படா... மல்! இலே... சான... இடைவெளி தெரிந்தது. அந்த அறைக்குள்ளிருந்துதான் இருமல் சத்தம் வந்திருக்க வேண்டும். அங்குதான் யாரோ இருக்கிறார்கள். பூனை போல... 'ஐயோ வேண்டாம்...– அந்தக் கறுப்புப் பூனை வந்துவிடப் போகிறது. அதை நினைத்தாலே குலை நடுக்கம் உண்டாகிறது–நடந்து அந்தக் கதவைத் தள்ளித் திறந்தேன். என் கை பட்டதும் அது 'மடார்' என்று அகலத் திறந்து கொண்டது. அந்த அறையினுள்ளிருந்து 'ஹோ' என்ற பேரிரைச்சலுடன் புயல் வீசுவது போலக் காற்று 'ஊய்–ஊய்' என்று சீட்டியடித்தபடி... கண்களைத் திறக்க முடியாதபடி அத்தனை வேகம்–அந்தச் சுழிக்காற்றுக்கு. அதன் வேகம் தணிந்தபோது மெள்ளக் கண்களைத் திறந்து பார்த்தேன். அந்த அறையின் நட்ட நடுவே...

அது ஆடும் நாற்காலி. ஆமாம் ராக்கிங் சார்! யாரோ உட்கார்ந்து ஆட்டுவது போலத் தானாக, அது மட்டும் தானாக, ஆடிக்கொண்டிருந்தது, வேகவேகமாக– 'கிறீச்! கிறீச்!' சென்று தரையில் ஒலி எழுப்பிக் கொண்டு!

என் இதயமே பிதுங்கி வாய்க்கு வந்து விட்டதுபோல ஒரு திணறல் ஏற்பட்டது, எனக்கு. ஆளில்லாமல் ஆடும் நாற்காலி ஆடுவதானால், நிச்சயம் அது ஆவியின் வேலை தான். 'ஆங்கிலப்' படங்களில் பார்த்தது போல– அந்த நாற்காலியில் ஒரு குடுகுடு கிழவி– சூனியக்காரக் கிழவி– உட்கார்ந்து கொண்டு ஸ்வெட்டர் பின்னுவது போலக் கற்பனை செய்துகொண்டேன். அந்த வெள்ளைக்காரச் சீமாட்டியின் ஆவிதான். அந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறது; என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறது. அதில் சந்தேகமே இல்லை என்ற முடிவுக்கு நான் வந்த

www.tamilnesan1981.blogspot.in

போது, கீழிருந்து பியானோ வாத்தியத்தின் இனிமையான இசை துல்லியமாகக் கேட்டது. என் விழிகள் விரிந்து நிலைக் குத்தின. 'அந்தக் கிழவி, இந்த நாற்காலியிலிருந்து கீழே போய் பியானோ வாசிக்கிறாளா? நாற்காலியும் வேகவேக மாக ஆடிக் கொண்டிருக்கிறதே... கடவுளே! இங்கு ஏன் வந்து மாட்டிக் கொண்டோம்' என்று புலம்பிற்று மனம்...

'என்ன ஆனாலும் சரி... அந்த ஆவியை ஒரு கை பார்த்தே விடுவது' என்ற வீம்போடு, பியானோ சத்தம் வரும் கீழ்ப் பகுதியை நோக்கி ஓடினேன். அப்போது என் நிலையைப் பார்த்து யாரோ, 'கெக் கெக் கெக்' என்று சிரித்தார்கள், என் சப்தநாடியும் ஒடுங்க. 'யார்... யார்... யார்?' என்று வீறிட்டேன்... அதாவது கத்த வேண்டுமென்ற ஆவேசம்... ஆனால் குரல் வெளி வரவே மாட்டேன் என்கிறதே!

'டிர்ர்ரிணிங்—டிணிங்... — என்று வேக வேகமாக பியா னோவில் விரல்களை ஓட்டவிட்டு ஒலி எழுப்பிக் கொண்டிருந் தார்கள் யாரோ... கிறுக்குப் பிடித்தவன் கண்டபடி பியானோக் கட்டைகளை இங்கும் அங்கும் அழுத்தி ஒலி உண்டாக்கு வது போல— கதவு ஒருக்களித்தபடி திறந்து தானிருந்தது. மூச்சை அடக்கிப் பிடித்துக்கொண்டு மெள்ள எட்டிப் பார்த்தேன். அங்கு... அங்கு... கண்ட காட்சி? வியப்பினால் கண்களை இமைக்க மறந்தவனாக நின்றேன். கருஞ் சிவப்பு நிறத்தில் பளபளவென்று அறையின் நடுவில் இருந்த பியானோவில்... னோவில்? அதன் ஒலிக் கட்டைகளின் மீது... மீது? இருளைப் போன்ற கறுப்புப் பூனை தன் வாலைக் குழைத்து உயர்த்தியபடி இங்குமங்குமாக நடை போட்டுக் கொண்டிருந்தது. அதன் பாதங்கள் அழுத்தியதனால் தான் அந்த ஒலி ஏற்பட்டதோ?

என் வரவைத் தெரிந்து கொண்டுதானோ என்னவோ. அந்தக் கொள்ளிக் கண் கறுப்புப் பூனை 'டக்'கென்று தன் நடையை நிறுத்தி, என்னையே தன் கொள்ளிக் கண்களால் முறைத்துக் கொண்டு நின்றது. திடீரென்று என்னிடம் ஒரு துணிச்சல் உண்டாயிற்று. ஆங்கில கதைகளில் படித்த ஒரு விஷயம் நினைவுக்கு வந்ததுதான் காரணம். சூனியக்காரிகள் கறுப்புப் பூனை வடிவில்தான் வருவார்களாம். படித்திருக் கிறேன். மந்திரக்காரிகளுக்குத் தோழனாகப் பூனை தான்

www.tamilnesan1981.blogspot.in

இருக்கும். ஆகவே இந்தக் கறுப்புப் பூனைக்கு ஏதோ சக்தி இருக்க வேண்டும். ஒருவேளை ஊரார் கூறும் அந்த ஆவி இந்தப் பூனை உருவில், பூனைக்குள் இருக்கலாமோ...? எதற்கும் இந்தப் பூனையைப் பிடித்துவிட்டால்? இப்படியொரு துணிச்சல் எனக்கு எப்படி வந்தது என்றே புரியவில்லை. அடி மேலடி வைத்து, அந்தப் பூனையை நெருங்கினேன். என் முடிவைத் தெரிந்து கொண்டதுபோல அந்தப் பூனையும், என் மீதுள்ள பார்வையை அகற்றாமலேயே பின்னால் பின்னால் நகர்ந்து கொண்டிருந்தது. அதன் செயல், அதன் பளபளக் கண்களின் பார்வை, அது சாதாரணப் பூனை அல்ல என்பதை உணர்த்தின. நான் அதை நெருங்கும் வேகத்துக்கு ஏனோ அது பின் வாங்கவில்லை. நான் கிட்டே நெருங்கி யதும், அந்தப்பொல்லாத பூனை சிரிப்பது போலத் தன் சிவப்பு வாயை அகலத் திறந்தது. ஒரு விநாடி எனக்கு எதுவுமே செய்யத் தோன்றவில்லை.

அப்போது அந்தக் கறுப்புப் பூனை...?

குபீரென்று என் தலைக்கு மேலாக, என்னையும் பியானோவையும் தாண்டிக் குதித்து எனக்குப் பின்புறமாக போய், கதவருகில் சென்று என்னையே முறைத்துக் கொண்டு நின்றது. என்னுள் உருவாகி இருந்த துணிச்சல் குறையவில்லை. வேகம் பெற்றது. நானும் ஒரே பாய்ச்சலில் தாவி, அதை அப்படியே அமுக்கிப் பிடித்துக் கொண்டேன். அந்த விநாடியே என் முன், மூடி இருந்த கதவு படீரென்று— யாரோ காலால் உதைத்துத் திறந்தது போல—திறந்து கொண்டது. என்ன ஆச்சரியம் — பளீரென்று மாலை வெயில் என் கண்களைக் கூசச் செய்தது. அரண்மனைக்கு வெளியே போகும் வழியைக் காட்டித் திறந்து கொண்டது அந்தக் கதவு!

அந்த இருள் சூழ்ந்த ஆவி உலவும் அரண்மனை யிலிருந்து வெட்ட வெளிக்குப் பூனையுடன் பாய்ந்து வந்து குதித்தேன். என்ன ஆச்சரியம்! அது மதுவும் ஜெய்யும்! என்னைக் கண்டதும் ஓடோடி வந்தார்கள். அவர்களுக்கு பின்னால் ஒரு கிராமத்து ஆளும்கூட. எனக்கு வியப்பான வியப்பு! மகிழ்ச்சி யான மகிழ்ச்சி! நிம்மதியான நிம்மதி! அப்பாடா ஒரு வழியாகப் பேய் அரண்மனையிலிருந்து விடுபட்டு வந்தோம் என்று.

www.tamilnesan1981.blogspot.in



www.tamilnesan1981.blogspot.in

அங்கு ஜெய்யும் மதுவும் எப்படி வந்தார்கள் என்று கேட்கிறீர்கள்? வெளியே போக முயன்ற மதுவை ஏதோ ஒரு சக்தி உள்ளே இழுத்துக் கொண்டு போயிற்றல்லவா? அதே சக்தி அவனை அரண்மனையின் மறுபக்கத்திலிருந்து வேறொரு வாசல் வழியே வெளியே கொண்டு வந்து தள்ளியதாம். பயங்கரமான புயல் காற்றுபோல ஏதோ ஒரு சக்தி. மது தைரியமளித்தும், ஜெய் பூனைக்குப் பயந்து பீதி தணியாமல் மாடி ஏறிப் போனதும், அங்கிருந்து ஒரு கதவு படீரென்று தானாகத் திறந்து கொண்டு, யாரோ கையைப் பிடித்து இழுப்பது போல ஏதோ ஒரு சக்தி உள்ளே இழுத்து, ஜன்னல் வழியே கீழே பொத்தென்று போட்டதாம். நல்ல வேளை! கீழே காட்டு மல்லிகைப் புதரில் விழுந்தாளோ, காயம்படாமல் தப்பினாளோ,

"புள்ளைங்களா! எப்படியோ நல்ல காலம், முழுசா வெளியே வந்து சேர்ந்தீங்களே!" என்று புகையிலைக் காவி ஏறிய பற்கள் தெரியச் சிரித்தான் கிராமத்து ஆள். தங்கள் அனுபவங்களை மூவரும் தடதடக்கும் நெஞ்சத்துடன் ஒருவருக்கொருவர் பரிமாறிய படியே நடந்தார்கள். அப்போது 'மியாவ்' என்ற ஓசை அவர்களைத் திடுக்கிட்டுத் திரும்பச் செய்தது. பேச்சுச் சுவாரசியத்தில் கறுப்புப் பூனையை கை நழுவ விட்டுவிட்டான் பாலு. அந்தப் பூனை வாலை நெட்டுக் குத்தாகத் தூக்கிக் கொண்டு பாழடைந்த அரண்மனையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

"அது போகட்டும் தம்பி—அந்த அரண்மனையை அது தான் ஆண்டுக்கிட்டிருக்கு. வெள்ளைக்காரச் சீமாட்டிதான் இப்படிக் கறுப்புப் பூனையா உலாவுவதாகப் பேசிக்கிறாங்க" என்றான் கிராமத்தாள்.

பாலு, மது, ஜெய் மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டபோது, அரண்மனைக்குள் அவர்கள் கிலி பிடித்துப் போய் ஓடியதெல்லாம் மீண்டும் நினைவுக்கு வந்தது.

"துணிச்சல்காரப் பசங்கதான் நீங்க!" என்று அவர்களைப் பாராட்டினான், கிராமத்தாள்.

உண்மைதானே! ■■■

*அப்பா கதையை முடித்தார்— கிழக்கே சூரியன் ஜாஜ்வல்யமாக ஒளி வீசி — எட்டிப் பார்த்தான்.*

www.tamilnesan1981.blogspot.in



பூக்கடைக்கு விளம்பரம் தேவை இல்லை என்பது போல - 'வாண்டு மாமா' விற்கு அறிமுகம் தேவை இல்லை. குழந்தைகளாகிய உங்களுக்காக, பல வருஷங்களாக ஏராளமாக எழுதி வருகிறார். இன்று, பல உயர் பதவியில் இருக்கும் பலர் - பிரபலமானவர்கள் - தாங்கள் சிறுவயதில் 'வாண்டுமாமா' வின் கதைகளைப் படித்து மகிழ்ந்ததாகக் கூறக் கேட்கலாம்.

இன்று எண்பது வயதாகும் வாண்டுமாமா குழந்தைகளுக்காக 'தாத்தா - பாட்டி - அப்பா - அம்மா' வாக மாறி விதவிதமான கதைகளைக் கூறுகிறார். படித்து மகிழுங்கள்.

**கங்கை புத்தக நிலையம்**

APPA APPA KATHAI SOL
RS. 80.00 BK 24684
GANGAI PUTHAKA NILAYAM
TAMIL Books